
# மார்க்ஸ் எங்கெல்ஸ்

## தேர்வு நூல்கள்


பன்னிரண்டு
தொகுதிகளில்

*

தொகுதி
3



Karl Marx



F. Engels

# மார்க்ஸ் எங்கெல்ஸ்

# தேர்வு நூல்கள்

## பன்னிரண்டு தொகுதிகளில்

## தொகுதி 3

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

К. Маркс, Ф. Энгельс

ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ В 12 ТОМАХ

Том 3

*на тамильском языке*

**K. Marx, F. Engels**

SELECTED WORKS IN 12 VOLUMES

Volume 3

*in Tamil*

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1984

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

МЭ $\frac{0101010000-283}{014(01)-84}$ 332—84

பொருளடக்கம்

பி. எங்கெல்ஸ். ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப் புரட்சியும் . . . . . . . . . . . . . 7

1. புரட்சி வெடித்த தருணத்தில் ஜெர்மனி. 7

2. பிரஷ்ய அரசு . . . . . . . . . . . . 23

3. இதர ஜெர்மன் அரசுகள் . . . . . . . 40

4. ஆஸ்திரியா . . . . . . . . . . . . . 48

5. வியன்னுவில் புரட்சிகர எழுச்சி . . . . . 59

6. பெர்லினில் புரட்சிகர எழுச்சி . . . . . . 65

7. பிராங்க்பர்ட் தேசிய சட்டமன்றம் . . . . 73

8. போலிஷ் மக்கள், செக் மக்கள் மற்றும் ஜெர்மானியர் . . . . . . . . . . . 81

9. அகண்ட ஸ்லாவேனியவாதம். ஷ்லெஸ்விக்-ஹோல்ஷ்டைன் போர் . . . . . . . . 88

10. பாரிசில் புரட்சிகர எழுச்சி. பிராங்க்பர்ட் சட்டமன்றம் . . . . . . . . . . . . 95

11. வியன்னுவில் புரட்சிகர எழுச்சி . . . . . 101

12. வியன்னு முற்றுகை. வியன்னுவுக்குத் துரோகம் . . . . . . . . . . . . . . . 111

13. பிரஷ்ய அரசியல் நிர்ணய சபை. தேசிய சட்டமன்றம் . . . . . . . . . . . . . 125

14. ஒழுங்கை மீட்டமைத்தல். நாடாளுமன்றம் மற்றும் சபை . . . . . . . . . . . . 132
15. பிரஷ்யாவின் வெற்றி . . . . . . . . 141
16. தேசிய சட்டமன்றமும் அரசாங்கங்களும் . 148
17. புரட்சிகர எழுச்சி . . . . . . . . . 154
18. குட்டி முதலாளிகள் . . . . . . . . 162
19. புரட்சிகர எழுச்சியின் முடிவு . . . . . 170

பி. எங்கெல்ஸ். கொலோனில் சமீபத்தில் நடந்த வழக்கு . . . . . . . . . . . . 180
கா. மார்க்ஸ். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி . 192
கா. மார்க்ஸ். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விளைவுகள் . . . . . . . 204
பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . . 216
பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . . 232
இலக்கிய மற்றும் புராணப் பெயரகராதி. . 245

பி. எங்கெல்ஸ்

# ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும்[1]

## 1

## புரட்சி வெடித்த தருணத்தில் ஜெர்மனி

ஐரோப்பிய மாகண்டத்தில் நடந்த புரட்சிகர நாடகத்தின் முதல் அங்கம் முடிவடைந்தது. 1848ன் சூறுவளிக்கு முன்பு ''ஆட்சியில் இருந்தோர்'' மீண்டும் ''ஆட்சியில் இருப்போர்'' ஆயினர். ஏறத்தாழ ஒரு நாள் ஜனசம்மத ஆட்சியாளர்கள், இடைக்கால ஆளுநர்கள், ஆதிக்கம் செலுத்தும் குழுவினர், சர்வாதிகாரிகள், அவர்களது பின்னணி வரிசையான பிரதிநிதிகள், சிவில் கமிஷனர்கள், ராணுவக் கமிஷனர்கள், போலீஸ் அதிகாரிகள், நீதிபதிகள், ஜெனரல்கள், ராணுவ அதிகாரிகள் மற்றும் படைவீரர்கள் சகிதம் அக்கரைச் சீமைக்கு விரட்டப்பட்டனர்; இங்கிலாந்து அல்லது அமெரிக்காவுக்குக் ''கடல் கடந்து நாடு கடத்தப்பட்டார்கள்''. அங்கு அவர்கள் in partibus infidelium[2] புதிய அரசாங்கங்களை நிறுவவும் ஐரோப்பியக் கமிட்டிகள், மத்தியக் கமிட்டிகள், தேசியக் கமிட்டிகளை நிறுவவும் எந்தளவேனும் கற்பனையான அரசாளர் போல முற்றிலும் கம்பீரமான பிரகடனங்களில் தமது வருகையை அறிவிக்கவும் ஆரம்பித்தார்கள்.

மாகண்டத்தின் புரட்சிகரக் கட்சி, அல்லது கட்சிகள் என்றே கூறலாம், போர் அரங்கின் சகல கட்டங்களிலும் அனுபவிக்க வேண்டி இருந்ததை விடவும் அதிக முனைப்பான தோல்வியைக் கற்பனை செய்ய முடியாது. ஆனுல் அதனுல் என்ன குடிமுழுகிப் போய்விட்டது? தமது சமூக மற்றும் அரசியல் மேலாண்மைக்காக பிரிட்டிஷ் முதலாளி

வர்க்கம் நடத்திய போராட்டம் நாற்பத்தெட்டு ஆண்டுகளும், பிரெஞ்சு முதலாளி வர்க்கத்தின் இணையற்றதான போராட்டம் நாற்பதாண்டுகளும் நடைபெறவில்லையா? மீட்டமைக்கப்பட்ட முடியாட்சி என்றையும் விட அதிக உறுதியாகத் தான் நிலைபெற்று விட்டதாகத் தானே கருதிய போது, அந்தத் தருணத்தில் முதலாளி வர்க்கத்தின் வெற்றி என்றையும் விட மேலும் அதிக அருகில் இருந்ததா? புரட்சிகளை ஒரு சில கிளர்ச்சியாளர்களின் தீய எண்ணங்களால் ஏற்படுவதாகக் கற்பிதம் செய்யும் அந்த மூடநம்பிக்கைக் காலகட்டம் என்றோ மலையேறிவிட்டது. எங்கெல்லாம் ஒரு புரட்சிகரக் குமுறல் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் பின்னணியில் ஏதேனும் சமுதாயத் தேவை கட்டாயம் இருந்து தீர வேண்டும் என்பதை இந்நாட்களில் ஒவ்வொருவரும் அறிவர். அந்தத் தேவை தன்னைத் தானே நிறைவு செய்து கொள்ளப்படுவதை நைந்துபோன நிறுவனங்கள் தடை செய்கின்றன. இந்தத் தேவை உடனடி வெற்றியை உறுதிப்படுத்தக்கூடிய அளவுக்கு அவ்வளவு வலுவாகவும் அவ்வளவு பொதுப்படவும் இன்னும் உணரப்படாததாக இருக்கலாம். ஆனால் பலவந்தமாக இதை ஒடுக்குவதற்குச் செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியும் இது தனது தளைகளை உடைத்தெறியும் வரை மேலும் பலத்துக்கு மேல் பலம் பெற வகை செய்யும். அதற்குள் நாம் தோற்கடிக்கப்பட்டிருப்போமானால் நாம் ஆதிமுதல் துவங்குவதைத் தவிர செய்வதற்கு வேறு எதுவும் கிடையாது. மற்றும் அதிருஷ்டவசமாக இயக்கத்தின் முதல் அங்கத்தின் முடிவுக்கும் இரண்டாம் அங்கத்தின் துவக்கத்துக்கும் இடையில் நமக்கு அனுமதிக்கப்படும் உண்மையில் மிகவும் குறுகியதான ஓய்வு இடைவேளை மிகவும் அவசியமான ஒரு வேலையைச் செய்வதற்கான அவகாசத்தைத் தருகிறது: சமீப காலத்திய திடீர்க்கிளர்ச்சி மற்றும் அதன் தோல்வி இரண்டையும் தவிர்க்க முடியாததாக்கிய முகாந்தரங்களை ஆய்வு செய்தல் என்பதே அது. இந்த முகாந்தரங்களை ஒரு சில தலைவர்களின் தற்செயலான முயற்சிகள், திறமைகள், பிழைகள், தவறுகள் அல்லது துரோகச் செயல்களில் தேடிக்காண முய

லுதல் கூடாது, மாருக, அதிர்ச்சிக்கு உள்ளான தேசங்கள் ஒவ்வொன்றின் பொதுவான சமூக அமைப்பு மற்றும் வாழ்க்கை நிலைமைகளில் தேட வேண்டும். 1848 பிப்ரவரி மற்றும் மார்ச்சில் நிகழ்ந்த திடீர் இயக்கங்கள் தனி நபர்களின் வேலை அல்ல என்பதும், மாருக தேசியத் தேவைகள் மற்றும் அவசியங்களின் தன்னியல்பான, தடுக்கவியலாத வெளிப்பாடுகளே என்பதும் ஏறக்குறையத் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்ட உண்மை என்பதோடு, ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பல்வேறு வர்க்கங்களால் மிகவும் தனிச் சிறப்புடன் உணரப்பட்டதுமாகும். இந்த உண்மை எங்கும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஆனல் எதிர்ப்புரட்சியின் வெற்றிகளுக்கான காரணங்கள் பற்றி நீங்கள் கேட்டறிய முன் வரும் போது, இந்த அல்லது அந்தக் குடிமகனர் தான் மக்களுக்குத் ''துரோகம் செய்தார்'' என்ற தயாரான பதில் எல்லோரிடமிருந்தும் எழுகிறது. இந்தப் பதில் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப சரியாகவோ அல்லது சரியற்றதாகவோ இருக்கலாம்; ஆனல் இது எந்த ஒரு சந்தர்ப்ப சூழ்நிலையிலும் எதையும் தெளிவுபடுத்துவதாக இல்லை. இவ்வாறு ''மக்கள்'' தம்மை துரோகத்துக்கு இரையாக அனுமதித்துக் கொண்டது எவ்வாறு நிகழ்ந்தது என்பதைக்கூட இது சுட்டிக்காட்டவில்லை. இன்னின்ன குடிமகனை நம்ப முடியாது எனும் தனிப்பட்ட விவரம் பற்றிய தகவலறிவு ஒன்றையே தனது கைவசம் உள்ள சரக்காகக் கொண்டிருக்கும் ஓர் அரசியல் கட்சியின் எதிர்காலம் வருந்தத்தக்கதாகும்.

தவிரவும், புரட்சிகரக் கொந்தளிப்பு ஏற்பட்டது மற்றும் புரட்சி அடக்கப்பட்டது இரண்டுக்குமான காரணங்களை ஆராய்ந்தறிவதும் அவற்றை விரித்துரைப்பதும் வரலாற்று நோக்கு நிலையில் தலையாய முக்கியத்துவம் உடையவை. இந்தச் சின்னத்தனமான சொந்தப் பூசல்கள் மற்றும் பதில் குற்றச்சாட்டுக்கள் அனைத்திலும் மராஸ்ட் அல்லது லெட்ரூ-ரொலேன் அல்லது லூயீ பிளாங் அல்லது இடைக்கால அரசாங்கத்தின் வேறொரு உறுப்பினரும் அல்லது அவர்கள் முழுவதும் பாறைகளின் மத்தியில் மோதித் தகர்வுறும் வகையில் புரட்சியை நடத்தினர் என்ற இந்த

முரண்பாடான துணிபுரைகளிலும், சம்பவங்களின் விவரங்கள் எதையும் இனங்கண்டறிய இடமளியாதபடி மிகவும் அதிகத் தொலைவில் இருந்து இந்தப் பல்வேறு இயக்கங்கள் அனைத்தையும் கவனித்து வந்த அமெரிக்கன் அல்லது ஆங்கிலேயனுக்கு என்ன கவர்ச்சி ஏற்பட முடியும், என்ன தெளிவு விளக்கம் கிட்டும்? அந்த முப்பத்தாறு மில்லியன் மக்களும் அந்தப் பதினொரு பேர்களைப் போலவே தம்முன் உள்ள செல்வழியை சொற்பமாகவே கண்டார்கள் என்று இருந்தாலொழிய இந்தப் பதினொரு பேர்கள்*—அவர்களில் பெரும்பான்மையோர் சிறிதளவு திறமையுள்ளவர்கள், நன்மையோ தீமையோ செய்ய இயலாதவர்கள்—முப்பத்தாறு மில்லியன் மக்களைக் கொண்ட ஒரு தேசத்தை மூன்று மாதங்களுக்குள் நாசம் செய்ய இயலும் என்று சுயபுத்தியுள்ள எந்த மனிதனும் என்றும் நம்பமாட்டான். மங்கிய அந்தி வெளிச்சத்தில் அவர்கள் சற்றே தட்டுத் தடுமாறிய போதிலும் எந்தத் திசையில் செல்வது என்பதைத் தமக்குத் தாமே தீர்மானித்துக் கொள்ளும்படி இந்த முப்பத்தாறு மில்லியன் மக்களும் உடனே கேட்டுக் கொள்ளப் பட்டார்கள் என்பது எவ்வாறு நிகழ்ந்தது, அப்படியானால் அவர்கள் எப்படி வழி தவறிப் போனார்கள், அவர்களது பழைய தலைவர்கள் ஒரு கணம் எவ்வாறு மீண்டும் தலைமைப் பதவிக்குத் திரும்பி வர அனுமதிக்கப்பட்டனர் என்பதுமே இங்குள்ள கேள்வி.

அப்படியானால் நாம் 1848ல் ஜெர்மனியில் புரட்சியை அவசியமாக்கிய, அதே பொழுதில் அதே அளவுக்கு முற்றும் தவிர்க்க முடியாத வகையில் 1849 மற்றும் 1850ல் அதனைக் குறுகிய கால அடக்குமுறைக்கு இட்டுச் சென்ற காரணங்களை *Tribune*[3] வாசகர்களின் முன்னால் வைக்க முயல்வோமானால், அந்த நாட்டில் நிகழ்ச்சிகள் எப்படி நடந்தேறின என்பது குறித்த முழு வரலாற்றையும் தர வேண்டும் என்று எம்மிடம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. தற்

* பிரெஞ்சு இடைக்கால அரசாங்கத்தில் பதவி வகித்தவர்கள்.—ப-ர்.

செயலானதும் பொருத்தமில்லாததும் முன்னுக்குப் பின் முரணானதுமாய்த் தோன்றும் குழப்பமான மெய்விவரங்களின் இந்தத் திரளின் எந்தப் பகுதி உலக வரலாற்றின் ஒரு பாகமாக அமையும் என்பதைப் பிந்திய நிகழ்ச்சிகளும் வரப் போகும் தலைமுறைகளின் மதிப்பீடுமே முடிவு செய்யும். அத்தகைய பணிக்குரிய காலம் இன்னும் வரவில்லை. எது சாத்தியமோ அதன் வரம்புகளுக்குள் நம்மை நாமே கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டும்; மறுக்கவியலாத மெய்விவரங்களின் அடிப்படையில் முக்கியமான நிகழ்ச்சிகளை, அந்த இயக்கத்தின் பிரதான திரும்பு முனைகளை விளக்குவதற்கான பகுத்தறிவான காரணங்களை நாம் கண்டறிய முடியுமானால், அடுத்ததும் ஒருவேளை வெகு தொலைவில் இல்லாததுமான திடீர் எழுச்சியால் ஜெர்மன் மக்களுக்குத் தெரிவிக்கப்படப் போகும் திசைவழி எது என்பது பற்றிய ஒரு தடையம் நமக்குக் கிட்டுமானால், நாம் அதோடு திருப்தியடைய வேண்டும்.

முதலாவதாக, புரட்சி வெடித்த சமயத்தில் ஜெர்மனியின் நிலை எப்படி இருந்தது?

ஒவ்வொரு அரசியல் அமைப்புக்கும் அடித்தளமாக அமையும் மக்களின் பல்வேறு வர்க்கங்களைக் கொண்டதான இயைவு ஜெர்மனியில் வேறு எந்த நாட்டையும் விட மிகவும் சிக்கலானதாக இருந்தது. இங்கிலாந்திலும் பிரான்சிலும், பெரிய நகரங்களில் குறிப்பாகத் தலைநகரில் குவிந்திருந்த ஒரு வலிமை மிக்கதும் செல்வம் படைத்ததுமான முதலாளி வர்க்கத்தால் நிலப்பிரபுத்துவம் முற்றாக அழிக்கப்பட்டிருந்தது அல்லது, இங்கிலாந்தில் இருந்ததைப் போல, ஒரு சில சிறுதரமான வடிவங்களுக்குக் குறைந்த பட்சம் தாழ்த்தப்பட்டுவிட்டது; அதே போது ஜெர்மனியில் இருந்த நிலப்பிரபுத்துவ உயர் குலத்தினர் தமது தொன்மையான தனியுரிமைகளில் பெரும் பகுதியை நீடித்து வைத்திருந்தார்கள். கிட்டத்தட்ட எல்லா இடங்களிலும் நிலப்பிரபுத்துவ நிலவுடைமை அமைப்பு மேலோங்கி இருந்தது. நிலப்பிரபுக்கள் தமது குத்தகை விவசாயிகள் மீதான அதிகாரத்தைக் கூட நீடித்து வைத்திருந்தனர். அரசியல் தனி

யுரிமைகளை—மன்னர்களைக் கண்காணிக்கும் உரிமையை—இழந்து விட்ட அவர்கள், தமது பண்ணை நிலத்து விவசாயிகள் மீது ஏறத்தாழ தமது மத்திய கால மேலாதிக்கம் முழுவதையும் பேணி வைத்திருந்ததோடு, வரிகளில் இருந்து விலக்கும் பெற்றிருந்தார்கள். நிலப்பிரபுத்துவ முறை சில வட்டாரங்களில் வேறு சில வட்டாரங்களை விட அதிக பலம் பெற்றுச் செழித்தது, ஆனால் ரைன் நதியின் இடது கரைப் பகுதியில் தவிர வேறு எங்கும் அது முற்றாக ஒழிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நாட்களில் எண்ணிக்கையில் மிக அதிகமாயும் ஓரளவுக்கு மிகவும் செல்வம் படைத்ததாயும் இருந்த இந்த நிலப்பிரபுத்துவ உயர் குலம் நாட்டில் அதிகார பூர்வமாக முதல் ''படிநிலை'' என்று கருதப்பட்டது. அது உயர் அரசாங்க அலுவலர்களை அளித்தது, இராணுவத்தில் அநேகமாக அத்தனை அதிகாரிகளும் அதைச் சேர்ந்தவர்களே.

பிரான்சிலோ இங்கிலாந்திலோ இருந்த முதலாளி வர்க்கத்தினர் போன்று ஜெர்மனியில் இருந்த முதலாளி வர்க்கத்தினர் அவ்வளவு செல்வந்தர்களாகவோ செறிவுடையவர்களாகவோ இருக்கவில்லை. ஜெர்மனியின் பழைய பட்டறைத் தொழில்கள் நீராவி விசை புகுத்தப்பட்டதாலும் ஆங்கிலத் தொழில்களின் துரிதமாக விரிவடைந்து வரும் மேநிலை காரணமாயும் அழிக்கப்பட்டன. நெப்போலியனின் கான்டினென்டல் ஏற்பாட்டின்[4] கீழ் துவங்கப்பட்டதும் நாட்டின் இதர பகுதிகளில் நிறுவப்பட்டதுமான அதிக நவீனமான தொழில்கள் பழைய தொழில்களின் இழப்புக்கு ஈடு செய்வனவாக இருக்கவில்லை; பிரபுக் குலத்தவர் அல்லாதவர் பலமோ செல்வமோ அதிகரிப்பது கண்டு பொறுமையுற்றிருந்த அரசாங்கத்தின் கவனத்தைத் தனது தேவைகளின் மீது செலுத்துவதற்காக ஈர்க்கும் அளவு வலுவுடையதான பட்டறைத் தொழில் நலன்களை உருவாக்கும் அளவுக்குப் போதுமானதாகவும் இருக்கவில்லை. புரட்சிகளும் போர்களும் நிறைந்த ஐம்பது ஆண்டுகளின் ஊடே பிரான்ஸ் தனது பட்டு உற்பத்தித் தொழிலை வெற்றிகரமாக நடத்தி வந்ததென்றால், இதே காலப் பகுதியில் ஜெர்மனி தனது

தொன்மையான சணல் துணி உற்பத்தித் தொழிலைக் கிட்டத்தட்ட இழந்தே விட்டது. மேலும், தொழில் மாவட்டங்கள் குறைவாகவும் அரிதாகவும் இருந்தன; உள் நாட்டில் மிகு தொலைவில் இருந்தன; தமது இறக்குமதி ஏற்றுமதிகளுக்குப் பெரும்பாலும் அன்னியத் துறைமுகங் களை, டச்சு அல்லது பெல்ஜியத் துறைமுகங்களையே பயன் படுத்தின; வட கடல் மற்றும் பால்டிக் கடற் கரைகளில் அமைந்திருந்த பெரிய துறைமுக நகரங்களுடன் அவற் றுக்குப் பொதுவான அக்கறை இருக்கவில்லை அல்லது குறை வாகவே இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக அவற்றால் பெரிய தொழில் மற்றும் வாணிக மையங்களை, பாரிஸ், லியோன், லண்டன், மாஞ்செஸ்டர் போன்ற மையங்களை உருவாக்க இயலவில்லை. ஜெர்மன் தொழில்துறையின் பின் தங்கிய நிலைக்குரிய காரணங்கள் பலவகையானவை, ஆனால் இதைத் தெளிவாக்க, உலக வாணிகத்தின் மாபெரும் நெடுஞ் சாலையாகிவிட்ட அட்லாண்டிக் சமுத்திரத்தில் இருந்து தொலைவில் இருக்கும் இந்த நாட்டின் சாதகமற்ற பூகோள நிலை, மற்றும் பதினாறும் நூற்றாண்டு தொட்டு இன்றுவரை ஜெர்மன் மண்ணில் நிகழ்ந்து வந்ததான தொடர்ச்சியான போர்களில் ஜெர்மனி சிக்குண்டிருந்தது என்பதான இரண்டு காரணங்களே போதுமானவை. மக் கள் எண்ணிக்கையின் பற்றாக்குறையும் குறிப்பாக மக்கள் ஒன்று திரட்டப்படாமலிருந்ததும், 1688 முதற்கொண்டு எப்போதும் ஆங்கில முதலாளி வர்க்கம் அனுபவித்து வந்ததும், 1789ல் பிரெஞ்சு முதலாளி வர்க்கம் வென்று பெற்றதுமான அந்த அரசியல் மேலாதிக்க நிலையை ஜெர்மன் முதலாளி வர்க்கம் அடைய முடியாதபடி தடைப்படுத்தின. இருப்பினும் 1815 முதற்கொண்டு எப்போதும் ஜெர்மன் முதலாளி வர்க்கத்தின் செல்வமும் செல்வத்துடன் கூடிய அரசியல் செல்வாக்கும் தொடர்ந்து பெருகி வருகின்றன. அரசாங்கங்கள், மனமில்லாமல் என்றாலுங்கூட, குறைந்த பட்சம் அதன் மிகவும் உடனடியான பொருளாயத நலன் களை மதிக்கும் கட்டாயத்துக்கு உள்ளாயின. சிறிய அரசு களின் அரசியலமைப்புச் சட்டங்களில் முதலாளி வர்க்கத்

திற்கு என ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டிருந்ததான அரசியல் செல்வாக்கின் ஒவ்வொரு துகளும் 1815 முதல் 1830 வரையும் 1832 முதல் 1840 வரையும் நிலவிய அரசியல் பிற்போக்கின் இரண்டு காலப்பகுதிகளிலும் அதனிடமிருந்து மீண்டும் பறித்துக் கொள்ளப்பட்டது என்றாலும், இத்தகைய ஒவ்வொரு துகளும், பிரதியாக அதற்கு அனுமதிக்கப்பட்ட மேலும் நடைமுறை நலங்களைக் கொண்டு ஈடு செய்யப்பட்டது என்பதை இங்கு மெய்யாகவே கூறலாம். முதலாளி வர்க்கத்தின் ஒவ்வொரு அரசியல் தோல்வியும் அதற்குப் பின்னால் வாணிகச் சட்டத் துறையில் ஒரு வெற்றியை ஈட்டியுள்ளது. ஆகவே, 1818ஆம் ஆண்டின் பிரஷ்யக் காப்பு வரி[5] மற்றும் சுங்க இணையம் (Zollverein)[6] நிறுவப்பட்டது ஜெர்மனியின் வாணிகர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் ஒரு சிற்றரசின் சட்டமன்றத்தில் அவர்களது வோட்டுகளைப் பார்த்து ஏளனம் செய்யும் அமைச்சர்கள் மீது நம்பிக்கை இல்லை என்பதை அறிவிக்கும் தெளிவில்லாத உரிமையை விடவும் நிச்சயமாயும் பெருமளவு அதிக மதிப்புடையதாகும். இவ்வாறாக பெருகி வரும் செல்வம் மற்றும் விரிவடையும் வாணிகத்தின் மூலம் முதலாளி வர்க்கம் விரைவில் ஒரு கட்டத்தை அடைந்தது. இந்தக் கட்டத்தில் அதன் மிகவும் முக்கியமான நலன்களின் அபிவிருத்தி நாட்டின் அரசியல் அமைப்பினால் தடுத்து நிறுத்தப்படுவதைக் கண்டது. பரஸ்பரம் மோதிக் கொள்ளும் போக்குகளும் ஏறுமாறான நடத்தையும் கொண்டவர்களான முப்பத்தாறு ராஜாக்கள் இடையே நாடு அங்குமிங்குமாகப் பிளவுற்றிருந்ததும், விவசாயத்தின் மீதும் அதனுடன் சம்பந்தப்பட்ட வாணிகத்தின் மீதுமான நிலப்பிரபுத்துவத் தளைகளும், அறியாமையும் அகந்தையும் கொண்டதான அதிகார வர்க்கம் தனது அலுவல்கள் அனைத்தையும் வேண்டாத தலையீட்டு தர்பாருக்கு இலக்காக்குவதும் தனக்குத் தடையாக இருப்பதை முதலாளி வர்க்கம் கண்டது. அதே சமயம் சுங்கச் சங்கம் விரிவடைந்ததும் கெட்டிப்படுத்தப்பட்டதும், நீராவி மூலமான போக்குவரத்து வசதிகள் பொதுவாகக் கொண்டு வரப்பட்டதும், உள்நாட்டு வாணிகத்தில் பெருகி வரும்

போட்டியும், பல்வேறு அரசுகள் மற்றும் மாகாணங்களைச் சேர்ந்த வாணிக மற்றும் தொழில் வர்க்கங்களை நெருக்கமாக ஒன்றுசேர்க்கவும் அவற்றின் நலன்களைச் சமப்படுத்திக் கொள்ளவும் அவற்றின் வலிமையை மையப்படுத்திக் கொள்ளவும் வகை செய்தன. இதன் இயல்பான பின்விளைவு அவற்றின் முழுக் கூட்டமும் மிதவாத எதிர்க்கட்சி முகாமுக்குள் போய்ச் சேர்ந்ததும், அரசியல் அதிகாரத்திற்கான ஜெர்மன் முதலாளி வர்க்கத்தின் முதலாவது காரியகரமான போராட்டத்தில் வெற்றி பெறுவதுமாகும். இந்த மாற்றம் 1840 முதல், பிரஷ்யாவின் முதலாளி வர்க்கம் ஜெர்மனியில் முதலாளி வர்க்கத்தினரின் இயக்கத் தலைமையை மேற்கொண்ட தருணம் தொட்டு ஆரம்பித்தது என்று கருதலாம். இனிமேல் 1840-47ஆம் ஆண்டுகளின் மிதவாத எதிர்க்கட்சி இயக்கத்தை மீண்டும் பார்ப்போம்.

தேசத்தின் மிகப் பெரும் மக்கள் திரளினர் பிரபுக் குலத்தையோ அல்லது முதலாளி வர்க்கத்தையோ சேர்ந்தவர்கள் அல்ல. அவர்கள் நகரங்களில் சிறு கைவினைஞர்கள் மற்றும் கடைக்காரர்களாயும் உழைக்கும் மக்களாயும், நாட்டுப்புறத்தில் விவசாயிகளாயும் இருந்தார்கள்.

அந்த நாட்டில் பெரிய முதலாளிகளும் தொழிலதிபர்களும் ஒரு வர்க்கம் என்ற முறையில் குன்றிய வளர்ச்சியே பெற்றிருந்ததன் பின்விளைவாக, சிறு கைவினைஞர் மற்றும் கடைக்கார வர்க்கம் ஜெர்மனியில் எண்ணிக்கையில் மிக விஞ்சியதாக இருக்கிறது. பெரிய நகரங்களில் வசிப்பவர்கள் இடையில் அது ஏறத்தாழ பெரும்பான்மையாக இருக்கிறது. சிறிய நகரங்களில் செல்வாக்குப் பெற வேண்டிய—தன்னிலும் அதிகச் செல்வம் படைத்த—போட்டியாளர்கள் இல்லாமையால் அது அநேகமாகப் பேராதிக்கம் வகித்தது. ஒவ்வொரு நவீன அரசிலும் எல்லா நவீனப் புரட்சிகளிலும் மிகவும் முக்கியமானதாக இருக்கும் இந்த வர்க்கம், ஜெர்மனியில்—அங்கே அண்மையில் நடைபெற்ற போராட்டங்களின் போது வழக்கமாக நிர்ணயமான பாத்திரம் வகித்திருந்த இந்த வர்க்கம்—இன்னும் அதிக முக்கியமானதாக விளங்குகிறது. சரியான முறையில் முதலாளி வர்க்கம் என்று

அழைக்கப்படும் பெரிய முதலாளிகள் — வாணிகர்கள் மற்றும் தொழிலதிபர்கள் — வர்க்கத்துக்கும் பாட்டாளி அல்லது தொழில்துறை தொழிலாளி வர்க்கத்துக்கும் நடுவேயான இதன் இடைத்தட்டு நிலை இதன் தன்மையை நிர்ணயிக்கிறது. முதல் வர்க்கத்தின் நிலையைப் பெற விழையும் இந்த வர்க்கத்தின் தனிநபர்கள் அதிருஷ்டத்தின் ஆகக் குறைந்த பிரதிகூலத் திருப்பத்தின் காரணமாக இரண்டாம் வர்க்கத்தின் அணிகளுக்குள் கீழ்தள்ளப்படுகின்றனர். முடியரசு சார்ந்த அல்லது நிலப்பிரபுத்துவ ஆட்சி சார்ந்த நாடுகளில் சிறு கைவினைஞர் மற்றும் கடைக்கார வர்க்கத்தின் இருத்தலுக்கு அரசவை மற்றும் பிரபுக்களின் அனுப்பாணைகள் அவசியமாகின்றன; இந்த அனுப்பாணைகள் இழப்புக்குள்ளானால் அதன் பெரும் பகுதி அழிவுக்கு இலக்காகலாம். சிறிய நகரங்களில் உள்ளூர் துருப்புக்கள், உள்ளூர் அரசாங்கம், அதன் ஆதரவாளர்களுடனான நீதித் துறை ஆகியவை பெரும்பாலும் அதன் சுபிட்சத்தின் அடித்தளமாக அமைகின்றன; இவற்றை விலக்கிக் கொண்டால் சிறு கடைக்காரர்கள், தையற்காரர்கள், காலணி செய்வோர், தச்சு வேலைசெய்வோர் ஆகியோர் அழிவுக்குத் தள்ளப்படுவார்கள். இவ்வாறாக, செல்வந்த வர்க்கத்தின் அணிகளில் பிரவேசிக்கும் நம்பிக்கை மற்றும் பாட்டாளிகளின் நிலைக்கு அல்லது நொடித்து ஏழ்மை நிலைக்கும் கூடத் தள்ளப்படும் அச்சம் இவற்றுக்கு இடையிலும், பொது விவகாரங்களை நெறியாண்மை செய்வதில் ஒரு பங்கை வென்று பெறுவது மூலம் தனது நலன்களை மேம்படுத்திக் கொள்வதற்கான நம்பிக்கை மற்றும் அதன் சிறந்த வாடிக்கையாளர்களை இல்லாமற் செய்து விடும் அதிகாரம் இருக்கும் காரணத்தால் தனது வாழ்வையே அழித்தொழித்துவிடக் கூடிய அரசாங்கத்தின் கோபத்தை வேளைகெட்டதான எதிர்ப்பு மூலம் எழுப்பிவிடும் பீதிக்கு இடையிலும் நிரந்தரமாக ஆட்டி அலைக்கழிக்கப்படுவதும், சிறியளவிலான பணவசதிகளைக் கொண்டிருப்பதும் இந்த உடைமையால் ஏற்படும் பாதுகாப்பின்மை இந்தத் தொகைக்குத் தலைகீழ் விகிதத்தில் இருக்கக் காண்பதுமான இந்த வர்க்கம், தனது

கருத்துக்களில் மிகவும் ஊசலாட்டம் கொண்டதாக இருக்கிறது. ஒரு வலிமை மிக்க நிலப்பிரபுத்துவ அல்லது முடியாட்சி அரசாங்கத்தின் கீழ் பணிவாய் கெஞ்சிக் குனிந்து கீழ்ப்படிந்து நிற்கும் இந்த வர்க்கம் முதலாளி வர்க்கம் ஏற்றம் பெற்றிருக்கும் போது மிதவாதத்தின் பக்கமாகத் திரும்புகிறது; முதலாளி வர்க்கம் தனது சொந்த மேலாண்மையைப் பெற்ற உடனேயே தீவிரமான ஜனநாயக எழுச்சி அலையால் பீடிக்கப்படுகிறது; ஆனுல் அதற்குக் கீழே இருக்கும் வர்க்கமான பாட்டாளிகள் ஒரு சுயேச்சையான இயக்கத்தை நடத்த முயன்ற உடனேயே அச்சத்தால் ஏற்பட்ட படுமோசமான மனத்தளர்ச்சிக்குள் விழுந்துவிடுகிறது. ஜெர்மனியில் இந்த வர்க்கம் இந்தக் கட்டங்களில் ஒன்றில் இருந்து இன்னென்றுக்கு மாறிமாறிக் கடந்து செல்வதை நாம் விரைவில் காண்போம்.

ஜெர்மன் முதலாளி வர்க்கம் இங்கிலாந்து மற்றும் பிரான்சின் முதலாளி வர்க்கத்தை விடவும் பின்னணியில் இருப்பது போலவே, ஜெர்மனியில் இருக்கும் தொழிலாளி வர்க்கம் தனது சமூக மற்றும் அரசியல் வளர்ச்சியில் இந்த நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தை விட மிகவும் பின்னணியில் இருக்கிறது. எஜமானரைப் போல பணியாளும் இருக்கிருன். எண்ணிக்கையில் மிகுந்த, வலுவான, ஒன்றுதிரட்டப்பட்ட, அறிவுத்திறம் படைத்த பாட்டாளி வர்க்கத்தின் இருத்தலுக்கான நிலைமைகளின் முன்னேற்றம், எண்ணிக்கையில் மிகுந்த, செல்வம் படைத்த, ஒன்றுதிரட்டப்பட்ட வலிமை மிக்க முதலாளி வர்க்கத்தின் இருத்தலுக்கான நிலைமைகளின் வளர்ச்சியுடன் கைகோத்துக் கொண்டு செல்கிறது.முதலாளி வர்க்கத்தின் பல்வேறு பிரிவுகள் யாவும், குறிப்பாக அதன் ஆக முற்போக்கான பிரிவான பெரிய தொழிலதிபர்கள் அரசியல் ஆட்சியதிகாரத்தை வென்று பெற்று தமது தேவைகளுக்கு ஏற்றபடி அரசைப் புத்துருக் கொடுத்து அமைக்கும் வரையில் தொழிலாளி வர்க்க இயக்கம் தானே சுயேச்சையானதாக என்றுமே இருக்க முடியாது, முற்ற முழுமையாயும் பாட்டாளித் தன்மை பெற்றதாக என்றுமே இருக்க முடியாது. அப்போதுதான்

தொழிலதிபருக்கும் கூலித் தொழிலாளருக்கும் இடையிலான தவிர்க்க முடியாத மோதல் நெருங்கி வருகிறது; அதை இனி மேல் ஒத்திப் போட முடியாது; தொழிலாளி வர்க்கத்தை என்றுமே நிறைவேற்றம் பெருத உண்மையல்லாத நம்பிக்கைகள் மற்றும் வாக்குறுதிகளால் இனிமேல் ஏமாற்ற முடியாது. பத்தொன்பதாம் நூற்றுண்டின் மாபெரும் பிரச்சினையான பாட்டாளி வர்க்கத்தின் ஒழிப்பு என்பது முழுமையாகவும் முழுத் தெளிவுடனும் கடைசியாக முன்னணிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஜெர்மனியில் திரளான தொழிலாளி வர்க்கத்தினர், கிரேட் பிரிட்டன் வழங்கும் அத்தகைய அருமையான மாதிரிகளான அந்த நவீன பொருள் உற்பத்தியுடைமைப் பிரபுக்களால் தற்போது வேலையில் அமர்த்தப்படவில்லை, மாருக மத்திய காலத்தின் வெறும் எச்சமிச்சமாக இருந்த பொருளுற்பத்தி முறையை மேற்கொண்ட சிறிய தொழில் வினைஞரால் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தார்கள். மாபெரும் பருத்திப் பிரபுவுக்கும் சின்னஞ்சிறிய காலணி தயாரிப்பவன் அல்லது தையற்காரருக்கும் இடையே பேரளவான வேறுபாடு இருப்பதைப் போலவே, நவீன பொருள் உற்பத்தி பேபிலோன்களின் அறிவுள்ள, விழிப்புற்ற ஆலைத் தொழிலாளிக்கும், ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னதாக இருந்த வாழ்க்கை மற்றும் உழைப்பு நிலைமைகளிலிருந்து வெகு சொற்பமாகவே வேறுபட்ட நிலைமைகளில் வாழ்ந்தும் வேலை செய்தும் சிறு ஊரைச் சேர்ந்த தையற்காரர் அல்லது தச்சுத் தொழிலாளிக்கும் இடையே அதற்குப் பொருத்தமான இடைத் தொலைவு இருந்தது. நவீன வாழ்க்கை நிலைமைகளும் தொழில் துறை உற்பத்தியில் நவீன முறைகளும் பொதுவாக இல்லாதிருந்ததுடன் கூடவே நவீனக் கருத்துக்களும் கிட்டத்தட்ட அதே அளவுக்கு இல்லாதிருத்தல் நிலவியது. எனவே புரட்சி துவங்கியதும் தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பெரிய பகுதி கைவினைச் சங்கங்களும் மத்திய காலத்திய தனியுரிமைகள் கொண்ட கைத்தொழில் இணையங்களும் உடனே மீண்டும் நிறுவப்பட வேண்டும் என்று கூக்குரல் போட்டால் அதில் வியப்பேது? இருப்பினும் நவீன உற்பத்தி

முறை பிரதானமாக இருந்த பொருள் உற்பத்தி மாவட்டங்களின் செல்வாக்கின் விளைவாகவும் பெருந்தொகையிலான தொழிலாளர்களின் இடம் பெயர்ந்து வாழ்க்கை மூலம் விளைந்த பரஸ்பரத் தொடர்பு மற்றும் மனவள வசதிகளின் பின்விளைவாகவும் அவர்கள் மத்தியில் ஒரு பலமான மையக் குழு தானே உருவாகியது. தமது வர்க்கத்தின் விடுதலை பற்றிய இந்த மையக் குழுவினரின் கருத்துக்கள் மேலும் துலக்கமானதாகவும் நிலவிய மெய்நடப்புக்கள் மற்றும் வரலாற்றுத் தேவைகளுக்குக் கூடுதல் ஏற்பான முறையிலும் இருந்தன. ஆனால் அவர்கள் கேவலம் ஒரு சிறுபான்மையாகவே இருந்தார்கள். முதலாளி வர்க்கத்தின் செயலூக்கமான இயக்கம் 1840ல் இருந்து தொடங்கியதாகக் கருதப்படலாம் என்னும் பட்சத்தில் தொழிலாளி வர்க்கத்தின் இயக்கம் 1844ல் சைலீஷியன் மற்றும் போஹீமியன்* ஆலைத் தொழிலாளர்களின் புரட்சிகர எழுச்சியின்[7] வருகையோடு துவங்குகிறது எனலாம். இந்த இயக்கம் கடந்து சென்ற பல்வேறு கட்டங்களை மதிப்பாய்வு செய்வதற்கான சந்தர்ப்பம் நமக்கு விரைவில் கிட்டும்.

கடைசியாக, சிறிய விவசாயிகளின் மாபெரும் வர்க்கம் என்ற முறையில் விவசாயிகள் இருந்தார்கள். அவர்கள் தம்முடன் ஒட்டி இணைந்து நின்ற விவசாயத் தொழிலாளர்களுடன் சேர்ந்து நாடு முழுமையின் கணிசமான பெரும்பான்மையாக அமைந்தார்கள். ஆனால் இந்த வர்க்கத்திலும் பல்வேறு பிரிவுகள் இருந்தன. முதலாவதாக ஜெர்மனியில் Gross-மற்றும் Mittelbauern** என்று அழைக்கப்பட்ட கூடுதலான பணமுள்ள விவசாயிகள் இருந்தார்கள். இவர்கள் ஏறத்தாழ விரிவான பண்ணைகளின் உரிமையாளர்கள், இவர்கள் ஒவ்வொருவரும் சில விவசாயத் தொழிலாளர்களின் சேவைகளை நிர்வகித்து வந்தார்கள். வரி விதிக்கப்படாத பெரிய பிரபுத்துவ நிலவுடைமையாளர்களுக்கும் சிறுதர விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்

* செக்.—ப-ர்.

** பெரிய மற்றும் நடுத்தர விவசாயிகள்.—ப-ர்.

களுக்கும் மத்தியில் இடம் பெற்றிருந்த இந்த வர்க்கம் தெட்டத் தெளிவான காரணங்களால் நகரங்களில் இருந்த நிலப்பிரபுத்துவ-எதிர்ப்பு முதலாளி வர்க்கத்துடனுன கூட்டணியே தனக்கு மிகவும் இயல்பாக வாய்த்த அரசியல் செல்வழி எனக் கண்டது. பின்னர் இரண்டாவதாக ரைன் பிரதேசத்தில் பெருந் தொகையாக உள்ள சிறுதர பங்குநில உடைமையாளர்கள் இருந்தார்கள். அந்தப் பிரதேசத்தில் நிலப்பிரபுத்துவம் மகத்தான பிரெஞ்சுப் புரட்சியின் வலிமை மிக்க தாக்குதலின் முன் அடிபணிந்தது. அதே போன்ற சுயேச்சையான சிறுதர பங்குநில உடைமையாளர்கள் இதர மாகாணங்களிலும் அங்கும் இங்குமாக இருந்தார்கள். அங்கு அவர்கள் தமது நிலங்கள் மீது முன்னுட்களில் சுமத்தப்பட்டிருந்த நிலப்பிரபுத்துவக் கட்டணங்களைக் கொடுத்துத் தீர்த்து உடைமையைப் பெறுவதில் வெற்றியடைந்திருந்தார்கள். இந்த வர்க்கத்தினர் பெயரளவில் மட்டுமே பங்குநில உடைமையாளர்களாக இருந்தார்கள். அவர்களது சொத்து மிகவும் கடுமையான நிபந்தனைகளின் கீழ் பெருமளவுக்குப் பொதுப்பட அடமானம் வைக்கப்பட்டிருந்த காரணத்தால் இந்த விவசாயி நிலத்தின் சொந்தக்காரராக இருக்கவில்லை, மாருக பணம் கடன் கொடுத்த கடுவட்டியாளரே உண்மையில் நிலத்தின் சொந்தக்காரராக இருந்தார். மூன்ருவதாக நிலப்பிரபுத்துவத்தின் கீழான பாட்டக்காரர்கள் இருந்தார்கள், இவர்களை அவர்களது பங்கு நிலங்களில் இருந்து எளிதில் வெளியேற்ற முடியாது. ஆனுல் இவர்கள் நிரந்தரமான வாரம் செலுத்த வேண்டியிருந்தது அல்லது பண்ணையின் எஜமானருக்காக ஓரளவு உழைப்பை நிரந்தரமாக வழங்க வேண்டியிருந்தது. கடைசியாக விவசாயத் தொழிலாளர்கள் இருந்தார்கள். பல பெரிய பண்ணை நிறுவனங்களில் இவர்களது நிலைமை இங்கிலாந்தில் இருந்த இதே வர்க்கத்தினர் அனுபவித்து வந்த நிலைமையைப் போலவே இருந்தது. இவர்கள் எல்லா நிலைமைகளிலும் ஏழைகளாக, போதிய உணவில்லாதவர்களாக தமது எஜமானர்களின் அடிமைகளாகவே வாழ்ந்து மடிந்தனர். விவசாயி மக்கள் தொகையின் இந்த மூன்று பிந்திய

வர்க்கங்களான சுயேச்சையான சிறுதர பங்குநில உடைமையாளர்கள், நிலப்பிரபுத்துவத்தின் கீழிலான பாட்டக்காரர்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் புரட்சிக்கு முன்னுல் அரசியலைப் பற்றி அதிகமாகத் தமது சிந்தனையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளவில்லை. ஆனுல் புரட்சி ஒளி மயமான எதிர்கால வாய்ப்புகள் நிரம்பிய ஒரு புதிய வாழ்க்கை வழியை அவர்களுக்குத் திறந்து விட்டிருக்க வேண்டும் என்பது கண்கூடு. அவர்கள் ஒவ்வொருவருக்கும் புரட்சி சாதகங்களை முன்வைத்தது. இந்த இயக்கம் ஓரளவுக்குச் செயலில் இறங்கியவுடன் அவர்கள் ஒவ்வொருவரும் தம் முறைக்கு இதில் சேருவார்கள் என்பதாக எதிர்பார்க்கப்பட்டது. விவசாயி மக்கள் தொகையானது மிகப் பெரிய பரப்பில் சிதறலாகப் பரவிக் கிடப்பது, அதன் கணிசமான பகுதியினர் இடையே ஓர் உடன்பாட்டைக் கொண்டுவருவதிலுள்ள சங்கடம் ஆகியவை காரணமாக ஒரு வெற்றிகரமான சுயேச்சையான இயக்கத்தை என்றுமே துவங்க முடியாது என்பதும், நகரங்களில் வாழும் பெரும் அளவில் ஒன்றுதிரட்டப்பட்ட மேலும் அறிவொளி படைத்த, மிகவும் எளிதாக இயக்குவிக்கப்படக் கூடிய மக்களின் முன் முயற்சி இயல்பு கொண்ட தூண்டுதல் அதற்கு அவசியம் என்பதும் அதே சமயம் முற்றிலும் கண்கூடானது, அதோடு இது நவீன நாடுகள் அனைத்தின் வரலாற்ருல் அதே அளவுக்கு நிரூபித்துக் காட்டப்பட்டதுமாகும்.

இந்த சமீபகால இயக்கம் வெடித்த போது ஜெர்மன் தேசத்தை உருவாக்கிய இந்த மிகவும் முக்கியமான வர்க்கங்கள் அனைத்தையும் பற்றி முன்பு தரப்பட்ட சிறிய விளக்கம், அந்த இயக்கத்தில் மேலோங்கி நிலவிய தொடர்பின்மை, பொருத்தக்கேடு மற்றும் வெளிப்படையான முரண்பாடுகள் ஆகியவற்றில் பெரும் பகுதியை விளக்கிக் கூறுவதற்கு ஏற்கெனவே போதுமானது. மிகவும் வேறுபட்ட, பெருமளவுக்கு முரணுன, ஒன்றையொன்று அவ்வளவு விசித்திரமாகக் குறுக்கிடுகிற நலன்கள் வன்மையான மோதலுக்குள் கொண்டுவரப்படும் போது, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள இந்தப் போராட்

டத்தின் விளைவுகள் பல்வேறு விகிதங்களில் கலவை செய்யப் படும் போது, எல்லாவற்றுக்கும் மேலாக எவற்றின் முடிவு கள் அவற்றின் செல்வாக்கு மூலம் ஒவ்வொரு தனி வட் டாரத்திலும் அதே பூசலை ஒட்டி மீண்டும் மீண்டும் சண்டை போடும் தேவையை அகற்றிவிடுமோ அத்தகைய ஒரு மாபெரும் செயல் மையம் நாட்டில் இல்லை, இங்கு லண்டன் இல்லை, பாரிஸ் இல்லை எனும் போது, இந்தப் போராட்டம் தொடர்பற்ற ஏராளமான மோதல்களாகத் தன்னைத் தானே சிதைத்துக் கொள்ளும், இதில் பேரளவான இரத்த மும், ஆற்றலும், மூலதனமும் விரயமாகும், ஆனால் இது தீர்மானகரமான விளைவுகள் எதுவும் இல்லாமல் நீடிக்கும் என்பதைத் தவிர வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

ஏறத்தாழ முக்கியமான மூன்று டஜன் சிற்றரசுகளாக ஜெர்மனி அரசியல் முறையில் துண்டாடப்பட்டிருப்பது, இந்தக் குழப்பத்தாலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் வெவ் வேறு வகையாக இருப்பதும் இந்த தேசத்தை இணைத் துருவாக்கியதுமான கூறுகளின் பெருக்கத்தாலும் அதே அள வுக்கு விளக்கப்படுகிறது. எங்கு பொது நலன்கள் இல்லையோ அங்கு குறிக்கோளைப் பற்றிய ஒற்றுமை இருக்க முடியாது, செயல் ஒற்றுமை என்பதோ அதைவிட இருக்கவே இருக் காது. ஜெர்மன் அரசுகளின் கூட்டமைப்பு[8] என்றுமே சிதை வுறாது என்று சாற்றப்பட்டது மெய்யே, ஆனால் இந்தக் கூட்டமைப்போ அல்லது அதன் ஆட்சியுறுப்பான புந்தெஸ் தாஹோ[9] ஜெர்மனியின் ஒற்றுமையை என்றுமே பிரதி நிதித்துவப்படுத்தியது கிடையாது. ஜெர்மனியில் என்றென் றைக்குமாக நிறைவேற்றப்பட்ட மத்தியப்படுத்தலின் ஆக உச்சமான நிலை சுங்கச் சங்கம் நிறுவப்பட்டதாகும். ஆஸ்தி ரியா தனது தனியான மிதமிஞ்சிய சுங்கவரியில் முழுதும் ஆழ்ந்திருக்கும் நிலையில் வடக்கு கடற்பகுதி அரசுகள் தமக்கே சொந்தமான ஒரு சுங்கவரி இணையத்துக்குள்[10] கட்டாயமாகச் சேர வேண்டியிருந்தது. நடைமுறைக் காரியங்கள் அனைத்துக்கும் ஜெர்மனி முப்பத்தாறு அரசு கள் இடையில் அன்றி மூன்றே சுதந்திரமான அரசுகளி டையே மட்டுமே பிரிந்திருந்தது என்ற திருப்தியைப் பெற்

றிருந்தது. 1814ல் நிலைநாட்டப்பட்டதான ருஷ்ய ஜாரின்* தலைமையான ஆதிக்கம் எவ்வித மாறுதலும் அடையவில்லை என்பது திண்ணம்.

நமது முற்கோள்களில் இருந்து இந்தப் பூர்வாங்க முடிவுகளுக்கு வந்துள்ள நாம், மேலே குறிப்பிடப்பட்ட ஜெர்மன் மக்களின் பல்வேறு வர்க்கங்கள் ஒன்றன் பின் ஒன்ருக எவ்வாறு இயக்குவிக்கப்பட்டன என்பதையும் 1848ல் பிரெஞ்சுப் புரட்சி வெடித்த போது இந்த இயக்கம் என்ன தன்மையை மேற்கொண்டது என்பதையும் அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

லண்டன், 1851 செப்டம்பர்

## 2

## பிரஷ்ய அரசு

ஜெர்மனியில் நடுத்தர வர்க்கம் அல்லது முதலாளி வர்க்கத்தின் அரசியல் இயக்கம் 1840லிருந்து துவங்கியது என்று கருதலாம். அந்த நாட்டில் மூலதனம் மற்றும் தொழில் துறையைச் சொந்தமாக கொண்ட வர்க்கம் அரை நிலப் பிரபுத்துவ, அரை அதிகாரவர்க்க முடியாட்சிகளின் நிர்ப்பந்தத்தின் கீழ் அக்கறையின்றியும் செயலற்றும் நீடித்து இருக்க முடியாத நிலைக்கு முதிர்ச்சியடைந்து வந்துள்ளது என்பதைக் காட்டும் அறிகுறிகள் இந்தக் காலப்பகுதிக்கு முந்தியே தோற்றமளித்தன. ஜெர்மனியின் சிற்றரசர்கள், வியன்ஞ காங்கிரசால்[11] தமது ஆட்சியின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட பிரிந்திருந்த மாகாணங்களை முழுமையாக ஒற்றுமைப்படுத்தும் பொருட்டும், ஆஸ்திரியா மற்றும் பிரஷ்யாவின் மேலாதிக்கத்திற்கு எதிராகவும் அல்லது தமது சொந்த அரசுகளில் இருந்த பிரபுக்குலத்தவரின் செல்வாக்கிற்கு எதிராகவும், தமக்கு மேலதிகமான சுதந்திரத்தை

* முதலாம் அலெக்சாந்தர்.—ப-ர்.

உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டும் ஒருவர் பின் ஒருவராக ஏறத்தாழ மிதவாதத் தன்மையுடைய அரசியலமைப்புச் சட்டங்களை வழங்கினார்கள். தமக்கு எவ்வித அபாயமும் இல்லாதபடி இதனை அவர்களால் செய்ய முடிந்தது, காரணம் இந்தக் கூட்டமைவின் புந்தெஸ்தாஹ், ஆஸ்திரியா மற்றும் பிரஷ்யாவின் இந்தக் கைப்பாவை, சர்வவுரிமையாளர்கள் என்ற முறையில் அவர்களது சுதந்திரத்தில் அத்துமீறித் தலையிடுமானால், அதன் ஆணைகளை எதிர்ப்பதில் அவர்களுக்குப் பொதுஜன அபிப்பிராயமும் சட்டமன்றங்களும் ஆதரவளிக்கும் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். இதற்கு மாறாக இந்த சட்டமன்றங்கள் அளவுக்கு மேல் வலுப்பெற்று விடும் பட்சத்தில் எல்லா எதிர்ப்பையும் முறியடிப்பதற்கு நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை அவர்கள் உடனடியாகப் பயன்படுத்தலாம். இத்தகைய சூழ்நிலைமைகளில் பவேரியா, வுர்ட்டெம்பர்க், பாடேன் அல்லது ஹனோவரின் அரசியலமைப்பு நிறுவனங்களால் அரசியல் அதிகாரத்துக்கான எந்தவொரு முக்கியமான போராட்டத்தையும் தோற்றுவிக்க முடியவில்லை. எனவே ஜெர்மன் முதலாளி வர்க்கத்தினரில் மிகப் பெரும் தொகையினர், சிறிய அரசுகளின் சட்டமன்றங்களில் எழுப்பப்பட்ட சில்லறைப் பூசல்களில் இருந்து மிகவும் பொதுப்பட விலகியே இருந்தார்கள். ஜெர்மனியின் இரு பெரும் வல்லரசுகளின் கொள்கையிலும் அரசியல் அமைப்பிலும் அடிப்படையான மாற்றம் ஏற்படாமல் இரண்டாந்தரமான முயற்சிகளாலும் வெற்றிகளாலும் எவ்விதப் பயனுமில்லை என்பதை அவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். அதே சமயம் இந்தச் சிறிய சட்டமன்றங்களில் மிதவாத வழக்கறிஞர்கள், முழு நேர எதிர்ப்பாளர்களின் இனம் ஒன்று முளைத்தெழுந்தது; ராட்டேக்குகள், வெல்கர்கள், ரோமெர்கள், ஜார்டன்கள், ஷ்டுவேகள், ஐசன்மன்கள் ஆகிய அந்த மாபெரும் ''மக்கள் தலைவர்கள்'' (Volksmänner) இருபதாண்டுகளாகக் கிட்டத்தட்ட ஆரவாரமான ஆனால் எப்போதும் வெற்றியடையாத எதிர்ப்புக்குப் பிறகு, 1848ன் புரட்சிகர வெள்ளப் பெருக்கால் ஆட்சியின் உச்சி முடிக்கு ஏந்திச் செல்லப்பட்

டார்கள். அவர்கள் அங்கு தமது படுமோசமான கையாலா காத்தனத்தையும் அற்பத்தனத்தையும் வெளியிட்ட பின்னர் மீண்டும் ஒரு நொடியில் கீழே தள்ளப்பட்டார்கள். ஜெர்மன் மண்ணில் அரசியலையும் எதிர்க்கட்சி நடவடிக்கைகளையும் முதன்முதலில் தமது தொழிலாக்கிய அவர்கள், தமது பேச்சுக்களாலும் எழுத்துக்களாலும் ஜெர்மானியர்களுக்கு அரசியலமைப்புச் சட்டவாதத்திற்குரிய மொழியை அறிமுகம் செய்தார்கள். அதோடு அவர்கள் இருக்கிறார்கள் என்ற ஒரே உண்மை மூலம், இந்த வாயாடியான வழக்கறிஞர்களும் பேராசிரியர்களும் எந்த அரசியல் தொடர்களை அவற்றின் மூலப்பொருளை அறியாமலே வழக்கமாகப் பயன்படுத்தி வந்தார்களோ அந்த அரசியல் தொடர்களுக்கு அவற்றின் சரியான பொருளை மீட்டளிப்பதற்கு முதலாளி வர்க்கம் ஆவலுடன் பற்றிக் கொள்ளப் போகும் ஒரு தருணம் நெருங்கி வருகிறது என்பதை முன்னறிந்து சுட்டினார்கள்.

1830ஆம் ஆண்டின் நிகழ்ச்சிகள்[12] மூலம் அனைத்து ஐரோப்பாவும் தள்ளப்பட்டுக் கிடந்த அந்த அரசியல் கொந்தளிப்பின் தாக்கத்துக்கு ஜெர்மன் இலக்கியமும் கூட உட்பட்டது. அந்தக் காலத்தில் இருந்த ஏறத்தாழ எல்லா எழுத்தாளர்களும் பக்குவமுறாத அரசியலமைப்புச் சட்டவாதத்தை, அல்லது இதைவிட இன்னும் பக்குவமுறாத குடியரசு வாதத்தைப் பிரசாரம் செய்தனர். தமது படைப்புக்களில் உள்ள மதியூகக் குறையை கட்டாயம் கவனத்தைக் கவரக் கூடியதான அரசியல் ஜாடைகள் மூலம் சமாளிப்பது என்பது குறிப்பாக மட்டமான தரத்திலான எழுத்தாளர்களிடம் மேலும் மேலும் ஒரு வழக்கமே ஆகிவிட்டது. கவிதைகள், நாவல்கள், மதிப்புரைகள், நாடகங்கள் சகல இலக்கியப் படைப்புகளும் ''போக்கு'' எனப்படுவதைக் கொண்டு பொங்கி வழிந்தன. அதாவது அரசாங்க எதிர்ப்பு உணர்வின் ஏறக்குறைய பயந்த வெளிப்பாடாக இருந்தன. ஜெர்மனியில் 1830க்குப் பிறகு கோலோச்சி வந்த கருத்துக்களின் குழப்பத்தினை முழுமைப்படுத்தும் பொருட்டு, அரசியல் எதிர்த்தரப்பின் இந்த அம்சங்களோடு கூடவே ஜெர்மன் தத்துவஞானத்தின் அரைகுறையாக

ஜீரணிக்கப்பட்ட பல்கலைக்கழக நினைவுகளும், பிரெஞ்சு சோஷலிசத்தில் இருந்து, குறிப்பாயும் சான்-சிமோனியத்தில் இருந்து தவருகப் புரிந்து கொள்ளப்பட்ட பொறுக்குமணிகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. இந்தக் கருத்துக்களின் முரணியல்பான கதம்பக் கூளத்தின் மீது விரிவாக எழுதிய எழுத்தாளர் கும்பல் தன்னை ''இளம் ஜெர்மனி'' அல்லது ''நவீனப் போக்கினர்''[13] என்று தன்மூப்புடன் அழைத்துக் கொண்டது. பின்னுல் அவர்கள் தமது இளம் பருவப் பாவங்களுக்குக் கழிவிரக்கம் காட்டினர், ஆனுல் அவர்கள் தமது எழுதும் பாணியை மேம்படுத்திக் கொள்ளவில்லை.

கடைசியாக, ஜெர்மன் சிந்தனை வளர்ச்சியின் மிகவும் சிக்கலான ஆனுல் அதே சமயத்தில் ஆக உறுதியான அளவுகோலான ஜெர்மன் தத்துவஞானம், ஹெகல் தமது ''சட்டத்தின் தத்துவவியல்'' எனும் நூலில் அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட முடியாட்சியை முடிவானதும் மிகவும் முழுநிறைவானதுமான ஆட்சியதிகார வடிவம் என்று அறிவித்த போது, முதலாளி வர்க்கத்திற்கு ஆதரவைத் தெரிவித்தது. வேறு சொற்களில் கூறினுல், அவர் நாட்டின் முதலாளி வர்க்கத்தினர் அரசியல் அதிகாரத்தை நோக்கி நெருங்கி வருவதை வெளிப்படையாகக் கூறிவிட்டார். அவரது மறைவுக்குப் பிறகு அவரது கருத்துப் பிரிவினர் இதோடு நின்றுவிடவில்லை. அவரது சீடர்களில் அதிக தீவிரவாதப் பகுதியினர் ஒரு புறத்தில், ஒவ்வொரு சமய நம்பிக்கையையும் கண்டிப்பான விமர்சனம் எனும் கடுஞ்சோதனைக்கு இலக்காக்கினர், அதோடு கிறிஸ்துவத்தின் தொன்மையான கட்டுமானத்தை அதன் அஸ்திவாரத்தோடு ஆட்டிக் குலுக்கினர். அதேபோதில் இதுகாறும் ஜெர்மானியர் செவிமடுக்கும் கதிக்கு ஆளாகியிருந்த விளக்கத்தை விட மேலும் துணிச்சலான அரசியல் கோட்பாடுகளை முன் வைத்தனர். மேலும் முதலாவது பிரெஞ்சு புரட்சியின் வீரர்களது நினைவின் சீர்த்தியை மீட்டமைக்க முயன்றனர். இந்தக் கருத்துக்கள் எளிதில் புரியாத தத்துவஞான மொழியில் புனையப்பட்டிருந்தன. இது எழுத்தாளர் மற்றும் வாசகர்

இருவரின் மனதையும் ஒருங்கே மழுங்கடித்தது என்றால் அதே அளவுக்குத் தணிக்கையாளர் கண்களையும் மறைத்தது. இவ்வாறாக, இலக்கியத்தின் வேறு இதர பிரிவுகள் எதிலும் கண்டிராத பத்திரிகைச் சுதந்திரத்தை "இளம் ஹெகலியன்" எழுத்தாளர்கள் அனுபவித்தார்கள்.

இதன் விளைவாக, ஜெர்மனியில் பொதுஜனக் கருத்து ஒரு மாபெரும் மாறுதலுக்கு ஆளாகியது என்பது தெளிவாகக் காணப்பட்டது. எதேச்சாதிகார முடியாட்சியின் கீழ் கூட தமது கல்வி அல்லது வாழ்க்கை நிலவரம் காரணமாக ஒருசில அரசியல் தகவல்களைப் பெறவும் ஓரளவு சுயேச்சையான அரசியல் கருத்து எனத்தக்க ஒன்றை உருவாக்கவும் இயலும் வகையில் இருந்த அந்த வர்க்கங்களின் விரிவான பெரும்பான்மையினர், படிப்படியாக நிலவி வரும் அமைப்பு முறைக்கு எதிராக ஒரு வலிமை மிகுந்த படையணியாக ஒன்றுதிரண்டார்கள். ஜெர்மனியின் அரசியல் வளர்ச்சியின் மந்தமான போக்கின் மீது எவரும் தீர்ப்புக் கூறுவதற்கு முனையும் போது, தகவல் ஆதாரங்கள் அனைத்தும் அரசாங்கத்தின் கண்காணிப்பில் இருக்கும் அந்த நாட்டில், எந்த விஷயம் பற்றியும் சரியான தகவல் பெறுவது கடினம் என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் இருக்க முடியாது. அங்கே ஏழைகளுக்கான பள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமை சமயப் பள்ளி முதல் செய்திப் பத்திரிகை மற்றும் பல்கலைக்கழகம் வரை, அரசின் அங்கீகாரத்தை முன்கூட்டியே பெற்றிராத எதுவும் கூறப்பட முடியாது, போதிக்கப்பட முடியாது, அச்சிடப்பட முடியாது, பிரசுரிக்கப்பட முடியாது. உதாரணமாக வியன்னாவைப் பாருங்கள். விடாமுயற்சியிலும் செய் தொழிலிலும் ஜெர்மனியில் ஒருக்கால் எவருக்குமே சளைக்காதவர்களும் துடிப்பில், துணிவில், புரட்சிகர ஆற்றலில் எல்லோரையும் விட மேநிலையில் இருப்பதைத் தாமே நிரூபித்துவிட்டவர்களுமான வியன்னா மக்கள் தமது மெய்யான நலன்கள் விஷயத்தில் இன்னும் மிகவும் அறிவற்றவர்களாகவே இருந்தார்கள். மேலும் புரட்சியின் போது மற்றவர்கள் எவரையும் விட அதிகமான பெரும் பிழைகளைச் செய்தார்கள். மெட்டர்னிக்கின் அரசாங்

கம் அவர்களை மிகவும் சர்வசாதாரணமான அரசியல் விஷயங்கள் சம்பந்தமாகக்கூட பெரும்பாலும் பரம மடமையில் வைத்திருக்க முடிந்ததே இதற்குப் பெருமளவு காரணமாகும்.

இத்தகைய அமைப்பு முறையின் கீழ் அரசியல் தகவல், இதை நாட்டுக்குள் கள்ளத்தனமாக கொண்டுவருவதற்குப் பணம் கொடுக்கும் வசதி பெற்றவர்களும், இருக்கும் நிலவரங்களால் மேலும் குறிப்பாக எவரது நலன்கள் மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டு வருகின்றனவோ அவர்களும் கொண்டதான சமுதாயத்தின் அத்தகைய வர்க்கங்களின்—அதாவது தொழில் துறை மற்றும் வாணிகத்துறை வர்க்கங்களின்—கிட்டத்தட்ட முற்றமுழு ஏகபோகமாக இருந்தது ஏன் என்பதற்கு இதற்கு மேல் அதிகமான விளக்கம் எதுவும் தேவையில்லை. எனவே, ஏறக்குறைய மறைமுகமான எதேச்சாதிகாரம் நீடிப்பதை எதிர்த்து அவர்கள்தான் முதலில் ஒரு திரளாக ஒன்றுசேர்ந்து முன்வந்தார்கள். அவர்கள் எதிர்ப்பு அணியின் வரிசையில் சென்று சேர்ந்தது முதலாக ஜெர்மனியில் மெய்யான புரட்சிகர இயக்கத்தின் துவக்கம் ஆரம்பமானதாகக் கருதப்பட வேண்டும்.

ஜெர்மன் முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்புப் போராட்டம் பற்றி அதிகார பூர்வமான அறிவிப்பு, 1815ஆம் ஆண்டின் 'புனிதக் கூட்டணியின்'[14] நிறுவனர்களில் கடைசியாக உயிர்வாழ்ந்திருந்த பிரஷ்யாவின் முன்னாள் மன்னரின்* மரணத்தோடு 1840ல் துவங்கியது என்று கருதலாம். புதிய மன்னர் தமது தந்தையாரின் பெருமளவு அதிகார வர்க்கத் தன்மை கொண்டதான ராணுவ முடியாட்சியை ஆதரிப்பவராக இருக்கவில்லை என்பது தெரிந்ததே. பதினாறும் லுயீ மன்னன் வருகையில் இருந்து பிரெஞ்சு முதலாளி வர்க்கத்தினர் எதை எதிர்பார்த்தார்களோ அதையே ஓரளவுக்கு பிரஷ்யாவின் மன்னர் நாலாவது பிரெடெரிக் வில்ஹெல்மின் வருகையிலிருந்து ஜெர்மன் முதலாளி வர்க்கத்தினர் எதிர்பார்த்தார்கள். பழைய அமைப்பு முறை

* மூன்றாவது. பிரெடெரிக்-வில்ஹெல்ம்—ப-ர்.

தகர்ந்து விட்டது, இற்றுப் போய் விட்டது, அதைக் கட்டாயம் கைவிட வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். பழைய மன்னரின் கீழ் மௌனமாகச் சகிக்கப்பட்டு வந்தது எதுவோ அது இப்போது சகிக்க முடியாதது என்று உரக்கப் பிரகடனம் செய்யப்பட்டது.

பதினெருவது லுயீ, ''விரும்பத்தக்க லுயீ'', ஒரு சாமான்யமான ஆடம்பரமில்லாத அப்பாவியாக, தனது சொந்த உதவாத்தனம் குறித்து ஓரளவு உணர்வுடையவராக, நிர்ணயமான கருத்துக்கள் எதுவும் இல்லாதவராக, தான் படித்த காலத்தில் பெற்ற வழக்கங்களால் பிரதானமாக ஆளுமை செய்யப்பட்டவராக இருந்தார் என்ருல், ''விரும்பத்தக்க பிரெடெரிக் வில்ஹெல்ம் முற்றும் வேறுபட்டவராக இருந்தார். மனவுறுதியற்ற தன்மையில் அவர் தனது பிரெஞ்சு மூலவரை நிச்சயமாக விஞ்சியிருந்தார் என்ற போதிலும் அவர் தனது சொந்தமான அபிப்பிராயங்களோ தனது சொந்தமான கருத்துக்களோ இல்லாதவராக இருக்கவில்லை. பெரும்பாலான விஞ்ஞானங்களின் முதற்படிகளில் அவர் மேற்போக்கான பரிச்சயம் பெற்றிருந்தார். எனவே எல்லா விஷயங்கள் மீதும் தனது தீர்ப்பே முடிவானது என்று கருதுமளவுக்குக் கற்றறிந்தவராகத் தன்னைப் பற்றித் தானே எண்ணிக் கொண்டார். தான் ஒரு முதல்தரமான நாவலர் என்று நம்பிக்கை கொண்டார். அவரை மிகையான போலி நகைச்சுவையிலோ சரளமான பேச்சாற்றலிலோ பெர்லினில் இருந்த வாணிகப் பயணி எவரும் நிச்சயம் தோற்கடிக்க முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக அவர் தனது தனிப்பட்ட அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தார். பிரஷ்ய முடியாட்சியின் அதிகாரவர்க்கப் பகுதியின் மீது அவர் பகைமையும் வெறுப்பும் கொண்டிருந்தார், அவரது அனுதாபங்கள் அனைத்தும் நிலப்பிரபுத்துவச் சக்தியின் பக்கமாக இருந்தது மட்டுமே இதற்குக் காரணம். *Berliner politisches Wochenblatt*[15], வரலாற்று மரபு[16] எனப்படுவதன் ஸ்தாபகர்களிலும் பிரமுகர்களிலும் ஒருவரான அவர், (பிரெஞ்சு முறைமைவாதிகளின்[17] முதல் தலைமுறையினரான பொனல்ட், டி மெஸ்டிர் மற்றும் இதர எழுத்தாளர்களின்

கருத்துக்களை வைத்து வாழ்ந்து வந்த பிரிவு) பிரபுக்குலத்தின் மிதமிஞ்சிய சமுதாய அந்தஸ்தை சாத்தியமான அளவு முழுமையாக மீட்டமைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தார். மன்னர், தனது ராஜ்யத்தின் முதல் உயர்குடிப் பெருமகன், முதல் படியில் வலிமை மிக்க சிற்றரசர்கள், இளவரசர்கள், கோமகன்கள், சிற்றரசர்கள் ஆகியோரின் மிகச்சிறந்த அரசு பரிவாரத்தால் சூழப்பட்டிருப்பார், இரண்டாம் படியில் மிகப்பல செல்வந்த, தாழ்மட்டப் பிரபுக்களால் சூழப்பட்டிருப்பார். தனது விசுவாசமிக்க நகரவாசிகள் மற்றும் விவசாயிகள் மீது தனது விருப்பத்துக்கு ஏற்ப ஆட்சி புரிவார்; எனவே தானே சமுதாயப் பதவி வரிசை அல்லது ஜாதிவகைகளின் முழுமையான படிநிலை அமைப்புக்கு முதல்வராக இருப்பார்—இவை ஒவ்வொன்றும் தனது பிரத்தியேக சிறப்புரிமையை அனுபவிக்கும், மற்றவையிடமிருந்து பிறப்பு அல்லது நிர்ணயமான மாற்ற முடியாத சமுதாய அந்தஸ்து எனும் கிட்டத்தட்ட கடக்க வியலாத எல்லைக்கோட்டால் பிரிக்கப்பட்டிருக்கும்; இந்த ஜாதிவகைகளும் ''ராஜ்யப் படிநிலைகளும்'' அனைத்தும் பலத்திலும் செல்வாக்கிலும் ஒன்றை ஒன்று நேர்த்தியான முறையில் சமநிலைப்படுத்திக் கொண்டு முழுமையான செயல் சுதந்திரம் கட்டாயம் மன்னர் வசம் இருக்கச் செய்ய வேண்டும். இத்தகையதான beau idéal* நாலாம் பிரெடெரிக் வில்ஹெல்ம் நிறைவேற்ற பொறுப்பேற்றார், இதையே இன்றைய தருணத்தில் நிறைவேற்ற மீண்டும் முயல்கிறார்.

தத்துவார்த்த விஷயங்களில் நல்ல பயிற்சித்திறம் இல்லாத பிரஷ்ய முதலாளி வர்க்கத்தினருக்கு தமது மன்னரின் போக்கியல்பின் மெய்யான செயல் நோக்கத்தைக் கண்டறியச் சில காலம் பிடித்தது. ஆனால் அவர்கள் எதை விரும்புகிறார்களோ அதற்கு நேர் எதிரானவற்றில்தான் மன்னர் கண்ணுங் கருத்துமாக இருக்கிறார் என்று அவர்கள் விரைவில் கண்டு கொண்டார்கள். அவரது தந்தையின் மறைவால் தனது ''வாசாலகமான பேச்சுக்குத்'' தடங்கல் எதுவும்

* அருமையான லட்சியம்.—ப-ர்.

இல்லை என்பதைப் புதிய மன்னர் அறிந்த உடனேயே அவர் எண்ணற்ற உரைகளில் தனது உள்நோக்கங்களை வெளியிடத் தொடங்கினார். அவரது ஒவ்வொரு உரையும் ஒவ்வொரு செயலும் முதலாளி வர்க்கத்தின் அனுதாபங்களை அவர் இழக்குமாறு செய்தன. அவரது கவிதாபாணிக் கனவுகளில் குறுக்கிட்ட ஒரு சில கடுமையானதும் எதிர்பாரா அதிர்ச்சியூட்டுவதுமான மெய்ப்பாடுகள் நிகழ்ந்திராத பட்சம் அவர் அதைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்பட்டிருக்க மாட்டார். அந்தோ, அந்தப் புத்தார்வவாதம் சீக்கிரமாக முடிவுக்கு வரும் திறன் பெற்றதல்ல மற்றும் நிலப்பிரபுத்துவமானது டான்-குவிக்சாட் காலம் முதலே எப்போதும் தவறிழைத்து உள்ளது! நாலாவது பிரெடெரிக்-வில்ஹெல்ம், சிலுவைப் போர் வீரர்களின்[18] புதல்வர்களின் உன்னதமான பரம்பரைச் சொத்தாக என்றும் இருந்த ரொக்கப் பணத்தைப் பற்றிய இகழ்ச்சியைப் பின்பற்றினார். தான் அரியணை ஏறியதும், செட்டான முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் செலவு மிக்கதான அரசாங்க அமைப்பு முறையையும் சுமாராக நிரப்பப்பட்டிருந்த அரசுகஜானாவையும் அவர் கண்டார். இரண்டே ஆண்டுகளுக்குள் உபரி நிதிகளின் ஒவ்வொரு காசும் அரசவைக் கொண்டாட்டங்கள், அரசரது சுற்றுப்பயணங்கள், பரிசுகள், வசதி இல்லாத, வளமும் வலியும் இழந்த பேராசைக்கார உயர்குடிப் பேர்வழிகளுக்கு உதவித் தொகைகள் என்று இத்தியாதிகளுக்காகச் செலவழிக்கப்பட்டுவிட்டது. முறையான வரித் தொகைகள் அரசவை அல்லது அரசாங்கத்தின் தேவைகளுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. இவ்வாறாக விரைவில் மாட்சிமை தங்கிய மன்னர் ஒருபுறம் முனைப்பான பற்றுக்குறைக்கும் மறுபுறம் 1820ஆம் ஆண்டின் சட்டத்திற்கும் இடையே இருக்கக் கண்டார். இந்தச் சட்டப்படி ''மக்களின் எதிர்காலப் பிரதிநிதித்துவத்தின்'' ஒப்புதல் இல்லாமல் புதிய கடன் திரட்டலோ, இருக்கும் வரிகளை அதிகரிப்பதோ சட்டவிரோதம் ஆக்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டத்தில் மக்களின் பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. புதிய மன்னர் இதை உருவாக்குவதில் அவரது தந்தையைக் காட்

டிலும் குறைவான நாட்டமே கொண்டிருந்தார். அவர் நாட்டங்கொண்டிருந்திருப்பாராஞல் தான் அரியணை ஏறியதன் பின் மக்கள் அபிப்பிராயம் அதிசயமான முறையில் மாறி விட்டது என்பதை அறிந்திருப்பார்.

புதிய மன்னர் உடனே ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை வழங்குவார், பத்திரிகை சுதந்திரம், ஜூரிகள் மூலமான விசாரணை இத்தியாதி இத்தியாதிகளைப் பிரகடனம் செய்வார், சுருங்கக் கூறின் அரசியல் மேலாண்மை பெறும் பொருட்டு முதலாளி வர்க்கம் வேண்டுமென விரும்பிய அந்த அமைதிப் புரட்சியை அவரே தலைமை தாங்கி நடத்துவார் என்று முதலாளி வர்க்கம் ஓரளவுக்கு எதிர்பார்த்தது என்பது கண்கூடு. இந்த முதலாளி வர்க்கத்தினர் தமது பிழையைக் கண்டுகொண்டனர், மன்னருக்கு விரோதமாக மூர்க்கமாகத் திரும்பினர். ரைன் மாகாணத்திலும் கிட்டத்தட்டப் பொதுப்படையாக பிரஷ்யா முழுவதிலும் அவர்கள் மிகவும் எரிச்சலடைந்தவர்களாய், பத்திரிகைகளில் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய நபர்கள் இல்லாக் குறையால், நாம் ஏற்கெனவே மேலே குறிப்பிட்ட தீவிர தத்துவவியல் போக்குடன் ஒரு கூட்டணி அமைக்கும் அளவுக்குத் துணிந்துவிட்டார்கள். இந்தக் கூட்டணியின் பலனே கொலோனில் பிரசுரிக்கப்பட்ட *"Rheinische Zeitung"*[19] (''ரைன் பத்திரிகை'') ஆகும். இந்தப் பத்திரிகை பதினைந்து மாதங்களுக்குப் பிறகு ஒடுக்கப்பட்டது. ஆனல் இதிலிருந்து ஜெர்மனியில் செய்திப் பத்திரிகைகளின் வாழ்க்கை தொடங்கியது எனக் கொள்ளலாம். இது நடந்தது 1842ல்.

தனது மத்திய காலத்திய நாட்டங்களின் மீது தனது பண இடர்ப்பாடுகளே ஆகக் கூர்மையான கேலித்தாக்குதலாய் இருக்கக் கண்ட இந்த அப்பாவி மன்னர், ''மக்கள் பிரதிநிதித்துவத்துக்கான'' பொதுவான கூக்குரலுக்குச் சொற்பமான சில சலுகைகளைத் தராமல் தொடர்ந்து ஆட்சி நடத்த முடியாது என்பதை வெகுவிரைவில் உணர்ந்து கொண்டார். இந்த ''மக்கள் பிரதிநிதித்துவம்'' 1813 அல்லது 1815ன் நெடுங்காலமாக மறக்கப்பட்டுவிட்டதான

வாக்குறுதிகளின் கடைசி எச்சமிச்சம் என்ற முறையில் 1820ன் சட்டத்தில் உருக்கொண்டிருந்தது. மாகாண நாடாளுமன்றங்களின் நிரந்தரக் கமிட்டிகளை ஒருசேரக் கூடுமாறு அழைப்பதன் மூலம் இந்த அவக்கேடான சட்டத்தைத் திருப்திப்படுத்துவதற்கான குறைந்த பட்சம் ஆட்சேபணையுள்ள வழியை அவர் கண்டறிந்தார். இந்த மாகாண நாடாளுமன்றங்கள் 1823லேயே நிறுவப்பட்டிருந்தன. இராஜ்ஜியத்தின் எட்டு மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் என அவற்றில் அடங்கியிருந்தவை வருமாறு: 1) ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் முன்னுள் அரசுக் குடும்பங்களைச் சேர்ந்த உயர் பிரபுக்குலத்தினர்—இக்குடும்பங்களின் தலைவர்கள் பிறப்புரிமையால் சட்டசபை உறுப்பினர்களாக இருந்தார்கள்; 2) வீரப் பெருந்தகையினர் அல்லது கீழ்மட்டப் பிரபுக்குலத்தினர் பிரதிநிதிகள்; 3) நகரங்களின் பிரதிநிதிகள்; 4) விவசாயி மக்கள் அல்லது சிறுதர நிலவுடைமையாளர்களின் பிரதிநிதிகள். ஒவ்வொரு மாகாணத்திலும் பிரபுக்குலத்தினரின் இந்த இரண்டு பிரிவுகளுக்கும் எப்போதும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருந்து வரும் முறையில் முழுதும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த எட்டு மாகாண நாடாளுமன்றங்கள் ஒவ்வொன்றும் ஒரு கமிட்டியைத் தேர்ந்தெடுத்தது. ஒரு பிரதிநிதித்துவ சபையை நிறுவும் பொருட்டும், மிகவும் வேண்டிய கடனுதவிக்கு வோட்டு அளிக்கும் நோக்கமுடனும் இந்த எட்டுக் கமிட்டிகளும் பெர்லினுக்கு அழைக்கப்பட்டன. கஜானா நிரம்பிக் கிடக்கிறது, கடனுதவி நடப்புத் தேவைகளுக்கு அல்ல, மாறாக ஓர் அரசாங்க ரயில்வேயை நிர்மாணிப்பதற்காகவே தேவைப்படுகிறது என்பது அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த ஐக்கியக் கமிட்டிகள்[20] மன்னரிடம் மொத்தமாக மறுப்புத் தெரிவித்தன. மக்களின் பிரதிநிதிகளாகச் செயல்படுவதற்குத் தமக்குப் போதிய தகுதி இல்லை என்று சொல்லி நெப்போலியனுக்கு எதிராகத் தனக்கு மக்கள் உதவி தேவைப்பட்ட போது அவரது தந்தையார் மக்கள் பிரதிநிதித்துவ அமைப்பைப் புகுத்துவதைப் பற்றி

கொடுத்திருந்த வாக்குறுதியை மாட்சிமை தங்கிய மன்னர் நிறைவேற்ற வேண்டும் என அவை கோரின.

எதிர்ப்பு உணர்வு இனியும் முதலாளி வர்க்கத்தின் அளவோடு வரையறுக்கப்பட்டுவிடவில்லை என்பதை ஐக்கியக் கமிட்டிகளின் அமர்வு நிருபித்துக் காட்டியது. விவசாயிகளில் ஒரு பகுதி முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து கொண்டது. பல உயர்குடியினர் தமது நிலத்தில் பெருவீத விவசாயத்திலும், தானியம், கம்பளி, மதுவகைகள் மற்றும் மென் சணல் வாணிகத்திலும் ஈடுபட்டிருந்ததாலும், எதேச்சாதிகாரம், அதிகாரவர்க்கம் மற்றும் நிலப்பிரபுத்துவ மீட்டமைப்புக்கு எதிராக அதே போன்ற உத்தரவாதங்கள் அவசியம் அவர்களுக்குத் தேவைப்பட்டதாலும், அதே அளவுக்கு அரசாங்கத்துக்கு எதிராக முன்வந்ததோடு ஒரு பிரதிநிதித்துவ அமைப்பையும் கோரினார்கள். அரசரின் திட்டம் பெரிதும் தோல்வியடைந்து விட்டது; அவரிடம் பணம் எதுவும் இருக்கவில்லை, அதோடு அவர் எதிர்க்கட்சியின் வலிமையை அதிகரித்து விட்டிருந்தார். மாகாண நாடாளு மன்றங்களின் பிந்திய அமர்வுகள் அரசருக்கு மேலும் அதிக துரதிருஷ்டமாக இருந்தன. அவை யாவும் சீர்திருத்தங்களைக் கோரின, 1813லும் 1815லும் தரப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும்படியும் ஓர் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் பத்திரிகை சுதந்திரம் வேண்டுமென்றும் கோரின; இந்தக் கோரிக்கைகளைப் பற்றிய சில தீர்மானங்கள் சற்றே மரியாதையற்ற சொற்களில் புனையப்பட்டிருந்தன; எரிச்சல் கொண்ட இந்த மன்னரின் கடுகடுப்பான பதில்கள் இந்தத் தீங்கை மேலும் அதிகரித்தன.

இதற்கிடையில் அரசாங்கத்தின் நிதி இடர்ப்பாடுகள் அதிகரித்துக் கொண்டே போயின. பல்வேறு பொதுச் சேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணங்களின் தொகையைக் குறைத்தலும் அரசின் செலவிலும் தனிப் பொறுப்பிலும் ஊகபேரங்களும் வாணிகமும் நடத்தி வந்ததும் நீண்ட காலமாக அரசின் பணத் தரகராகச் செயல்பட்டு வந்துள்ளதுமான "Seehandlung"[21] எனும் வாணிக நிறுவனத்தின் மோசடி நடவடிக்கைகளும் சிறிது காலம் வெளித்தோற்றத்

துக்கு எல்லாம் நல்லபடி நடப்பது போல ஒப்புக்குக் காட்டப் போதுமானதாக இருந்தது. அரசாங்கத்தின் காகித நோட்டுகள் அதிகமாக வெளியிடப்பட்டது ஓரளவு செல்வா தாரங்களை வழங்கியிருந்தது; ஒட்டுமொத்தத்தில் நிதி நிலைமையைப் பற்றிய இரகசியம் நன்ருகவே பராமரிக்கப்பட்டிருந்தது. ஆனுல் இந்தத் தந்திரமுறைகள் எல்லாம் விரைவில் தீர்ந்து போயின. இன்னொரு திட்டம் முயலப்பட்டது: ஒரு வங்கியை நிறுவுவது, அதற்கான மூலதனம் ஓரளவுக்கு அரசாலும் ஓரளவுக்குத் தனிப்பட்ட பங்குதாரர்களாலும் வழங்கப்படும்; இதன் பிரதான நெறியாண்மை அரசின் வசம் இருக்கும், இந்த வங்கி நிதியிலிருந்து அரசாங்கம் பெருந்தொகைகளை எடுத்துக் கொள்ள இயலும், அத்தகைய முறையிலும் அதன் மூலம் “Seehandlung” நிறுவனத்துடன் இனிமேல் நடத்த முடியாத அதே மோசடி நடவடிக்கைகளை மீண்டும் செய்யக் கூடிய வகையிலும் இந்த ஏற்பாடு இருக்கும். ஆனுல் இயல்பாகவே, இத்தகைய நிபந்தனைகள் மீது தனது பணத்தை ஒப்படைக்கக் கூடிய முதலாளிகள் எவரும் கிடைக்கவில்லை; எந்தப் பங்குகளும் செலுத்தப்படுவதற்கு முன்னுல் வங்கியின் நிரந்தர விதிகளை மாற்ற வேண்டியிருந்தது, பங்குதாரர்களின் சொத்துக்களுக்கு கஜானுவின் அத்துமீறுகையிலிருந்து உத்தரவாதமளிக்க வேண்டியிருந்தது. இவ்வாறு இந்தத் திட்டம் தோல்வியடைந்த பிறகு கடன் வாங்க முயல்வது தவிர வேறு வழி எதுவும் இல்லை. அந்த மர்மமான ‘‘மக்களின் எதிர்காலப் பிரதிநிதித்துவத்தின்’’ அனுமதியோ உத்தரவாதமோ தேவைப்படாமலே தமது ரொக்கப் பணத்தைக் கடனுகத் தரத்தக்க முதலாளிகளைத் தேடிக் காண முடியுமானுல் இது நடக்கும். ரோத்ஷீல்டு இடம் கேட்டுக் கொள்ளப்பட்டது, இந்த ‘‘மக்கள் பிரதிநிதித்துவம்’’ இந்தக் கடனுக்கு உத்தரவாதம் அளிப்பார்களானுல் கணநேர முன்னறிவிப்பில் இதை அவர் மேற்கொள்ள முடியும் எனவும்—இல்லாவிடில் இந்த நடவடிக்கையில் தனக்கு எவ்வித சம்பந்தமும் இராது எனவும் அவர் கூறினுர்.

இவ்வாருக பணம் பெறுவதற்கான எல்லா நம்பிக்கை

யும் மறைந்துவிட்டது. இந்தத் தவிர்க்க முடியாத ''மக்கள் பிரதிநிதித்துவத்திடமிருந்து'' தப்ப வழியில்லை. ரோத்ஷீல்டின் மறுப்பு 1846 முன்பனிக் காலத்திலேயே தெரிய வந்தது, அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம், ஒரே ''ஐக்கிய லாண்ட்டாகை''[22] நிறுவுவதற்காக எல்லா எட்டு மாகாண நாடாளுமன்றங்களையும் பெர்லினுக்கு வரும்படி அழைத்தார் மன்னர். இந்த நாடாளுமன்றம் அவசியமேற் படும் போது 1820ஆம் ஆண்டுச் சட்டப்படி தேவையான வேலையைச் செய்ய வேண்டும்; அது கடன்களையும் வரிகள் அதிகரிப்பையும் வாக்களித்து உறுதி செய்ய வேண்டும்; ஆனால் இதற்கு அப்பால் அதற்கு எவ்வித உரிமைகளும் கிடையாது. பொதுவான சட்டமியற்றல் சம்பந்தமான அதன் கருத்துரிமை வெறும் கலந்தாலோசனை அளவிலேயே இருக்கும்; இது நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிகளில் கூடாது, மன்னருக்கு எப்போது விருப்பமோ அப்போது கூட்டப்படும். அரசாங்கம் அதன் முன் எதை விரும்பி முன்வைக்கிறதோ அதைத் தவிர வேறு எதையும் விவாதிக்க முடியாது. இதன் உறுப்பினர்கள் தம்மிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பணி யிலான தம் பங்கு குறித்து அறவே திருப்தியில்லாது இருந் தார்கள் என்பது திண்ணம். அவர்கள் மாகாணச் சட்ட சபைகளில் கூடிய சமயம் தெளிவுபடக் கூறிய விருப்பங்களை மீண்டும் வெளியிட்டார்கள். விரைவில் அவர்களுக்கும் அர சாங்கத்துக்கும் இடையிலான உறவுகள் மிகவும் கசப்புற் றன. இரயில்வே நிர்மாணத்துக்கு தேவைப்படுகிறது என்று மீண்டும் சாற்றப்பட்ட கடனுதவி அவர்களிடமிருந்து கோரப்பட்ட போது அதை அனுமதிக்க அவர்கள் மீண் டும் மறுத்தார்கள்.

இந்த வாக்களிப்பு அவர்களது அமர்வை விரைவில் முடிவுக்குக் கொண்டுவந்தது. மேலும் மேலும் எரிச்சல டைந்த மன்னர் அவர்களை ஒரு கடிந்துரையுடன் கலைந்து போகச் செய்தார், ஆனால் அவர் இன்னும் பணம் பெற முடியாதபடியே இருந்தார். கீழ்த்தட்டுப் பிரபுக்குலத்த வரின் பெரும் பகுதியையும், கீழ்மட்ட வரிசைகளின் பல்வேறு பிரிவினரிடை திரட்சியுற்று வந்ததான பல்வகைப்பட்ட

அதிருப்தியுள்ளோரையும் கொண்டதான முதலாளி வர்க்கத்தினுல் தலைமை தாங்கப்படும் மிதவாதக் கட்சியைக் கண்ட பிறகு—இந்த மிதவாதக் கட்சி தான் விரும்புவதைப் பெறுவதில் வைராக்கியமாக இருக்கிறது என்பதை அறிந்த பிறகு—அவர் தனது பதவி குறித்துக் கலவரமடைவதற்குச் சகல முகாந்தரங்களும் இருந்தன என்பது திண்ணம். அச்சொல்லின் நவீன அர்த்தத்திலான ஓர் அரசியலமைப்புச் சட்டத்தைத் தான் என்றுமே, என்றுமே அனுமதிக்கப் போவதில்லை என்று மன்னர் தனது துவக்கவுரையில் சாற்றியது வீணுயிற்று. மிதவாதக் கட்சி அத்தகைய ஒரு நவீன, நிலப் பிரபுத்துவ எதிர்ப்புப் பிரதிநிதித்துவ அரசியலமைப்புச் சட்டத்தை அதன் அனைத்துப் பின்விளைவுகளான பத்திரிகை சுதந்திரம், ஜூரிகள் மூலம் விசாரணை இத்தியாதி சகிதம் பிடிவாதமாகக் கோரியது, இதைப் பெறுவதற்கு முன்னுல் ஒரு செப்புக்காசு கூட அனுமதிக்கப்பட மாட்டாது என்றது. இவ்விதத்தில் காரியங்கள் நீண்ட நாட்கள் போய்க் கொண்டிருக்க முடியாது என்பதும், இரு தரப்புக்களில் ஏதேனும் ஒன்று விட்டுக்கொடுக்க வேண்டும் அல்லது ஒரு முறிவு, ஒரு கடுமையான போராட்டம் நிகழ வேண்டும் என்பதும் தெளிவாகத் தெரியவந்தது. அவர்கள் ஒரு புரட்சியின் தறுவாயில் இருக்கிருர்கள் என்பதை முதலாளி வர்க்கத்தினர் அறிந்திருந்தார்கள். மேலும் அவர்கள் அதற்குத் தம்மைத் தாமே தயார் செய்து கொண்டார்கள். நகரங்களில் இருக்கும் தொழிலாளி வர்க்கம் மற்றும் நாட்டுப்புறத்தில் உள்ள விவசாயிகளின் ஆதரவைப் பெற சாத்தியமான சகல வழிகளிலும் முயன்முர்கள். 1847 பிற்பகுதியில் பாட்டாளி வர்க்கத்தின் அனுதாபத்தைத் தனக்கு உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தன்னைத்தானே ஒரு ''சோஷலிஸ்டு'' என்று பறைசாற்றிக் கொள்ளாத தனியொரு பிரபல அரசியல்வாதியைக் கூட முதலாளி வர்க்கத்தின் மத்தியில் காண்பது அரிது என்பது எல்லோரும் அறிந்ததே. இந்த ''சோஷலிஸ்டுகள்'' எவ்வாறு செயல்பட்டார்கள் என்பதை விரைவில் காண்போம்.

குறைந்த பட்சம் வெளித்தோற்றத்தில் சோஷலிச

பாவனையை மேற்கொள்ள முற்போக்கான முதலாளி வர்க்கத்தினர் காட்டிய இந்த ஆர்வம், ஜெர்மனியில் தொழிலாளி வர்க்கத்தின் இடையில் ஏற்கெனவே நிகழ்ந்துவிட்ட மாபெரும் மாற்றத்தினால் ஏற்பட்டதாகும். பிரான்சிலும் சுவிட்சர்லாந்திலும் சுற்றுப் பயணம் நடத்தி, அந்த நாட்களில் பிரெஞ்சு தொழிலாளர் மத்தியில் நடப்பில் நிலவிய முதிரா சோஷலிஸ்டு மற்றும் கம்யூனிஸ்டு கருத்துப்படிவங்களை ஏறத்தாழ மனதில் வாங்கிக் கொண்ட ஜெர்மன் தொழிலாளர்களின் ஒரு பிரிவு 1840 முதலே இருந்து வந்துள்ளது. 1840 தொட்டு பிரான்சில் இதேபோன்ற கருத்துக்களின் மீது அதிகமான கவனம் செலுத்தப்பட்டதை ஒட்டி சோஷலிசமும் கம்யூனிசமும் ஜெர்மனியிலுங்கூட எல்லோரும் விரும்புகின்ற புதுப்பாணியாகிக் காட்சி தந்தது. 1843 தொட்டு எல்லாப் பத்திரிகைகளிலும் சமூகப் பிரச்சினைகள் குறித்த விவாதங்கள் நிரம்பி வழிந்தன. சோஷலிஸ்டுகளின் ஒரு பிரிவு வெகுவிரைவில் ஜெர்மனியில் உருவாயிற்று. இது தனது கருத்துக்களின் புதுமையைவிட அவற்றின் புதிரான தன்மையை அதிகமாக மேம்படுத்திக் காட்டியது. அதன் பிரதான முயற்சிகள் பிரெஞ்சு ஃபூரியேவாதம், சான்-சிமோன்வாதம் மற்றும் இதர போதனைகளை ஜெர்மன் தத்துவவியலின் எளிதில் புரியாத பாஷையில்[23] மொழிபெயர்ப்பதில் அமைந்திருந்தன. இந்தக் குறுங்குழுவிலிருந்து முற்றிலும் வேறுபட்டதான ஜெர்மன் கம்யூனிஸ்டுப் பிரிவு கிட்டத்தட்ட இதே சமயத்தில் நிறுவப்பட்டது.

1844ல் சைலீஷிய நெசவாளர் புரட்சிகர எழுச்சிகள் நடைபெற்றன, தொடர்ந்து பிராகில் காலிக்கோ துணியில் அச்சிடும் தொழிலாளர் எழுச்சி நிகழ்ந்தது. இந்தப் புரட்சிகர எழுச்சிகள் தொழிலாளர்களால் அரசாங்கத்துக்கு எதிராக நடத்தப்படவில்லை, மாறாக அவர்களது முதலாளிகளை எதிர்த்தே நடத்தப்பட்டன. கொடூரமாக அடக்கப்பட்ட இந்தக் கலகங்கள் ஓர் ஆழமான பரபரப்பை உருவாக்கின; அதோடு தொழிலாளர் மத்தியில் சோஷலிஸ்டு மற்றும் கம்யூனிஸ்டுப் பிரசாரத்துக்கு ஒரு புதிய தூண்டுதலை அளித்தன. பஞ்சத்தின் ஆண்டான 1847ன் போது நடந்த

உணவுக் கலகங்களும் இதையே செயல்படுத்தின. சுருங்கக் கூறின், அரசியலமைப்புச் சட்ட எதிர்ப்பணி தனது பதாகையைச் சுற்றி சொத்துடைய வர்க்கங்களின் பெரும் பகுதியை (பெரிய பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள் நீங்கலாக) எப்படி ஒன்றுதிரட்டியதோ அதே விதத்தில், பெரிய நகரங்களில் இருந்த தொழிலாளி வர்க்கம், அக்காலத்தில் நிலவிய பத்திரிகைச் சட்டங்களின் கீழ் சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு போதனைகளைப் பற்றி வெகு சொற்ப அளவுக்கே தெரிந்து கொள்ள முடியும் என்று இருந்த போதிலும், தனது விமோசனத்துக்காக அவற்றை ஆர்வத்துடன் நாடியது. தமக்குத் தேவைப்படுவது என்ன என்பது குறித்து மிகவும் திட்டவட்டமான கருத்துக்கள் தொழிலாளிகளுக்கு இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது—அரசியலமைப்புச் சட்ட முதலாளி வர்க்கத்தின் வேலைத்திட்டத்தில் அவர்கள் விரும்பிய எல்லாம் இடம் பெறவில்லை என்பதையும், தமது தேவைகள் எவ்வழியிலும் அரசியலமைப்புச் சட்டபாணிக் கருத்துக்களின் வட்டத்திற்குள் அமைந்திருக்கவில்லை என்பதையும் மட்டுமே அவர்கள் அறிந்திருந்தார்கள்.

அப்போது ஜெர்மனியில் தனிப்பட்ட ஒரு குடியரசுக் கட்சி இருக்கவில்லை. மக்கள் அரசியலமைப்புச் சட்ட முடியாட்சிவாதிகளாக அல்லது கிட்டத்தட்டத் தெளிவாக வரையறுக்கப்பட்ட சோஷலிஸ்டுகள் அல்லது கம்யூனிஸ்டுகளாக இருந்தார்கள்.

இத்தகைய பிரிவுகள் இருந்த பொழுது சிறிய மோதலுங்கூட ஒரு மாபெரும் புரட்சியைக் கொண்டுவந்திருக்க வேண்டும். உயர் பிரபுக்குலமும், உயர் சிவில் மற்றும் ராணுவ அதிகாரிகளும் மட்டுமே நிலவிய அமைப்பு முறையின் உறுதியான ஆதாரத் தூண்களாக இருந்த போது, கீழ்மட்ட பிரபுக்குலம், வாணிகம் மற்றும் தொழில்துறை முதலாளி வர்க்கம், பல்கலைக்கழகங்கள், எல்லாத் தரங்களிலுமான பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அதிகாரவர்க்கத்தினர், ராணுவ அதிகாரிகளின் கீழ்மட்ட அணிகளின் ஒரு பகுதியுங்கூட எல்லோரும் அரசாங்கத்துக்கு எதிராகத் தம்முள் ஒருங்கிணைந்திருந்த பொழுது, இவர்களின் பின்னால், தற்போதைக்கு

மிதவாத எதிர்ப்பணியை ஆதரித்துக் கொண்டும் ஆனால் தமது சொந்தக் கரங்களிலேயே காரியங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதாக விந்தையான சொற்களை முணுமுணுத்துக் கொண்டும் விவசாயிகளின், பெரிய நகரங்களைச் சேர்ந்த பாட்டாளிகளின் அதிருப்தியுற்ற மக்கள் திரள் நின்றிருந்த போது, முதலாளி வர்க்கம் அரசாங்கத்தைத் தூக்கியெறியத் தயாராயும், பாட்டாளி வர்க்கம் தன் வகைக்கு முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறியத் தயார் செய்து கொண்டும் இருந்த போது—இந்த அரசாங்கம் கட்டாயமாக ஒரு மோதலைக் கொண்டுவரக் கூடிய பாதையில் பிடிவாதமாகச் சென்று கொண்டிருந்தது. 1848ஆம் ஆண்டுத் துவக்கத்தில் ஜெர்மனி ஒரு புரட்சியின் தறுவாயில் இருந்தது, பிப்ரவரியில் நடந்த பிரெஞ்சுப் புரட்சி இதை விரைவுபடுத்தாமல் இருந்தாலுங்கூட இந்தப் புரட்சி நிச்சயம் நிகழ்ந்தே தீரும்.

இந்தப் பாரிஸ் நகரத்தவர் புரட்சி ஜெர்மனி மீது ஏற்படுத்திய விளைவுகள் என்ன என்பதை நாம் அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம்.

லண்டன், 1851 செப்டம்பர்

## 3

## இதர ஜெர்மன் அரசுகள்

சென்ற அத்தியாயத்தில் 1840க்கும் 1848க்கும் இடையிலான ஆண்டுகளின் போது, ஜெர்மன் இயக்கத்தில் பெரியளவு மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்த அரசு, அதாவது பிரஷ்யா பற்றியே கிட்டத்தட்ட முற்ற முழுமையாக எடுத்துக் கூறியிருந்தோம். ஆயினும் இதே காலப் பகுதியைச் சார்ந்த ஜெர்மனியின் இதர அரசுகள் குறித்து ஒரு துரிதமான கண்ணோட்டம் இடுவதற்கான சமயம் வந்துள்ளது.

சின்னஞ்சிறு அரசுகளைப் பொருத்தவரை, அவை 1830 புரட்சிகர இயக்கங்கள் தொடங்கிய கால முதலே நாடாளு

மன்றத்தின் அதாவது ஆஸ்திரியா மற்றும் பிரஷ்யாவின் சர்வாதிகாரத்தின் கீழ் முழுமையாகப் போய்ச் சேர்ந்து விட்டன. பெரிய அரசுகளின் நாட்டாண்மைக்கு எதிரான தற்காப்பு சாதனம் என்ற முறையில் பல அரசியலமைப்புச் சட்டங்கள் நிறுவப்பட்டன. மேலும் இவை இவற்றை உருவாக்கிய மன்னர்களுக்கு ஜன ஆதரவையும், எவ்விதமான வழிகாட்டும் கோட்பாடுகளும் இன்றி வியன்னு காங்கிரசால் அமைக்கப்பட்டதான முரண்கூருன மாகாணங்களின் சட்டசபைகளின் ஒற்றுமையையும் உறுதிப்படுத்த ஒரு சாதனமாகக் கருதப்பட்டன. இந்த அரசியலமைப்புச் சட்டங்கள் மாயமான தோற்றமுடையவை, இருப்பினும் 1830 மற்றும் 1831ஆம் ஆண்டுகளின் பரபரப்பான காலப் பகுதியில் சிறிய மன்னர்களின் அதிகார பலத்துக்கே இவை அபாயகரமானவையாக விளங்கின. கிட்டத்தட்ட அவை யாவும் அழிக்கப்பட்டுவிட்டன; அவற்றில் ஏதேனும் நீடிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் அது நிழலைக் காட்டிலும் குறைவே. இந்தச் சின்னஞ்சிறு அரசுகளின் வலுவற்ற மன்றங்களில் அவர்கள் முனைப்பாகக் காட்ட அனுமதிக்கப்பட்ட தரக்குறைவான போலிப்புகழ்ச்சியுடன் கலந்த பணிவான எதிர்க்கட்சியிடமிருந்து விளைவுகள் ஏதேனும் ஏற்படக்கூடும் எனக் கற்பனை செய்து கொள்ளவே கூட, ஒரு வெல்கர், ஒரு ராட்டேக் மற்றும் ஒரு தால்மனின் வாயாடித்தனமான சுயதிருப்தி மனப்போக்கு அவசியமாக இருந்தது.

இந்தச் சிறிய அரசுகளில் இருந்த முதலாளி வர்க்கத்தினரின் மேலதிக சுறுசுறுப்பான பகுதியினர், ஆஸ்திரியா மற்றும் பிரஷ்யாவின் இந்தச் சார்பு அரசுகளில் நாடாளுமன்ற ஆட்சி முறை வளர்ச்சியடையும் எனும் அடிப்படையில் முந்திய நாட்களில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை அனைத்தையும் 1840க்குப் பிறகு வெகுவிரைவில் கைவிட்டு விட்டனர். பிரஷ்ய முதலாளி வர்க்கமும் அதனுடன் நேசமாகச் சேர்ந்து நின்ற வர்க்கங்களும் பிரஷ்யாவில் நாடாளுமன்ற ஆட்சி முறைக்காகப் போராடுவதற்கான தமது முழு உறுதியைக் காட்டிய உடனேயே, அவை ஆஸ்திரியப் பகுதி தவிர்த்த ஜெர்மனி முழுவதிலும் அரசிய

லமைப்புச் சட்ட இயக்கத்துக்குத் தலைமை தாங்குமாறு அனுமதிக்கப்பட்டன. மத்திய ஜெர்மனியின் அந்த அரசிய லமைப்புச் சட்டவாதிகளின் மையம் 1848க்கு நெடுங்கால முன்பே ஒரு திட்டத்தைக் கருத்தில் கொண்டிருந்தது, இதையே சொற்ப திருத்தங்களுடன் 1849ல் அது அனைத்து ஜெர்மனியின் பிரதிநிதிகளுக்கு முன்வைத்தது என்பதை இனிமேல் மறுக்க முடியாது. இந்த அரசியலமைப்புச் சட்ட வாதிகள் பின்னர் பிராங்க்பர்ட் தேசிய சபையில் இருந்து பிரிந்து சென்றுர்கள், அவர்களுடைய தனிக் கூட்டங்கள் நடைபெற்ற இடம் காரணமாக கோத்தா கட்சி[24] என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் ஜெர்மன் கூட்டமைவில் இருந்து ஆஸ்திரியாவை முழுமையாக விலக்கிவைக்கவும், புதிய அரசியலமைப்புச் சட்டமும் கூட்டாட்சி நாடாளு மன்றமும் கொண்ட ஒரு புதிய கூட்டமைவை பிரஷ்யாவின் பாதுகாப்பின் கீழ் நிறுவவும், மேலும் சிறியதான அரசுகளை ஒரு பெரிய அரசாகச் சேர்த்து இணைக்கவும் உத்தேசித்திருந் தார்கள். பிரஷ்யா அரசியலமைப்புச் சட்ட முடியாட்சி யின் அணிகளில் பிரவேசித்து, பத்திரிகை சுதந்திரத்தை நிலைநாட்டி, ருஷ்யா மற்றும் ஆஸ்திரியாவிடமிருந்து சுயேச் சையான ஒரு கொள்கையை மேற்கொண்டு, அதன் வழி சிறிய அரசுகளின் அரசியலமைப்புச்சட்டவாதிகள் தத்தம் அரசாங்கங்கள் மீது மெய்யான அதிகாரத்தைப் பெற இயலுமாறு செய்யும் அந்தத் தருணமே இவை யாவும் நிறை வேற்றப்பட வேண்டி இருந்தது. இந்தத் திட்டத்தைக் கண்டு புனைந்தவர் ஹெய்டல்பர்கை (பாடேன்) சேர்ந்த பேரா சிரியர் கெர்வினஸ் ஆவார். இவ்வாருக, பிரஷ்ய முதலாளி வர்க்கத்தின் விமோசனமே, பொதுவாக ஜெர்மனியின் முதலாளி வர்க்கத்தின் விமோசனத்துக்கும் ருஷ்யா மற்றும் ஆஸ்திரியா ஆகிய இரு நாடுகளுக்கும் எதிரான எதிர்த்தாக்கு மற்றும் தற்காப்புக் கூட்டணிக்கும் உரிய குறியாக இருக்க வேண்டியிருந்தது. காரணம் ஆஸ்திரியா, வெகு சொற்பமா கவே அறியப்பட்டதான, அந்தச் சொற்பத் தகவலும் அதன் மக்களுக்குப் பெருமை தராத வகையில், ஒரு முற்றிலும் நாகரிகமற்ற நாடாகக் கருதப்பட்டது; எனவே ஆஸ்தி

ரியா ஜெர்மனியின் ஒரு பகுதியாகக் கருதப்படவில்லை. இது குறித்து இப்போது நாம் காண்போம்.

சிறிய அரசுகளில் சமுதாயத்தின் இதர வர்க்கங்களைப் பொருத்தவரை, இவை பிரஷ்யாவில் இருந்த தமது சமவர்க்கங்களைப் பின்தொடர்ந்து கிட்டத்தட்ட வேகமாகவே சென்றன. தத்தம் அரசாங்கங்களாலும் வரிகள் அதிகரிக்கப் பட்டதாலும், ஆஸ்திரியாவிலும் பிரஷ்யாவிலும் இருந்த ''எதேச்சாதிகாரத்தின் அடிமைகளை'' வைத்து ஒப்பு நோக்கும் போது தாம் ஜம்பமடித்துக் கொள்ளும் விதத்தில் இருந்த போலி அரசியல் தனியுரிமைகள் வெட்டிக் குறைக்கப் பட்டதாலும் குட்டி முதலாளிகள் மென்மேலும் அதிருப்தி யடைந்திருந்தார்கள். ஆனால் பெரும் முதலாளி வர்க்கத்தின் அரசியலமைப்புச்சட்ட கட்சியில் இருந்து ஒரு சுயேச்சை யான கட்சி என்று பிரித்துக் காட்டி முத்திரையிடத் தக்க திட்டவட்டமான அம்சம் எதுவும் அவர்களது எதிர்ப் பணியில் இன்னும் காணப்படவில்லை. விவசாயி மக்கள் மத்தி யிலும் இதே அளவுக்கு அதிருப்தி பெருகி வந்தது. ஆனால் இந்தப் பிரிவைச் சேர்ந்த மக்கள், சர்வஜன வாக்குரிமை நிலைநாட்டப்பட்ட தேசங்களைத் தவிர்த்து, வேறு எங்குமே சாந்தமும் சமாதானமுமான காலங்களில் தமது நலன்களை வலியுறுத்தி ஒரு சுயேச்சையான வர்க்கம் என்ற முறையில் தமது நிலையை மேற்கொள்ள என்றுமே முன்வர மாட்டார் கள் என்பது நன்கறிந்த விஷயம். நகரங்களில் உள்ள தொழில்துறை நிலையங்களில் இருக்கும் தொழிலாளி வர்க்கத்தினர் சோஷலிசம் கம்யூனிசம் எனும் ''விஷத்தால்'' தொற்றப்படுவது துவங்கியிருந்தது. ஆனால் பிரஷ்யாவுக்கு வெளியே ஏதேனும் முக்கியத்துவமுடைய நகரங்கள் வெகு சிலவே இருந்ததாலும், தொழில்துறை மாவட்டங்கள் மேலும் சொற்பமாகவே இருந்ததாலும் இந்த வர்க்கத் தின் இயக்கம், நடவடிக்கை மற்றும் பிரச்சார மையங் கள் இல்லாத காரணத்தால், சிறிய அரசுகளில் மிகமிக மந்தமானதாகவே இருந்தது.

பிரஷ்யாவிலும் சிறிய அரசுகளிலும் ஒருங்கே அரசியல் எதிர்ப்பை வெளியிடுவது கடினமாக இருந்தபடியால், இது

ஜெர்மன் கத்தோலிக்கவாதம் மற்றும் சுதந்திர சமயக் கூட்டங்கள் ஆகியவற்றின்[25] இணைகோடான இயக்கங்களில் வெளிப்பட்ட ஒரு வகையான சமய எதிர்ப்பை உருவாக்கியது. அரசியல் விவாதம் தடைசெய்யப்பட்டிருக்கும் அரசுச் சமயத்தின் திருவருளை அனுபவித்து வரும் நாடுகளில் திருச்சபையைச் சாராத அதிகாரத்துக்கு விரோதமான ஆசாரமற்ற அபாயகரமான எதிர்ப்பு, ஆன்மிக எதேச்சாதிகாரத்தை எதிர்த்த மேலும் புனிதமான, மேலும் நடுநிலையானதாகத் தோற்றமளிக்கும் போராட்டத்தின் கீழ் மறைந்திருக்கிறது என்பதற்கான எண்ணற்ற உதாரணங்களை நமக்கு வரலாறு வழங்குகிறது. தமது நடவடிக்கைகள் விவாதிக்கப்படுவதை அனுமதிக்க மறுக்கும் பல அரசாங்கங்கள் தியாகிகளை உருவாக்கவோ மக்கள் திரளின் சமய வெறியுணர்வைத் தூண்டிவிடவோ எதையும் செய்யுமுன் மிகவும் தயக்கம் காட்டும். ஜெர்மனியில் 1845ல் ஒவ்வொரு அரசிலும் ரோமன் கத்தோலிக்க சமயமோ புரோட்டஸ்டென்ட் சமயமோ அல்லது இரண்டுமோ அரசு அமைப்பில் ஓர் உறுப்பாகக் கருதப்பட்டன. ஒவ்வொரு அரசிலும் இந்தச் சமயப் பிரிவுகள் ஏதாவதொன்றை அல்லது இரண்டையும் சார்ந்த சமயகுருமார் அரசாங்கத்தின் அதிகாரவர்க்க அமைப்பின் முக்கிய பகுதியாக இருந்தனர். புரோட்டஸ்டென்ட் அல்லது கத்தோலிக்க வைதிகப் போக்கைத் தாக்குவது, திருச்சபைத்துறையினரைத் தாக்குவது என்பது அன்று அரசாங்கத்தின் மீது மறைவான ஒரு தாக்குதல் நடத்துவது ஆகும். ஜெர்மன் கத்தோலிக்கர்களைப் பொருத்தவரை அவர்கள் இருப்பதே ஜெர்மனியின், குறிப்பாக ஆஸ்திரியா மற்றும் பவேரியாவின் கத்தோலிக்க அரசாங்கங்கள் மீதான ஒரு தாக்குதலாக இருந்தது. இவ்வாறே அந்த அரசாங்கங்களால் கருதப்பட்டு வந்தது. சமயக் கூட்டத்தினரும் ஆங்கில, அமெரிக்க யுனிட்டேரியன்களை[26] ஓரளவுக்கு ஒத்திருந்த புரோட்டஸ்டென்ட் அதிருப்தியாளர்களும், பிரஷ்ய மன்னர், கல்வி மற்றும் சமயத்துறையின் அவரது தனிவிருப்பத்திற்குரிய அமைச்சர் திரு. எய்ஹார்னது திருச்சபை மற்றும் கண்டிப்பான வைதிகப் போக்கு

களைப் பகிரங்கமாக எதிர்த்து முன்வந்தார்கள். துரிதமாகப் பரவிவந்ததான — முதலாவது கத்தோலிக்க நாடுகளிலும் இரண்டாவது புரோட்டஸ்டென்ட் நாடுகளிலும்—இந்த இரண்டு புதிய குறுங்குழுக்களுக்கும் அவற்றின் வேறுபட்ட தோற்றுவாய் தவிர்த்த வேறு தனி அம்சங்கள் எதுவும் இருக்கவில்லை. அவற்றின் தத்துவக் கூறுகளைப் பொருத்த வரை எல்லாத் திட்டவட்டமான சூத்திரங்களும் பயனற்றவை எனும் இந்த மிகவும் முக்கியமான அம்சத்தில் அவை முற்றிலும் உடன்பட்டன. இந்த வரையறுப்பு எதுவும் இல்லாதிருப்பதே அவற்றின் முழுச் சாரமாகவும் இருந்தது. எல்லா ஜெர்மானியரும் அதன் கீழ் ஒன்றுசேரக் கூடியதான அந்த மாபெரும் கோயிலைக் கட்டுவதாக அவை பாவனை செய்தன. இவ்வாறாக அவை அந்த நாளின் இன்னொரு அரசியல் கருத்தான—ஜெர்மனியின் ஒற்றுமை—என்பதை ஒரு சமய வடிவில் பிரதிநிதித்துவப்படுத்தின. இருப்பினும் அவை தமக்கிடையே என்றும் உடன்பாடு கொள்ள முடியவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட இந்தக் குறுங்குழுக்கள் குறைந்தபட்சம் சமய அடிப்படை மீதாவது நிறைவேற்றம் காண முயன்றதான ஜெர்மனியின் ஒற்றுமை பற்றிய இந்தக் கருத்து, எல்லா ஜெர்மானியருக்கும் பொதுவான ஒரு சமயத்தைப் புனைவது மூலமும், அவர்களது தேவைகள் பழக்கங்கள் மற்றும் விருப்பார்வங்களுக்காக மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டதுமான சமயத்தைப் பற்றிய இந்தக் கருத்து, மிக விரிவான அளவில், குறிப்பாகச் சிறிய அரசுகளில் உண்மையில் பரவியது. நெப்போலியனால் ஜெர்மன் சாம்ராஜ்யம் கலைக்கப்பட்ட காலம்[27] முதலாகவே, ஜெர்மனியில் உள்ள எல்லா disjecta membra*இன் ஒன்றிணைப்பைக் கோரும் கோஷமானது நிலவிய நிலைமைகளின் பாலான அதிருப்தியின் மிகவும் பொதுவான வெளிப்பாடாக இருந்து வந்துள்ளது, சிறிய அரசுகள் விஷயத்தில் இது பேரளவில் இருந்து வந்துள்ளது; அவற்றில் அரசவை, ஆட்சிநிர்வாகம், சேனை

* சிதறலான உறுப்பினர் [அரசுகள்].—ப-ர்.

ஆகியவற்றுக்கான பெருஞ்செலவு, சுருங்கக் கூறின் தாங்க முடியாத வரிச்சுமை அந்த அரசுகளின் சிறிய தன்மை மற்றும் பலனின்மைக்கு நேர் விகிதத்தில் அதிகரித்திருந்தது. ஆனால் இது நிறைவேற்றப்படும் போது இந்த ஜெர்மனியின் ஒன்றிணைப்பு என்னவாக இருக்கும் எனும் பிரச்சினையில் இந்தக் கட்சிகள் கருத்து வேறுபட்டு இருந்தன. முதலாளி வர்க்கத்தினர், ஆழமான புரட்சிக்குமுறல்கள் எதையும் விரும்பாமல் அவர்கள் எதை ''நடைமுறை சாத்தியம்'' என்று கருதியதாக நாம் பார்த்தோமோ அதோடு, அதாவது ஆஸ்திரியா நீங்கலாக அனைத்து ஜெர்மனியின் ஒன்றிணைப்பு பிரஷ்யாவின் அரசியலமைப்புச் சட்ட அரசாங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் ஏற்பட வேண்டும் என்பதுடன் திருப்தியடைந்தார்கள். நிச்சயமாக எவ்வித அபாயகரமான சூறுவளிகளையும் எழுப்பாமல் அந்த சமயத்தில் இதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது. குட்டி முதலாளிகளும் விவசாயிகளும், — பின்னால் குறிப்பிடப்பட்டவர்கள் இத்தகைய காரியங்களில் தொல்லைப்பட்டுக் கொண்டிருந்த வரையில் — இவ்வளவு உரத்து ஆர்ப்பரிக்கப்படும் இந்த ஜெர்மனியின் ஒன்றிணைப்பைப் பற்றிய எத்தகைய வரையறுப்புக்கும் வந்து சேரவில்லை. ஒரு சில வெட்டிக்கனவு காண்போர், பெரும்பாலும் நிலப்பிரபுத்துவப் பிற்போக்காளர்கள், ஜெர்மன் சாம்ராஜ்யம் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்; சுவிஸ் ஸ்தாபனங்களைப் போற்றிய ஏதோ சில அறிவில்லாத தீவிரவாதிகள் soi-disant*—பின்னால் மிகவும் கேலிக்கூத்தான முறையில் அவர்களுடைய மயக்கத்தைப் போக்கிய அந்த நடைமுறை அனுபவத்தை இன்னும் பெறுததால்—சுவிஸ் நிறுவனங்களைப் போற்றிப்புகழ்ந்து ஒரு கூட்டாட்சிக் குடியரசை ஆதரித்துக் கருத்து வெளியிட்டனர். அந்தச் சமயத்தில் மிகவும் அதிதீவிரமான கட்சி மட்டுமே பிரிக்கப்பட முடியாத ஒற்றை ஜெர்மன் குடியரசை ஆதரித்துப் பிரகடனம் செய்யத் துணிந்து முன்வந்தது.[28] இவ்வாறாக ஜெர்மனியின் ஒன்றிணைப்பே, ஒற்றுமை இன்மை, பூசல் ஆகியவை கொண்ட

* —என்று அழைக்கப்படும்.—ப-ர்.

எந்த அளவுக்கு அதிகக் கொடூரமாக நடந்து கொண்டார்களோ அந்த அளவுக்கு நிர்வாக அதிகாரத்துக்கும் அரசவம்ச வாதிகளுக்கும் எதிராகத் தங்களுடைய குடியரசுக் கோட்பாடுகளையும் சட்டமியற்றும் உரிமைகளையும் நிலைநாட்ட வேண்டிய நேரத்தில் கோழைத்தனத்தோடு, தளுக்குப் பேச்சோடு, தீவிரமில்லாமல் சிதறிப் போய், சண்டை போடவும் இயலாதவர்களாகப் பின்வாங்கினார்கள். அவர்கள் கலைந்து போன வெட்கக்கேடான கதையை நான் இங்கே சொல்லத் தேவையில்லை. அவர்கள் முறியடிக்கப்படவில்லை; அவர்களே சிதறிப் போனார்கள். அவர்களுடைய வரலாறு என்றென்றைக்கும் முடிந்துவிட்டது. இனி வரப்போகின்ற காலகட்டத்தில், தேசிய சபைக்கு உள்ளேயும் வெளியேயும் வெறும் நினைவுகள் என்ற அளவிலேதான் அவர்களுக்குப் பாத்திரமுண்டு. குடியரசு என்ற பெயர் மட்டுமே மறுபடியும் பிரச்சினையாக ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் இந்த நினைவுகளுக்குத் திடீரென்று புத்துயிர் வந்துவிட்டது போலத் தோன்றும், புரட்சிகரமான மோதல் மிகக் கீழான நிலையை எட்டிவிடும் என்று பயமுறுத்தக் கூடிய சந்தர்ப்பங்களில் இந்த நினைவுகளுக்குத் திடீரென்று புத்துயிர் வந்துவிட்டது போலத் தோன்றும். இந்தக் கட்சிக்குத் தன்னுடைய பெயரைக் கொடுத்த *National* என்ற பத்திரிகை வரப்போகிற காலகட்டத்தில் சோஷலிசத்தின் பக்கம் வந்து சேர்ந்தது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தக் காலகட்டத்தைப் பற்றி எழுதி முடிப்பதற்கு முன்னர் நாம் இரண்டு சக்திகளைப் பின்னோக்கிப் பார்ப்பது அவசியமாகிறது. 1848ம் வருடம் டிசம்பர் மாதம் 20ந் தேதி முதல் அரசியல் நிர்ணய சபையை முடிவுக்குக் கொண்டுவருகிற காலம் வரை இந்த இரண்டு சக்திகளும் தாம்பத்திய உறவைக் கொண்டிருந்தன. ஆனால் 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதி ஒன்று மற்றொன்றை நசுக்கியது. ஒரு பக்கத்தில் லுயி போனபார்ட்டையும் மறு பக்கத்தில் கூட்டணியிலிருந்த அரசவம்சக் கட்சி, ஒழுங்கு முறைக் கட்சி, பெரும் முதலாளிகள் ஆகியோரையே நாம் இரண்டு சக்திகள் என்று இங்கே குறிப்பிடுகிறோம். குடியர

சின் ஜனுதிபதியானவுடன் போனபார்ட் உடனே ஒழுங்கு முறைக் கட்சியைக் கொண்ட மந்திரி சபையை அமைத்தார். நாடாளுமன்ற முதலாளித்துவ வர்க்கத்தின் அதிக மிதவாதப் பிரிவின் பழைய தலைவரான ஒடிலோன் பரோவை மந்திரி சபையின் தலைமைப் பொறுப்புக்கு நியமித்தார். 1830ம் வருடத்திலிருந்தே மந்திரி பதவியின் நிழல் அவர் மீது விழுந்து கொண்டிருந்த போதிலும் கடைசியில் அவருக்கு இப்பொழுதுதான் அது கிடைத்தது. அதிலும் பிரதமர் பதவியே கிடைத்து விட்டது. ஆனுல் லுயீ பிலிப் காலத்தின் பொழுது அவர் நினைத்தது போல நாடாளுமன்ற எதிர்க் கட்சியின் மிகவும் முற்போக்கான தலைவர் என்ற முறையில் அந்தப் பதவி அவருக்குக் கிடைக்கவில்லை. அவருடைய நெடுங்கால எதிரிகளான ஜெசுயிட்டுகள், முறைமைவாதிகளின் கூட்டாளியாக அவர் மந்திரி சபையில் இருந்தார். அதிலும் நாடாளுமன்றத்தை ஒழித்துக் கட்டும் பொறுப்புடன் கூடவே அந்தப் பதவி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கடைசியில் அவர் எப்படியோ மணப்பெண்ணை வீட்டுக்குக் கொண்டுவந்துவிட்டார்—ஆனுல் அதற்கு முன்பே அந்தப் பெண் மானபங்கப்படுத்தப்பட்டு விட்டாள். போனபார்ட் முழுமையாக மறைந்து விட்டது போலத் தோன்றியது, அவருக்குப் பதிலாக ஒழுங்குமுறைக் கட்சியே செயலாற்றியது.

மந்திரி சபையின் முதல் கூட்டத்திலேயே ரோம் மீது படையெடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது. இதை தேசிய சபைக்குத் தெரியாமலேயே செய்வதென்றும் அதற்குத் தேவைப்படும் செலவுத் தொகைக்கு தேசிய சபையில் போலியான தகவலைக் கொடுத்து அங்கீகாரம் பெறுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. இப்படி தேசிய சபையை ஆரம்பத்திலேயே மோசடி செய்துவிட்டு புரட்சிகரமான ரோமானியக் குடியரசுக்கு எதிராக வெளிநாடுகளிலுள்ள சர்வாதிகார முடியாட்சிகளோடு சேர்ந்து இரகசியமான சதித்திட்டங்களை முதற்படியாகச் செய்தது. 1851ம் வருடம் டிசம்பர் மாதம் 2ந் தேதி போனபார்ட் இதே விதமாக இதே போன்ற வழிகளில் அரசவம்சத்துக்கு ஆதரவாக

பட்டவையல்ல, மற்றும் 1848 முதல் ஜெர்மன் ஆஸ்திரியர்களின் கதியின் மீது அவை செல்வாக்குச் செலுத்தி வந்துள்ள அளவுக்கு அவைகளை இனிமேல் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இளவரசர் மெட்டர்னிக்கின் அரசாங்கம் இரண்டு அடிப்படைகளில் இயங்கி வந்தது: முதலாவதாக, ஆஸ்திரிய ஆட்சிக்குக் கீழடங்கியுள்ள பல்வேறு தேசங்கள் ஒவ்வொன்றையும், இதே போன்ற நிலைமைகளில் இருந்த இதர தேசங்கள் அனைத்தின் மூலம் கட்டுப்படுத்தி வைத்திருப்பது; இரண்டாவதாக, இரண்டு வர்க்கங்களின் அதாவது பிரபுத்துவ நிலவுடைமையாளர் மற்றும் பெரிய பங்கு மார்க்கெட் பேர முதலாளிகள் ஆதரவைச் சார்ந்து நிற்பது—இது எப்போதுமே எதேச்சாதிகார முடியாட்சிகளின் அடிப்படைக் கோட்பாடாக இருந்து வந்துள்ளது; அதே சமயம் இந்த இரு வர்க்கங்களில் ஒன்றின் செல்வாக்கையும் பலத்தையும் இன்னொன்றின் செல்வாக்கு மற்றும் பலம்மூலம் சமநிலைப் படுத்துவது, அதன் வழி அரசாங்கத்திற்கு முழுமையான செயல் சுதந்திரத்தை விட்டு வைப்பது. எல்லா வகைப்பட்ட நிலப்பிரபுத்துவ வருவாய் மூலம் முழு வருமானத்தையும் பெற்றிருந்த நிலவுடைமைப் பிரபுக்குலத்தினர், யாரைச் சூறையாடி வாழ்ந்திருந்தார்களோ அந்த மிதித்துத் துவைக்கப்பட்ட பண்ணையடிமை வர்க்கத்துக்கு எதிரான தமது ஒரே பாதுகாப்பாக விளங்கும் அரசாங்கத்தை அவர்கள் ஆதரித்தே தீர வேண்டி இருந்தது. அவர்களிடையே இருந்த செல்வத்தில் குறைந்த பகுதியினர் 1846ல் கலீஷியாவில் செய்தது போல அரசாங்கத்தை எதிர்த்து எழுச்சியுற்று வந்த போது, மெட்டர்னிக் ஒரு நொடியில் அவர்கள் மீது இதே பண்ணையடிமைகளைக் கட்டவிழ்த்து ஏவிவிட்டார். அவர்கள் எப்படியும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமது மிகவும் நேரடியான ஒடுக்குமுறையாளர்களிடம் பயங்கரமாகப் பழிதீர்த்துக் கொண்டார்கள்.[30] மறுபுறத்தில் பங்கு மார்க்கெட்டின் பெரிய முதலாளிகள் நாட்டின் பொது நிதிகளில் தாம் வைத்திருந்த பெரிய பங்குகள் காரணமாக மெட்டர்னிக்கின்

அரசாங்கத்துடன் பிணைப்புண்டு கிடந்தனர். 1815ல் தனது முழு ஆட்சி அதிகாரத்தையும் மீட்டுப் பெற்றிருந்த ஆஸ்திரியா, 1820 முதல் இத்தாலியில் எதேச்சாதிகார முடியாட்சியை மீட்டமைத்துக் கட்டிக் காத்து வந்தது, 1810ஆம் ஆண்டின் திவால் நிலை மூலம் தனது கடன்பாட்டின் ஒரு பகுதியில் இருந்து விடுபட்டிருந்தது, சமாதான ஒப்பந்தம் செய்த பிறகு மாபெரும் ஐரோப்பியப் பண மார்க்கெட்டுகளில் தனது கடன் மதிப்பை மீண்டும் நிலை நாட்டிக் கொண்டது. அதன் கடன் மதிப்பு பெருகிய விகிதத்தில் கடன் வாங்கியது. இவ்வாறு எல்லா ஐரோப்பிய நிதி அதிபர்களும் ஆஸ்திரியாவின் நிதித்துறையில் தமது மூலதனத்தின் கணிசமான பகுதிகளை ஈடுபடுத்தியிருந்தார்கள். அவர்கள் எல்லோருமே அந்த நாட்டின் கடன் மதிப்பைத் தாங்கி நிற்பதில் அக்கறை கொண்டிருந்தார்கள். ஆஸ்திரியாவின் பொதுக் கடனைத் தாங்கி ஆதரிப்பதற்கு எப்போதும் புதிய கடன்கள் தேவைப்பட்டதால் அவர்கள் ஏற்கெனவே முன் பணம் செலுத்தியுள்ள பிணையங்களின் மதிப்பை நிலை பெறச் செய்யும் பொருட்டு அடிக்கடி புதிய மூலதனத்தை முதலீடு செய்ய வேண்டி இருந்தது. 1815க்குப் பிந்தியதான நீடித்த சமாதானமும், ஆஸ்திரியா போன்று ஆயிரமாண்டுக் கால பழைய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி சாத்தியமல்ல எனும் தோற்றமும் மெட்டர்னிக் அரசாங்கத்தின் கடன் மதிப்பை அற்புதமான விகிதத்துக்கு அதிகரித்தன, அதோடு வியன்னுவின் வங்கி அதிபர்கள் பங்கு மார்க்கெட் பேரக்காரர்களின் தயவை நம்பியிராமல் சுயேச்சையாக இருக்கவும் உதவின. ஏனெனில் மெட்டர்னிக் பிராங்க்பர்டில் இருந்தும் ஆம்ஸ்டர்டாமில் இருந்தும் ஏராளமான பணம் பெற முடிந்த காலம் வரையில் அவருக்கு ஆஸ்திரிய முதலாளிகள் தம் காலடியில் விழுந்து கிடப்பதைக் காணும் மனநிறைவு திண்ணமாகக் கிட்டியது. இதையும் தவிர அவர்கள் வேறு எல்லா வழிகளிலும் அவரது தயவை நம்பி இருக்க வேண்டி வந்தது. எதேச்சாதிகார முடியாட்சியிடமிருந்து வங்கி அதிபர்கள், பங்கு மார்க்கெட் பேரக்காரர்கள் மற்றும் அரசாங்க கண்ட்ராக்டர்கள் எப்போதும் திட்டமிட்டுக்

கறந்துவரும் பெருத்த லாபங்கள், அரசாங்கம் இந்த நபர்கள் மீதும் அவர்களது செல்வத்தின் மீதும் கொண்டிருந்த ஏறத்தாழ வரம்பில்லாத அதிகாரத்தால் ஈடுசெய்யப்பட்டன. எனவே இந்த வட்டாரங்களில் இருந்து எதிர்ப்பின் ஆகச் சின்னஞ் சிறு சாயையைக் கூட எதிர்பார்க்க முடியாது. இவ்வாறு மெட்டர்னிக் சாம்ராஜ்யத்தின் மிகவும் சக்தி வாய்ந்த, செல்வாக்குமிக்க இரண்டு வர்க்கங்களின் ஆதரவை உறுதியாகப் பெற்றிருந்தார். இது தவிர அவர் ஒரு சேனையையும் ஓர் அதிகாரவர்க்கத்தையும் பெற்றிருந்தார். இவை இரண்டுமே எதேச்சாதிகார நோக்கங்களுக்கு வெகு சிறப்பான முறையில் அமைந்திருந்தன. ஆஸ்திரிய அரசு சேவையில் இருந்த சிவில் மற்றும் ராணுவ அதிகாரிகள் தமக்கே உரிய தனி இனமாக அமைந்திருந்தனர். அவர்களது தந்தைமார் சக்கரவர்த்தியிடம் சேவை புரிந்தவர்கள், அவர்களது புதல்வர்களும் அவ்வாறே சேவை புரிவார்கள். இரட்டைத் தலை ராஜாளியின் பாதுகாப்பின் கீழ் ஒன்றுதிரண்ட பல்வகைப்பட்ட தேசிய இனங்கள் எதையும் சேர்ந்தவர்களல்ல இவர்கள். அவர்கள், சாம்ராஜ்யத்தின் ஒரு முனையில் இருந்து இன்னொரு முனைக்கு, போலந்தில் இருந்து இத்தாலிக்கும், ஜெர்மனியிலிருந்து டிரான்சில்வேனியாவுக்கும் அகற்றப்பட்டார்கள், என்றென்றும் அகற்றப்பட்டு வந்தார்கள். போலந்து வாசியோ, ருமேனியனோ, இத்தாலியனோ, குரோட் வாசியோ ''சாம்ராஜ்ய அல்லது மன்னராட்சி'' அதிகார முத்திரை பெற்றிராத ஒவ்வொரு நபரும், தனிப்பட்ட தேசியத் தன்மையினைத் தாங்கி நிற்கும் அனைவரும், இவர்களால் அதே அளவுக்கு இழிவாகக் கருதப்பட்டனர். அவர்களுக்கு, தேசிய இனம் என்பது எதுவும் இல்லை அல்லது அவர்கள் மட்டுமே ஐயமின்றி உண்மையான ஆஸ்திரிய தேசிய இனமாக ஆகும் தகுதி பெற்றவர்கள். அறிவாற்றலும் ஊக்கமும் மிகுந்த ஒரு தலைவனின் கரங்களில், இத்தகைய சிவில் மற்றும் ராணுவப் படிநிலை வரிசை முறை எத்தகைய பணிவுள்ள மற்றும் வலிமை மிக்க கருவியாகக் கட்டாயம் விளங்கும் என்பது தெளிவாகத் தெரியும்.

மக்கள் தொகையிலுள்ள இதர வர்க்கங்களைப் பொருத்த வரை, மெட்டர்னிக் ancien régime*இன் இராஜியவாதியின் மெய்யான உணர்வுடன், அவற்றின் ஆதரவைப் பற்றிக் கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை. அவற்றைப் பொருத்த வரை அவர் ஒரு கொள்கை மட்டுமே கொண்டிருந்தார், வரிகளின் உருவில் அவற்றிடமிருந்து சாத்தியமான வரை அதிக அளவுக்குக் கறப்பது, அதே சமயம் அவற்றை அமைதிப்படுத்தி வைத்திருப்பது என்பதே இக்கொள்கை. வாணிக மற்றும் தொழில்துறை முதலாளி வர்க்கம் ஆஸ்திரியாவில் மெதுவாகவே வளர்ச்சியடைந்து வந்தது. டான்யூப் வழி வாணிகம் ஒப்பளவில் முக்கியமானதாக இருக்கவில்லை; நாட்டுக்கு ஒரு துறைமுகம் என்ற முறையில் டிரீயெஸ்ட் மட்டுமே இருந்தது; இந்தத் துறைமுக வழி வாணிகம் மிகவும் குறைவாகவே இருந்தது. தொழில்துறை அதிபர்களைப் பொருத்தவரை பெரும்பாலும் எல்லா அந்நியப் போட்டியில் இருந்தும் முற்றுக விலகி நிற்கும் அளவுக்கும் கூட அவர்கள் கணிசமான பாதுகாப்பை அனுபவித்தார்கள். ஆனால் இந்த சாதக நிலை அவர்களது வரி செலுத்தும் ஆற்றல்களை அதிகரிக்கும் நோக்கத்தை முக்கியமாகக் கருத்தில் கொண்டே அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது; மேலும் தொழில்துறை மீதான உள்நாட்டுக் கட்டுப்பாடுகளால், கில்டுகள் மற்றும் இதர நிலப்பிரபுத்துவ இணையங்களின் தனியுரிமைகளால் இது உயர்ந்த அளவுக்கு ஈடு செய்யப்பட்டது. இந்தத் தனியுரிமைகள் அரசாங்கத்தின் கருத்துக்களையும் நோக்கங்களையும் தடங்கல் செய்யாத காலம் வரை இம்மியும் பிழையாது பாதுகாக்கப்பட்டன. சிறுதரக் கைவினைஞர்கள் இந்த மத்திய கால கில்டுகளின் குறுகிய வரம்புகளுக்குள் அடைபட்டிருந்தனர். இந்த கில்டுகள் பல்வேறு தொழில்களை ஒன்றுக்கொன்று எதிராக நிரந்தரமான தனியுரிமைப் போரில் வைத்திருந்தன. அதே சமயம் தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்த தனிநபர்கள் சமுதாய ஏணிப்படியில் தம்மைத் தாமே உயர்த்திக்

* தொன்மையான ஆட்சி முறை.—ப-ர்.

கொள்வதற்குரிய சாத்தியப்பாட்டினை மறுத்து, அந்தக் கட்டாயமான அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு ஒரு வகையான மரபுரிமையாக வரும் ஸ்திரத் தன்மையை வழங்கின. கடைசியாக விவசாயியும் தொழிலாளியும் வெறும் வரிவிதிக்கத்தக்க சடப்பொருள்களாகவே கருதப்பட்டனர்; அவர்கள் அன்று வாழ்ந்திருந்த, அவர்களுக்கு முன்னுல் அவர்களது தந்தைமார்கள் வாழ்ந்திருந்த அதே வாழ்க்கை நிலைமைகளில் அவர்களை சாத்தியமான அளவுக்கு வைத்திருப்பது என்பது மட்டுமே அவர்கள் பால் காட்டப்பட்ட அக்கறையாகும். இந்த நோக்கத்திற்காக, முன்பே நிலைநாட்டப்பட்டிருந்த மரபுவழி அதிகார பலம் ஒவ்வொன்றும் அரசாட்சியைப் போன்று அதே முறையில் தாங்கி ஆதரிக்கப்பட்டது. சிறுதரக் குத்தகை விவசாயிகள் மீது நிலப்பிரபுவின் அதிகாரமும், தொழிலாளர்கள் மீது தொழில் முதலாளியின் அதிகாரமும், கைவினைப் பணியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் மீது சிறிய கைவினை ஆண்டையின் அதிகாரமும், மகன் மீது தந்தையின் அதிகாரமும் அரசாங்கத்தால் எல்லா இடங்களிலும் கண்டிப்பாகப் பரிபாலிக்கப்பட்டு வந்தது. அதோடு ஆஸ்திரிய நீதியின்படி சர்வப் பொதுக் கருவியான தண்டாயுதம் மூலம், கீழ்ப்படிய மறுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் சட்டத்தை மீறிய குற்றமாகக் கருதப்பட்டுத் தண்டிக்கப்பட்டது.

இறுதியாக, ஒரு செயற்கையான ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான இந்த எல்லா முயற்சிகளையும் ஒரு சர்வாம்சமான அமைப்பாக முழுமை செய்யும் பொருட்டு, தேசத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்த அறிவுபூர்வமான உணர்வு சிறிதும் பிசகாத எச்சரிக்கையுடன் தேர்வு செய்யப்பட்டு சாத்தியமான வரை சிக்கனமாக வினியோகிக்கப்பட்டது. கல்வி எல்லா இடங்களிலும் கத்தோலிக்க சமய குருமார்களின் கரங்களிலேயே இருந்தது. இதன் தலைவர்கள் பெரிய பிரபுத்துவ நிலவுடைமையாளர்களைப் போலவே, இருக்கும் அமைப்பினை அப்படியே பேணி வைத்திருப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார்கள். பல்கலைக்கழகங்கள், சாதகமான சந்தர்ப்பங்களில் அறிவியலின் பல்வகையான

தனிப்பட்ட துறைகளில் தேர்ச்சி பெறக் கூடிய தனி நபர் களை உருவாக்க அனுமதிக்கும் முறையில் ஒழுங்கமைக்கப் பட்டிருந்தன, ஆனல் இதர பல்கலைக்கழகங்கள் அளிக்கும் என எதிர்பார்க்கப்படும் சர்வப்பொதுவான, முற்போக்கான கல்வி எப்படியும் தவிர்க்கப்பட்டிருந்தது. ஹங்கேரியைத் தவிர வேறெங்கும் செய்திப் பத்திரிகைகள் இருக்கவில்லை, மேலும் ஹங்கேரியப் பத்திரிகைகள் முடியரசின் இதர பகுதி களில் எல்லாம் தடை செய்யப்பட்டிருந்தன. பொதுவான இலக்கியத்தைப் பொருத்தவரை அதன் வீச்சு ஒரு நூற்றுண்டுக் காலமாக விரிவடையவில்லை; இரண்டாம் யோசிஃப் மரணத் திற்குப் பிறகு அது மீண்டும் சுருக்கமடைந்தது. ஆஸ்திரிய மாகாணங்கள் எங்கெல்லாம் ஒரு நாகரிக நாட்டின் எல்லையை ஒட்டி இருந்தனவோ அந்த எல்லை முழுவதிலும் சுங்கவரி அதிகாரிகளுடன் கூடவே இலக்கியத் தணிக்கை அதி காரிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் எந்தவொரு வெளிநாட்டுப் புத்தகத்தையும் செய்திப் பத்திரிகையையும் அவற்றின் உள்ளடக்கம் இரண்டு அல்லது மூன்று தடவைகள் பரிசீலிக்கப்பட்டு, அவற்றில் இந்த கால கட்டத்தின் உக் கிரமான உணர்வின் கறை எதுவும் இல்லாமல் தூயதாக இருப்பதாகக் கண்டு அறிந்து கொள்வதற்கு முன்பாக ஆஸ் திரியாவுக்குள் புக அனுமதிக்கவில்லை.

1815 முதல் சுமார் முப்பதாண்டுகள் இந்த அமைப்பு வியத்தகு வெற்றியுடன் செயல்பட்டது. ஆஸ்திரியா ஐரோப் பாவுக்குக் கிட்டத்தட்ட தெரியாததாகவே இருந்தது, ஐரோப்பா பற்றி ஆஸ்திரியாவில் தெரிந்திருந்ததும் அதே போல் அறவே சொற்பம். மக்கள் தொகையின் ஒவ்வொரு வர்க்கத்தினுடைய, மக்கள் அனைவருடைய சமுதாய நிலையில் கிஞ்சிற்றும் மாற்றம் ஏற்படவில்லை என்பதாகவே தோன் றியது. வர்க்கத்திலிருந்து வர்க்கத்துக்கு நிலவியிருந்த தீரா வெறுப்பு என்னவாயினும்—இந்தத் தீரா வெறுப்பு இருந்த தானது மெட்டர்னிக்குக்கு ஆட்சி செலுத்துவதற்கான ஒரு முக்கிய நிபந்தனையாக இருந்தது, அவர் உயர் வர்க் கங்களை எல்லா அரசாங்க வரிச்சுமைகளின் கருவிகளாக்கி அவற்றின் மீது பழி சுமத்தியது மூலம் இதை மேலும் ஊட்

டமளித்து வளர்த்தார்—அரசின் கீழ்மட்ட அலுவலர்களிடம் மக்கள் கொண்டிருந்த பகைமை எதுவாயினும், மத்திய அரசாங்கத்தின் பால் ஒட்டுமொத்தத்தில் அதிருப்தி கிட்டத்தட்ட இல்லை. சக்கரவர்த்தி போற்றி வணங்கப்பட்டார், முதலாம் பிரான்ஸ் உள்ளபடியே இதை மெய்ப்பித்துக் காட்டினார். இந்த அமைப்பு நீடித்து நிலைப்பது பற்றிச் சந்தேகப்பட்ட போது அவர் மனநிறைவுடன் கூறியதாவது: ''நானும் மெட்டர்னிக்கும் வாழும் வரை அது நல்லபடியாக இருக்கும்.''

ஆனால் மெதுவான, தலைமறைவான இயக்கம் நடந்து கொண்டிருந்தது, இது மெட்டர்னிக்கின் சகல முயற்சிகளையும் திணற அடித்தது. தொழில்துறை மற்றும் வாணிக முதலாளி வர்க்கத்தின் செல்வமும் செல்வாக்கும் அதிகரித்தன. தொழில்துறையில் இயந்திரங்களும் நீராவி சக்தியும் ஈடுபடுத்தப்பட்டதால் ஆஸ்திரியாவில், இதர இடங்களில் இது ஏற்கெனவே செய்திருந்தது போலவே, சமுதாயத்தின் முழு வர்க்கங்களின் பழைய உறவுகளும், வாழ்க்கை நிலைமைகளும் தலைகீழாக்கப்பட்டன. இது பண்ணை அடிமைகளை சுதந்திர மனிதர்களாக மாற்றியது, சிறுதர விவசாயிகளைத் தொழில் பணியாளர்களாக்கியது; இது பழைய நிலப்பிரபுத்துவக் கைவினை இணைப்புகளைச் சீர்குலைத்தது, அவற்றில் பலவற்றின் பிழைப்புச் சாதனங்களை அழித்தது. இந்தப் புதிய வாணிக மற்றும் தொழில்துறை சார்ந்த மக்கள் தொகை எல்லா இடங்களிலும் பழைய நிலப்பிரபுத்துவ நிறுவனங்களுடன் மோதியது. வெளிநாடுகளில் பயணம் செய்வதற்கு அவர்களது அலுவல்கள் மூலம் மென்மேலும் தூண்டுவிக்கப்பட்ட முதலாளி வர்க்கத்தினர் சாம்ராஜ்ய சுங்கக் காப்பு எல்லைகளுக்கு அப்பால் நிலவிய நாகரிக நாடுகள் குறித்த அற்புதமான கட்டுக்கதை போன்ற ஞானத்தைக் கொண்டு வந்தனர்; ரயில்வேக்களின் தொடக்கம் இறுதியாகத் தொழில்துறை மற்றும் அறிவுத்துறை இயக்கம் இரண்டையும் ஒருங்கே விரைவுபடுத்தியது. ஆஸ்திரிய அரசு நிறுவனத்தில் ஓர் அபாயகரமான பாகமும்கூட இருந்தது, அதாவது நாடாளுமன்ற நடவடிக்கைகள், அரசாங்கம் மற்றும்

அதன் நேச சக்திகளான சீமான்களுக்கு எதிரான வறுமை யாக்கப்பட்ட பிரபுக்குலத்தின் எதிர்ப்புத் திரளினரின் போராட்டம் ஆகியவற்றைக் கொண்டதான ஹங்கேரிய நிலப்பிரபுத்துவ அரசியலமைப்புச் சட்டம் இருந்தது. நாடாளுமன்றத்தின் தலைமையிடமான பிரெஸ்பர்க்* வியன்னுவின் தலைவாசலிலேயே இருந்தது. இவை யாவும் நகரங்களில் இருந்த முதலாளி வர்க்கத்தின் மத்தியில், உண்மையான எதிர்ப்பு உணர்வு அல்ல—ஏனெனில் எதிர்ப்பு என்பது இன்னும் சாத்தியமற்றதாகவே இருந்தது—ஆனல் ஓர் அதிருப்தி உணர்வை உருவாக்க உதவின. அரசியலமைப்புச் சட்ட சீர்திருத்தங்களைவிட நிர்வாகத் துறையிலான சீர்திருத்தங்களுக்கான ஒரு பொதுவான விருப்பத்தை உருவாக்க உதவின. பிரஷ்யாவில் இருந்தது போலவே அதிகார வர்க்கத்தின் ஒரு பகுதி முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து கொண்டது. இந்தப் பரம்பரையான அதிகாரி ஜாதியினர் மத்தியில் இரண்டாம் யோசிஃபின் மரபுகள் மறக்கப்பட வில்லை. எப்பொழுதாவது சீர்திருத்தங்களைப் பற்றிக் கற்பனை செய்த அரசாங்கத்தின் மெத்தப் படித்த அதிகாரிகள் மெட்டர்னிக்கின் ''நல்லெண்ண'' எதேச்சாதிகாரத்தை விடவும் அந்தச் சக்கரவர்த்தியின் அறிவொளி படைத்த, முற்போக்கான எதேச்சாதிகாரத்தை அதிகமாக ஆதரிக்க முன்வந்தார்கள். அதிக ஏழ்மைப்பட்ட பிரபுக்குலத்தின் ஒரு பகுதியும்கூட முதலாளி வர்க்கத்துக்கு ஆதரவாக நின்றது. மக்கள் தொகையின் கீழ்மட்ட வர்க்கங்களைப் பொருத்த வரை, அவைகள் அரசாங்கத்தைப் பற்றி அல்ல என்றுலும் தமது மேலதிகாரிகளைப் பற்றி புகார் செய்வதற்கு ஏராளமான காரணங்களை எப்போதும் கண்டு வந்திருந்தன. இவைகள் பெரும்பாலும் முதலாளி வர்க்கத்தின் சீர்திருத்த நோக்குள்ள விருப்பங்களை அனுசரிக்காமல் இருக்க முடியவில்லை.

கிட்டத்தட்ட இந்தக் காலத்தில்தான், அதாவது 1843

* இதன் ஸ்லோவாக் பெயர்: பிராட்டிஸ்லாவா.—ப-ர்.

அல்லது 1844ல்தான், இந்த மாற்றத்துக்குப் பொருத்தமான ஒரு பிரத்தியேகமான இலக்கியப் பிரிவு ஜெர்மனியில் நிறுவப்பட்டது. ஒரு சில ஆஸ்திரிய எழுத்தாளர்கள்—நாவலாசிரியர்கள், இலக்கிய விமர்சகர்கள், மோசமான கவிஞர்கள்—அவர்கள் அனைவருமே மிகவும் சுமாரான திறமையுள்ளவர்கள், ஆனால் யூத இனத்தவருக்கு இயல்பான முன்முயற்சி பெற்றவர்கள், ஆஸ்திரியாவுக்கு வெளியே லைப்சிக் மற்றும் இதர ஜெர்மன் நகரங்களில் குடியேறினார்கள். அங்கு மெட்டர்னிக்கால் எட்ட முடியாத தொலைவில் இருந்தபடி, ஆஸ்திரிய விவகாரங்கள் குறித்து சில நூல்களையும் சிற்றேடுகளையும் வெளியிட்டார்கள். அவர்களும் அவர்களது வெளியீட்டாளர்களும் இவற்றைக் கொண்டு ''அமோகமான வாணிகம்'' நடத்தினார்கள். ஐரோப்பிய சீனாவின் கொள்கையின் இரகசியங்களைத் தெரிந்து கொள்வதற்கு ஜெர்மனி முழுவதும் ஆவலாக இருந்தது. போஹீமிய* எல்லைகளில் நடத்திய பெருமளவான கள்ளக்கடத்தல் மூலம் இந்தப் பிரசுரங்களைப் பெற்றுக்கொண்ட ஆஸ்திரியர்கள் தாமே இன்னும் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள். இந்தப் பிரசுரங்களில் அம்பலப்படுத்தப்பட்டதான இரகசியங்கள் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. இந்த நன்னோக்குடைய நூலாசிரியர்கள் கருதி உருவாக்கிய சீர்திருத்தத் திட்டங்கள் கிட்டத்தட்ட அரசியல் கன்னித் தன்மைக்கு நிகரான அப்பாவித்தனத்தின் அடையாள முத்திரையைக் கொண்டிருந்தன. ஆஸ்திரியாவுக்கு ஓர் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் ஒரு சுதந்திரமான பத்திரிகைகள் என்பன அடைய முடியாத விஷயங்கள் என்று கருதப்பட்டன. அரசு நிர்வாகம் பற்றிய சீர்திருத்தங்கள், மாகாண நாடாளுமன்றங்களின் உரிமைகள் விஸ்தரிப்பு, வெளிநாடுகளில் இருந்து புத்தகங்கள், செய்திப்பத்திரிகைகள் வர அனுமதிப்பது, கடுமை குறைந்த தணிக்கை முறை எனும் இந்த நல்ல ஆஸ்திரியர்களின் விசுவாசமுள்ள எளிமையான விருப்

* செக் நாடு.—ப-ர்.

பங்கள் இவற்றுக்கு அப்பால் அநேகமாகப் போகவில்லை.

எப்படியும், ஜெர்மனியின் இதர பகுதிகளுடனும், ஜெர்மனி வாயிலாக உலகத்துடனுமான ஆஸ்திரியாவின் இலக்கிய ஒட்டுறவைத் தடுப்பது சாத்தியமல்ல எனும் நிலை அதிகரித்து வந்ததானது, அரசாங்கத்துக்கு எதிரான பொதுஜன அபிப்பிராயம் உருவாவதற்குப் பெருமளவு உதவியது. அதோடு, ஆஸ்திரிய மக்களுக்குக் குறைந்தபட்சம் ஒரு சில அரசியல் தகவல்கள் கிட்டுவதற்கு வகை செய்தது. இவ்வாருக, 1847ம் ஆண்டு முடிவதற்கு முன்பு ஜெர்மனி முழுவதிலும் மேலோங்கி நிலவியதான அந்த அரசியல் மற்றும் அரசியல்-சமயக் கிளர்ச்சி சற்றுக் குறைந்த அளவிலேயே என்ற போதிலும் ஆஸ்திரியாவைப் பீடித்தது. ஆஸ்திரியாவில் அதன் முன்னேற்றம் அதிக அமைதியாகவே இருந்தது என்ற போதிலும், அதன் செல்வாக்குக்கு உட்படக் கூடிய போதுமான மக்கள் அங்கு இருந்தனர். நிலப்பிரபுத்துவ அல்லது அரசாங்க வரி மற்றும் பணிச் சுமைகளால் புழுதியில் தள்ளிக் கொடுமை செய்யப் பெற்ற விவசாயி, பண்ணையடிமை அல்லது நிலப்பிரபுத்துவப் பாட்டக்காரர் இருந்தார்; அடுத்து, தொழிலதிபர்கள் தம் இஷ்டப்படி வழங்கும் எந்த நிபந்தனைகள் மீதும் வேலை செய்யும்படி போலீஸ்காரனுடைய குண்டாந்தடியால் நிர்ப்பந்திக்கப்படும் ஆலைத் தொழிலாளி இருந்தார்; பிறகு தனது தொழிலில் சுயேச்சை நிலை பெறுவதற்குரிய வாய்ப்பு எதையும் தடை செய்து விட்ட கில்டு சட்டங்களால் அவதிப்படும் கைவினைப் பணியாளர் இருந்தார்; அதன்பின் அபத்தமான வரையறைகள் காரணமாகத் தனது வியாபாரத்தில் ஒவ்வொரு படியிலும் தடுக்கி விழும் வாணிகரும் இருந்தார்; பின்னர் தமது தனியுரிமைகளில் காப்பு விழிப்புக் கொண்ட கைவினை கில்டுகளோடு அல்லது பேராசை பிடித்த குறுக்கிடும் அதிகாரிகளோடு இடைவிடாது மோதி வந்த தொழில் முதலாளி இருந்தார்; பிற்பாடு, மடமையும் மிதப்பும் வாய்ந்த சமய குருமாருடன் அல்லது மதிகெட்ட, அதிகாரஞ் செலுத்தும் மேலதிகாரியை எதிர்த்துப் பயனின்றிப் போராடி வரும் பள்ளி ஆசிரியர், அறிஞர், சிறப்பாகக்

கல்வி பயின்ற ஊழியர் இருந்தார். சுருங்கக் கூறின் திருப்தி யுற்ற வர்க்கம் என ஒன்றுகூட இருக்கவில்லை. அவ்வப் போது நிர்ப்பந்தம் காரணமாக அரசாங்கம் வழங்க வேண்டி யிருந்த சிறு சலுகைகள் கூட அதன் செலவில் தரப்பட வில்லை, ஏனெனில் கஜானுவால் இந்தச் செலவைச் செய்ய இயலவில்லை, மாருக இச்சலுகைகள் உயர் பிரபுக்குலம் மற்றும் சமயகுருமார் செலவிலேயே செய்யப்பட்டன. பெரிய வங்கி அதிபர்கள் மற்றும் அரசாங்கப் பங்குக்கார ரைப் பொருத்தவரை, இத்தாலியின் சமீபகால நிகழ்ச்சிகள், ஹங்கேரிய நாடாளுமன்றத்தின் பெருகி வரும் எதிர்ப்பு, சாம் ராஜ்யம் பூராவிலும் வெளிப்படையாகக் காணப் பெற்ற தான அசாதாரண அதிருப்தி உணர்வு மற்றும் சீர்திருத் தத்திற்கான முழக்கம் ஆகியவை, ஆஸ்திரிய சாம்ராஜ்யத் தின் திட்பத்திலும் கடனிறுக்கும் சக்தியிலுமான அவர்களது நம்பிக்கையை வலுப்படுத்தும் தன்மையில் இருக்கவில்லை.

இவ்வாருக, ஆஸ்திரியாவும் கூட ஒரு வன்மையான மாற்றத்தை நோக்கி மெதுவாக ஆனுல் உறுதியாக முன் னேறிக் கொண்டிருந்தது; அப்போது திடுமென பிரான்சில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது, இது நிகழவிருந்த சூருவளியை உடனடியாக வரவழைத்து, இந்தக் கட்டமைப்பு தனது காலத்திலும் மெட்டர்னிக்கின் வாழ்நாளிலும் ஒருங்கே நிலைத்து நிற்கும் என்ற முதிய பிரான்சின் வன்கூற்றைப் பொய் என நிருபித்தது.

லண்டன், 1851 செப்டம்பர்

## 5

## வியன்னுவில் புரட்சிகர எழுச்சி

1848 பிப்ரவரி 24ந் தேதி லுயீ ஃபிலீப் பாரிசிலிருந்து வெளியே விரட்டப்பட்டார், பிரெஞ்சுக் குடியரசு பிரகட னம் செய்யப்பட்டது. பின்வந்த மார்ச் 13ந் தேதி வியன்னு

மக்கள் "சிற்றரசன் மெட்டர்னிக்கின் ஆட்சி அதிகாரத்தைத் தகர்த்து அவர் நாட்டை விட்டு மானக்கேடான முறையில் ஓட விரட்டினார்கள். மார்ச் 18ந் தேதி பெர்லின் மக்கள் ஆயுதமேந்திப் போராடினர், பதினெட்டு மணி நேரம் உறுதியான போராட்டத்துக்குப் பின் மன்னர் தம் கரங்களில் சரணடையக் கண்டு திருப்தியடைந்தனர். ஜெர்மனியின் சிறிய அரசுகளின் தலைநகர்களிலும் அநேகமாக இதே போல உக்கிரமானதும் வெற்றிகரமானதுமான எழுச்சிகள் நடைபெற்றன. ஜெர்மன் மக்கள் தமது முதல் புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கவில்லை என்றாலும் அவர்கள் குறைந்தபட்சம் புரட்சிகர நடவடிக்கைகளில் பகிரங்கமாக இறக்கிவிடப்பட்டிருந்தார்கள்.

இந்தப் பல்வேறு புரட்சிகர எழுச்சிகளின் சம்பவங்களைப் பொருத்தவரை இங்கு நாம் விவரங்களுக்குள் செல்ல முடியாது; அவற்றின் தன்மை மற்றும் அவை சம்பந்தமாக மக்கள் தொகையின் பல்வேறு வர்க்கங்கள் மேற்கொண்ட நிலை என்பதைப் பற்றியே நாம் விளக்க வேண்டும்.

வியன்னாப் புரட்சி கிட்டத்தட்ட ஒருமனதாக நின்ற மக்களால் நடத்தப்பட்டது எனலாம். வங்கி அதிபர்கள், பங்கு மார்க்கெட் பேரக்காரர்கள் நீங்கலாக, முதலாளி வர்க்கத்தினர், சிறுதரக் கைவினைஞர்கள் மற்றும் கடைக்காரர்கள், தொழிலாளர்கள் அடங்கலாக எல்லோரும் அனைவராலும் அறவே வெறுக்கப்பட்டதான அரசாங்கத்தை எதிர்த்து எழுச்சியுற்றனர். இந்த அரசாங்கம் மிகவும் சர்வப் பொதுவாக வெறுக்கப்பட்டிருந்ததால் இதை ஆதரித்து வந்த பிரபுக்கள் மற்றும் பெருஞ் செல்வர்களின் சின்னஞ் சிறுபான்மை முதல் தாக்குதலின் போதே கண்காணாதபடி மறைந்துவிட்டது. முதலாளி வர்க்கம் மெட்டர்னிக்கால் முற்றிலும் அரசியல் அறியாமையில் அடக்கி வைக்கப்பட்டிருந்ததால், அதற்கு அராஜகம், சோஷலிசம் மற்றும் பயங்கரத்தின் ஆட்சி பற்றியும், முதலாளி வர்க்கத்துக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் இடையில் நிகழவிருக்கும் போராட்டங்கள் பற்றியும் பாரிசிலிருந்து கிட்டிய செய்திகள் அறவே புரிந்துகொள்ள முடியாதனவாக இருந்தன.

அது தமது அரசியல் அறியாமை காரணமாக ஒன்று, இந்தச் செய்திகளுக்கு எவ்வித முக்கியத்துவத்தையும் தர முடிய வில்லை, அல்லது அவை தன்னை அச்சுறுத்திக் கீழ்ப்படிய வைப்பதற்காக மெட்டர்னிக் கையாண்ட பேய்த்தனமான புனைவுகள் என்று அது நம்பியது. தவிரவும் தொழிலாளர் கள் ஒரு வர்க்கமாகச் செயல்படுவதையோ அல்லது தமது சொந்த தனிப்பட்டதான வர்க்க நலன்களை ஆதரித்து முன் வருவதையோ அது என்றுமே கண்டது கிடையாது. எல் லோராலும் வெறுக்கப்பட்டதான ஓர் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதில் இவ்வளவு மனப்பூர்வமாக ஒன்றுசேர்ந்துள்ள வர்க்கங்களின் இடையே ஏதேனும் வேறுபாடுகள் முளைத் தெழலாம் என்பது பற்றி அதன் கடந்த கால அனுபவத் தில் இருந்து எவ்விதமான கருத்தும் அதற்குத் தோன்ற வில்லை. எல்லா அம்சங்களிலும் தொழிலாளர்கள் தம்முடன் உடன்பாடு கொண்டிருப்பதை அது கண்டது: ஓர் அர சியலமைப்புச் சட்டம், ஜுரிகள் மூலம் வழக்கு விசாரணை, பத்திரிகைச் சுதந்திரம் இத்தியாதி. இவ்வாறு, 1848 மார்ச் சில் தான் அது இயக்கத்தை முழு ஊக்கத்தோடு ஆதரித் தது. மறுபுறம் இயக்கம் அதனை (தத்துவார்த்த அளவில் தான் என்றாலும்) அரசின் பிரதான வர்க்கமாக உடனே மாற்றியது.

ஆனால் எந்தப் புரட்சிக்கும் எப்போதும் ஓரளவுக்கு அவ சியமான நிபந்தனையாக இருந்து வரும் பல்வேறு வர்க்கங் களின் இந்த ஒற்றுமை நீண்ட காலம் நிலவ முடியாது என்பது எல்லாப் புரட்சிகளின் விதியுமாகும். பொது விரோதியை எதிர்த்து வெற்றிபெற்ற உடனேயே வெற்றியாளர்கள் தமக்கு மத்தியிலேயே வெவ்வேறு முகாம்களாகப் பிள வுற்றுத் தமது ஆயுதங்களை ஒருவருக்கொருவர் எதிராகத் திருப்புகின்றனர். வர்க்கப் பகைமையின் இந்த வேகமான மற்றும் ஆவேசமான வளர்ச்சிதான் பழைய சிக்கலான சமு தாய அமைப்புகளில் புரட்சியை சமுதாய, அரசியல் முன் னேற்றத்தின் இத்தகைய வலிமைமிக்க இயக்கியாக மாற்று கிறது. ஆட்சி அதிகாரத்தில் ஒன்றை ஒன்று தொடரும் புதிய கட்சிகளின் இடைவிடாதபடி நிகழும் இந்த விரைவான

வளர்ச்சிதான், அந்த வன்மையான கொந்தளிப்புகளின் போது ஒரு தேசம் சாதாரணச் சூழ்நிலையில் ஒரு நூற்றுண்டு காலத்துக்குப் பிறகு அடையக் கூடிய முன்னேற்றத்தை விட அதிகமாக ஐந்தே ஆண்டுகளில் சாதிக்குமாறு செய்கிறது.

வியன்னுவில் நிகழ்ந்த புரட்சியானது முதலாளி வர்க்கத்தைத் தத்துவார்த்த முறையில் மேலாதிக்கம் வகிக்கும் வர்க்கமாக்கியது; அதாவது, அரசாங்கத்திடமிருந்து பறித்துப் பெற்ற சலுகைகள், நடைமுறையில் அமுலாக்கப் பட்டுச் சிலகாலம் நீடிக்கும் பட்சத்தில், முதலாளி வர்க்கத்தின் மேலாதிக்கத்தைத் தவிர்க்க முடியாதபடி உறுதியாக நிலைநாட்ட உதவும் அத்தகையவையாக இருந்தன. ஆனுல் நடைமுறையில் அந்த வர்க்கத்தின் மேலாதிக்கம் நிலைநாட்டப்படவில்லைதான். முதலாளி வர்க்கத்தினருக்கும் குட்டி முதலாளிகளுக்கும் ஆயுதங்கள் வழங்கிய தேசியக் காவற் படை நிறுவப்பட்டதால் அந்த வர்க்கம் சக்தியும் முக்கியத்துவமும் பெற்றது உண்மைதான்; பெரும்பான்மையாக முதலாளி வர்க்கத்தினரைக் கொண்ட ஒரு ''பாதுகாப்புக் கமிட்டியை''— ஒரு வகையான புரட்சிகரமான பொறுப்பற்ற அரசாங்கத்தை—நிறுவியதன் மூலம் அந்த வர்க்கம் ஆட்சித் தலைமையில் அமர்த்தப்பட்டது என்பதும் உண்மை. ஆனுல் அதே சமயம் தொழிலாளர்களும் ஓரளவுக்கு ஆயுதங்களைப் பெற்றிருந்தார்கள்; போர் மூண்ட ஒவ்வொரு தடவையும் எப்பொழுதும் அவர்களும் மாணவர்களும் போரின் சுமையைத் தாங்கி நின்றுர்கள். தேசியக் காவற்படையை விட அதிகமான ஆயுதங்களைப் பெற்றிருந்த, கூடுதலான கட்டுப் பாட்டுடன் இருந்த சுமார் 4,000 மாணவர்கள் புரட்சிகரப் படையின் மெய்யான ஆதார மையமாக அமைந்தார்கள். இவர்கள் பாதுகாப்புக் கமிட்டியின் கரங்களில் எந்த வழியிலும் வெறுங் கருவிகளாகச் செயல்பட விரும்பவில்லை. அதை அவர்கள் அங்கீகரித்தார்கள், அதன் மிகுந்த உற்சாகமிக்க ஆதரவாளர்களாகவும் கூட இருந்தார்கள் என்ற போதிலும் அவர்கள் ஒரு வகையான சுயேச்சையான ஓரளவு கிளர்ச்சியார்வமுடைய அமைப்பை

நிறுவித் தாமே பொதுக் கூட்டங்கள் நடத்தினார்கள். முதலாளி வர்க்கத்துக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஒரு நடுத்தரமான நிலையை மேற்கொண்டார்கள். காரியங்கள் பழைய அன்றாட அமைதிப் பாணியில் நிலைகொள்வதை இடையறாத கிளர்ச்சி மூலம் தடுத்தும், பாதுகாப்புக் கமிட்டி மீது மிக அடிக்கடி தமது முடிவுகளை பலவந்தமாகத் திணித்தும் செயல்பட்டார்கள். மறுபுறத்தில் கிட்டத்தட்ட முற்றிலும் வேலைவாய்ப்பற்று வெளித்தள்ளப்பட்டிருந்த தொழிலாளர்கள் அரசின் செலவில் பொதுப் பணிகளில் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டிய நிலையில் இருந்தார்கள். இந்த நோக்கத்துக்குத் தேவைப்படும் பணம் வரிசெலுத்துவோரிடம் இருந்தோ அல்லது வியன்னா நகரத்து கஜானாவில் இருந்தோ நிச்சயமாக எடுத்துச் செலவிடப்பட வேண்டியதாக இருந்தது. இவை எல்லாம் வியன்னாவின் வியாபாரிகளுக்கும் கைவினைஞர்களுக்கும் மிகவும் பொல்லாங்காகவே தெரிந்தன. ஒரு பெரிய நாட்டின் செல்வந்தர்கள் மற்றும் பிரபுக்குலத்து அரச பரிவாரங்களின் நுகர்வுக்காகப் பொருளுற்பத்தி நடத்தி வந்த வியன்னா தொழில் நிலையங்கள் இயல்பாகவே புரட்சியாலும் பிரபுக்குலத்தவர் மற்றும் அரச பரிவாரம் ஓடிப் போனதன் விளைவாயும் முற்றாகத் தடுத்து நிறுத்தப்பட்டன. வர்த்தகம் ஸ்தம்பித்து நின்றது, மாணவர்கள் தொழிலாளர்கள் இடைவிடாது நடத்தி வந்த தொடர்ச்சியான கிளர்ச்சியும், பரபரப்பான நிலையும் நிச்சயமாக "நம் பிக்கையை மீட்டமைப்பதற்கு" உரிய மார்க்கங்கள் அல்ல என்று சொல்லப்பட்டது. இவ்வாறாக ஒரு புறம் முதலாளி வர்க்கத்துக்கும் மறுபுறம் குமுறி நிற்கும் மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கும் இடையே ஒரு வகையான புரைசல் வெகுவிரைவில் தோன்றியது. இந்தப் புரைசல் நெடுங்காலத்துக்குப் பகிரங்கப் பகைமையாக முற்றவில்லை என்றால் அதற்குக் காரணம், பழைய முறையை மீட்டமைப்பதற்கான தமது அவசரத்தில் அமைச்சகம், குறிப்பாக ராஜ சபை மேலும் புரட்சிகரமான கட்சிகளின் சந்தேகங்களையும் கொந்தளிப்பான நடவடிக்கைகளையும் இடைவிடாது நியாயப்படுத்தின; அதோடு முதலாளி வர்க்கத்தின்

கண்முன்பு பழைய மெட்டர்னிக்கிய கொடுங்கோன்மை எனும் பூதத்தை இடைவிடாது கிளப்பிவிட்டன. இவ்வாருக, மே 15ந் தேதியும், மீண்டும் 26ந் தேதியும், அரசாங்கம் புதிதாக வென்று பெற்ற சில உரிமைகளைத் தாக்கவோ அல்லது சீர்குலைக்கவோ முயன்றது என்ற காரணத்தால் வியன்னுவில் எல்லா வர்க்கங்களும் சேர்ந்து நடத்திய புரட்சிகர எழுச்சிகள் ஏற்பட்டன. இவை ஒவ்வொன்றும் நடந்தபோது தேசியக் காவற்படை அல்லது ஆயுதமேந்திய முதலாளி வர்க்கத்துக்கும் மாணவர்கள், தொழிலாளர்களுக்கும் இடையிலான கூட்டணி மீண்டும் சில காலத்துக்கு வலுப்பட்டது.

மக்கள் தொகையின் இதர வர்க்கங்களை எடுத்துப்பார்த்தால், பிரபுக்குலமும் பண மூட்டைகளும் மறைந்துவிட்டார்கள், விவசாயிகள் நிலப்பிரபுத்துவத்தின் ஆகக் கடைசி எச்சங்களை அகற்றுவதில் எங்கும் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். இத்தாலியில் போர்[31] மூண்டதன் காரணமாயும், வியன்னுவும் ஹங்கேரியும் அரசவைக்குக் கொடுத்த தொந்தரவின் விளைவாகவும், விவசாயிகள் முற்றிலும் சுதந்திரமாக விடப்பட்டனர், அதோடு ஜெர்மனியின் இதர பகுதிகளைவிட சிறப்பான முறையில் ஆஸ்திரியாவில் தமது விடுதலைப் பணியில் வெற்றி பெற்ருர்கள். விவசாயிகள் ஏற்கெனவே நடைமுறையில் மேற்கொண்டு விட்ட நடவடிக்கைகளை ஆஸ்திரிய நாடாளுமன்றம் மிகவும் குறுகிய காலத்துக்குப் பின் அங்கீகரிக்க மட்டுமே வேண்டியிருந்தது. ஷ்வார்சென்பர்க் சிற்றரசரின் அரசாங்கம் வேறு எதை மீட்டமைக்க இயன்ருலும் சரி, விவசாயிகளை நிலப்பிரபுத்துவ அடிமைத்தனத்தில் தள்ளுவதை மீண்டும் நிலைநாட்டும் சக்தி அதற்கு என்றுமே கிட்டாது என்பது திண்ணம். ஆஸ்திரியா இன்றைய தருணத்தில் மீண்டும் ஒப்பளவில் அமைதியாயும் பலத்துடனும் கூட இருக்கிறதென்ருல் இதற்குப் பிரதான காரணம் மிகப் பெரும்பான்மையான மக்கள்—விவசாயிகள்—புரட்சியால் மெய்யாகவே நன்மை அடைந்திருக்கிருர்கள் என்பதும், மீட்டமைக்கப்பட்ட அரசாங்கத்தால் வேறு எதைத் தாக்க முடிந்த போதிலும், விவசாயிகளால்

வென்று பெறப்பட்ட இந்தக் கண்கூடான சாரமான அனு கூலங்கள் மீது இன்னும் கைவைக்க முடியவில்லை என்பதுமே ஆகும்.

*லண்டன், 1851 அக்டோபர்*

## 6

## பெர்லினில் புரட்சிகர எழுச்சி

பெர்லின் புரட்சிகரப் போராட்டத்தின் இரண்டாவது மையமாக இருந்தது. வியன்னுவில் புரட்சிகரப் போராட்டத் துக்குக் கிட்டத்தட்ட எல்லா வர்க்கங்களின் ஒருமுகமான ஆதரவு துணையாக இருந்தது போல, பெர்லினில் இந்தப் போராட்டத்துக்கு இருக்கவில்லை என்பதை முன் எழுதிய அத்தியாயங்களில் இருந்து அனுமானிக்கலாம். பிரஷ்யா வில் முதலாளி வர்க்கம் அரசாங்கத்துடன் ஏற்கெனவே மெய்யான போராட்டத்தில் சிக்குண்டிருந்தது; "ஒன்றிணைந்த நாடாளுமன்றக்" கூட்டத்தின் விளைவு ஒரு முறிவில் போய் முடிந்தது. ஒரு முதலாளித்துவப் புரட்சி நிகழ இருந்தது; அந்தப் புரட்சி அதன் முதல் வெடிப்பிலேயே, பிப்ரவரி பாரிஸ் புரட்சி நிகழாதிருந்திருக்குமானுல், வியன்னு புரட்சி போன்று அதே அளவுக்கு முற்றும் ஒருமுகமானதாக இருந் திருக்கக் கூடும். பாரிஸ் புரட்சி எல்லாவற்றையும் மிகு வேகப்படுத்தியது, அதே சமயம், பிரஷ்யாவின் முதலாளி வர்க்கம் எந்தப் பதாகையின் கீழ் தனது அரசாங்கத்தை எதிர்த்து நிற்கத் தயாராகி வந்ததோ அதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதான ஒரு பதாகையின் கீழ் அது நிறைவேற்றப் பட்டது. பிரஷ்ய முதலாளி வர்க்கம் தமது சொந்த நாட் டில் நிறுவ இருக்கும் அதே வகைப்பட்ட அரசாட்சி முறை யைத் தான் பிரான்சில் பிப்ரவரி புரட்சி கவிழ்த்தது. பிப்ர வரிப் புரட்சியானது தன்னை முதலாளி வர்க்கத்துக்கு எதிரான தொழிலாளி வர்க்கத்தினரின் புரட்சி என்று அறி வித்துக் கொண்டது, முதலாளி வர்க்கத்தின் அரசாங்கத் தின் வீழ்ச்சியையும் தொழிலாளர்களின் விடுதலையையும்

அது பிரகடனம் செய்தது. அப்போது பிரஷ்ய முதலாளி வர்க்கத்தினர் சமீப காலமாகத் தமது சொந்த நாட்டில் தொழிலாளி வர்க்கக் கிளர்ச்சி போதும் என்ற அளவுக்கு அலுப்படைந்திருந்தனர். சைலீஷியாவின் புரட்சிகர எழுச்சியின் ஆரம்ப பயங்கரங்கள் மறைந்த பின்னர், அவர்கள் இந்தக் கிளர்ச்சியைத் தமக்கு ஆதரவாகத் திருப்பக்கூட முயற்சி செய்தார்கள். ஆனல் அவர்கள் புரட்சிகர சோஷலிசம் மற்றும் கம்யூனிசம் பற்றிய ஒரு ஆரோக்கியமான அச்சத்தை எப்போதும் தம்முள் கொண்டிருந்தார்கள்; எனவே அவர்கள் சொத்துடைமை, முறை, சமயம், குடும்பம் மற்றும் நவீன முதலாளி வர்க்கத்தின் இதர புனிதமான ஏற்பாடுகளின் மிகவும் அபாயகரமான விரோதிகள் என்று அவர்களால் கருதப்படும் நபர்கள் பாரிசில் அரசாங்கத்திற்குத் தலைமை தாங்கக் கண்ட போது, அவர்கள் உடனே தமது சொந்தப் புரட்சிகர ஆர்வமுனைப்பு கணிசமான அளவுக்குக் குறைந்து வருவதை அனுபவத்தில் கண்டார்கள். இந்தத் தருணத்தை விடாது கைக்கொள்ள வேண்டும் என்பதையும், உழைக்கும் மக்கள் திரளினரின் உதவி இல்லாவிடில் அவர்கள் தோற்கடிக்கப்படுவார்கள் என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்; இருப்பினும் அவர்களது துணிச்சல் கைகொடுக்கவில்லை. இவ்வாருக அவர்கள் பகுதியளவிலும் மாகாண அளவிலுமான முதல் எழுச்சிகளின் போது அரசாங்கத்தின் பக்கம் ஆதரவாக நின்று, பெர்லினில் மக்களை அமைதிப்படுத்த முயன்ருர்கள். மக்களோ இந்த ஐந்து நாட்களில் மன்னர் மாளிகைமுன் கூட்டமாகக் கூடிச் செய்திகளை விவாதித்து அரசாங்கத்தில் மாறுதல்கள் வேண்டும் என்று கேட்கலாயினர். கடைசியாக மெட்டர்னிக்கின் வீழ்ச்சி பற்றிய செய்திக்குப் பிறகு மன்னர்* சில சொற்பமான சலுகைகளை வழங்கிய போது, முதலாளி வர்க்கத்தினர் புரட்சி பூர்த்தியடைந்து விட்டதாகக் கருதி, மக்களின் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றி விட்டதற்காக மாட்சிமை மிக்க மன்னருக்கு நன்றி தெரிவிக்கச் சென்ருர்

* நான்காம் பிரெடெரிக்-வில்ஹெல்ம்.—ப-ர்.

கள். ஆனுல் பின்னர் மக்கள் கூட்டத்தின் மீது ராணுவத் தாக்குதல், தெருத் தடையரண்கள், போராட்டம் மற்றும் மன்னர் அதிகாரத்தின் தோல்வி ஆகியவை தொடர்ந்தன. அதன் பின் எல்லாமே மாற்றமடைந்து விட்டது; எந்தத் தொழிலாளி வர்க்கத்தைப் பின்னணியிலேயே வைத்திருக்கும் போக்கை முதலாளி வர்க்கத்தினர் கடைப்பிடித்து வந்திருந்தார்களோ, அதே தொழிலாளி வர்க்கம் முன்னணிக்குத் தள்ளப்பட்டது, போராடியது, வெற்றி பெற்றது, திடுமெனத் தனது வலிமை பற்றி உணரலாயிற்று. வாக்குரிமை,பத்திரிகை சுதந்திரம், ஜுரியாகப் பணியாற்றுகின்ற உரிமை, கூட்டம் நடத்தும் உரிமை ஆகியவற்றிலான தடை வரம்புகள்—இத்தகைய தடை வரம்புகள் முதலாளி வர்க்கத்திற்குப் பிடிக்கும், ஏனெனில் அவை அதற்குத் தாழ்ந்த நிலையிலுள்ள வர்க்கங்களை மட்டுமே பாதிக்கலாம் — இப்போது இனிமேல் சாத்தியமல்ல. ''அராஜகத்தின்'' பாரிஸ் பாணிக் காட்சிகள் உடனே திரும்பவும் நிகழும் அபாயம் இருந்தது. இந்த அபாயத்தின் முன்பு முந்திய வேறுபாடுகள் யாவும் மறைந்துவிட்டன. தனக்கு என எவ்விதப் பிரத்தியேகக் கோரிக்கைகளையும் வெளிப்படச் சாற்ருத வெற்றியடைந்த தொழிலாளரை எதிர்த்து பல ஆண்டுக் காலத்திய நண்பர்களும் விரோதிகளும் ஒன்றுசேர்ந்தார்கள், அதோடு முதலாளி வர்க்கத்துக்கும் கவிழ்க்கப்பட்ட அமைப்பின் ஆதரவாளர்களுக்கும் இடையிலான கூட்டணி பெர்லின் தெருத் தடையரண்களிலேயே ஏற்பட்டது. அத்தியாவசியமான சலுகைகள், தவிர்க்க முடியாதவை என்ற அளவுக்கு மேல் செல்லாதபடி, வழங்கப்படும்; ஒன்றிணைந்த நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்களின் அமைச்சகம் உருவாக்கப்பட இருந்தது, முடியாட்சியைப் பாதுகாப்பதில் இது ஆற்றிய சேவைகளுக்குப் பிரதியாக இதற்குப் பழைய அரசாங்கத்தின் ஆதாரத் தூண்கள்: நிலப் பிரபுத்துவ மேற்குடியினர், அதிகாரவர்க்கம் மற்றும் சேனையின் ஆதரவு கிடைக்கும். இந்த நிபந்தனைகளின் பேரில் தான் காம்ப்ஹாவுசன், ஹான்செமன் வகையரு அமைச்சரவை அமைக்க ஒப்புக்கொண்டனர்.

எழுச்சியுற்ற மக்கள் திரளினர் பற்றிப் புதிய அமைச்சர்கள் வெளிப்படுத்திய திகில் எத்தகையதாக இருந்தது என்ருல், அவர்களது பார்வையில் அதிகார அமைப்பின் ஆட்டங்கண்டுவிட்ட அடித்தளங்களை வலுப்படுத்த அவை உதவும் பட்சத்தில், எந்த வழிவகையும் நல்லதாகவே தோன்றியது. அவர்கள், தவருன எண்ணம் கொண்ட அந்தப் பாவமான கடைகெட்ட பேர்கள், பழைய அமைப்பை மீட்டமைக்கும் அபாயம் எல்லாம் மறைந்து விட்டது என்று கருதினுர்கள், இவ்வாருக அவர்கள் ''ஒழுங்கு முறையை'' மீட்டமைக்கப் பழைய அரசு இயந்திரம் முழுவதையும் பயன்படுத்தினுர்கள். அதிகாரவர்க்கப் பேர்வழி அல்லது ராணுவ அதிகாரி ஒருவர்கூட பதவியில் இருந்து விலக்கப் படவில்லை. ஆட்சி நிர்வாகத்தின் பழைய அதிகாரவர்க்க அமைப்பு முறையில் கடுகளவு மாற்றமும் செய்யப்படவில்லை. இந்த அருமந்த அரசியலமைப்புச் சட்டம் சார்ந்த பொறுப்பான அமைச்சர்கள் எந்த அலுவலர்களை மக்கள் தமது புரட்சிகர ஆர்வமுனைப்பின் ஆரம்ப ஆவேசத்தில் அவர்களது அதிகாரவர்க்க அட்டகாசச் செயல்கள் காரணமாகப் பதவிகளில் இருந்து விரட்டியடித்தார்களோ அந்த அலுவலர்களை, அவர்களது பழைய பதவிகளில் மீண்டும் அமர்த்தினுர்கள். பிரஷ்யாவில் அமைச்சர் பதவி வகித்த ஆட்கள் தவிர்த்த வேறு எதுவும் மாற்றப்படவில்லை. பல்வேறு இலாகாக்களில் இருந்த அமைச்சு அலுவலக ஊழியர்கள் கூடப் பாதிக்கப்படவில்லை; புதிதாகப் பதவிக்கு உயர்த்தப்பட்ட ஆட்சியாளர்களின் புகழ்பாடும் கோஷ்டியினரும், அதிகாரத்திலும் பதவிகளிலும் தமது பங்கை எதிர்பார்த்தவர்களுமான அரசியலமைப்புச் சட்ட பதவி வேட்டைக்காரர்கள், இப்போது அபாயமற்ற நிலையில் இல்லாத அதிகாரவர்க்க அலுவலகப் பணியாளர் விஷயத்தில் மாற்றங்களைச் செய்ய அனுமதிக்கும் ஸ்திரத்தன்மை மீட்டமைக்கப்படும் வரையில் காத்திருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

மார்ச் 18ந் தேதிய புரட்சி எழுச்சிக்குப் பிறகு ஆக உயர்ந்த அளவுக்குச் சோர்ந்து போய்க் கிடந்த மன்னர், தனக்கு அவர்கள் எந்தளவு அறவே அவசியமோ அந்த

அளவுக்குத்தான் அந்த ''மிதவாத'' அமைச்சர்களுக்குத் தான் முற்றிலும் அவசியம் என்பதை விரைவில் கண்டு கொண்டார். அரச அரியணை புரட்சிகர எழுச்சியால் அழிக்காமல் விடப்பட்டிருந்தது; ''அராஜகத்துக்கு'' மன்னர் பதவியே கடைசியாக இருந்த முட்டுக்கட்டை. எனவே மிதவாத முதலாளி வர்க்கமும் இப்போது அமைச்சரவையிலுள்ள அதன் தலைவர்களும் அரசருடன் மிகவும் நேர்த்தியான உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதில் அக்கறை கொள்வதற்கு எல்லாக் காரணங்களுமிருந்தன. மன்னரும் அவரைச் சுற்றி இருந்த பிற்போக்குக் கும்பலும் இதை விரைவில் கண்டறிந்து கொண்டனர். காலத்துக்குக் காலம் செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்த அந்தச் சில்லறைச் சீர்திருத்தங்கள் விஷயத்தில் கூட அமைச்சரவை முன்செல்வதைத் தளையிட்டுத் தடுக்கும் பொருட்டு இந்த சந்தர்ப்பத்தைச் சாதகமாகப் பயன்படுத்தின.

அண்மையில் ஏற்பட்டதான வன்முறை மாற்றங்களுக்கு ஒரு வகையான சட்டரீதித் தோற்றத்தை அளிக்க வேண்டும் என்பதே அமைச்சரவையின் முதல் கவலையாக இருந்தது. மக்கள் எதிர்ப்பெல்லாம் இருந்த போதிலும் ஒன்றிணைந்த நாடாளுமன்றம் கூட்டப்பட்டது. மக்களின் சட்ட பூர்வமான அரசியலமைப்புச் சட்ட உறுப்பு என்ற முறையில் ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டம் பற்றி மன்னருடன் உடன்பாடு காண வேண்டிய ஒரு சட்டமன்றத்தைத் தேர்வு செய்வதற்கான ஒரு புதிய தேர்தல் சட்டத்தை வோட்டளித்து நிறைவேற்றும் பொருட்டு இது கூட்டப்பட்டது. தேர்தல்கள் நேரடியானவை அல்ல, வாக்காள மக்கள் திரளினர் குறிப்பிட்ட எண்ணிக்கைத் தேர்வாளர்களைத் தேர்ந்தெடுப்பர்; அவர்கள் பிறகு பிரதிநிதிகளைத் தேர்வு செய்வார்கள். எல்லா எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது இந்த இரட்டைத் தேர்தல் அமைப்பு முறை நிறைவேற்றப்பட்டது. பின்னர் ஒன்றிணைந்த நாடாளுமன்றத்திடம் இருபத்தைந்து மில்லியன் டாலர் கடன்கோரப்பட்டது, மக்கள் கட்சி இதை எதிர்த்தது. எனினும் இதற்கும் ஒப்புதல் கிட்டியது.

அமைச்சரவையின் இந்தச் செயல்கள், இப்போது தன்னைத் தானே ஜனநாயகக் கட்சி என்று அழைத்துக் கொள்ளும் மக்கள் கட்சி மிகவும் துரிதமான வளர்ச்சியுற வகை செய்தன. சிறுதரக் கைவினைஞர் மற்றும் கடைக்காரர் வர்க்கத்தால் தலைமை தாங்கப்படுவதும், புரட்சியின் துவக்கத்தில் தொழிலாளர்களின் பெரிய பெரும்பான்மையைத் தனது பதாகையின் கீழ் ஒன்றிணைத்து வைத்திருந்ததுமான இந்தக் கட்சி, பிரான்சில் நிறுவப்பட்டிருப்பது போன்று எல்லோரும் நேரடியாக வாக்களிக்கும் உரிமையையும், தனிச் சட்ட மன்றத்தையும், புதிய அரசாங்க அமைப்பு முறைக்கு அடிப்படை என்ற முறையில் மார்ச் 18 புரட்சியை முழுமையாகவும் பகிரங்கமாகவும் அங்கீகரிக்க வேண்டும் எனவும் கோரியது. அதிக மிதமான போக்குள்ள பிரிவினர் இவ்வாறு ''ஜனநாயகமயமாக்கப்பட்ட'' முடியாட்சியுடன் திருப்தி அடைந்து விடுவர், அதிக முன்னேற்றமான பிரிவினர் குடியரசு இறுதியாக நிறுவப்பட வேண்டும் என்று கோரினர். இரண்டு பிரிவினரும் பிராங்க்பர்ட்டிலிருந்த ஜெர்மன் தேசிய சட்டமன்றத்தை நாட்டின் மிக்குயர் அதிகார அமைப்பாக அங்கீகரிக்க ஒப்புக் கொண்டனர், அதே போதில் அரசியலமைப்புச் சட்டவாதிகளும் பிற்போக்குவாதிகளும் அறவே புரட்சிகரமானது என்று கருதி அவர்கள் வெளிப்படையாகச் சாற்றும் இந்த அமைப்பின் சர்வவுரிமையில் மாபெரும் பயங்கரம் இருப்பதாகப் புலம்பினார்கள்.

தொழிலாளி வர்க்கத்தின் சுயேச்சையான இயக்கம் இந்தப் புரட்சியால் சில காலம் தடைபட்டிருந்தது. இந்த இயக்கத்தின் உடனடித் தேவைகளும் சூழல்களும் பாட்டாளி வர்க்கக் கட்சியின் பிரத்தியேகமான கோரிக்கைகள் எதையும் முன்னணியில் வைக்க அனுமதிக்கும் வகையில் இருக்கவில்லை. தொழிலாளர்களின் சுயேச்சையான போராட்டத்துக்கு வழி சமைக்கப்படாத காலம் வரை, நேரடியாக எல்லோருக்கும் வாக்குரிமை நிலைநாட்டப்படாத காலம் வரையில், பெரிதும் சிறிதுமான 36 அரசுகள் ஜெர்மனியை எண்ணற்ற துண்டு துணுக்குகளாகப் பிளவுறுத்தியிருப்பது தொடரும் வரையில்—பாட்டாளி வர்க்கக் கட்சியானது

தனக்கு சர்வ முக்கியத்துவமுள்ளதான பாரிஸ் இயக்கத்தை உன்னிப்பாகப் பார்த்து, பின்னுல் தனது சொந்தப் போராட்டத்தை நடத்துவதற்கு வசதி செய்து தரும் அந்த உரிமைகளைப் பெறுவதற்காக, குட்டி முதலாளிகளுடன் சேர்ந்து போராடுவதைத் தவிர உண்மையில் வேறு எதைச் செய்ய முடியும்?

சிறுதரக் கைவினைஞர் மற்றும் கடைக்காரர் வர்க்கத்திடம் இருந்து அல்லது சரியாகக் கூறிடில் ஜனநாயகக் கட்சி எனப்படுவதிடம் இருந்து, பாட்டாளி வர்க்கக் கட்சியை அதன் அரசியல் செயலில் முக்கியமாக இனம் பிரித்துக் காட்டும் மூன்று அம்சங்கள் மட்டுமே இருந்தன: முதலாவதாக பிரெஞ்சு இயக்கத்தை வேறுவகையில் நிர்ணயம் செய்வதில் இருக்கும் அம்சம்; பாரிசில் அதிதீவிரக் கட்சியை ஜனநாயகவாதிகள் தாக்கிஞர்கள், பாட்டாளி வர்க்கப் புரட்சிவாதிகள் இதைத் தாங்கி ஆதரித்தார்கள்; இரண்டாவதாக ஒரே ஒரு பிரிக்கவொண்ணுத ஜெர்மன் குடியரசினை நிறுவ வேண்டுவதன் அவசியத்தைப் பிரகடனம் செய்த அம்சம், அதேபொழுது ஜனநாயகவாதிகள் மத்தியில் இருந்த மிகவும் அதிதீவிரக் கடுவெறியர் ஒரு கூட்டாட்சிக் குடியரசை விரும்ப மட்டுமே துணிந்தார்கள்; மூன்ருவதாக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புரட்சிகரத் துணிகரத்தையும் செயலுக்கான ஆயத்தத்தையும் வெளிப்படுத்தும் அம்சம், இந்த விஷயத்தில் குட்டி முதலாளிகளையே பிரதானமாகக் கொண்டதும் அவர்களால் தலைமை தாங்கப்படுவதுமான எந்த ஒரு கட்சியும் எப்போதும் குறைபாடு உள்ளதாகவே இருக்கும்.

புரட்சியின் துவக்கத்தில் ஜனநாயகவாதிகளின் வாலாக அமைந்திருந்த தொழிலாளர்கள் திரளினரை அவர்களது செல்வாக்கின் கீழ் இருந்து மீட்டுப் பெறுவதில் பாட்டாளி அல்லது மெய்யான புரட்சிகரக் கட்சி மிகவும் படிப்படியாக மட்டுமே வெற்றியடைந்தது. ஆனுல் உரிய காலத்தில் ஜனநாயகவாதத் தலைவர்களின் உறுதியின்மை, பலவீனம் மற்றும் கோழைத்தனம் மீதிக் காரியங்களைச் செய்துவிட்டன. கணிசமான மக்கள் திரளினர் என்ற வடிவில் எங்கெல்

லாம் தொழிலாளி வர்க்கம் ஒன்றுகுவிந்து நிற்கிறதோ, அங்கெல்லாம் 1848 மற்றும் 1849ல் எல்லையற்ற பல தவறுகள் மற்றும் வாய்ப்புக்கேடுகளுக்கு இட்டுச் சென்ற ஜனநாயகவாதிகளின் செல்வாக்கில் இருந்து முழுமையாக விடுபட்டு இருக்க வகை செய்தது சென்ற ஆண்டு அமளிகளின் முக்கியமான விளைவுகளில் ஒன்று என்பதாக இப்போது கூற முடியும். ஆனால் நாம் இதை முன்கூட்டியே எதிர்பார்க்காமல் இருப்பது நல்லது. இந்த இரண்டு ஆண்டுக்கால நிகழ்ச்சிகள் இந்த ஜனநாயக கனவான்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதைக் காட்டும் ஏராளமான வாய்ப்புக்களை நமக்கு வழங்கும்.

ஆஸ்திரியாவில் இருப்பது போல அதே வகையில் ஆனால் சற்றுக் குறைவான ஊக்கத்துடன் இருக்கும் பிரஷ்யாவின் விவசாயிகள்—ஒட்டுமொத்தமாக நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறை இங்கு அவர்கள் மீது அவ்வளவு கடுமையாக இருக்கவில்லை—எல்லா நிலப்பிரபுத்துவத் தளைகளில் இருந்தும் தம்மை உடனடியாக விடுவித்துக் கொள்வதில் புரட்சி மூலம் பயனடைந்திருக்கிறார்கள். ஆனால் இங்கே மேலே கூறப்பட்ட காரணங்களால், முதலாளி வர்க்கம் தனது ஆகப் பழைமையான, தனது மிகவும் இன்றியமையாத நேச சக்தியான விவசாயிகளுக்கு எதிராக உடனடியாகத் திரும்பியுள்ளது; ஜனநாயகவாதிகளும் தனியார் சொத்துடைமை மீதான தாக்குதல் எனப்படுவதன் மூலம் முதலாளி வர்க்கத்தினரைப் போல இதே அளவுக்கு அச்சுறுத்தப்பட்டு அதே அளவுக்கு அவர்களுக்கு ஆதரவளிக்கத் தவறினர். இவ்வாறாக, மூன்று மாதகால விடுதலைக்குப் பிறகு, குறிப்பாக சைலீஷியாவில் கடுமையான போராட்டங்கள் மற்றும் ராணுவ சிரச்சேதங்களுக்குப் பிறகு, நேற்றுவரை நிலப்பிரபுத்துவ விரோதிகளாக இருந்த முதலாளி வர்க்கத்தினரின் கரங்களால் நிலப்பிரபுத்துவம் மீட்டமைக்கப்பட்டது. அவர்களுக்கு எதிராக இதைவிடவும் அதிகப் பழி கூறத்தக்க மெய்நடப்பு இல்லை எனலாம். அதன் சிறந்த நேச சக்திகளுக்கு எதிராக, அதற்கே எதிராக இது போன்ற ஒரு துரோகத்தை வரலாற்றில் எந்த ஒரு கட்சியும் என்றுமே புரிந்தது கிடையாது.

இந்த முதலாளி வர்க்கக் கட்சிக்கு வரவிருக்கும் அவமானமும் தண்டனையும் என்னவாக இருந்தபோதிலும், இந்த ஒரு செயல் மூலம் மட்டுமே அது இவை அனைத்தையும் பெறத் தக்கது என்பது திண்ணம்.

லண்டன், 1851 அக்டோபர்

## 7

## பிராங்க்பர்ட் தேசிய சட்டமன்றம்

முந்திய ஆறு பகுதிகளில் நாம் ஜெர்மனியின் புரட்சி இயக்கத்தை மார்ச் 13ல் வியன்னாவிலும் மார்ச் 18ல் பெர்லினிலும் அடைந்த இரு மாபெரும் மக்கள் வெற்றிகள் வரையில் விவரித்தோம் என்பது வாசகர்களுக்கு ஒரு வேளை ஞாபகமிருக்கும். ஆஸ்திரியாவிலும் பிரஷ்யாவிலும் ஒருங்கே அரசியலமைப்புச் சட்ட பாணி அரசாங்கங்கள் நிறுவப்பட்டதையும், எதிர்காலக் கொள்கை அனைத்திற்குமான முன்மாதிரி விதிகள் என்ற முறையில் மிதவாத அல்லது முதலாளி வர்க்கக் கோட்பாடுகள் பிரகடனம் செய்யப்பட்டதையும் நாம் கண்டோம். இந்த இரண்டு பெரும் மையங்களுக்கும் இடையில் கவனித்தறியக் கூடிய ஒரே வேறுபாடு, பிரஷ்யாவில் மிதவாத முதலாளி வர்க்கம் இரண்டு செல்வந்த வாணிகர்களான காம்ப்ஹாவுசன் மற்றும் ஹான்செமன் வகையறு ஆட்கள் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. அதே போதில் முதலாளி வர்க்கம் மிகவும் குறைந்தளவு அரசியல் அறிவு பெற்றிருந்த ஆஸ்திரியாவில், மிதவாத அதிகாரவர்க்கத்தினர் பதவிகளை எடுத்துக் கொண்டு அவர்களுக்குப் பொறுப்பாக ஆட்சி அதிகாரத்தை மேற்கொண்டதாகப் பகிரங்கமாக அறிவித்தனர். பழைய அரசாங்கத்தை எதிர்ப்பதில் இதுவரை சேர்ந்து ஒன்றிணைந்து நின்றதான சமுதாயத்தின் கட்சிகளும் சமூக வர்க்கங்களும் வெற்றிக்குப் பிறகு, போராட்டத்தின் தருணத்திலே கூட எவ்வாறு தமக்குள் பிளவுற்றன என்பதையும், வெற்றியில்

இருந்து தான் மட்டுமே பயனடைந்ததான அதே மிதவாத முதலாளி வர்க்கம் எவ்வாறு தனது நேற்றைய நேச சக்தி களுக்கு எதிராக உடனடியாகத் திரும்பி, மேலும் முன் னேற்றத் தன்மை கொண்ட எல்லா வர்க்கங்களேயும் கட்சி களேயும் எதிர்த்து ஒரு பகைமையான தோரணையை மேற் கொண்டு, வென்று அடிப்படுத்திய நிலப்பிரபுத்துவ மற்றும் அதிகாரவர்க்கச் சக்திகளுடன் ஒரு கூட்டணியை ஏற் படுத்திக் கொண்டது என்பதையும் கூட நாம் பார்த்தோம். தோற்கடிக்கப்பட்ட ஆனல் அழிக்கப்படாத நிலப்பிரபுத்துவ, அதிகாரவர்க்கக் கட்சிகளே எதிர்த்து ஜன ஆதரவு பெற்ற மேலும் முன்னேற்றமான கட்சிகளின் உதவியைச் சார்ந்து நிற்பது மூலம் அன்றி மிதவாத முதலாளி வர்க்கத்தால் உறுதியாக நிற்க முடியாது என்பதையும், இந்த மேலும் முன் னேறிய மக்கள் திரளின் பெருவெள்ளத்தை எதிர்க்க இதே அளவுக்கு நிலப்பிரபுத்துவ உயர்குடியினர் மற்றும் அதிகார வர்க்கத்தின் உதவி அதற்குத் தேவைப்படும் என்பதையும் இந்தப் புரட்சிகர நிகழ்ச்சியின் துவக்கம் முதலே உண்மையில் தெளிவுறக் கண்டோம். இவ்வாருக, ஆஸ்திரியாவிலும் பிரஷ்யா விலும் இருந்த முதலாளி வர்க்கம் தமது ஆட்சி அதி காரத்தைக் கட்டிக் காக்கவும், தமது சொந்தத் தேவைகள் மற்றும் குறிக்கோள்களுக்கு ஏற்ப நாட்டின் நிறுவனங்களேத் தகவமைத்துக் கொள்ளவும் தேவைப்படும் பலத்தைப் பெற் றிருக்கவில்லே என்பது போதுமான அளவு துலாம்பரமாகிறது. மிதவாத முதலாளி அமைச்சரவை ஓர் இடைப்பட்ட தங்குமிடம் மட்டுமே. இதிலிருந்து சந்தர்ப்ப சூழல்களில் ஏற்படும் திருப்பத்திற்கு ஏற்ப நாடு ஒன்று, மேலும் முன் னேறிய கட்டமான ஒருமைப்பட்ட குடியரசாட்சியை நோக்கிச் செல்ல வேண்டும், அல்லது பழைய சமயத் தலேமை-நிலப்பிரபுத்துவ மற்றும் அதிகாரவர்க்க ஆட்சி முறைக்குச் சறுக்கிப் பின்செல்ல வேண்டும். எப்படியும் மெய்யான தீர்மானகரமான போராட்டம் இனிமேல் தான் வரவிருக்கிறது; மார்ச் நிகழ்ச்சிகள் போராட்டத்தில் ஈடு படும்படி மட்டுமே செய்துள்ளன.

ஆஸ்திரியாவும் பிரஷ்யாவும் ஜெர்மனியின் இரண்டு தலே

மையான அரசுகளாக இருப்பதால், வியன்னு அல்லது பெர்லினில் ஏற்படும் தீர்மானகரமான ஒவ்வொரு வெற்றியும் ஜெர்மனி முழுவதற்கும் நிர்ணயகரமானதாக இருந்திருக்கும். நடைமுறையிலும் இந்த இரண்டு நகரங்களிலும் 1848 மார்ச்சில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் ஜெர்மன் விவகாரங்களின் திருப்பத்தை நிர்ணயம் செய்தன. இதன் பின் சிறிய அரசுகளில் நடைபெற்ற இயக்கங்களைப் பற்றித் திரும்பவும் குறிப்பிடுவது மிகையாகும். இந்தச் சிறிய அரசுகளின் இருத்தல் ஓர் அமைப்பைத் தோற்றுவித்து, அந்த அமைப்பின் இருப்பே ஜெர்மனியின் அசாதாரணமான நிலைமைக்கும் நடந்து முடிந்த புரட்சியின் முழுமையின்மைக்கும் மிகவும் முனைப்பான நிருபணமாக ஆகாமல் இருந்திருக்கும் பட்சத்தில், ஆஸ்திரிய மற்றும் பிரஷ்ய விவகாரங்களை மட்டுமே தனி முழுமையாக ஆராய்வதோடு நாம் அமைந்துவிடக் கூடும். இந்த அமைப்பு அதன் அந்தஸ்திலேயே மிகவும் அசாதாரணமானதாயும் மிகவும் கேலிக்கிடமானதாகவும் இருப்பதோடு கூடவே அதன் சொந்த முக்கியத்துவம் நிரம்பியதாகவும் விளங்கும் காரணத்தால், அதற்கு ஒரு பதக்கத்தை வழங்கும் வாய்ப்பு வரலாற்றுக்குப் பெரும்பாலும் என்றுமே கிட்டாது. இந்த அமைப்பு மாயன் கரையிலுள்ள பிராங்க்பர்ட்டில் இருக்கும் **ஜெர்மன் தேசியச் சட்டமன்றம்** எனப்படுவதாகும்.

வியன்னுவிலும் பெர்லினிலும் கிட்டிய மக்களுக்குச் சாதகமான வெற்றிகளுக்குப் பிறகு, ஜெர்மனி முழுவதற்கும் ஒரு பிரதிநிதித்துவச் சட்டமன்றம் இருக்க வேண்டும் என்பது இயல்பான நடைமுறையே. இந்த அமைப்பு இதன் விளைவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிராங்க்பர்ட்டில் பழைய கூட்டாட்சி நாடாளுமன்றம் அருகில் கூடியது. ஜெர்மன் தேசியச் சட்டமன்றம் சர்ச்சைக்குரிய எல்லா விவகாரங்களுக்கும் தீர்வு காண வேண்டும், ஜெர்மன் கூட்டமைவு முழுவதையும் ஆக உயர்ந்த சட்டமியற்றும் அதிகார அமைப்பாகச் செயல்பட வேண்டும் எனவும் மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனுல் அதே சமயம் இதைக் கூட்டிய நாடாளுமன்றம் இதன் பொறுப்பு அதிகாரத்தை எவ்வகையிலும் வரையறுக்கவில்லை. இதன் ஆணைகளுக்குச் சட்டத்தின் வன்மை இருக்

குமா அல்லது அவை நாடாளுமன்றம் அல்லது தனிப்பட்ட அரசாங்கங்களின் அனுமதிக்குக் கீழ்ப்பட்டதாக இருக்குமா என்பது பற்றி யாருக்கும் தெரியாது. இந்த சிக்கலான நிலையில் இந்தச் சட்டமன்றம் குறைந்தளவு ஊக்கத்தை உடையதாக இருந்திருப்பின், அது நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்து வெளியேற்றி—இந்த நாடாளுமன்றத்தை விட பொதுஜன வெறுப்புக்கு ஆளான வேறு கூட்டு நிறுவனம் ஜெர்மனியில் இல்லை—மற்றும் அதனிடத்தில் தன் சொந்த உறுப்பினர்கள் மத்தியில் இருந்து தேர்வு செய்யப்பட்ட ஒரு கூட்டு அரசாங்கத்தை நிறுவியிருக்க வேண்டும். ஜெர்மன் மக்களின் சர்வவுரிமை கொண்ட சித்தத்தின் ஒரே சட்ட சம்மத உருவகமாகத் தன்னைத் தானே பிரகடனப் படுத்திக் கொண்டு, இவ்வாறு தனது ஆணைகள் ஒவ்வொன்றுக்கும் சட்டப்படியான அதிகார உரிமையை முறைப்படி இணைத்திருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேல் அரசாங்கங்களின் தரப்பிலிருந்து வரும் எந்த ஓர் எதிர்ப்பையும் அடக்குவதற்குப் போதுமான, ஒழுங்கமைக்கப்பட்ட ஆயுதப்படையினை நாட்டில் தனக்கெனப் பெற்றிருக்க வேண்டும். புரட்சியின் அந்த ஆரம்ப கட்டத்தில் இவை யாவும் எளிதானதாக, மிகவும் எளிதானதாக இருந்தன. ஆனால் இது, தன்னுள் மிதவாதச் சட்ட வழக்குரைஞர்களையும் வறட்டுச் சூத்திரவாதப் பேராசிரியர்களையும் பெரும்பான்மையாய்க் கொண்டிருந்ததான இந்த சட்டமன்றத்திடம் இருந்து அளவுக்கு மீறி எதிர்பார்ப்பதாகும். இந்தச் சட்டமன்றம் ஜெர்மன் அறிவுத்துறை மற்றும் விஞ்ஞானத்தின் அசல் சாரத்தை உருவகப்படுத்துவதாகப் பாவனை செய்த அதேபோதில் அது உண்மையில் பழைய நைந்து போன அரசியல் நபர்கள் தமது தன்னியல்பான கேலிக்கூத்தான போக்கையும் சிந்தனை மற்றும் செயலிலான கையாலாகாத் தனத்தையும் ஜெர்மனி முழுவதன் பார்வைக்கும் கண்காட்சியாக்கும் ஓர் அரங்கமாகவே இருந்தது, வேறெதுவுமல்ல. கிழடுதட்டிய இந்தக் கூட்டம் அது தோன்றிய ஆரம்ப நாள் முதலே ஒன்று திரட்டப்பட்ட ஜெர்மன் அரசாங்கங்களின் பிற்போக்குச்

சதிகள் அனைத்தையும் விடவும், ஆகச் சொற்பமான மக்கள் இயக்கத்தைக் கண்டு அதிகமாக பீதியுற்றிருந்தது. இது நாடாளுமன்றத்தின் கவனத்தின் கீழ் செயல்படலாயிற்று, இல்லை, அதன் அரசாணைக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி பெறுவதற்காகக் கிட்டத்தட்டக் கெஞ்சியது. ஏனெனில் இதன் முதல் தீர்மானங்களை அந்த வெறுப்புக்குரிய அமைப்பே பிரகடனம் செய்ய வேண்டி இருந்தது. தனது சொந்த சர்வவுரிமையினை வலியுறுத்துவதற்குப் பதில் அது இத் தகைய அபாயகரமான பிரச்சினைகள் மீதான விவாதத்தை மனமாரத் தவிர்த்தது. மக்கள் சக்தியைத் தன்னைச் சுற்றி லும் திரட்டி வைத்திருப்பதற்கு மாறாக அது அரசாங்கங் களின் எல்லா வன்முறை அத்துமீறல்களைப் பார்த்தும் பாரா திருந்து அன்றாட விவகாரங்களை விவாதிக்கத் தொடங்கியது; அதன் நேரடி கவனத்தில் மாயன்ஸ் முற்றுகை நிலையில் வைக்கப்பட்டது, அங்கிருந்த மக்கள் நிராயுதராக்கப்பட் டார்கள், தேசிய சட்டமன்றம் அசையவே இல்லை. பின்னால் இது ஆஸ்திரியாவின் தலைமைக் கோமகன் யோஹானை ஜெர்மனியின் மாற்று ஆளுநராகத் தேர்ந்தெடுத்தது, அதன் தீர்மானங்கள் அனைத்துக்கும் சட்டத்தின் உரிமை வன்மை உண்டு என்று அறிவித்தது. ஆனால் எல்லா அரசாங்கங் களின் ஒப்புதலையும் பெற்றதன் பின்னர் மட்டுமே தலைமைக் கோமகன் இயோஹன் இந்தப் புதிய உயர் பதவியில் நிய மனம் செய்யப்பட்டார், அவர் சட்டமன்றத்தால் அல்ல, மாறாக நாடாளுமன்றத்தால் நியமனம் செய்யப்பட்டார். சட்டமன்ற ஆணைகளின் சட்ட உரிமை வன்மையைப் பொருத்தவரை அது பெரிய அரசாங்கங்களால் என்றுமே ஏற்றுக் கொள்ளப்படவில்லை, சட்டமன்றத்தால் வற்புறுத் தப்படவும் இல்லை. எனவே இது முடிவு செய்யப்படாத நிலையில் நீடித்தது. இவ்வாறாக, ஒரு மாபெரும் சர்வ வுரிமையுள்ள தேசத்தின் சட்டபூர்வமான ஏகப் பிரதி நிதியாகப் பாவனை செய்து கொண்டு இருப்பினும், தனது உரிமைகளை அங்கீகரிக்கச் செய்வதற்குரிய சித்தமோ சக் தியோ என்றுமே கொண்டிராத ஒரு சட்டமன்றத்தின் விசித் திரக் காட்சியைக் கண்டோம். நடைமுறைப் பயன் எதுவு

மில்லாத இந்த அமைப்பின் விவாதங்களுக்கு எவ்வித மான தத்துவார்த்த மதிப்பும் கூட இருக்கவில்லை. இவ் விவாதங்கள் கிழடு தட்டிப் போன தத்துவ இயல் சட்டவியல் போக்குகளின் மிகவும் பழகிச் சலித்துப்போன சாதாரணக் கருத்துக்களையே மீண்டும் உருவாக்கியதைத் தவிர வேறு எதையும் சாதிக்கவில்லை. அந்தச் சட்ட மன்றத்தில் கூறப் பட்ட அல்லது உண்மையில் திக்கிப் பேசப்பட்ட ஒவ்வொரு வாக்கியமும் நெடுங்கால முன்பே ஆயிரந்தடவைக்கு மேல், ஆயிரம் மடங்கு மேலும் சிறப்பாக அச்சடித்து வெளியிடப் பட்டுள்ளதாகும்.

இவ்வாறாக, ஜெர்மனியில் புதிய மத்திய அதிகாரமாக இருக்க உரிமை கொண்டாடிய அமைப்பு, எல்லாவற்றை யும் கண்டது கண்டபடியே விட்டு வைத்திருந்தது. எனவே, நீண்ட காலக் கோரிக்கையான ஜெர்மன் ஒற்றுமையை நிறைவு செய்யவில்லை என்பது மட்டுமின்றி, ஜெர்மனியில் ஆண்டு வந்த மிகவும் அற்ப சொற்பமான மன்னர்களையும் அது வெளியேற்றவில்லை. ஜெர்மனியின் பிரிந்திருந்த மாகா ணங்களின் இடையே ஒற்றுமைப் பிணைப்புக்களை அது உறுதிப்படுத்த முயலவில்லை. பிரஷ்யாவிடமிருந்து ஹனே வரையும், ஆஸ்திரியாவிடமிருந்து பிரஷ்யாவையும் பிரித்து வைத்த சுங்கத் தடை வேலிகளைத் தகர்க்க தனியொரு நடவடிக்கை கூட எடுக்க முயலவில்லை. பிரஷ்யாவில் எல்லா இடங்களிலும் ஆற்றுவழி கப்பல் போக்குவரத்துக்கு முட்டுக்கட்டை போடும் வெறுக்கத்தக்க வரிகளை அகற்று வதற்கென எள்ளளவும் முயலவில்லை. இந்தச் சட்டமன்றம் செய்தது சொற்பமே ஆனால் அதன் வெற்றுரவாரம் மிகப் பெரிது. அது காகிதத்தளவில் ஜெர்மன் கப்பற்படையை உருவாக்கியது; அது போலந்தையும் ஷ்லெஸ்விகையும் கைப்பற்றிச் சேர்த்துக் கொண்டது; ஜெர்மன் ஆஸ்திரியா இத்தாலிக்கு எதிராகப் போர் நடத்த அனுமதித்தது, இருப் பினும் இத்தாலியர்கள் ஆஸ்திரியர்களைப் பின்தொடர்ந்து ஜெர்மனியின் நிலப்பரப்புக்கு—இந்த பத்திரமான பாது காப்பிடத்துக்குச் செல்வதைத் தடைசெய்தது. பிரெஞ்சுக் குடியரசுக்கு மும்முறை வாழ்த்துடன் மேலும் ஒரு முறை

வாழ்த்துக் கூறியது, ஹங்கேரிய தூதரகங்களை வரவேற்றது. இவை தாம் வந்த போது இருந்ததை விடவும் ஜெர்மனி பற்றிய மிகவும் குழப்பமான கருத்துக்களுடன் தாயகம் திரும்பின என்பது திண்ணம்.

புரட்சியின் துவக்கத்தில் இந்தச் சட்டமன்றம் ஜெர்மன் அரசாங்கங்கள் அனைத்துக்கும் பூச்சாண்டியாக இருந்தது. அது தனது சட்ட உரிமையை வரையறுப்பு இன்றி விட்டு விடுவது அவசியம் என்று கண்ட காரணத்தால்—அவை அதனிடம் இருந்து மிகவும் சர்வாதிகாரமான, புரட்சிகரமான செயலை எதிர்பார்த்தன. எனவே தாம் கண்டு அஞ்சும் இந்த அமைப்பின் செல்வாக்கை பலவீனப்படுத்தும் பொருட்டு இந்த அரசாங்கங்கள் மிகவும் அகல் விரிவான முறையிலான சூழ்ச்சித் திட்டங்களை வகுத்தன. ஆனால் அவற்றுக்கு விவேகத்தை விடவும் அதிகமாக அதிருஷ்டம் இருப்பது நிரூபணமாயிற்று, காரணம் இந்த சட்டமன்றம் இந்த அரசாங்கங்கள் தாமே செய்திருக்கக் கூடியதைக் காட்டிலும் சிறந்த முறையில் அவற்றின் வேலையைச் செய்தது. இந்தச் சூழ்ச்சித் திட்டங்களின் இடையிலான பிரதான அம்சம் ஸ்தல சட்டமன்றங்களைக் கூட்டுவதாகும். இதன் பின்விளைவாக சிறிய அரசுகள் தமது சட்டமன்றங்களைக் கூட்டின என்பது மட்டுமல்ல, பிரஷ்யாவும் ஆஸ்திரியாவுங்கூட அரசியல் நிர்ணய சபைகளைக் கூட்டின. இவற்றில், பிராங்க்பர்ட் பிரதிநிதிகள் சபையைப் போலவே, மிதவாத முதலாளி வர்க்கம் அல்லது அதன் நேச சக்திகளான மிதவாத வழக்குரைஞர் மற்றும் அதிகாரவர்க்கத்தினர் பெரும்பான்மை பெற்றிருந்தார்கள். இவை ஒவ்வொன்றிலும் விவகாரங்கள் மேற்கொண்ட திருப்பம் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்தது. இதில் காணப்பட்ட ஒரே வேறுபாடு இதுதான், அதாவது ஜெர்மன் தேசிய சட்டமன்றம் என்பது ஒரு கற்பனையான நாட்டின் நாடாளுமன்றமாக இருந்தது; ஏனென்றால் அது தனது இருத்தல் குறித்த தனது சொந்தமான முதல் நிபந்தனை என்ற முறையில் ஐக்கிய ஜெர்மனியை உருவாக்கும் கடமையைக் கைவிட்டு விட்டது. தனது சொந்த சிருஷ்டியான ஒரு கற்பனை அரசாங்

கத்தின் கற்பனேயான, என்றும் அமுலாக்கக் கூடியதல்லாத நடவடிக்கைகளே விவாதித்தது, அவை குறித்து எவருமே அக்கறைப்படாத கற்பனேத் தீர்மானங்களே அது நிறை வேற்றியது. அதே போதில் ஆஸ்திரியாவிலும் பிரஷ்யா விலும் அரசியல் நிர்ணய சபைகள் எப்படியாயினும் மெய் யான நாடாளுமன்றங்களாக இருந்தன; மெய்யான அமைச்சு களே அவை கவிழ்த்தன, உருவாக்கின; சில காலத்துக்கா வது அவை மலேந்து போராட வேண்டி இருந்த மன்னர்கள் மீது தமது தீர்மானங்களே பலவந்தமாகத் திணித்தன. அவையுங்கூட கோழைத்தனமானவையாகவும், புரட்சிகர நடவடிக்கைகள் பற்றிய விரிவான கருத்துக்கள் இல்லாதன வாயும் இருந்தன. அவையுங்கூட மக்களுக்கு துரோகம் செய்து நிலப்பிரபுத்துவ, அதிகாரவர்க்க மற்றும் ராணுவக் கொடுங்கோன்மையின் கரங்களில் ஆட்சி அதிகாரத்தை மீட் டளித்தன. ஆயினும் அவை உடனடி அக்கறைக்குரியதான நடைமுறைப் பிரச்சினேகளே விவாதிக்கவும் பூமியில் இதர மக்களுடன் வாழ்வதற்கும் குறைந்த பட்சம் கட்டாயமாக ஆளாகியிருந்தன. அதே போதில் பிராங்க்பர்ட் எத்தர்கள் ''கனவின் கற்பனே உலகங்களில்'', ''im Luftreich des Traums''* சுற்றித்திரிய முடியும் பொழுது அவ்வளவு மகிழ்ச்சி யுடன் என்றுமே இருந்ததில்லே எனலாம். இவ்வாருக, பெர்லின் மற்றும் வியன்ஞ அரசியல் நிர்ணய சபைகளின் விவாதங்கள் ஜெர்மனியின் புரட்சிகர வரலாற்றில் ஒரு முக்கியமான பகுதியாக அமைந்தன. அதே போதில் பிராங்க் பர்ட் கூட்டு முட்டாள்தனத்தின் சிந்தனேகள் இலக்கிய, தொன்மைக்கால அதிசயப் பொருட்களேச் சேர்த்துவரும் நபருக்கு மட்டுமே அக்கறையூட்டுவதாக இருந்தன.

நாட்டின் கூட்டு வலிமையை சிதறடித்து அழித்தொ ழித்து வந்த வெறுக்கத்தக்க பிரதேசப் பிரிவினேயை ஒழித்துக் கட்ட வேண்டுவதன் அவசியத்தை ஜெர்மன் மக்கள் மிகவும் ஆழமாக உணர்ந்திருந்தார்கள். அவர்கள் பிராங்க்

* Heine, *Deutschland, ein Wintermärchen* (''ஜெர்மனி, ஒரு பனிக்காலக் கதை''), அத்தியாயம் 7.—ப-ர்.

பர்ட் தேசிய சட்டமன்றத்தில் குறைந்த பட்சம் ஒரு புதிய சகாப்தத்தின் துவக்கத்தையாவது காணலாம் என்று சிறிது காலம் எதிர்பார்த்தார்கள். ஆனால் அந்தப் போலி மேதைகளின் சிறுபிள்ளைத்தனமான நடத்தை தேசிய உற்சாகம் குறித்த பிரமைகளை விரைவில் அகற்றிவிட்டது. மால்மே போர் நிறுத்தத்தின் விளைவாய் (1848 செப்டம்பர்)[32] ஏற்பட்டதான மானக்கேடான நடவடிக்கைகள் அந்த அமைப்புக்கு எதிராகப் பொது மக்களின் கோபாவேசம் பொங்கி எழும்படி செய்தன. இந்த அமைப்பு தேசத்திற்குச் செயல் புரிவதற்கான ஒரு நியாயமான களத்தினை வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது மாறாக இணைவரையற்ற கோழைத்தனத்தால் வசமிழந்து போய், இன்றைய எதிர்ப் புரட்சி அமைப்பு எந்த அடித்தளங்கள் மீது கட்டப்பட்டிருக்கிறதோ அவற்றை முன்னாள் உறுதி நிலைக்கு மீட்டமைக்க மட்டுமே செய்தது.

லண்டன், 1852 ஜனவரி

## 8

## போலிஷ் மக்கள், செக் மக்கள் மற்றும் ஜெர்மானியர்

1848 மார்ச் புரட்சியைத் தொடர்ந்து ஒரு புதிய புரட்சி ஏற்படாத பட்சம், ஜெர்மனி இந்த நிகழ்வுக்கு முன்னர் இருந்த நிலைக்கே தவிர்க்க முடியாத வகையில் திரும்பிவிடும் என்பது, முந்திய அத்தியாயங்களில் கூறப்பட்டவற்றில் இருந்து ஏற்கெனவே தெளிவாகிவிட்டது. ஆனால் நாம் விளக்குவதற்கு முயலும் இந்த வரலாற்று ஆய்வுப் பொருளின் தன்மை இத்தகைய சிக்கலானதாக இருப்பதன் காரணமாக, ஜெர்மன் புரட்சியின் வெளிநாட்டு உறவுகள் எனப்படுவதை கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல், பிந்திய நிகழ்ச்சிகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாது. இந்த வெளிநாட்டு உறவுகள் உள்நாட்டு விவகாரங்களைப் போலவே அதே சிக்கலான தன்மையனவாக இருந்தன.

எல்பே, ஸாலே மற்றும் போஹீமிய காடுகள்* வரையிலான ஜெர்மனியின் கீழ்த்திசைப் பாதி முழுவதும் ஸ்லாவேனிக் படையெடுப்பாளர்களிடமிருந்து கடந்த ஆயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து மறுபடியும் வென்று கைப்பற்றப் பட்டது என்பது நன்கறிந்த விஷயம். கடந்த பல நூற்ருண்டுகளாக, இந்தப் பிரதேசங்களின் மிகப் பெரும் பகுதியில் எல்லா ஸ்லாவேனிய தேசிய இனமும் மொழியும் முற்ருக அழித்தொழிக்கப்பட்டு, இந்தப் பகுதி ஜெர்மன் மயமாக்கப்பட்டு விட்டது. மொத்தத்தில் ஒரு லட்சம் பேருக்கும் குறைவான (போமரேனியாவிலுள்ள கஷூபியர்கள் லுசாட்டியாவிலுள்ள வெண்டுகள் அல்லது சொர்பியர்) அளவிலான அறவே தனிமைப்பட்டுக் கிடக்கும் மீதமிச்சங்கள் தவிர்த்த இப்பகுதிகளில் வாழ்வோர் அனைவரும் பெரிதும் ஜெர்மானியர்களே. ஆனுல் பழமையான போலந்தின் எல்லை முழுவதிலும், செக் மொழி பேசப்படும் பிரதேசங்களான போஹீமியாவிலும் மோராவியாவிலும் நிலைமை வேருகும். இங்கு இரு தேசிய இனங்களும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கலந்து வாழ்கின்றன. நகரங்களில் பெரும்பாலும் ஜெர்மானியரே வாழ்கின்றனர். அதே போதில் நாட்டுப்புற கிராமங்களில் ஸ்லாவேனிய மக்கள் மேலோங்கி உள்ளனர். இருப்பினும் அங்கு ஜெர்மன் செல்வாக்கின் உறுதியான முன்னேற்றத்தால் இம்மக்களும்கூட படிப்படியாகச் சிதைவுற்றுப் பின்வாங்கிச் செல்லும்படி நிர்ப்பந்திக்கப் படுகிருர்கள்.

இத்தகைய நிலைமைகளுக்கான காரணம் இதுவே. ஷார்லிமன் காலம் முதற்கொண்டே ஜெர்மானியர் ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியை வென்று கைப்பற்றவும் காலனியாக்கவும் அல்லது குறைந்தபட்சம் நாகரிகப்படுத்தவுமான தமது மிகவும் இடைவிடாத, உறுதிப்பாடான முயற்சிகளை நெறியாண்மை செய்து வந்திருக்கிருர்கள். எல்பே நதிக்கும் ஓடர் நதிக்கும் இடையிலான பகுதியை நிலப்பிரபுத்துவ மேற்குடியினர் படையெடுத்துக் கைப்பற்றியதும்,

* செக் காடுகள்.—ப-ர்.

பிரஷ்யாவிலும் லிவோனியாவிலும் நிறுவப்பட்ட அறப்போர் வீரர்களின் ராணுவப் பிரிவுகளின் நிலப்பிரபுத்துவக் காலனிகளும், ஜெர்மனியில், மேற்கு ஐரோப்பாவின் இதர பகுதிகளில் போலவே பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் சமூக, அரசியல் முக்கியத்துவம் பெற்று எழுச்சியுற்றதான வாணிக மற்றும் தொழில்துறை முதலாளி வர்க்கத்தின் உதவியுடன் மிகவும் விரிவானதும் திறமானதுமான வழிகளில் இப்பகுதியை ஜெர்மன் மயமாக்குவதற்கான அடித்தளத்தை மட்டுமே நிறுவின. ஸ்லாவேனியர், குறிப்பாயும் மேலை ஸ்லாவேனியர் (போலிஷ் மக்களும் செக் மக்களும்) முக்கியமாக ஒரு விவசாய இனத்தவராவர். வாணிகமோ தொழிலோ அவர்களிடை என்றுமே பெருமளவு ஆதரவு பெற்றிருக்கவில்லை. இதன் பின்விளைவாக இந்தப் பிராந்தியங்களில் மக்கள் தொகை பெருகி நகரங்கள் தோன்றியதோடு, செய்பொருட்கள் அனைத்தின் உற்பத்தியும் ஜெர்மன் குடியேறிகளின் கரங்களில் சிக்கியிருந்தது. இந்தப் பண்டங்களை விவசாயப் பொருட்களுக்குப் பரிவர்த்தனை செய்து கொள்வது யூதர்களின் முற்ற முழு ஏகபோகமாக மாறியது. அவர்கள் ஏதேனும் ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படும் பட்சத்தில்,இந்த நாடுகளில் அவர்கள் ஸ்லாவேனியர் என்பதை விடவும் நிச்சயமாகப் பெருமளவு ஜெர்மானியராகவே இருந்தார்கள். இதுவே, சற்றுக் குறைந்த அளவில் என்ற போதிலும், ஐரோப்பாவின் கீழைப் பகுதி அனைத்திலும் இருந்த நிலைமையாகும். இன்றுவரை, பீட்டர்ஸ்பர்க், பெஷ்ட், யாசி மற்றும் கான்ஸ்டான்டிநேப்பிளில் கூட இருக்கும் கைவினைஞர், சிறிய கடைக்காரர், சிறுதரப் பட்டறை முதலாளி ஆகியோர் ஜெர்மானியரே. அதேபோதில் பண லேவாதேவி செய்பவர், மது விற்பவர், அங்காடிக்காரர்—குறைந்த மக்கள் தொகை கொண்ட இந்த நாடுகளில் இருக்கும் மிகவும் முக்கியமான நபர்—மிகப் பெரும்பாலும் ஒரு யூதராகவே இருப்பார். இவரது சொந்த மொழி கோரமாகத் தூய்மை கெடுக்கப்பட்ட ஜெர்மன் மொழியாகும். ஸ்லாவேனிய எல்லைப்புற வட்டாரங்களில் நகரங்கள், வாணிகம் மற்றும்

தொழில்களின் பெருக்கத்துடன் கூடவே எழுச்சியுற்று வந்த ஜெர்மன் நபர்களின் முக்கியத்துவம், ஜெர்மனியில் இருந்தே சிந்தனைப் பண்பாட்டுக்கான கிட்டத்தட்ட எல்லாவற்றையும் இறக்குமதி செய்ய வேண்டுவது அவசியம் என்று காணப் பட்ட சமயம், மேலும் அதிகரித்தது. ஜெர்மன் வியாபாரி மற்றும் கைவினைஞருக்குப் பின்னர் ஜெர்மன் சமயகுரு, ஜெர்மன் பள்ளிக்கூட ஆசிரியர், ஜெர்மன் அறிஞர் ஸ்லாவேனிய மண்ணில் தம்மை நிலைநாட்டிக் கொண்டார்கள். கடைசியாக, படையெடுத்துப் பிடிக்கும் சேனைகளின் இரும்பு நடை அல்லது எச்சரிக்கையுடன் நன்கு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட அரசுறவுத் தந்திரத்தின் பிடிப்பு, சமுதாய வளர்ச்சியின் செல்வாக்கின் கீழான தேசியத் தனிப் பண்பு நீக்கத்தின் மெதுவான ஆனால் நிச்சயமான முன்னேற்றத்தைப் பின்தொடர்ந்தது மட்டுமின்றி, அதைவிடவும் பல மடங்கு வேகமாக முன்னேறவும் செய்தது. இவ்வாறு மேற்கு பிரஷ்யா மற்றும் போஸ்னனின் மிகப் பெரும் பகுதிகள் போலந்தின் முதல் துண்டாடலுக்குப் பின் ஜெர்மன் மயமாக்கப்பட்டிருந்தன. ஜெர்மன் காலனிகளில் குடியேறியவர்களுக்கு அரசு நிலங்களை விற்பனை செய்தும் மானியமாக வழங்கியும், இந்த அண்டை அயல் பகுதிகளில் தொழிற்சாலைகளை நிறுவ ஜெர்மன் முதலாளிகளுக்கு ஊக்கம் அளித்ததன் வாயிலாகவும், நாட்டில் இருந்த போலிஷ் மக்களுக்கு எதிரான அடிக்கடியான மிகவும் கடுமையான எதேச்சாதிகார நடவடிக்கைகளின் மூலமும் இது நிகழ்ந்தது.

இந்த முறையில், கடந்த எழுபது ஆண்டுகள் ஜெர்மன் மற்றும் போலிஷ் தேசிய இனங்களுக்கு இடையிலான பிரிவினை எல்லையை முற்றாக மாற்றி விட்டன. 1848ஆம் ஆண்டுப் புரட்சி, ஒடுக்கப்பட்ட எல்லா தேசங்களும் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையையும் தமது விவகாரங்களைத் தாமே தீர்த்துக் கொள்ளும் உரிமையினையும் கோருவதை உடனடியாக முன்னணிக்குக் கொணர்ந்தது. எனவே 1772க்கு முன்பு இருந்த பழைய போலிஷ் குடியரசின் எல்லைகளுக்குள்[33] அடங்கிய தமது நாட்டை மீட்டுப் பெறும் கோரிக்கையை போலிஷ் மக்கள் முன்வைத்

தது முற்றிலும் இயல்பே. இந்த எல்லை போலிஷ் மற்றும் ஜெர்மன் தேசிய இனங்களின் எல்லை வரம்பு என்பதாக எடுத்துக் கொள்ளப்படுமானால் இந்தக் காலத்திலேயே கூட அது வழக்கற்றுப் போய்விட்டது என்பது மெய்யே. ஜெர்மன் மயமாக்குதலின் முன்னேற்றம் காரணமாக அது ஒவ்வொரு ஆண்டிலும் மேலதிகமாக வழக்கற்றுப் போய்க் கொண்டிருந்தது. ஆனால் ஜெர்மானியர் போலந்தை மீட்டமைப்பதில் அத்தகைய உற்சாகம் காட்டியிருந்தபடியால், அவர்களது அனுதாபத்தின் மெய்ப்பாட்டுக்கு முதல் சான்று என்ற முறையில், கொள்ளையிலான அவர்களது பங்கைக் கைவிடும்படி கேட்கப்படுவார்கள் என்பதை அவர்கள் நிச்சயம் எதிர்பார்த்திருக்க வேண்டும். மறுபுறம், பிரதானமாக ஜெர்மானியர் வாசம் செய்யும் நிலப்பரப்புகள் முழுவதும், முற்றிலும் ஜெர்மானியரைக் கொண்டதான பெரிய நகரங்களும், விவசாயப் பண்ணை அடிமை முறையினை அடித்தளமாக்கியதான நிலப்பிரபுத்துவ நிலைக்கும் அப்பால் முன்னேறிச் செல்வதற்கான தமது ஆற்றல்கள் குறித்த நிரூபணங்கள் எதையும் இதுவரையில் அறவே கொடுத்திராத ஒரு மக்களினத்திடம் வழங்கப்பட வேண்டுமா? இந்தப் பிரச்சினை மிகவும் சிக்கலானதாகவே இருந்தது. ருஷ்யாவுடன் ஒரு போரில் இறங்குவதே இதற்குரிய ஒரே சாத்தியமான தீர்வாகும். பொது விரோதிக்கு எதிராக முதலில் ஒரு பத்திரமான எல்லையை நிறுவிக் கொள்ள வேண்டும்; அப்போது பல்வேறு புரட்சிமயமாக்கப்பட்ட தேசங்களின் இடையிலான எல்லை வரம்புகள் இரண்டாந்தர விஷயங்களாகக் கருதப்படும். போலிஷ் மக்கள் கீழ்த்திசையில் விரிவான பிரதேசங்களைப் பெறுவது மூலம் மேற்றிசையில் இன்னும் அதிகப் பணிவுடையவர்களாகவும் நியாயமானவர்களாகவும் மாறியிருப்பார்கள். அவர்களுக்கு ரீகாவும் மிட்டாவாவும்* டான்சிக் மற்றும் எல்பிங்** போலவே முற்றிலும் முக்கியமானவையாகக் கணிக்கப்படும். இவ்வாறாக, ஜெர்மனியில்

* லெட்டிஷ் பெயர்: யெல்காவா.—ப-ர்.

** போலிஷ் பெயர்கள்: கிடான்ஸ்க் மற்றும் எல்பிளாங்.—ப-ர்.

இருந்த முன்னேற்றக் கட்சி, மாகண்ட இயக்கத்தைக் குன்றுது வைத்திருக்க ருஷ்யாவுடன் போர் தொடுப்பது அவசியம் என்று கணித்தும், போலந்தின் ஒரு பாகத்தில் தேசியப் புனரமைப்பு நடைபெற்றுல் கூடத் தவிர்க்க முடியாத வகையில் அத்தகைய போருக்கு இட்டுச் செல்லும் என்று கருதியும் போலிஷ் மக்களை ஆதரித்தது. அதே போதில் ருஷ்யாவுக்கு எதிரான எந்தவொரு தேசியப் போரும் ஆட்சித் தலைமையில் மேலும் செயலூக்கமுள்ள ஆற்றல் வாய்ந்த ஆட்களைப் பதவியில் அமர்த்தி இருக்கும் எனவும், தமது வீழ்ச்சியைக் கொண்டுவந்திருக்கும் எனவும் தெளிவாக முன்னறிந்தனர் ஆட்சியில் இருந்த மிதவாத முதலாளி வர்க்கக் கட்சியினர். எனவே அவர்கள், ஜெர்மன் தேசிய இனத்தின் விஸ்தரிப்பு பற்றிய ஒரு பாசாங்கான உற்சாகத்துடன் போலிஷ் புரட்சிகரக் கிளர்ச்சியின் பிரதானக் களமான பிரஷ்ய போலந்தை வரப்போகும் ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் இன்றியமையாப் பகுதியாகப் பிரகடனம் செய்தார்கள். கிளர்ச்சி வேகத்தின் ஆரம்ப நாட்களில் போலிஷ் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் வெட்கக்கேடான முறையில் மீறப்பட்டன. அரசாங்கத்தின் அனுமதியுடன் அமைக்கப்பட்ட போலிஷ் போர்ப்படைகள் சிதறடிக்கப்பட்டுப் பீரங்கிப் படையால் படுகொலை செய்யப்பட்டன. 1848 ஏப்ரல் மாதம் வந்த உடனேயே, பெர்லின் புரட்சி நடைபெற்று ஆறு வாரங்களுக்கு உள்ளாகவே, போலிஷ் இயக்கம் நசுக்கப்பட்டது; போலிஷ் மக்களுக்கும் ஜெர்மானியருக்கும் இடையிலான பழைய தேசியப் பகைமை மீண்டும் எழுந்தது. ருஷ்ய எதேச்சாதிகாரிக்கு இந்த மிகப்பெரிய அளவிடற்கரிய சேவையைச் செய்தவர்கள் மிதவாத வாணிக-அமைச்சர்களான காம்ப்ஹாவுசனும் ஹான்செமனும் ஆவர். இந்தப் போலிஷ் போர் நடவடிக்கை, பின்னுல் காம்ப்ஹாவுசன், ஹான்செமன் வகையறு அரும்பாடு பட்டுக் கொண்டுவந்த இயக்கத்தை நசுக்கியதும், மிதவாதக் கட்சியைப் பதவியில் இருந்து விரட்டியதுமான அதே பிரஷ்ய சேனையைப் புனரமைத்து திரும்பவும் உறுதிப்படுத்திய முதல் சாதனமாகும் என்பதை இங்கு சேர்த்துக் கூற வேண்டும்.

''எதனுல் அவர்கள் தீவினை செய்தார்களோ அதனுல் அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.'' லெட்ரூ-ரொலேன் முதல் ஷங்கார்னியே வரை காம்ப்ஹாவுசன் தொட்டு ஹெய்நாவு ஈருக 1848 மற்றும் 1849ன் புதுப்புனைவாளர்களின் கதி இத்தகையதாகவே இருந்தது.

தேசிய இனப் பிரச்சினை போஹீமியாவில் இன்னெரு போராட்டத்தைத் தோற்றுவித்தது. இரண்டு மில்லியன் ஜெர்மானியரும் செக் மொழி பேசும் மூன்று மில்லியன் ஸ்லாவேனியரும் வசித்து வந்த இந்த நாட்டில் செக்குகளின் முன்னுள் ஆதிக்கத்துடன் ஏறத்தாழ எல்லாம் தொடர்புடையதான மாபெரும் வரலாற்று நினைவுக் காட்சிகள் இருந்தன. ஆனுல் பதினைந்தாம் நூற்றுண்டில் ஹூஸ்ஸைட் யுத்தங்களுக்குப்[34] பின் எப்போதைக்குமாக இந்த ஸ்லாவேனியக் குடும்பக் கிளையின் வலிமை தகர்க்கப்பட்டது, செக் மொழி பேசும் மாகாணங்கள் பிரிக்கப்பட்டன, இதில் ஒரு பகுதி போஹீமியா ராஜ்ஜியமாக உருவாயிற்று, மற்றெரு பகுதி மோராவியா சிற்றரசாகவும், மூன்றும் பகுதியான ஸ்லோவாக்குகளின் கார்ப்பேதியன் மலை நாடு ஹங்கேரியின் ஒரு பாகமாகவும் அமைந்தன. மோராவியர்களும் ஸ்லோவாக்குகளும் பெரும்பாலும் தமது மொழியைப் பேணி வைத்திருந்த போதிலும் தேசிய உணர்வு மற்றும் உயிரோட்டத்தின் சகல சாயல்களையும் நீண்ட காலத்துக்கு முன்பே இழந்து விட்டார்கள். போஹீமியாவை ஒட்டிய நான்கு புறத்தில் மூன்று பக்கங்களிலும் முற்றிலும் ஜெர்மானிய மாகாணங்கள் சுற்றி வளைத்திருந்தன. தனது சொந்தப் பிரதேசத்தில் ஜெர்மன் பிரிவினர் மிகப் பெரும் முன்னேற்றம் பெற்றிருந்தனர், தலைநகரிலுங்கூட, பிராகில்கூட இந்த இரு தேசிய இனங்களும் கிட்டத்தட்ட சம அளவில் இருந்தன. எல்லா இடங்களிலும் மூலதனம், வாணிகம், தொழில் துறை மற்றும் மனவளத்துக்கான கலாசார சாதனங்கள் ஜெர்மானியர் கரங்களில் இருந்தன. செக் தேசிய இனத்தின் முக்கிய ஆதரவாளரான பேராசிரியர் பலாஸ்கி தாமே பித்தாகித் திரியும் ஒரு படித்த ஜெர்மானியரே தவிர வேறு ஒன்றுமல்ல. அவரால் இப்போதுகூட அன்னிய உச்சரிப்பு

இல்லாமல் செக் மொழியைச் சரியாகப் பேச முடியாது. ஆனால் அடிக்கடி நிகழ்வது போல, கடந்த நான்கு நூற்றாண்டு கால வரலாற்றின் தெரிந்த மெய்விவரங்கள் சகலத்தின் படியும் மறைந்து வருகிற செக் தேசிய இனம் தனது பழைய உயிராற்றலை மீண்டும் பெற 1848ல் கடைசி முயற்சியைச் செய்தது. இந்த முயற்சியின் தோல்வியை, எல்லா புரட்சிகரக் காரணங்களையும் தனிப் பிரித்துப் பார்த்தால், இனிமேற்பட்டு போஹீமியாவானது, அதன் குடிமக்களில் ஒரு பகுதியினர் இன்னும் சில நூற்றாண்டுகளுக்கு ஜெர்மன் அல்லாத ஒரு மொழியைத் தொடர்ந்து பேசி வந்த போதிலும், ஜெர்மனியின் ஒரு பாகமாகவே இருக்கும் என்பது நிரூபணமாகும்.[35]

லண்டன், 1852 பிப்ரவரி

## 9

## அகண்ட ஸ்லாவேனியவாதம். ஷ்லெஸ்விக்-ஹோல்ஷ்டைன் போர்

போஹீமியாவும் குரோஷியாவும் (ஸ்லாவேனிக் குடும்பத்தின் சிதறிப் போன உறுப்புக்களில் இன்னொன்று, போஹீமியா மீது ஜெர்மானியர் செல்வாக்குச் செலுத்துவது போல ஹங்கேரியரால் செல்வாக்குச் செலுத்தப்படுவது) ஐரோப்பிய மாகண்டத்தில் ''அகண்ட ஸ்லாவேனியவாதம்'' எனப்படுவதன் தாயகங்களாகும். போஹீமியாவோ அல்லது குரோஷியாவோ தாமாகவே ஒரு தேசமாக வாழ்வதற்குரிய போதிய வலிமை கொண்டிருக்கவில்லை. அவற்றின் தேசிய இனங்கள் ஒருங்கே வரலாற்றுக் காரணங்களின் செயல்பாட்டால் படிப்படியாக அரித்தழிக்கப்பட்டு, தவிர்க்க முடியாத வகையில் மேலும் அதிக சுறுசுறுப்புள்ள இனத்துடன் அமிழ்ந்து சேர்ந்து விடும்படி செய்யப்படுகின்றன. ஆகவே சுயேச்சை என்பது போன்றதான ஒரு நிலைமைக்குத் தம்மை மீட்டமைத்துக் கொள்ள அவை இதர

ஸ்லாவேனிய தேசங்களுடன் கூட்டணி சேர்வது மட்டுமே நம்பிக்கை தரும் வழியாகும். இருபத்திரண்டு மில்லியன் போலிஷ் மக்களும், நாற்பத்தைந்து மில்லியன் ருஷ்யர்களும், எட்டு மில்லியன் செர்பியர் மற்றும் பல்கேரியரும் இருக்கிருர்கள். இந்த எண்பது மில்லியன் ஸ்லாவேனியரையும் கொண்ட ஒரு வலிமை மிக்க கூட்டமைவை நிறுவி, புனித ஸ்லாவேனிய மண்ணில் அத்துமீறிப் பிரவேசித்த துருக்கியர், ஹங்கேரியர், எல்லாவற்றுக்கும் மேலாக வெறுக்கப்பட்ட ஆனுல் இன்றியமையாத Niemetz, ஜெர்மானியரைத் துரத்தி விரட்டிஞல் அல்லது அழித்தொழித்தால் என்ன? இவ்வாருக வரலாற்றில் மேற்போக்கான அறிவுள்ள ஒரு சில ஸ்லாவேனியர்களின் படிப்பறைகளில் இந்த முட்டாள்தனமான, வரலாற்று-எதிர்ப்பு இயக்கம் நிறுவப்பட்டது. இந்த இயக்கம் நாகரிகமடைந்த மேலைப்பகுதியைக் காட்டுமிராண்டி கீழைப்பகுதியின் கீழும், நகரத்தை நாட்டுப்புறத்தின் கீழும், வாணிகம், தொழில் மற்றும் அறிவுத் துறைகளை ஸ்லாவேனியப் பண்ணையடிமை முறையிலான ஆதிகாலத்து விவசாயத்தின் கீழும் அடிப்படுத்தும் நோக்கம் தவிர வேறு எதையும் கொண்டதல்ல. ஆனுல் இந்த முட்டாள்தனமான தத்துவத்தின் பின்னுல் ருஷ்ய சாம்ராஜ்யம் எனும் பயங்கர எதார்த்தம் ஆதரவாக நின்றது. அந்த சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் ஐரோப்பா முழுவதையும் ஸ்லாவேனிய இனத்தின், குறிப்பாக அதன் ஒரே ஆற்றல் மிக்க பகுதியான ருஷ்யர்களின் ஆட்சிப் பரப்பாகக் கருதி வரும் உரிமைத் தகுதியைப் பறைசாற்றுகிறது. செயின்ட் பீட்டர்ஸ்பர்க் மற்றும் மாஸ்கோ எனும் இரண்டு தலைநகரங்களைக் கொண்ட அந்த சாம்ராஜ்யம் ஜாரின் நகரம் (ருஷ்ய மொழியில் ஜாரிகிராட்—ஜாரின் நகரம்—எனப்படும் கான்ஸ்டான்டிநேப்பிள்), ஒவ்வொரு ருஷ்ய விவசாயியினுலும் தனது சமயம் மற்றும் தேசத்தின் மெய்யான தலைமை நகரம் என்று கருதப்பட்ட அது, உள்ளபடியே அதன் சக்கரவர்த்தியின் வாழ்விடமாக ஆகாத வரையில் இன்னமும் தனது ஈர்ப்புமையத்தைக் காணுமல் இருக்கிறது. அந்த சாம்ராஜ்யம் கடந்த 150

ஆண்டுகளாக பிரதேசங்களை என்றுமே இழந்ததில்லை; மாறாக, அது தொடங்கிய ஒவ்வொரு போரிலும் எப்போதும் வென்று பெற்றுள்ளது. அகண்ட ஸ்லாவேனிய வாதம் எனும் புதுமைக் கருத்தமைப்பு முறையை ஆதரிக் கும் ருஷ்யக் கொள்கையின் சூழ்ச்சிகள் மத்திய ஐரோப்பா வில் பிரபலமாகியுள்ளன. அந்தக் கொள்கையின் நோக்கங் களுக்குத் தகுதியானதாக இதைவிடச் சிறந்த வேறு எதை யும் புனைய முடியாது. இவ்வாறாக போஹீமிய மற்றும் குரோஷிய அகண்ட ஸ்லாவேனியவாதிகள் சிலர் மனமாரத் திட்டமிட்டும், சிலர் தெரியாமலும் ருஷ்யாவின் நேரடி நலன்களுக்காகப் பாடுபட்டார்கள். தேசிய இனம் என்னும் நிழலுக்காக அவர்கள் புரட்சிகர லட்சியத்திற்குத் துரோகம் செய்தார்கள். இந்த தேசிய இன உரிமையின் ஆகச் சிறந்த உதாரணம் கூட போலிஷ் தேசிய இனத்துக்கு ருஷ்ய ஆதிக் கத்தின் கீழ் ஏற்பட்ட கதியாகவே இருந்திருக்கும். எனினும் அவர்கள் இந்த அகண்ட ஸ்லாவேனியவாதத்தின் பொறி யில் தீவிரமாகச் சிக்கிக் கொள்ளவில்லை என்பதைப் போலிஷ் மக்களைப் பெருமை செய்யும் வகையில் கூறியே தீர வேண் டும். போலிஷ் பிரபுக்குலத்தவர் சிலர் மூர்க்கமான அகண்ட ஸ்லாவேனியவாதிகளாக மாறினார்கள் என்றால், தமது சொந்தப் பண்ணையடிமைகளின் கலகம் மூலம் ஏற்படும் இழப்பைவிடவும், ருஷ்யாவின் அடிப்படுத்தலால் தமக்கு ஏற்படப்போகும் இழப்பு குறைவானது என்பதை அவர்கள் அறிந்திருந்ததே அதற்குக் காரணமாகும்.

சர்வப் பொதுவான ஸ்லாவேனியக் கூட்டணிக்குத் தயா ரிப்புச் செய்வதற்காக போஹீமியர்களும் குரோஷியர்களும் பிராகில் ஒரு பொதுவான ஸ்லாவேனியக் காங்கிரசைக் கூட்டினார்கள்.[36] ஆஸ்திரிய ராணுவத்தின் தலையீடு இல் லாமலே கூட இந்தக் காங்கிரஸ் நிச்சயமாகத் தோல்வி யடைந்திருக்கும். பல்வேறு ஸ்லாவேனிய மொழிகள் ஆங் கிலம், ஜெர்மன் மற்றும் ஸ்வீடிஷ் மொழிகளைப் போலவே முற்றும் அந்த அளவுக்கு ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. காங்கிரஸ் நடவடிக்கைகள் துவங்கிய போது பேச்சாளர் கள் பிறர் புரிந்து கொள்ளும் வகையில் பேசுவதற்கென

ஒரு பொதுவான ஸ்லாவேனிய மொழி இருக்கவில்லை. பிரெஞ்சு மொழி பயன்படுத்தப்பட்டது, ஆனால் அதுவும் பெரும்பான்மையினருக்கு அதே அளவுக்குப் புரியாததாகவே இருந்தது. ஜெர்மானியருக்கு எதிரான பொதுவான பகைமையையே தமது பொது உணர்வாகக் கொண்டிருந்த (பாவம்!) ஸ்லாவேனிய உற்சாகிகள், பொதுவாகப் புரிந்து கொள்ளக் கூடியதான ஒரே மொழி என்ற முறையில் தம்மால் வெறுக்கப்பட்ட ஜெர்மன் மொழியிலேயே உரையாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது! ஆனால் அதே சமயம் கலீஷிய குதிரை ஈட்டிப் படையினர், குரோஷிய மற்றும் ஸ்லோவாக் எறிகுண்டு வீரர்கள், செக் பீரங்கிப்படை வீரர்கள் மற்றும் கவசமணிந்த குதிரைப்படையினர் சேர்ந்து உருவாக்கிய இன்னொரு காங்கிரஸ் பிராகில் கூடியிருந்தது. இந்த மெய்யான ஆயுதமேந்திய ஸ்லாவேனிய காங்கிரஸ், விண்டிஷ் கிராட்ஸ் தலைமையின் கீழ் இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் கற்பனையான ஸ்லாவேனிய மேலாதிக்கத்தின் மூலவர்களை நகரத்தில் இருந்து துரத்தி வெளியேற்றி அவர்களைச் சிதறடித்தது.

ஆஸ்திரிய அரசியல் நிர்ணய சபையின் செக், மோராவிய, டால்மேஷியன் பிரதிநிதிகளும் ஒரு பகுதி போலிஷ் பிரதிநிதிகளும் (பிரபுக்குலத்தவர்) அந்தச் சபையில் ஜெர்மன் ஆட்கள் மீது முழுமுனைப்புடன் போர் தொடுத்தார்கள். ஜெர்மானியரும் போலிஷ் மக்களில் ஒரு பகுதியினரும் (வறுமைப்படுத்தப் பெற்ற பிரபுக்குலத்தவர்) இந்த சபையில் புரட்சிகர முன்னேற்றத்தின் பிரதான ஆதரவாளர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு எதிர்ப்பாக இருந்த பெரும்பாலான ஸ்லாவேனியப் பிரதிநிதிகள் இவ்வாறு தமது இயக்கம் முழுவதன் பிற்போக்கான இயல்பைத் தெளிவாகக் காட்டியதுடன் திருப்தி அடையவில்லை, மாறாக, அவர்களது கூட்டத்தை பிராகில் கலைத்துச் சிதறடித்த அதே ஆஸ்திரிய அரசாங்கத்துடன் சேர்ந்து தலையிட்டுக் கெடுத்தும் சதி புரிந்தும் நடக்கும் அளவுக்கு இழிந்து சென்றார்கள். இந்த மோசமான நடத்தைக்கு உரிய தண்டனையை அவர்களும் பெற்றார்கள். 1848ம் ஆண்டுப் புரட்சி எழுச்சியின்

போது ஸ்லாவ் பிரதிநிதிகள் அரசாங்கத்துக்கு ஆதரவளித்த பின்னர்—இந்த அரசாங்கம் இறுதியாக அவர்களுக்கு நிர்ணய சபையில் பெரும்பான்மையைப் பெற்றுத் தந்தது—இப்போது கிட்டத்தட்ட முற்ற முழுமையாக ஸ்லாவேனிய நாடாளுமன்றமாக இருக்கும் இது, பிராக் காங்கிரசைப் போலவே ஆஸ்திரியப் படைவீரர்களால் கலைக்கப்பட்டது. மீண்டும் கிளர்ச்சி செய்தால் சிறைத்தண்டனை கிட்டும் என்று அகண்ட ஸ்லாவேனியவாதிகள் அச்சுறுத்தப்பட்டார்கள். அவர்கள் இதைத்தான், ஆஸ்திரியரின் மையப்படுத்தல் மூலம் இப்போது எல்லா இடங்களிலும் அரித்தழிக்கப்படும் ஸ்லாவேனிய தேசிய இனத்தை மட்டுமே பெற்றிருக்கிறார்கள். இந்த விளைவுக்கு அவர்களது சொந்த மூர்க்கத்தனமும் கண்மூடித் தனமுமே பொறுப்பாகும்.

ஹங்கேரி மற்றும் ஜெர்மனியின் எல்லைகள் விஷயத்தில் ஏதேனும் ஐயப்பாட்டுக்கு இடமிருந்திருக்குமானால், அங்கு நிச்சயமாக இன்னொரு சண்டை நிகழ்ந்திருக்கும். ஆனால் அதிருஷ்டவசமாக இத்தகைய சாக்குப்போக்கு இருக்கவில்லை. அதோடு இரண்டு தேசங்களின் நலன்களும் மிகவும் நெருக்கமாக சம்பந்தப்பட்டு இருந்ததால், அவை அதே விரோதிகளை அதாவது ஆஸ்திரிய அரசாங்கம் மற்றும் அகண்ட ஸ்லாவேனியவாத வெறியினை எதிர்த்துப் போராடின. இந்த நல்ல இணக்கம் ஒரு கணமும் உலைவு செய்யப்படவில்லை. ஆனால் இத்தாலியப் புரட்சி குறைந்தபட்சம் ஜெர்மனியின் ஒரு பாகத்தை உள்நாட்டுப் போரில் சிக்கவைத்தது; மெட்டர்னிக்கின் அமைப்பு பொதுஜன உணர்வு வளர்ச்சியுறுவதைத் தடுத்து நிறுத்துவதில் எந்தளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்பதற்குரிய சான்று என்ற முறையில், 1848ன் முதல் ஆறு மாதங்களில் வியன்னாவில் தெருத் தடையரண்களை நிறுவிய அதே ஆட்கள் இத்தாலிய தேசபக்தர்களை எதிர்த்துப் போராடிய சேனையில் உற்சாகத்துடன் போய்ச் சேர்ந்தார்கள் என்பதையும் இங்கு கட்டாயம் எடுத்துக் கூறவேண்டும். எனினும் இந்த வருந்தத்தக்க கருத்துக் குழப்பம் வெகுநாள் நீடிக்கவில்லை.

கடைசியாக, ஷ்லெஸ்விக் மற்றும் ஹோல்ஷ்டைன் சம்

பந்தமாக டென்மார்க்குடன் போர் நிகழ்ந்தது. தேசிய இனம், மொழி மற்றும் மனப்பற்றுதல் மூலம் மறுக்க முடியாதபடி ஜெர்மன் இயல்பு கொண்ட இந்த மாகாணங்கள், ராணுவ, கடற்படை மற்றும் வாணிகக் காரணங்களாலும் ஜெர்மனிக்கு அவசியமானவை. இந்த மாகாணங்களின் மக்கள் கடந்த மூன்றுண்டுகளாக டேனிஷ் தலையீட்டை எதிர்த்துக் கடுமையாகப் போராடினார்கள். தவிரவும் உடன்படிக்கைகளின் உரிமை அவர்களுக்கு ஆதரவாக இருந்தது. மார்ச் புரட்சி அவர்களை டச்சு மக்களுடன் பகிரங்க மோதலுக்கு இட்டுச் சென்றது, மேலும் ஜெர்மானியர்கள் அவர்களை ஆதரித்தார்கள். ஆனால் போலந்திலும் இத்தாலியிலும் போஹீமியாவிலும் பின்னால் ஹங்கேரியிலும் ராணுவ நடவடிக்கைகள் உச்சபட்ச உத்வேகத்துடன் நடத்தப்பட்ட அதே போதில், இந்த மக்கள் ஆதரவு பெற்ற ஒரே போரில், குறைந்தபட்சம் ஓரளவுக்கேனும் புரட்சிகரப் போரில் சேனைகளின் பயனற்ற அணிவகுப்புகளும் எதிர் அணிவகுப்புகளும் கொண்ட முறை கையாளப்பட்டது, இது அன்னிய அரசுறவுத் தந்திரத்தின் தலையீட்டுக்கு ஆட்படுத்தப்பட்டது, வீரஞ்செறிந்த பல போராட்டங்களுக்குப்பின் மிகவும் அவலமான முடிவை எய்தியது. இந்தப் போரின் போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஜெர்மன் அரசாங்கங்கள் ஷ்லெஸ்விக்-ஹோல்ஷ்டைன் புரட்சிகர சேனைக்குத் துரோகம் செய்தன, டச்சு மக்களால் சிதறடிக்கப்பட்டு அல்லது பிளவுறுத்தப்பட்ட போது அதை வேண்டுமென்றே அழிவுற இடமளித்தன. ஜெர்மன் சுயவிருப்பப் படையினரும் இவ்வாறே நடத்தப்பட்டனர்.

இவ்வாறு, ஜெர்மன் என்ற பெயர் எல்லாப் பக்கங்களிலும் வெறுப்பைத் தவிர வேறு எதையும் பெற்றிராத அதே போதில், ஜெர்மன் அரசியலமைப்புச் சட்டவாத மற்றும் மிதவாத அரசாங்கங்கள் மனநிறைவு கொண்டு மகிழ்ச்சியுடன் இருந்தன. போலிஷ் மற்றும் செக் இயக்கங்களை நசுக்குவதில் வெற்றியடைந்திருந்தன. ஜெர்மானியர், போலிஷ் மக்கள் மற்றும் இத்தாலியர் இடையே ஒரு பொதுவான இணக்கத்தையும் செயலையும் இன்று வரை

தடைப்படுத்தி வந்த பழைய தேசியப் பகைமைகளை அவை எல்லா இடங்களிலும் புதுக்கிவிட்டன. உள்நாட்டுப் போர் மற்றும் ராணுவத்தின் ஒடுக்குமுறைக் காட்சிகளுக்கு அவை மக்களைப் பழக்கப்படுத்தி விட்டன. பிரஷ்ய சேனை போலந்திலும் ஆஸ்திரிய சேனை பிராகிலும் தன்னம்பிக்கையை மீட்டுப் பெற்றன. அதே போதில் புரட்சிகரமான ஆனால் குறுநோக்குடைய இளைஞர்களின் மட்டுமீறியவளமார்ந்த தேசாபிமானம் (ஹெய்னே கூறியது போல "die patriotische Überkraft"*) ஷ்லெஸ்விக் மற்றும் லம்பார்டியில் விரோதியின் தெறிகுண்டால் நசுக்கப்படுவதற்கு இட்டுச் சென்றது. பிரஷ்யாவிலும் ஆஸ்திரியாவிலும் போராடும் மெய்யான கருவியாக இருந்த முறையான சேனை அன்னியர் மீதான வெற்றிகள் மூலமாகப் பொதுஜன ஆதரவை மீட்டுப் பெறும் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் நாம் மீண்டும் சொல்கிறோம்: மேலும் முன்னேறிய கட்சிக்கு எதிரான போராட்ட சாதனமாக மிதவாதிகளால் வலுப்படுத்தப் பட்ட இந்த சேனைகள் தமது சுயநம்பிக்கையையும் தமது கட்டுப்பாட்டையும் மீட்டுப் பெற்ற உடனேயே மிதவாதிகளுக்கு எதிராகத் திரும்பி பழைய அமைப்பு முறையின் ஆட்களை மீண்டும் ஆட்சி அதிகாரத்தில் அமர்த்தின. அடிஜா நதிக்குப் பின்னால் இருந்த தன் முகாமில் ரதேத்ஸ்கி வியன்னாவில் இருந்த ''பொறுப்பான அமைச்சர்களின்'' முதல் உத்தரவுகளைப் பெற்ற போது ஆர்த்துக் கூவினார்: ''யார் இந்த அமைச்சர்கள்? அவர்கள் ஆஸ்திரியாவின் அரசாங்கமல்ல! ஆஸ்திரியா இப்போது எனது முகாமில் தவிர வேறு எங்கும் இல்லை; நானும் எனது சேனையும்—நாங்களே ஆஸ்திரியா; இத்தாலியர்களை முறியடித்த பிறகு நாங்கள் சக்கரவர்த்திக்காக சாம்ராஜ்யத்தை மறுபடியும் வெல்வோம்!'' முதிய ரதேத்ஸ்கியின் கூற்றுச் சரியே—

---

* Heine, *Bei des Nachtwächters Ankunft zu Paris* (''பாரிசில் இரவுக் காவல்காரன் வந்து சேர்ந்த போது''), *Zeitgedichte* (''நவீனக் கவிதைகள்'') எனும் பாடல்தொகையில் இருந்து.—ப-ர்.

ஆனால் வியன்னாவில் இருந்த இந்த அறிவு முடமான "பொறுப்பான" அமைச்சர்கள் அவரைப் பொருட்படுத்தவில்லை.

லண்டன், 1852 பிப்ரவரி

## 10

## பாரிசில் புரட்சிகர எழுச்சி. பிராங்க்பர்ட் சட்டமன்றம்

1848 ஏப்ரல் ஆரம்பத்திலேயே முதல் வெற்றிகளால் பயனடைந்த சமுதாயத்தில் இருந்த வர்க்கங்கள் உடனடியாகத் தோற்கடிக்கப்பட்டோருடன் சேர்ந்து உருவாக்கிய கூட்டணியினால், ஐரோப்பா மாகண்டம் முழுவதிலும் புரட்சி வெள்ளப் பெருக்கு அணையிட்டுத் தடுக்கப்பட்டது. பிரான்சில் சிறுதர முதலாளி வர்க்கமும் முதலாளி வர்க்கத்தின் குடியரசுவாதப் பிரிவும் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக முடியரசுவாத முதலாளி வர்க்கத்தினருடன் சேர்ந்து நின்றன. ஜெர்மனியிலும் இத்தாலியிலும் வெற்றிவாகை சூடிய முதலாளி வர்க்கத்தினர், மக்கள் திரளுக்கும் குட்டி முதலாளிகளுக்கும் எதிராக நிலவுடைமைப் பிரபுக்குலத்தினர், அரசின் அதிகாரவர்க்கம் மற்றும் சேனையின் ஆதரவை ஆவலுடன் நாடினார்கள். வெகுவிரைவில் ஒன்றிணைந்த கன்சர்வேடிவ் மற்றும் எதிர்ப்புரட்சிக் கட்சிகள் ஆதிக்க நிலையைத் திரும்பப் பெற்றன. இங்கிலாந்தில் அகாலமான, மோசமான தயாரிப்புடன் நடத்தப்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டம் (ஏப்ரல் 10) போராட்ட இயக்கக் கட்சியை ஒரு முழுமையான முடிவான தோல்வியில் கொண்டுபோய் விட்டது.[37] பிரான்சில் இதே போன்ற இரண்டு இயக்கங்கள் (ஏப்ரல் 16லும்[38] மே 15லும்[39] நடந்தவை) இதே நிலையில் முறியடிக்கப்பட்டன. இத்தாலியில் மன்னர் போம்பா*

* இரண்டாம் ஃபெர்டினாண்டு.—ப-ர்.

மே 15ந் தேதி ஒரே அடியில் தனது அதிகாரத்தை மீட்டுப் பெற்றார்.[40] ஜெர்மனியில் பல்வேறு புதிய முதலாளித்துவ அரசாங்கங்களும் முறையே அவற்றின் அரசியல் நிர்ணய சபைகளும் தம்மைத்தாமே கெட்டிப்படுத்திக் கொண்டன. சம்பவங்கள் நிறைந்த மே 15ந் தேதி வியன்னாவில் மக்கள் வெற்றியைத் தோற்றுவித்திருக்குமானால்,இது இரண்டாந்தர முக்கியத்துவமுடைய நிகழ்வாகவே இருக்கும், மேலும் இதை வெகுஜன உற்சாகத்தின் கண நேரக் கடைசி வெற்றி என்பதாகக் கருதலாம். ஹங்கேரியில் இயக்கம் முழுநிறைச் சட்ட சம்மதமான அமைதியான செல்வழியில் திரும்புவதாகத் தோற்றமளித்தது. போலிஷ் இயக்கமோ நாம் கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டது போன்று பிரஷ்ய துப்பாக்கிக் குத்தீட்டிகளால் முளையிலேயே நசுக்கப் பட்டது. இந்தச் சம்பவங்கள் மேற்கொள்ளப் போகும் முடிவான திருப்பம் என்ன என்பது குறித்து இன்னும் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.அதோடு பல்வேறு நாடுகளில் புரட்சிகரக் கட்சிகள் இழக்கும்படி நேரிட்ட ஒவ்வொரு அங்குல நிலமும், அவை முடிவான போராட்டத்திற்காகத் தமது அணிகளை மேலும் நெருக்கமாக இணைத்துக் கொள்வதை நோக்கிச் செயல்படுமாறு ஊக்குவித்தது.

முடிவான போராட்டம் நெருங்கி வந்தது. அதை பிரான்சில் மட்டுமே நடத்த முடியும். காரணம், புரட்சிகரப் போராட்டத்தில் இங்கிலாந்து எவ்விதப் பங்கும் வகிக்காதவரை, ஜெர்மனி பிளவுற்று இருந்தவரை, பிரான்ஸ் மட்டுமே தனது தேசிய சுதந்திரம், நாகரிகம் மற்றும் மையப்படுத்தல் மூலம் சுற்றுமிருந்த நாடுகளுக்கு வலிமைமிக்க கொந்தளிப்புக்கான ஒரு தூண்டுதலை வழங்க முடிந்தது. ஆதலால், 1848 ஜுன் 23ந் தேதி[41] பாரிசில் கடுமையான போராட்டம் ஆரம்பமான போது, ஒரு புறம் தொழிலாளர் திரளினருக்கும், மறு புறம் சேனையால் ஆதரிக்கப்பட்ட பாரிஸ் மக்கள் தொகையின் இதர வர்க்கங்கள் அனைத்துக்கும் இடையில் இந்தப் போராட்டம் நடந்து வருகிறது என்ற மெய்விவரத்தைத் தொடர்ந்து வரும் தந்தி அல்லது கடிதம் மேலும் தெளிவாக அம்பலப்படுத்தி வந்த

போது, இந்தச் சண்டை, நவீன உள்நாட்டுப் போரின் வரலாற்றில் ஒப்பற்ற கடுஞ்சினத்தோடும், ஆனால் எந்தத் தரப்புக்கும் எவ்வித வெளிப்படையான சாதகமும் இல்லாமலும் பல நாட்கள் நீடித்த போது, இதன்பின், இது மாபெரும் நிர்ணயகரமான போராட்டமாக இருந்தது என்பதும், இந்தப் புரட்சிகர எழுச்சி வெற்றிவாகை சூடியிருக்கும் பட்சத்தில், இந்த மாகண்டம் முழுவதையும் புதிய புரட்சி வெள்ளத்தில் மூழ்கடித்திருக்கும், அல்லது, இது ஒடுக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், குறைந்தது தற்காலிகமாகவேனும் எதிர்ப்புரட்சி ஆட்சியை மீட்டமைத்திருக்கும் என்பதும் எல்லோருக்கும் தெளிவாகத் தெரியவந்தது.

பாரிஸ் நகரப் பாட்டாளிகள் அவ்வளவு கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு, நசுக்கப்பட்டதால் இப்போதுங்கூட அவர்கள் அந்தத் தாக்கடியில் இருந்து இன்னமும் தமது முந்திய நிலையை மீட்டுப் பெறவில்லை. உடனடியாக, ஐரோப்பா முழுவதிலும் பழைய மற்றும் புதிய கன்சர்வேடிவ்களும் எதிர்ப்புரட்சிவாதிகளும் ஆணவத்துடன் தலை நிமிர்த்தி எழுந்து வந்தார்கள். இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை அவர்கள் எவ்வளவு நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார்கள் என்பதை இது காட்டியது. எல்லா இடங்களிலும் பத்திரிகைகள் தாக்கப்பட்டன, கூட்டம் கூடும் மற்றும் சங்கம் சேரும் உரிமைகளுக்குக் குந்தகம் விளைக்கப்பட்டது; ஒவ்வொரு சிறிய நாட்டுப்புற ஊரிலும் நடக்கும் ஒவ்வொரு சிறிய நிகழ்ச்சியையும் வாய்ப்பாகப் பயன்படுத்தி, மக்களை நிராயுதராக்கவும், முற்றுகை நிலையைப் பிரகடனம் செய்யவும், கவெனியாக்கினால் பயிற்றுவிக்கப்பட்ட புதிய சூழ்ச்சி முறைகள் மற்றும் வினைச் செயல் தந்திரங்களில் துருப்புக்களைப் பயிற்றுவிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தவிரவும், பிப்ரவரிக்குப்பின் முதல் தடவையாகப் பெரிய நகரிலான மக்கள் புரட்சிகர எழுச்சி வெல்லற்கரியது என்பது வெறும் மாயத் தோற்றமே என்பது நிரூபணமாயிற்று; சேனையின் தன் மதிப்பு மீட்டளிக்கப்பட்டது, முக்கியமான தெருப்போர்களில் இது வரை எப்போதும் தோல்வியுற்று வந்த துருப்புக்

கள் இந்த வகையான போராட்டத்திலுங்கூடத் தமது திறன் குறித்து மீண்டும் திடநம்பிக்கை பெற்றன.

ஜெர்மனியின் பழைய நிலப்பிரபுத்துவ-அதிகாரவர்க்கக் கட்சியினர் தமது தற்காலிக நேசசக்திகளான முதலாளி வர்க்கதினரைக் கூட ஒழித்துக் கட்டி, ஜெர்மனியை மார்ச் நிகழ்ச்சிகளுக்கு முன்பிருந்த நிலைமைக்கு மீட்டமைக்க மேற் கொண்ட முதல் நேரடி நடவடிக்கைகளும் உறுதியான திட்டங்களும் பாரிஸ் தொழிலாளர்களின் இந்தத் தோல்வி யுடன் தொடங்கின எனலாம். சேனை மீண்டும் அரசின் நிர்ணயமான சக்தியாகியது, சேனை முதலாளி வர்க்கத் துக்கு அன்றி இந்தக் கட்சிக்கே சொந்தமாக இருந்தது. 1848க்கு முன் கீழ்மட்ட ராணுவ அதிகாரிகளில் ஒரு பகுதி யினர் மத்தியில் அரசியலமைப்புச் சட்ட பாணி அரசாங் கத்தை நோக்கிய கணிசமான நாட்டம் காணப்பட்டதான பிரஷ்யாவிலுங்கூட, புரட்சியால் சேனைக்குள் புகுத்தப்பட்ட குழப்பம் பகுத்தறிவுடைய இளைஞர்களை அவர்களது கடப் பாடுக்குத் திரும்பவும் இட்டுச் சென்றது. சாதாரணப் படை வீரர்கள் அதிகாரிகள் சம்பந்தமாக சற்று மட்டுமீறி நெருங்கிப் பழக முயன்ற உடனேயே கட்டுப்பாடு மற்றும் பேச்சின்றிக் கீழ்ப்படிதலின் அவசியம் அவர்களுக்கு முனைப் பாயும் தெளிவாகத் தொடங்கியது. தோற்கடிக்கப்பட்ட பிரபுக்களும் அதிகாரவர்க்கத்தினரும் தம்முன் உள்ள செல் வழியை இப்போது காணத் தொடங்கினர். சேனை முன் என்றையும் விட அதிக ஒற்றுமையுடன் இருந்தது, சிறிய எழுச்சிகளிலும் அயல்நாட்டுப் போர் நடவடிக்கைகளிலும் பெற்ற வெற்றியால் எக்களிப்புடன் இருந்தது, பிரெஞ்சுப் படைவீரர்கள் அண்மையில் அடைந்த மாபெரும் வெற்றி குறித்துப் பெருமைப்பட்டது. இந்தச் சேனையை மக்களு டன் இடையறுது சில்லரை மோதல்களில் ஈடுபடுத்தியிருந் தால் மட்டுமே போதும்; தீர்மானகரமான தருணம் வரும் போது அது ஒரு மாபெரும் தாக்கடியால் புரட்சியாளர்களை நசுக்கிவிட முடியும், முதலாளி வர்க்க நாடாளுமன்றத்தா ரின் உத்தேசத் துணிவுகளைத் தள்ளுபடி செய்ய முடியும்.

அத்தகைய நிர்ணயமான தாக்கடிக்கு உரிய சரியான தருணம் விரைவிலேயே வந்தது.

கோடை காலத்தில், ஜெர்மனியில் இருந்த பல்வேறு கட்சிகள் ஈடுபட்டிருந்த வட்டாரப் போராட்டங்களையும் சில சமயம் விந்தையானதும் ஆனால் பெரும்பாலும் சலிப்பூட்டுவதுமான நாடாளுமன்ற விவாதங்களையும் நாம் விட்டு விடுகிறோம். முதலாளி வர்க்க நலன்களை ஆதரிப்போர், மிகப் பல நாடாளுமன்ற வெற்றிகளைப் பெற்றிருந்த போதிலும்—அவற்றில் ஒன்றுகூட நடைமுறைப் பலனை அளிக்கவில்லை—அதிதீவிரக் கட்சிகளின் இடையே தமது நிலை நாளுக்கு நாள் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இல்லை என்பதை மிகப் பொதுப்பட உணர்ந்தார்கள் என்பதையும், எனவே இப்போது அவர்கள் பிற்போக்காளர்களின் நேச உறவையும், அடுத்த நாள் மேலும் வெகுஜன ஆதரவு பெற்ற கட்சிகளின் ஆதரவையும் நாடும் கட்டாயத்துக்கு உள்ளானார்கள் என்பதையும் இங்கு கூறுவதே போதுமானது. இந்த இடைவிடாத ஊசலாட்டம் பொதுஜன அபிப்பிராயத்தில் அவர்களது மதிப்புக்கு முடிவான அதிர்ச்சியடி கொடுத்தது, மேலும் நிகழ்ச்சிகளின் திருப்பங்களின்படி அவர்கள் ஆழ்வுற்றுவிட்ட கேவலநிலை தற்போதைக்குப் பிரதானமாக அதிகாரவர்க்கத்தினருக்கும் நிலப்பிரபுக்களுக்கும் சாதகமாக இருந்தது.

ஆனால் இலையுதிர் காலத்தின் துவக்கத்திற்குள் பல்வேறு கட்சிகளின் ஒப்புநிலை பெருமளவு மோசமாகவும் நெருக்கடியானதாகவும் மாற்றமடைந்து, ஒரு முடிவான போராட்டத்தைத் தவிர்க்கவொண்ணாததாக்கிவிட்டது. ஜனநாயக மற்றும் புரட்சிகர மக்கள் திரளினருக்கும் சேனைக்கும் இடையிலான இந்தப் போரின் முதல் கைகலப்பு பிராங்க்பர்ட்டில் நடைபெற்றது. இது வெறும் இரண்டாந்தரமான கைகலப்பாக இருந்த போதிலும் இது துருப்புக்கள் புரட்சிகர எழுச்சிக்கு எதிராகப் பெற்ற ஓரளவு குறிப்பிடத்தக்க முதல் சாதகமாகும், மற்றும் இதற்கு மாபெரும் தார்மிக முக்கியத்துவம் இருந்தது. பிராங்க்பர்ட் தேசிய சட்டமன்றத்தால் நிறுவப்பட்ட அலங்கார அரசாங்கம் கண்கூடான

காரணங்களால் டென்மார்க்குடன் போர் நிறுத்தம் செய்து கொள்ள பிரஷ்யாவால் அனுமதிக்கப்பட்டது. அது ஷ்லெஸ்விக் ஜெர்மானியரை டேனிஷ் பழிவாங்குதலுக்குச் சரணடையச் செய்தது மட்டுமின்றி, டேனிஷ் போரில் பொதுவாக உத்தேசிக்கப்பட்ட கிட்டத்தட்ட எல்லா புரட்சிகரக் கோட்பாடுகளையும் முழுமையாகக் கைவிட்டுவிட்டது. இந்தப் போர்நிறுத்தம் பிராங்க்பர்ட் சட்டமன்றத்தால் இரண்டு அல்லது மூன்று வாக்குகள் பெரும்பான்மையால் நிராகரிக்கப்பட்டது. இந்த வாக்கெடுப்பைத் தொடர்ந்து ஒரு போலி மந்திரி சபை அமைக்கும் நெருக்கடி ஏற்பட்டது. ஆனால் மூன்று நாட்களுக்குப் பிறகு சட்டமன்றம் தனது முடிவை மறுபரிசீலனை செய்து உள்ளபடியே அதை ரத்துச் செய்யவும், போர் நிறுத்தத்தை அங்கீகரிக்கவும் கட்டாயமாகச் செய்ய வேண்டியிருந்தது. இந்த மானக்கேடான நடவடிக்கைகள் மக்களிடையே ஆத்திரத்தை எழுப்பின. தெருத் தடையரண்கள் கட்டப்பட்டன, ஆனால் ஏற்கெனவே போதிய துருப்புக்கள் பிராங்க்பர்ட்டுக்கு அனுப்பிவைக்கப் பட்டிருந்தன. ஆகவே ஆறுமணி நேரச் சண்டைக்குப் பிறகு புரட்சிகர எழுச்சி அடக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியுடன் தொடர்புடைய இதே போன்ற, ஆனால் இதைவிட முக்கியத்துவத்தில் குறைந்த சம்பவங்கள் ஜெர்மனியின் இதர பாகங்களில் (பாடேன், கொலோன்) நடைபெற்றன, ஆனால் இதே போன்று தோற்கடிக்கப்பட்டன.

இந்தப் பூர்வாங்கப் போர் நடவடிக்கை எதிர்ப்புரட்சிக் கட்சிக்கு ஒரு மிகப் பெரிய சாதகத்தை வழங்கியது. வெகுஜனத் தேர்தலுடன் முழுமையாயும்—குறைந்த பட்சம் வெளித்தோற்றத்திலேனும்—உருவாக்கப்பட்ட ஒரே அரசாங்கம், அதாவது பிராங்க்பர்ட்டில் இருந்த சாம்ராஜ்ய அரசாங்கம், தேசிய சட்டமன்றமும் கூட மக்கள் பார்வையில் படுநாசமடைந்து விட்டன. இந்த அரசாங்கமும் இந்தச் சட்டமன்றமும் பொதுஜன சித்தத்தின் வெளிப்பாட்டுக்கு எதிராகத் துருப்புக்களின் துப்பாக்கிக் குத்தீட்டிகளின் ஆதரவைக் கோரும் கட்டாயத்திற்கு உள்ளாகியிருந்தன. அவை கொள்கைகளைக் கைவிட்டன, இது வரையில் என்னதான்

அற்ப சொற்பமான மதிப்புக்கு அவை உரிமை கொண்டாடி னும் இப்பொழுது தமது மூலமரபினை மறுத்ததாலும் ஜன விரோத அரசாங்கங்கள் மற்றும் அவற்றின் துருப்புக்களைச் சார்ந்து இருந்த காரணத்தாலும், இந்த சாம்ராஜ்யத்தின் தலைமை ஆளுநரும் அவரது அமைச்சர்கள் மற்றும் உதவியா ளர்களும் முற்ற முழுச் செல்லாக்காசாகி விட்டார்கள். இந்தக் கையாலாகாத கனவுப் பேர்வழிகளின் அமைப்பிட மிருந்து வந்த ஒவ்வொரு உத்தரவையும், ஒவ்வொரு வேண்டு கோளையும், ஒவ்வொரு அதிகாரக் குழுவையும் எவ்வாறு முதலில் ஆஸ்திரியாவும், பிறகு பிரஷ்யாவும் அதற்குப் பின்னல் சிறிய அரசுகளும் ஏளனம் செய்தன என்பதை நாம் விரைவில் காண்போம்.

ஜெர்மனியில் ஜூன் மாதத்திய பிரெஞ்சு சண்டை உண் டாக்கிய மாபெரும் எதிரொலியை, பிரான்சுக்குப் பாரிஸ் நகரப் பாட்டாளி வர்க்கப் போராட்டம் போன்று ஜெர் மனிக்கு நிர்ணயமானதாக இருந்த அந்த நிகழ்ச்சியை இப் போது காண்போம். நாம் குறிப்பிடுவது 1848 அக்டோபரில் நடந்த புரட்சிகர எழுச்சி அதன் பின் வியன்னு தாக்கப் பட்டதுமான சம்பவமாகும். ஆனல் இந்தப் போராட் டம் மிகவும் முக்கியத்துவமுடையது. இதன் நடப்புக்கு உடனடிக் காரணமாக இருந்த பல்வேறு சந்தர்ப்ப சூழல்கள் குறித்த விளக்கம் *Tribune* பத்திரிகையின் பத்திகளில் பெரும் பகுதியை நிரப்பி விடும் என்பது, இதைத் தனி ஒரு அத்தியாயத்தில் விரித்துரைக்க வேண்டிய அவசியத்தை ஏற் படுத்தியுள்ளது.

லண்டன், 1852 பிப்ரவரி

## 11

## வியன்னுவில் புரட்சிகர எழுச்சி

ஜூன் மாதத்தில் நடைபெற்றதான பாரிஸ் வாசிகளின் புரட்சிகர எழுச்சிக்கு எதிர்ப்புரட்சிக் கூருக அமைந்ததும், ஒரே அடியில் நிலைமையை எதிர்ப்புரட்சிக் கட்சிக்கு ஆதர

வாகத் திருப்பியதுமான அந்த நிர்ணயகரமான நிகழ்ச்சியை—1848 அக்டோபரில் வியன்னுவில் நடைபெற்ற புரட்சிகர எழுச்சியை—இப்போது பார்ப்போம்.

மார்ச் 13ந் தேதிய வெற்றிக்குப் பிறகு வியன்னுவில் பல்வேறு வர்க்கங்களின் நிலைமை என்ன என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். ஜெர்மன் ஆஸ்திரிய இயக்கம் ஆஸ்திரியாவின் ஜெர்மன் அல்லாத மாகாணங்களின் நிகழ்ச்சிகளால் எவ்வாறு சிக்கலடைந்தது, தடங்கல் செய்யப்பட்டது என்பதையும் நாம் ஏற்கெனவே கண்டோம். ஜெர்மன் ஆஸ்திரியாவின் இந்தக் கடைசியான, மிகவும் வல்லமை மிக்க எழுச்சிக்கு இட்டுச் சென்ற காரணங்கள் குறித்துச் சுருக்கமாக ஆய்வு செய்வது மட்டுமே இப்போது நம்முன் இருக்கும் பணியாகும்.

மெட்டர்னிக்கின் அரசாங்கத்துக்கு அதிகார பூர்வமல்லாத பிரதான ஆதாரத்தூண்களாக அமைந்திருந்தவை பிரபுக்குலமும் நிதித்துறை முதலாளி வர்க்கமுமாகும். இவற்ருல் மார்ச் நிகழ்ச்சிகளுக்குப் பிறகும் கூட அரசாங்கத்திடம் விஞ்சி மேம்பட்ட செல்வாக்கினைத் தொடர்ந்து வைத்திருக்க முடிந்தது. அரசவை, சேனை மற்றும் அதிகாரவர்க்கத்தின் மூலம் மட்டுமன்றி முதலாளி வர்க்கத்தினர் மத்தியில் வேகமாகப் பரவிய ''அராஜகத்தின்'' பயங்கரம் மூலமும் இன்னும் அதிகமாகச் செல்வாக்குச் செலுத்த முடிந்தது. அவர்கள் வெகு விரைவில் பத்திரிகைச் சட்டம்,[42] தெளிவற்ற ஒரு பிரபுத்துவ அரசியலமைப்புச் சட்டம்[43] மற்றும் பழைய ''படிநிலை'' பிரிவினையை அடிப்படையாக்கிய வாக்குரிமைச் சட்டம்[44] எனும் வடிவில் ஒரு சில சோதனை நடவடிக்கைகளைத் துணிந்து செய்தார்கள். அரைமிதவாத, கோழைத்தனமான, திறமையற்ற அதிகார வர்க்கப் பேர்வழிகளைக் கொண்டதான அரசியலமைப்புச் சட்டசார்பு அமைச்சரவை எனப்பட்டதானது மக்கள் திரளினரின் புரட்சிகர அமைப்புகள் மீது மே 14ந் தேதி நேரடித் தாக்குதல் தொடுக்கவும் கூடத் துணிந்து முயன்றது. அரசாங்கத்தைக் கண்காணிப்பது, அவசியம் ஏற்பட்டால் அதற்கு எதிராக மக்கள் சக்திகளைப் போராடும்படி

அழைப்பது எனும் திட்டவட்டமான நோக்கமுடன் நிறுவப் பட்டதான, தேசியக் காவற்படை மற்றும் மாணவர் படையணியின்[45] பிரதிநிதிகளைக் கொண்ட மத்தியக் கமிட்டியைக் கலைப்பது மூலம் அது இத்தகைய தாக்குதலுக்கு முனைந்தது. ஆனால் இந்தச் செயல் மே 15ந் தேதி புரட்சி எழுச்சியை மட்டுமே தூண்டிவிட்டது. இதன் விளைவாக அரசாங்கம் இக்கமிட்டியை அங்கீகரிக்கவும் அரசியலமைப்புச் சட்டத்தையும் வாக்குரிமைச் சட்டத்தையும் ரத்துச் செய்யவும், சர்வஜன வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப் பட்டதான ஓர் அரசியல் நிர்ணய நாடாளுமன்றத்துக்கு ஒரு புதிய அடிப்படைச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரத்தை அளிக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டது. இவையாவும் அடுத்த நாள் சக்கரவர்த்திப் பிரகடனத்தின் மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டன. ஆனால் அமைச்சரவையில் தனது பிரதிநிதிகளையும் கொண்டிருந்ததான பிற்போக்குக் கட்சி மக்களது வெற்றிகள் மீது ஒரு புதிய தாக்குதலை மேற்கொள்ளுமாறு தனது ''மிதவாத'' சகமந்திரிகளை முடுக்கியது. இயக்கக் கட்சியின் பலக்கோட்டையும் தொடர்ச்சியான கிளர்ச்சியின் மையமுமான இந்த மாணவர் படையணி, வியன்னாவின் அதிக மிதமான போக்குள்ள நகரத்தார்களுக்கு வெறுப்பளிப்பதாக இருந்தது; 26ந் தேதி அமைச்சரவை ஆணை மூலம் அது கலைக்கப்பட்டது. தேசியக் காவற்படையின் ஒரு பகுதியின் மூலம் இந்த ஆணை நிறைவேற்றப்பட்டிருக்கும் பட்சத்தில் இந்தத் தாக்குதல் வெற்றி பெற்றிருக்கக் கூடும். ஆனால் இந்தக் காவற்படையையும் நம்பாத அரசாங்கம் ராணுவத்தைக் கொண்டுவந்தது. உடனே தேசியக் காவற்படையினர் மறுபக்கம் திரும்பி, மாணவர் படையணியுடன் ஒன்றுசேர்ந்து மந்திரி சபையின் செயல் திட்டத்தைக் குலைத்தனர்.

இதற்கிடையில் சக்கரவர்த்தியும்* அவரது அரசவையினரும் மே 16ந் தேதி வியன்னாவை விட்டு இன்ஸ்ப்ருக்குக்கு ஓடினர். இங்கு சர்டினிய-லம்பார்டிய சேனையால் அவர்

* முதலாம் ஃபெர்டினாண்டு.—ப-ர்.

களது நாடு படையெடுப்புக்கு உள்ளாகும் எனும் அபாயத்தால் மீண்டும் தூண்டப்பட்ட ராஜபக்தி கொண்ட குருட்டுப் பிடிவாத டிரோலியர்கள் தம்மைச் சுற்றும் நிற்க, இன்ஸ்ப்ருக்குக்கு குண்டு வீச்சுத் தொலைவில், ரதேத்ஸ்கியின் துருப்புக்களின் ஆதரவும் அருகாமையில் நிலவிய அங்கு எதிர்ப்புரட்சிக் கட்சிக்குப் புகலிடம் கிடைத்தது. அங்கிருந்து அது எவ்விதக் கண்காணிப்பு இன்றியும் பிறர் பார்வையில் படாமலும் பத்திரமாயும் சிதறிக்கிடந்த தனது சக்திகளை ஒன்றுதிரட்டி, மீண்டும் வந்து நாடுமுழுவதும் தனது சதிகளின் வலைப்பின்னலை விரிக்க முடியும். ரதேத்ஸ்கியுடனும் யெலாச்சிச்சுடனும் விண்டிஷ்கிராட்சுடனும், பல்வேறு மாகாணங்களில் ஆட்சி நிர்வாக மேற்கட்டு வரிசையில் இருந்த நம்பகமான ஆட்களுடனும் தகவல் தொடர்புகள் மீண்டும் துவங்கின. ஸ்லாவேனியத் தலைவர்களுடன் சூழ்ச்சித் திட்டங்கள் செயல்படத் தொடங்கின. இவ்வாறாக எதிர்ப்புரட்சிக் கும்பலின் வசம் ஒரு உண்மையான சக்தி உருவாயிற்று. அதே போது, வியன்னாவில் இருந்த கையாலாகாத அமைச்சர்கள் புரட்சிகர மக்கள் திரளினருடன் தொடர்ந்து பூசலிடுவதிலும், வரவிருக்கும் அரசியல் நிர்ணய சபை விவாதங்களிலும் தமது குறுகிய காலத்திய பலவீனமான மக்கள் ஆதரவை விரயப்படுத்தினார்கள். தலைநகரின் இயக்கத்தைச் சிலகாலம் அதனிடமே விட்டுவிடும் கொள்கை, மையப்படுத்தப்பட்ட, ஒருபடித்தான நாடான பிரான்சில் இயக்கக் கட்சியின் சர்வ வல்லமைக்கு கட்டாயம் இட்டுச் செல்வதற்குரிய கொள்கை இங்கு, ஒரு பலபடித்தான கதம்பமான ஆஸ்திரியாவில், பிற்போக்குவாதிகளின் பலத்தைப் புனரமைப்பதற்கான ஆகப் பத்திரமான சாதனமாக விளங்கியது.

வியன்னாவில், அரசவை தொடர்ச்சியாக அடைந்த மூன்று தோல்விகளுக்குப் பின்னர், சர்வஜன வாக்குரிமையை அடிப்படையாக்கிய அரசியல் நிர்ணய சபை நிலவும் நிலையில், அரசவைக் கட்சி இனிமேல் கண்டஞ்ச வேண்டிய ஓர் எதிராளியாக இருக்காது என்பதாக நம்புமாறு வைக்கப்பட்ட முதலாளி வர்க்கம், இந்த வர்க்கத்தை வன்மையான

கொந்தளிப்புக்கள் மற்றும் அதன் பின்விளைவான சீர் குலைவுக்குப் பின்னர் பீடித்திருந்ததான சோர்வு மற்றும் அக்கறையின்மையிலும், ஒழுங்கு மற்றும் அமைதிக்கான நிரந்தரமான நாட்டத்திலும் மேலும் மேலும் சரியத் தொடங்கியது. ஆஸ்திரியத் தலைநகரில் தொழில்கள் ஏறத் தாழ முற்றமுழுமையாயும் ஆடம்பரப் பொருள்கள் உற் பத்திக்கே வரம்பிடப்பட்டிருந்தன. புரட்சி மற்றும் அரசவை யின் வெளியேற்றத்துக்குப் பின்பு, தவிர்க்க முடியாதபடி இப்பொருட்களுக்கான கிராக்கி மிகவும் சொற்பமாகவே இருந்தது. வாணிக சுபிட்சத்தை மீண்டும் புத்தாக்கம் செய்து கொண்டுவர உதவும் என்று எதிர்பார்க்கப்பட்ட, முறையான அரசாங்க அமைப்பை மீண்டும் நிறுவுக, அரசவை மீண்டும் வர வேண்டும் என்ற முழக்கம் முதலாளி வர்க்கம் மத்தியில் இப்போது பொதுவான முழக்கமாகி யது. ஜூலையில் நடந்த அரசியல் நிர்ணய சபையின் அமர்வு புரட்சிகர சகாப்தத்தின் முடிவு என்பதாக மகிழ்ச்சியுடன் வாழ்த்தி வரவேற்கப்பட்டது, இதே போல அரசவை திரும்பி வந்த சம்பவமும் வரவேற்கப்பட்டது. இந்த அரசவை யானது, இத்தாலியில் ரதேத்ஸ்கி பெற்ற வெற்றிகளுக்குப் பிறகு, டோபிள்ஹாஃபின் பிற்போக்கு அமைச்சரவை வந்ததற்குப் பின்னுல், மக்கள் தாக்குதலை எதிர்த்து நிற்கும் அளவுக்கு வலிமையுடையதாகத் தன்னைத்தானே கருதிக் கொண்டது. அதே சமயம் நாடாளுமன்றத்தில் இருந்த ஸ்லாவேனியப் பெரும்பான்மையுடனை அதன் சூழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வியன்னுவில் அது இருக்க வேண்டும் என்று கருதியது. அரசியல் நிர்ணய சபை நிலப்பிரபுத்துவ அடிமைத்தனம் மற்றும் பிரபுக் குலத்துக்கு ஆற்றப்பட்டு வந்த கட்டாய உழைப்பு ஆகிய வற்றில் இருந்து விவசாயிகளை விமோசனப்படுத்தும் சட்டங்கள் பற்றி விவாதித்து வந்த அதே போதில், அரசவை வன்திறம் மிக்க ஒரு சாதனையை நிறைவு செய்திருந்தது. ஆகஸ்ட் 19ந் தேதி சக்கரவர்த்தி தேசியக் காவற்படையின் மரியாதை அணிவகுப்பைப் பார்வையிட ஏற்பாடு செய்யப் பட்டது. ஆயுதமேந்திய நகரத்தார்களை மட்டுமீறிப்

புகழ்வதில் சக்கரவர்த்தியின் குடும்பத்தினர், அரசவைப் பரிவாரங்கள், ராணுவ அதிகாரிகள் ஒருவரை ஒருவர் விஞ்சி நின்றார்கள். ஏற்கெனவே பெருமை வெறியில் இருந்த இந்த நகரத்தார்கள் அரசின் மிக முக்கியமான ஓர் அமைப் பாகத் தாம் பகிரங்கமாக அங்கீகரிக்கப்படுவதை உணர்ந் தார்கள். இதற்குப் பிறகு உடனடியாக அமைச்சரவையில் இருந்த பொதுஜன ஆதரவு பெற்ற ஒரே அமைச்சரான ஷ்வார்சர் கையொப்பமிட்ட ஓர் அரசாணை வெளியிடப் பட்டது, இது வேலையில்லாத தொழிலாளருக்கு இதுவரை அளிக்கப்பட்டு வந்த அரசாங்க உதவியை ரத்துச் செய்தது. இந்த வித்தை பலித்தது; தொழிலாளர்கள் ஓர் ஆர்ப்பாட் டத்தை ஏற்பாடு செய்தார்கள்; தேசியக் காவற்படையினர் தமது அமைச்சரின் அரசாணையை ஆதரித்து நின்றார்கள்; அவர்கள் ''அராஜகவாதிகளை'' எதிர்த்துத் தாக்க முடுக்கி விடப்பட்டார்கள்; ஆகஸ்டு 23ந் தேதி நிராயுதரான, எதிர்த்து நிற்காத தொழிலாளர்கள் மீதும் அவர்கள் புலிகளைப் போலப் பாய்ந்தார்கள், பெருந் தொகையான தொழிலாளர்களைப் படுகொலை செய்தார்கள். இவ்வாறுகப் புரட்சிகர சக்திகளின் ஒற்றுமையும் வலிமையும் தகர்க்கப் பட்டன. வியன்னாவிலுங்கூட முதலாளிகளுக்கும் பாட்டாளி களுக்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் ஒரு கடும் மோதலாக வந்துவிட்டது. எதிர்ப்புரட்சி அரசவை கும்பல் தனது முடிவான தாக்குதலைத் தொடுக்க கூடியதான நாள் நெருங்கிவிட்டது என்பதைக் கண்டது.

ஹங்கேரிய விவகாரங்கள், அந்தக் கும்பல் எந்தக் கோட்பாடுகளின் மீது செயல்பட உத்தேசித்திருந்ததோ, அவற்றைப் பகிரங்கமாகப் பறைசாற்றுவதற்கான ஒரு வாய்ப்பினை விரைவில் வழங்கின. அக்டோபர் 5ந் தேதி அதிகாரபூர்வ *Wiener Zeitung*[46] வெளியிட்ட ஒரு சாம் ராஜ்ய அரசாணை—ஹங்கேரியின் சார்பில் பொறுப்புள்ள மந்திரிகள் யாரும் ஆமோதித்துக் கையொப்பமிடாத ஓர் அரசாணை—ஹங்கேரிய நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டதாக அறிவித்தது, அதோடு குரோஷியாவைச் சேர்ந்த

பான் யெலாச்சிச்சை அந்த நாட்டின் சிவில் மற்றும் ராணுவ கவர்னராக நியமித்தது—இந்த யெலாச்சிச் தெற்கு ஸ்லாவேனியப் பிற்போக்கின் தலைவர், ஹங்கேரிய சட்டபூர்வ ஆட்சியுடன் பகிரங்கமான போர் தொடுத்த பேர்வழி ஆவார். அதே சமயம் வியன்னுவில் இருந்த துருப்புக்கள் வெளிவந்து, யெலாச்சிச்சின் அதிகாரத்தை உறுதிப்படுத்த வேண்டிய சேனையின் ஒரு பகுதியாக அமையும்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. எனினும் இது தீமைக்கு வசப்படும் போக்கை அளவுக்கு மேல் பகிரங்கமாகக் காட்டும் செயலாகும். ஹங்கேரி மீதான போர் அரசியலமைப்புச் சட்ட பாணி அரசாங்கத்தின் கோட்பாடு மீதான போராகும் என்று வியன்னுவில் இருந்த சகலரும் கருதினுர்கள். இந்தக் கோட்பாடு, பொறுப்பான அமைச்சரின் ஆமோதிப்பு இல்லாமல் சட்டரீதியான அரசாணைகளைப் பிறப்பிக்கும் சக்கரவர்த்தியின் முயற்சிகளால் மிதித்துத் துவைக்கப்பட்டது. வியன்னுவின் மக்கள், மாணவர் படையணி, தேசியக் காவற்படை யாவும் அக்டோபர் 6ந் தேதி திரளாகச் சேர்ந்து புரட்சிகர எழுச்சியுற்று, துருப்புக்கள் புறப்பட்டுச் செல்வதை எதிர்த்தன. சில எறிகுண்டுப் படையினர் மக்கள் பக்கம் வந்து சேர்ந்து கொண்டார்கள். மக்கள் படைகளுக்கும் துருப்புக்களுக்கும் இடையே குறுகிய காலப் போராட்டம் நடந்தது. போர்த்துறை அமைச்சர் லத்தூர் மக்களால் கொல்லப்பட்டார். மாலையில் பின்னவர்கள் வெற்றியாளர்களாயினர். இதற்கிடையே பெர்சலால் ஷ்டுல்வெய்சன்பர்கில்* தோற்கடிக்கப்பட்ட பான் யெலாச்சிச் ஜெர்மன்-ஆஸ்திரிய பிராந்தியத்தில் வியன்னுவுக்கு அருகே புகலிடம் தேடினுர். அவருக்கு ஆதரவாகச் செல்லவிருந்த வியன்னு துருப்புக்கள் மெய்யாகவே அவருக்கு எதிராக பகைமையானதும் தற்காப்புத் தன்மை கொண்டதுமான நிலையை மேற்கொண்டன. சக்கரவர்த்தியும் அரசவையும் மீண்டும் அரை ஸ்லாவேனியப் பிரதேசமான ஓல்மூட்ஸ்** நோக்கி ஓடினர்.

---

* ஹங்கேரிய பெயர்: செகெஷ்ஃபெஹர்வர்.—ப-ர்.
** செக் பெயர்: ஓலமோவட்ஸ்.—ப-ர்.

ஆனுல் ஒல்மூட்சில் அரசவை இன்ஸ்ப்ருக்கில் நிலவியதைவிட மிகவும் வேறுபட்டதான சந்தர்ப்ப சூழல்களில் தான் இருக்கக் கண்டது. இப்போது அது புரட்சிக்கு எதிரான போர் நடவடிக்கையை உடனே துவங்கும் நிலைமையில் இருந்தது. அது ஒல்மூட்சுக்குப் பெருந்திரளாகத் திரண்டு வந்த அரசியல் நிர்ணய சபையின் ஸ்லாவேனியப் பிரதிநிதிகளாலும், முடியாட்சியின் எல்லாப் பாகங்களிலும் இருக்கும் ஸ்லாவேனிய உற்சாகிகளாலும் சூழப்பட்டிருந்தது. இந்தப் போர் நடவடிக்கை அவர்களது பார்வையில் ஸ்லாவேனியப் புனரமைப்புக்காகவும், ஸ்லாவேனியப் பிரதேசம் என்று கருதப்பட்ட பகுதி மீது தலையீடு நடத்தியுள்ள ஜெர்மானியர் மற்றும் மத்யார் ஆகியோருக்கு எதிராகவும் நடத்தும் போராக இருந்தது. பிராகை வென்று பிடித்தவரும் இப்போது வியன்னுவைச் சுற்றி ஒருமுகப்படுத்தப்பட்டுள்ள சேனையின் தளபதியாக இருப்பவருமான விண்டிஷ்கிராட்ஸ் உடனடியாக ஸ்லாவேனிய தேசிய இனத்தவரின் வீரத்தலைவராகி விட்டார். அவரது சேனை எல்லாப் பக்கங்களில் இருந்தும் வந்தவர்களைச் சேர்த்து வேகமாக பலமடைந்தது. யெலாச்சிச்சின் துருப்புக்களுடனும் தலைநகரின் முன்னுள் படைப்பிரிவுடனும் சேர்ந்து கொள்வதற்காக போஹீமியா, மோராவியா, ஷ்டிரியா, மேல் ஆஸ்திரியா மற்றும் இத்தாலியிலிருந்து ரெஜிமென்டுக்குப் பின் ரெஜிமென்டாக வந்த சேனைகள் வியன்னுவுக்கு வருகின்ற பாதைகளில் குவிந்தன. இவ்வாறு அக்டோபர் மாத இறுதிக்குள் அறுபதாயிரம் பேர் ஒன்றுதிரட்டப்பட்டார்கள். விரைவில் அவர்கள் சாம்ராஜ்யப் பெருநகரின் எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்து வளைத்துக் கொள்ளத் தொடங்கினுர்கள். அவர்கள் ஒரு தீர்மானமான தாக்குதலைத் தொடுக்கின்ற அளவுக்கு முன்னேற்றமடைந்த அக்டோபர் 30ந் தேதிவரை இப்படி நடைபெற்றது.

இதற்கிடையில் வியன்னுவில் குழப்பமும் புகலற்ற நிலையும் மேலோங்கின. முதலாளி வர்க்கத்தினர் வெற்றி அடைந்த உடனேயே ''அராஜகத்'' தொழிலாளி வர்க்கத்துக்கு எதிரான தனது பழைய அவநம்பிக்கையை மீண்டும்

கைக்கொண்டார்கள். தொழிலாளர்களோ, ஆயுதமேந்திய ஆறு வாரங்களுக்கு முன்பு முதலாளிகளிடமிருந்து தமக்குக் கிட்டிய அனுபவத்தையும், பொதுவாக முதலாளி வர்க்கத்தினரின் திடமற்ற, ஊசலாடும் கொள்கையையும் கருதிப் பார்த்து, நகரின் தற்காப்பை அவர்களை நம்பி விடுவதற்கு மறுத்து, தமக்கென ஆயுதங்களையும் ராணுவ அமைப்பையும் கோரி முன்வந்தார்கள். சாம்ராஜ்யக் கொடுங்கோன்மையினை எதிர்த்த போராட்டத்தில் பற்றுர் வம் நிரம்பியிருந்த மாணவர் படையணியினர், இரண்டு வர்க்கங்களுக்கும் இடையே பிணக்கத்திற்கான காரணங்களைப் புரிந்து கொள்ளவோ அல்லது நிலைமையின் அவசியத் தேவைகளைத் தெரிந்து கொள்ளவோ அறவே ஆற்றலற்றவர்களாக இருந்தார்கள். பொதுமக்கள் மனங்களில் குழப்பம் நிலவியது, ஆளும் வட்டாரங்களிலும் குழப்பம் இருந்தது. ஜெர்மன் பிரதிநிதிகள், புரட்சிகரமான சில போலிஷ் பிரதிநிதிகள் தவிர ஓல்மூட்சிலுள்ள தமது நண்பர்களுக்கு ஒற்றர்களாகச் செயல்பட்ட ஒரு சில ஸ்லாவேனியர் ஆகியோரைக் கொண்டதான நாடாளுமன்றத்தின் எச்சமிச்சம் நிரந்தரமாக அமர்வில் இருந்தது. ஆனால் உறுதியான செயல்களுக்குப் பதிலாக இவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தின் சம்பிரதாயத்தை மீறுமலே சக்கரவர்த்தியின் சேனையை எதிர்க்க முடியுமா என்ற பயனற்ற விவாதங்களில் நேரத்தை விரயமாக்கினர்கள். வியன்னுவில் இருந்த எல்லா மக்கள் அமைப்புகளையும் கொண்டிருந்த பாதுகாப்புக் கமிட்டி எதிர்த்துப் போராடுவது என்று முடிவு செய்திருந்த போதிலும், எந்த ஓர் உறுதியான ஊக்கமான செயல் வழியையும் அது பின்பற்ற இடமளிக்காத நகரத்தார் மற்றும் சிறு வணிகர்கள், கைவினைஞர்களின் பெரும்பான்மை இதில் இன்னும் தலைமைப் பாத்திரம் வகித்தது. மாணவர் படையணியின் கமிட்டி வீரஞ் செறிந்த தீர்மானங்களை நிறைவேற்றியது, ஆனால் எவ்வழியிலும் தலைமையை மேற்கொள்ள முடியவில்லை. நம்பப்படாமலும், நிராயுதராக்கப்பட்டும், ஒழுங்கு குலைக்கப்பட்டும் இருந்த தொழிலாளி வர்க்கத்தினர் பழைய ஆட்சியின் அறிவுத்துறை அடிமைத் தனத்தில்

இருந்து அரிதாகவே விடுபட்ட நிலையில், தமது சமூக நிலை மற்றும் சரியான அரசியல் செயல் கொள்கை குறித்த அறிவு இன்றி வெறும் இயல்பூக்கத்துடன் நின்றுவிட்ட நிலையில் உரத்த ஆர்ப்பாட்டங்கள் மூலம் மட்டுமே தம்மை உணர்த்திக் கொண்டார்கள், அந்தத் தருணத்தின் இடர்ப் பாடுகளைச் சமாளிக்கும் நிலையில் அவர்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் அவர்கள்—புரட்சியின் போது ஜெர்மனியில் எப்போதும் இருந்தது போலவே—ஆயுதங்களைப் பெற்றவுடன் கடைசிவரை போராடுவதற்கு ஆயத்தமாகவே இருந்தார்கள்.

வியன்னாவில் இருந்த நிலைமை அதுவே. வெளியே, இத்தாலியில் ரதேத்ஸ்கி பெற்ற வெற்றிகளால் உற்சாகமடைந்த, புனரமைக்கப்பட்ட ஆஸ்திரிய சேனை இருந்தது. இதில் நல்ல முறையில் ஆயுதமேந்திய, நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, நல்ல முறையில் தலைமை தாங்கப்படாவிடினும், குறைந்த பட்சம் தளபதிகளைக் கொண்டிருந்த அறுபதாயிரம் அல்லது எழுபதாயிரம் படைவீரர்கள் இருந்தார்கள். வியன்னாவிற்கு உள்ளே, குழப்பம், வர்க்கப் பிரிவினை, ஒழுங்கு குலைவு: போராடவே மாட்டோம் என்று முடிவு செய்துவிட்ட ஒரு பகுதியைக் கொண்ட தேசியக் காவற்படை, இதன் இன்னுமொரு பகுதி உறுதியற்ற நிலையில், ஆகச் சிறியதான ஒரு பகுதி மட்டுமே செயல்படத் தயாராக இருந்தது; பாட்டாளிகளின் பெருந்திரள் எண்ணிக்கையில் வன்மை மிக்கது; ஆனால் தலைவர்கள் இன்றி எவ்வித அரசியல் போதனையும் இன்றி இருந்தது. பீதிக்கும் அதோடு கூடவே பெரும்பாலும் காரணமற்ற சீற்றத்திற்கும் ஆட்பட்டிருந்தது. பரப்பப்பட்ட எல்லாப் பொய் வதந்திகளுக்கும் இரையாகியது, போராட முற்றும் தயாராக இருந்தது ஆனால் குறைந்த பட்சம் ஆரம்பத்தில் ஆயுதம் இன்றி இருந்தது, கடைசியாகப் போராட்டத்திற்கு இட்டுச் செல்லப்பட்ட போது அரை குறையாக ஆயுதம் பெற்றிருந்தது, போதியளவு ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை; தலைக்கு மேலான கூரை கிட்டத்தட்ட பற்றி எரியும் போது தத்துவார்த்தச் சொற்புரட்டுகளை விவாதிக்கும் நாடாளுமன்றம்; ஆற்றலோ ஊக்

கமோ இல்லாத ஒரு தலைமைக் கமிட்டி ஆகியவை நிலவின. மார்ச் மற்றும் மே நாட்களில் இருந்த சகலமும் மாற்ற மடைந்து விட்டிருந்தன. அன்று எதிர்ப்புரட்சி முகாம் முற்றும் குழப்பமாக இருந்தது, அன்று முறையாக அமைக்கப் பட்ட ஒரே சக்தி புரட்சியால் உருவாக்கப்பட்டிருந்தது. அத்தகைய போராட்டத்தின் முடிவைப் பற்றி எவ்வித ஐயப்பாடும் இருக்க முடியாது, எவ்வித சந்தேகம் இருந் தாலும் அது அக்டோபர் 30, 31 மற்றும் நவம்பர் 1ந் தேதிய நிகழ்ச்சிகளால் தீர்க்கப்பட்டுவிட்டது.

லண்டன், 1852 மார்ச்

## 12

## வியன்னு முற்றுகை. வியன்னுவுக்குத் துரோகம்

கடைசியாக ஒருமுகப்படுத்தப்பட்டிருந்த விண்டிஷ் கிராட்ஸ் சேனை வியன்னு மீது தாக்குதல் தொடங்கிய போது, தற்பாதுகாப்புக்காக முன்னுல் கொண்டுவரக் கூடிய படைகள், இந்த நோக்கத்துக்கு மிகவும் போதாதனவாக இருந்தன. தேசியக் காவற்படையில் ஒரு பகுதி மட்டுமே காப்பரண்களுக்குக் கொண்டுவரப்படக் கூடும். இறுதியாக அவசர அவசரமாக ஒரு பாட்டாளி வர்க்கக் காவற்படை உருவாக்கப்பட்டது என்பது மெய்யே, ஆனால் மக்கள் தொகையில் எண்ணிக்கையில் பெருத்த, மிகவும் தீரமான, மிகவும் செயலூக்கமுடைய பகுதியைப் பயன்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. அது ஆயுதங்களைப் பயன்படுத்துவது மற்றும் கட்டுப்பாட்டின் ஆரம்பக் கூறுகள் விஷயமாக அறவே செயல் வலுவற்றதாக இருந்த காரணத்தால் அதனுல் வெற்றிகரமான எதிர்ப்பை வழங்க முடியவில்லை. இவ்வாருக, மூவாயிரம் முதல் நாலாயிரம் ஆட்பலம் கொண்ட, நன்கு பயிற்றுவிக்கப்பட்டு ஓரளவுக்குக் கட்டுப் பாட்டுடன் விளங்கிய, வீரமும் ஊக்கமும் கொண்ட மாணவர்

படையணியே ராணுவ முறையில் பார்த்தால் அதன் பணியை வெற்றிகரமாகச் செய்யக் கூடிய ஒரே சக்தியாக விளங்கியது. யெலாச்சிச்சின் கொள்ளைக்காரக் கூட்டத்தை, தமது பழக்கங்களின் தன்மையால் வீட்டுக்கு வீடு, தெருவுக்குத் தெரு நடக்கும் போரில் மிகவும் பயனுள்ளவர்களாக இருக்கும் இக்கூட்டத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமலே, மிகவும் பெருந்தொகையினராக இருக்கும் விண்டிஷ்கிராட்சின் முறையான படையினருக்கு எதிராக ஒரு சில நம்பகமான தேசியக் காவற்படையினரும் ஆயுதமேந்திய பாட்டாளிகளின் குழம்பிய திரளினரும் சேர்ந்து நின்றால் அது எம்மாத்திரம்? விண்டிஷ்கிராட்சால் இத்தகைய கயமைத்தனமான முறையில் பயன்படுத்தப் பெற்ற, எண்ணற்ற செம்மையாக அமைக்கப்பட்ட பீரங்கிப் படையை எதிர்த்து புரட்சியாளர்கள் வசம் இருந்த ஒரு சில பழைய, உடைந்துபோன, மோசமாக ஒருங்குவிக்கப்பட்ட, மோசமாகப் பயன்படுத்தப்படும் ராணுவ தளவாடங்கள் எம்மாத்திரம்?

அபாயம் மேலும் நெருங்கி வருந்தோறும் வியன்னாவில் குழப்பம் மேலும் அதிகரித்தது. தலைநகருக்கு அருகே ஒரு சில மைல்கள் தொலைவில் முகாமடித்திருந்த பெர்சலின் ஹங்கேரிய சேனையை உதவிக்கு அழைப்பதற்கு கடைசி நொடிவரையில் நாடாளுமன்றத்துக்குப் போதிய ஊக்கம் இருக்கவில்லை. பாதுகாப்புக் கமிட்டி முரண்பாடான தீர்மானங்களை நிறைவேற்றியது. கமிட்டி உறுப்பினர்களும் ஆயுதமேந்திய மக்கள் திரளினரைப் போலவே, வதந்திகள் மற்றும் எதிர் வதந்திகளின் அலைபாய்தலின் ஏற்ற இறக்கங்களுடன் மாறிமாறி மேலும் கீழும் ஊடாடினார்கள். ஒரே ஒரு காரியத்தில், அதாவது சொத்தை மதிப்பதில் மட்டுமே எல்லோரும் உடன்பட்டார்கள், இது அத்தகைய காலத்தில் பெரும்பாலும் கேலிக்கூத்தானது என்று கருதப்படும் அளவுக்குச் செய்யப்பட்டது. தற்காப்புத் திட்டத்திற்கான இறுதி ஏற்பாடுகளைப் பொருத்தவரை மிகவும் அற்பமானவையே செய்யப்பட்டன. வியன்னாவை எவரேனும் காப்பாற்ற முடியுமானால் அதைச் செய்யக் கூடிய ஒரே நபரான

பேம் அப்போது வியன்னுவில் ஏறத்தாழ யாருக்கும் தெரியாத ஓர் அன்னியராக இருந்தார். பிறப்பால் ஸ்லாவேனியனுன அவர், சர்வப் பொதுவான அவநம்பிக்கையால் இந்தப் பணியைக் கைவிட்டுவிட்டார். அவர் இதில் விடாது முயன்றிருப்பாராளுல் துரோகி என்பதாகத் தான்தோன்றித்தனமாகக் கொலை செய்யப்பட்டிருப்பார். ஒரு கீழ்நிலை ராணுவ அதிகாரி கூட என்பதை விட அதிகமாக ஒரு நாவலாசிரியராக இருந்த கலகப் படைகளின் தளபதி மெசன்ஹாசர் இந்தப் பணிக்கு முற்றும் தகாதவராக இருந்தார். இருப்பினும் எட்டுமாத கால புரட்சிப் போராட்டத்துக்குப் பிறகும் மக்கள் கட்சியால் இவரை விட அதிக ஆற்றலுடைய ஒரு ராணுவத் தலைவரை உருவாக்கவோ அல்லது பெறவோ இயலவில்லை. இவ்வாறு போராட்டம் தொடங்கியது. அறவே போதுமானதல்லாத தற்காப்பு சாதனங்களைக் கொண்டிருந்த போதிலும், ராணுவத் திறமையோ ஒழுங்கமைப்போ அணிகள் மத்தியில் அறவே இல்லாதிருந்த போதிலும், வியன்னு மக்கள் மிகவும் வீரமாக எதிர்த்துப் போராடினுர்கள். பல இடங்களில் பேம் தலைமை தாங்கிய போது ''இந்த இடத்தைக் கடைசி மனிதன் வரை பாதுகாத்து நிற்க வேண்டும்'' என்று அவர் விடுத்த உத்தரவு முழுமையாக நிறைவேற்றப்பட்டது. ஆனுல் பலப்பிரயோகம் மேலோங்கி நின்றது. புறநகரின் பிரதான வீதிகளாயமைந்த நீண்டதும் அகன்றதுமான பாதைகளில் சாம்ராஜ்ய பீரங்கிப் படையினர் தெருத் தடையரணுக்குப் பின் தடையரணைத் தகர்த்து அழித்தனர். இரண்டாம் நாள் போராட்டத்தின் போது குரோஷியப் படைகள் பழைய நகரின் கோட்டை மதிலுக்கு எதிரில் சில வீடுகளைக் கைப்பற்றிக் கொண்டன. ஹங்கேரிய சேனையின் தீனமான ஒழுங்கு குலைந்த தாக்குதல் அறவே முறியடிக்கப்பட்டது. போர் நிறுத்தத்தின் போது பழைய நகரில் இருந்த சில படைப்பிரிவுகள் சரணடைந்தன. அதே போதில் வேறு சில தயங்கி நின்று குழப்பத்தைப் பரப்பின. அதே சமயம் மாணவர் படையணியின் மீதமிருந்த பகுதிகள் புதிய காப்பரண்களைத் தயார் செய்தன. சாம்ராஜ்யத் துருப்புக்கள் உட்பிரவேசித்தன,

இந்தப் பொதுவான அமைதிக் குலேவின் மத்தியில் பழைய நகரம் வலிந்து கைப்பற்றப்பட்டது.

இந்த வெற்றியின் உடனடியான பின்விளைவுகள்: ராணுவச் சட்டத்தின் கொடுமைகள், கொலேச் செயல்கள், வியன்னு மீது கட்டவிழ்த்து விடப்பட்ட ஸ்லாவேனியக் கும்பல்கள் புரிந்த முன் என்றும் கேட்டிராத குரூரச் செயல்கள், இழி செயல்கள் ஆகியவை நாடறிந்தவை என்பதால் இங்கு நாம் அவற்றை விவரிக்க முனேயவில்லே. அப்பாற்பட்டதான பின்விளைவுகளேப் பற்றி, வியன்னுவில் புரட்சி தோற்கடிக்கப்பட்டதால் ஜெர்மன் விவகாரங்களுக்கு ஏற்பட்ட புதிய திருப்பம் முழுவதையும் பற்றிப் பின்னுல் குறிப்பிட முகாந்தரம் உள்ளது. வியன்னு தாக்கப்பட்டது சம்பந்தமாக கவனத்திற் கொள்ள வேண்டிய இரண்டு விஷயங்கள் உள்ளன. இந்தத் தலேநகரத்து மக்களுக்கு இரண்டு நேச சக்திகள் இருந்தனர்: ஹங்கேரியரும் ஜெர்மன் மக்களும். இந்த சோதனேயான நேரத்தில் அவர்கள் எங்கே இருந்தார்கள்?

வியன்னு மக்கள் புதிதாக விடுதலேபெற்ற மக்களின் பெருந்தன்மையுடன், இறுதியாக அவர்களது சொந்த லட்சியமாகப் போவதும் ஆனுல் முதற்கண் எல்லாவற்றுக்கும் மேலாக ஹங்கேரியரின் லட்சியமாக இருப்பதுமான ஒரு லட்சியத்துக்காக எழுச்சியுற்று முன்வந்துள்ளனர். ஆஸ்திரியத் துருப்புக்கள் ஹங்கேரி மீது படையெடுப்பதை விட, அவர்கள் தாமே தம்மீது முதலாவதான மிகவும் பயங்கரமான தாக்குதலே ஏற்றுக் கொள்ள முன்வந்தார்கள். இவ்வாறு, அவர்கள் தமது நேச சக்திகளுக்கு ஆதரவாகப் பெருந்தன்மையுடன் முன்வந்த அதே போதில், யெலாச்சிச்சை எதிர்த்து வெற்றி பெற்ற ஹங்கேரியர்கள் அவரை வியன்னுவுக்கு விரட்டி விட்டார்கள், தமது வெற்றி மூலம் அந்த நகரத்தைத் தாக்கவிருந்த படைகளே வலுப்படுத்திஞர்கள். இந்த சந்தர்ப்பச் சூழலின் கீழ் ஹங்கேரியின் தெட்டத் தெளிவான கடமை வியன்னுவிலிருந்த நாடாளுமன்றமோ, பாதுகாப்புக் கமிட்டி அல்லது வியன்னுவில் இருந்த இதர அமைப்புகளேயோ ஆதரிப்பதல்ல, மாருக

வியன்ணு புரட்சியைத் தாமதம் இன்றி தம் வசமிருந்த சகல படைகளையும் கொண்டு ஆதரிப்பதேயாகும். ஹங்கேரிக்கு ஆதரவான முதல் போராட்டத்தை வியன்ணு மேற்கொண்டு நடத்தியது என்பதைக் கூட ஹங்கேரி மறந்து விட்ட போதிலும், வியன்ணு மட்டுமே ஹங்கேரிய சுதந் திரத்தின் ஒரே காவல் அரணுகும் என்பதையும், வியன்ணு வின் வீழ்ச்சிக்குப் பிறகு தன்னை எதிர்த்து வரும் சாம் ராஜ்யத் துருப்புக்களின் முன்னேற்றத்தை வேறு எதனுலும் எதிரிட முடியாது என்பதையும் தனது சொந்தப் பாது காப்பை உத்தேசித்தாவது ஹங்கேரி மறந்துவிடக் கூடாது. வியன்ணு முற்றுகையிடப்பட்டுத் தாக்கப்பட்ட போது தாம் செயலற்று இருந்ததை ஆதரித்து வாதாட ஹங்கேரியர் கள் என்ன சொல்ல முடியும், என்ன சொல்லியிருக்கிருர்கள் என்பது நமக்கு நன்ருகத் தெரியும்: அவர்களது படையின் பற்ருக்குறை நிலைமை, வியன்ணுவில் இருந்த நாடாளு மன்றம் அல்லது வேறு எந்த ஒரு இதர அதிகார பூர்வமான அமைப்பும் அப்படைகளைக் கோரி அழைக்க மறுத்தது, அரசிய லமைப்புச் சட்டத்தின் கட்டை மீருமல் இருப்பது மற்றும் ஜெர்மன் மத்திய ஆட்சி அதிகாரத்துடன் சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுவதன் அவசியம் இத்தியாதி. ஆனல் உண்மை என்னவெனில், ஹங்கேரிய சேனையின் பற்ருக்குறை நிலைமையைப் பொருத்த வரை, வியன்ணுப் புரட்சியின் ஆரம்ப நாட்கள் மற்றும் யெலாச்சிச்சின் வரு கைக்குப் பிறகு, ஆஸ்திரியாவின் முறைப்படைகள் ஒரு முகப் படுத்தப்படவில்லையாதலால், முறையான துருப்புக்கள் எனும் வடிவில் எதுவும் தேவைப்படவில்லை என்பதே. அதோடு யெலாச்சிச் மீது கிட்டிய முதல் வெற்றியை வீரத் தோடும் விட்டுக்கொடுக்காமலும் உறுதிப்படுத்தி இருந்தால் ஷ்டுல்வெய்சன்பர்கில் போராடிய மக்கள் படையைத் தவிர வேறு எதுவுமே இல்லாவிடினும் கூட அது வியன்ணு மக்க ளுடன் ஒரு சந்திப்பை ஏற்படுத்துவதற்கும், ஆஸ்திரிய சேனை யின் ஒவ்வொரு ஒன்றுகுவிப்பையும் அந்த நாளில் இருந்து ஆறு மாதங்களுக்கு ஒத்திப்போடவும் போதுமானதாகும். போரில், குறிப்பாயும் புரட்சிகரப் போர் நடவடிக்கையில்,

ஏதேனும் ஒரு நிர்ணயமான சாதகத்தை வென்றுபெறும் வரையில் துரிதமாகச் செயல்பட வேண்டும் என்பது முதல் விதியாகும். ஆகவே, முற்றிலும் ராணுவக் காரணங்களால் மட்டுமே கூட பெர்சல் வியன்னு மக்களுடன் தமது சந்திப்பு நிறைவேறும் வரையில் போராடுவதை நிச்சயமாயும் நிறுத்தியிருக்கக் கூடாது என்று எவ்விதத் தயக்கமும் இன்றிக் கூறுவோம். இதில் ஓரளவுக்கு எதிர்பாராத அபாயம் இருப்பது நிச்சயம், ஆனுல் ஏதேனும் இடர்கள் வராமல் போராட்டத்தில் யாரேனும் வெற்றி பெற்றிருக்கிருர்களா? பன்னிரண்டு மில்லியன் ஹங்கேரியர்களைப் படையெடுத்து வெல்லச் சென்ற படைகளைத் தம் மீது—நான்கு லட்சம் மக்கள் தொகை மீது—ஈர்த்துக் கொண்ட போது வியன்னு மக்கள் எதிர்பாராத அபாயத்தை எதிரிடாமலா இருந்தார்கள்? ஆஸ்திரியர்கள் ஒன்றிணைந்து விடும் வரையில் காத்திருந்தது மூலமும், ஷ்வெஹாட்டில் அதற்குத் தகுதியான முறையில் இழிவான தோல்வியில் முடிவுற்ற, தீனமான ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது மூலமும் ஒரு ராணுவத் தவறு செய்யப்பட்டது. இந்த ராணுவத் தவறு, யெலாச்சிச்சின் கலைக்கப்பட்ட கொள்ளைக்காரர்களை எதிர்த்து வியன்னு மீது உறுதியாகப் படையெடுத்துப் போவதன் மூலம் ஏற்படுவதைக் காட்டினும் அதிகமான அபாயத்தை உண்டாக்கியது.

ஏதேனும் அதிகாரபூர்வமான அமைப்பு மூலம் அங்கீகரிக்கப்படாமல் இத்தகைய முறையில் ஹங்கேரியர்கள் முன்னேறிச் செல்வது என்பது ஜெர்மன் பிரதேசத்தை அத்துமீறுவதாகும். இது பிராங்க்பர்ட்டில் உள்ள மத்திய ஆட்சியுடன் சிக்கல்களை ஏற்படுத்தும், எல்லாவற்றுக்கும் மேலாக ஹங்கேரியர்களின் இயக்கத்துக்குப் பலத்தைக் கொடுத்த சட்டபூர்வமான மற்றும் அரசியலமைப்புச் சட்டக் கொள்கையைக் கைவிடுவதாகும் என்று கூறப்படுகிறது. ஆனுல் வியன்னுவில் இருந்த அதிகாரபூர்வ அமைப்புகள் மதிப்பில்லாதவையாகப் போனது ஏன்! ஹங்கேரியை ஆதரித்து எழுச்சியுற்று முன்வந்தது நாடாளுமன்றமா, ஜனநாயகக் கமிட்டிகளா? அல்லது ஹங்கேரியின் சுதந்திரத்துக்கான

முதல் போராட்டத்தின் தாக்குதலை எதிர்த்துத் தாம் மட்டுமே துப்பாக்கியை எடுத்த வியன்ன மக்களா? வியன்னவின் அதிகாரபூர்வமான இந்த அமைப்பை அல்லது அந்த அமைப்பை ஆதரிப்பது முக்கியம் என்பதல்ல பிரச்சினை—புரட்சிகர மாற்றத்தின் வளர்ச்சிப் போக்கில் இந்த அமைப்புகள் எல்லாமே கவிழ்க்கப்படலாம், வெகுவிரைவில் கவிழ்க்கப் பட்டுவிடும்—ஆனால் புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சியும், பொதுஜனப் போராட்டத்தின் இடைவிடாத முன்னேற்றமும் மட்டுமே முக்கியமாகும், இது மட்டுமே ஹங்கேரியைப் படையெடுப்பில் இருந்து பாதுகாத்திருக்க முடியும். வியன்னவும் பொதுப்பட ஜெர்மன் ஆஸ்திரியாவும் பொது விரோதிக்கு எதிராகத் தமது நேச உறவைத் தொடர்ந்து வைத்திருக்கும் வரை இந்தப் புரட்சி இயக்கம் பின்னல் என்ன வடிவங்களை மேற்கொள்ளலாம் என்பது வியன்ன மக்களின் விவகாரமாகும், ஹங்கேரியர்களின் விவகாரமல்ல. ஆனல் இங்கு எழும் கேள்வி என்னவென்றால், ஏதோ ஒரு போலி சட்டமுறை அங்கீகாரத்துக்கான ஹங்கேரிய அரசாங்கத்தின் பிடிவாதமான நாட்டத்தில் ஓரளவு சந்தேகமான சட்ட முறையின் பாலான உரிமை கொண்டாடலின் முதல் தெளிவான அடையாளத்தை நாம் காணவில்லையா என்பதே. இந்தக் கோரிக்கை ஹங்கேரியைப் பாதுகாக்கவில்லை என்றாலும், பிந்திய காலகட்டத்தில் ஆங்கில முதலாளி வர்க்கப் பகுதியினர் முன்னல் குறைந்தபட்சம் மிகச் சிறப்பான விளைவுகளை ஏற்படுத்தியது.

பிராங்க்பர்ட்டில் இருந்த ஜெர்மனியின் மத்திய ஆட்சி அதிகாரத்துடன் மோதல்கள் சாத்தியம் என்ற சாக்குப் போக்கைப் பொருத்தவரை அது முற்றிலும் ஆதாரமற்றதாகும். பிராங்க்பர்ட் அதிகாரிகள் வியன்னவில் எதிர்ப்புரட்சி வெற்றியடைந்ததால் நடைமுறையில் குழப்பமடைந்திருந்தனர். அங்கு இப்புரட்சி தனது விரோதிகளை முறியடிப்பதற்கு அவசியமான ஆதரவைப் பெற்றிருக்கும் பட்சத்தில் அவர்கள் இதே அளவுக்குக் குழப்பமடைந்திருப்பார்கள். கடைசியாக, ஹங்கேரி சட்டத்துறை மற்றும் அரசியலமைப்புச் சட்ட அடிப்படையை விட்டுவிடக் கூடாது

எனும் மாபெரும் வாதம் பிரிட்டிஷ் வர்த்தக சுதந்திரத்தினர்[47] விஷயத்தில் மிகவும் நன்முகவே பொருந்தலாம், ஆனுல் வரலாற்றின் பார்வையில் இது போதுமானது என்று என்றுமே கருத முடியாது. வியன்ன மக்கள் மார்ச் 13ந் தேதியும் அக்டோபர் 6ந் தேதியும் ''சட்டம் மற்றும் அரசியலமைப்புச் சட்ட'' முறைகளை விடாது பற்றி நின்றிருந்தார்கள் என்று வைத்துக் கொள்வோம். பிறகு ''சட்டம் மற்றும் அரசியலமைப்புச் சட்ட'' இயக்கமும் ஹங்கேரியை நாகரிக உலகின் பார்வைக்கு முதலில் கொண்டுவந்த எல்லாப் புகழார்ந்த போராட்டங்களும் என்னவாகும்? 1848 மற்றும் 1849ல் ஹங்கேரியர்கள் எதன்மீது இயங்கிஞர்கள் என்று அடித்துக் கூறப்பட்டதோ அதே சட்டம் மற்றும் அரசியலமைப்புச் சட்ட அடிப்படை மார்ச் 13ந் தேதி வியன்ன மக்கள் நடத்திய மிகவும் சட்டவிரோதமான, அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரான எழுச்சியால் வென்று பெறப்பட்டதாகும். இங்கு ஹங்கேரியின் புரட்சி வரலாற்றை விவாதிப்பது நமது நோக்கமல்ல. ஆனுல் இத்தகைய நேர்மை உணர்வுகளை ஏளனம் செய்யும் ஒரு விரோதிக்கு எதிராக சட்டபூர்வமான போராட்ட முறைகளை மட்டுமே கையாள்வது என்பது அறவே பயனற்றது என்று கூறுவது முற்றிலும் சரியானது என்று நாம் கருதுகிருேம். கோர்கேய் எதைப் பிடித்துக் கொண்டு அரசாங்கத்துக்கு எதிராக முடுக்கி விட்டாரோ அந்த நிரந்தரச் சட்டமுறைக் கோரிக்கை இல்லாதிருந்திருக்குமானுல், கோர்கேயின் சேனை தனது ஜெனரல் பால் தோற்றுவித்த விசுவாசமும் விலகோஷின் அவமானகரமான படுதோல்வியும் சாத்தியமாகி இராது.[48] கடைசியாக, தமது தன்மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஹங்கேரியர்கள் 1848 அக்டோபர் பிற்பாதியில் லெய்டா நதியைக் கடந்த போது அது எந்தவொரு உடனடியான உறுதியான தாக்குதலையும் போலவே முற்றிலும் சட்டவிரோதமான நடவடிக்கையாக இருக்கவில்லையா?

நாம் ஹங்கேரியின் பால் எவ்வித விரோத உணர்வும் கொண்டிருக்கவில்லை. போராட்டத்தின் போது நாம்

அதற்கு ஆதரவாக நின்றோம்; எமது ஏடான *Neue Rheinische Zeitung*[49] ஹங்கேரியர்களின் குறிக்கோளுக்கு ஜெர்மனியில் பொதுஜன ஆதரவைத் திரட்டித் தருவதில் வேறு எந்தப் பத்திரிகையை விடவும் அதிகமான சேவை புரிந்துள்ளது என்று நாம் சொல்ல முடியும். மத்யார் மற்றும் ஸ்லாவேனிய இனங்களின் இடையேயான போராட்டத்தின் தன்மையை விளக்கிக் கூறுவது மூலமும், ஹங்கேரியப் போரைக் குறித்து தொடர்ச்சியாகப் பல கட்டுரைகளை வெளியிட்டும் இந்த சேவை புரியப்பட்டது. இந்தக் கட்டுரைகள், பின்னால் வெளியிடப்பட்ட இந்த விஷயம் சம்பந்தப்பட்ட இதர புத்தகங்களிலும், சுதேசி ஹங்கேரியர்கள் மற்றும் ''நேரடியாகக் கண்டவர்கள்'' எழுதிய நூல்களிலும் விதிவிலக்கின்றி காப்பியடிக்கப்பட்டதன் மூலம் பாராட்டும் பெற்றுள்ளன. இப்போதுங்கூட, மாகண்டத்தில் ஏற்படவிருக்கும் எந்தவொரு எதிர்காலக் கொந்தளிப்பிலும் ஹங்கேரியை ஜெர்மனியின் இன்றியமையாத இயல்பான நேச சக்தியாகவே நாம் கருதுகிறோம். சொந்த நாட்டவர் மீது நாம் அதிகமான கண்டிப்பைக் காட்டியிருப்பதால், நமது அண்டை நாட்டவர்களை விமர்சிக்க நமக்கு உரிமையுண்டு. மேலும் இங்கு நாம் மெய்விவரங்களை வரலாற்று நடுநிலைமையுடன் பதிவு செய்ய வேண்டி இருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தில் வியன்னா மக்களின் பெருந்தன்மையான வீரம் ஹங்கேரிய அரசாங்கத்தின் எச்சரிக்கையான முன் கவனத்தை விடவும் பெருமளவு உன்னதமானது மட்டுமல்ல, அதோடு கூட மேலும் அதிகத் தொலைநோக்குடையதுமாகும் என்று கட்டாயம் கூறியே தீர வேண்டும். ஜெர்மானியர் என்ற முறையில் நாங்கள் ஹங்கேரிய இயக்கத்தின் ஆடம்பரமான வெற்றிகள் மற்றும் புகழார்ந்த போராட்டங்களுக்கு மாற்று என்ற அளவில் ஒரு சேனையை ஒழுங்கமைத்து, இத்தகைய மாபெரும் சாதனைகளைப் புரிய அவகாசம் அளித்த எமது நாட்டவரான வியன்னா மக்களின் தன்னியல்பான, தன்னந்தனியான எழுச்சி மற்றும் வீரஞ்செறிந்த எதிர்ப்பைப் பரிவர்த்தனை செய்து கொள்ள மாட்டோம் என்று மேலும் கூறுகிறோம்.

வியன்னுவின் இரண்டாவது நேச சக்தி ஜெர்மன் மக்கள். ஆனுல் அவர்கள் வியன்னு மக்களைப் போலவே இதே போராட்டத்தில் எங்கும் ஈடுபட்டிருந்தார்கள். பிராங்க்பர்ட், பாடேன், கொலோன் ஆகியவை இப்போதுதான் முறியடிக்கப்பட்டு நிராயுத பாணியாக்கப்பட்டன. பெர்லினிலும் பிரெஸ்லாவிலும்* சேனையுடன் மக்கள் பகைமை நிலையில், தினசரி மோதலில் இறங்கக்கூடிய நிலையில் இருந்தனர். இயக்கத்தின் வட்டார மையங்கள் அனைத்திலும் இவ்வாறே இருந்தது. ஒவ்வொரு இடத்திலும் ஆயுத பலம் மூலம் மட்டுமே தீர்வு காணத்தக்க பிரச்சினைகள் முடிவுக்காகக் காத்திருந்தன. இப்போதுதான் முதல் தடவையாக ஜெர்மனியின் பழைய துண்டாடல் மற்றும் பரவலாக்கலின் அவலமான பின்விளைவுகள் கடுமையாக உணரப்பட்டன. ஒவ்வொரு அரசிலும் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு நகரிலும் எழுந்த பல வகைப்பட்ட பிரச்சினைகள் அடிப்படையில் ஒன்ருகவே இருந்தன. ஆனுல் அவை எல்லா இடங்களிலும் வெவ்வேறு உருவங்களின் மற்றும் சாக்குப்போக்குகளின் கீழ் முன்கொணரப்பட்டன, மேலும் எல்லா இடங்களிலும் பல்வேறு அளவில் முதிர்ச்சி அடைந்திருந்தன. இவ்வாருக, ஒவ்வொரு வட்டாரத்திலும் வியன்னு நிகழ்ச்சிகளின் நிர்ணயகரமான முக்கியத்துவம் உணரப்பட்ட அதேபோதில் வியன்னு மக்களுக்கு உதவியைக் கொண்டு வரவோ, அல்லது அவர்களுக்கு ஆதரவாக ஒரு திருப்பத்தை உண்டாக்கவோ நம்பிக்கை தரும் வகையில் எங்குமே முக்கியமான தாக்குதல் தொடுக்கப்படவில்லை. நாடாளுமன்றமும் பிராங்க்பர்ட்டிலிருந்த மத்திய ஆட்சி அதிகாரமும் தவிர அவர்களுக்கு உதவி நல்கிட வேறு எதுவும் இருக்கவில்லை. எல்லோரும் அவற்றுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். ஆனுல் அவை என்ன செய்தன?

பிராங்க்பர்ட் நாடாளுமன்றமும் மத்திய ஆட்சி அதிகாரம் எனப்படும் பழைய ஜெர்மன் நாடாளுமன்றத்துடன்

* போலிஷ் பெயர்: வ்ரோஸ்லாவ்.—ப-ர்,

அது முறை கேடான உறவின் மூலம் வெளிக்கொணர்ந்த சோரக் குழந்தையும் தமது முற்றிலும் பயனற்ற தன்மையை வெளிக்காட்டிக் கொள்வதற்கு வியன்னு இயக்கத்தைக் கருவியாக்கின. இந்த வெறுக்கத்தக்க சட்டமன்றம் நெடுங்கால முன்பே தனது கன்னிமையைப் பலி கொடுத்து விட்டது என்பதை ஏற்கெனவே கண்டோம். இளமையாக இருந்த அது ஏற்கெனவே நரை கண்டு பசப்புரை மற்றும் போலி அரசுத்தந்திர வேசைத்தனத்தின் எல்லாச் சூழ்ச்சிகளிலும் அனுபவம் பெற்றிருந்தது. ஆரம்பத்தில் அதில் நிறைந்திருந்த அதிகாரம் பற்றியும் ஜெர்மனியின் மறு பிறப்பு மற்றும் ஒற்றுமை குறித்துமான கனவுகள், கற்பனைகள் எதுவுமே நீடிக்கவில்லை. மாருக, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிற ஒரு சில டியூடானிக் பகட்டாரவாரச் சொல்லடுக்கும், ஒவ்வொரு தனி உறுப்பினரும் தனது சொந்த முக்கியத்துவம் அதோடு கூடவே மக்களின் வெகுளித்தனம் குறித்தும் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையும்தான் மீதமாக இருந்தன. ஆரம்ப காலப் பேதைமை களைந்தெறியப்பட்டது; ஜெர்மன் மக்களின் பிரதிநிதிகள் காரியக்கார ஆட்களாக மாறிவிட்டார்கள், அதாவது குறைவாகச் செயல்பட்டு அதிகமாகப் பசப்புவது மூலம் ஜெர்மனியின் கதியை முடிவு செய்வோர் என்ற தமது பதவியை மேலும் பத்திரமாக வைத்திருக்க முடியும் என்பதைத் தெளிவாக அறிந்திருந்தார்கள். தமது நடவடிக்கைகள் தேவைக்கு மிகையானவை என்று அவர்கள் கருதவில்லை, ஆனுல் முற்றிலும் மாருக—தமக்கு விலக்கப்பட்ட பிரதேசமான—உண்மையிலேயே மிகப்பெரிய பிரச்சினைகள் அனைத்திலும் தலையிடாதிருப்பது நல்லது என்பதைக் கண்டு கொண்டார்கள். அங்கே சீர்குலைந்துவரும் சாம்ராஜ்யத்தின்* பைசண்டைன் அறிவாளிகள் கூட்டத்தைப் போன்று, தம்மைக் கடைசியாக எட்டிய கதிக்குத் தக்கதான முக்கியத்துவம் மற்றும் இடைவிடா கவனிப்புடன்,

---

* கிழக்கத்திய ரோமானிய சாம்ராஜ்யம்.—ப-ர்.

நாகரிக உலகின் எல்லாப் பாகங்களிலும் நீண்டகால முன்பே தீர்வு காணப்பட்டுவிட்ட தத்துவார்த்த வறட்டுச் சூத்திரங்கள் அல்லது எவ்வித மெய்யான பலனுக்கும் என்றுமே இட்டுச் செல்லாத மிக அற்பமான நடைமுறைப் பிரச்சினைகளையும் அவர்கள் விவாதித்தார்கள்: இந்தச் சட்ட மன்றம் அதன் உறுப்பினர்களின் பரஸ்பர போதனைக்கான ஒரு வகை லங்காஸ்டிரியப் பள்ளியாக[50] இருந்து, மேலும் அவர்களுக்கு அது முக்கியமானதாக இருந்தால், ஜெர்மன் மக்கள் உரிமையுடன் எதிர்பார்ப்பதை விடவும் அதிகமாகப் பணியாற்றி வருவதாகவும் அதன் உறுப்பினர்கள் ஏதேனும் ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று கேட்கும் துடுக்கான பேர்வழிகளை நாட்டின் துரோகிகள் என்றும் அவர்கள் திடநம்பிக்கை கொண்டார்கள்.

வியன்னா புரட்சி எழுச்சி துவங்கிய போது அதன் மீது எண்ணற்ற இடைவினாக்கள், விவாதங்கள், பிரேரணைகள், திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன, ஆனால் இவற்றால் எதுவும் சாதிக்கப்படவில்லை என்பது திண்ணம். மத்திய ஆட்சி அதிகாரம் குறுக்கிடுவதாக இருந்தது. அது இரு கமிஷனர்களான முன்னாள் மிதவாதி வெல்கர் மற்றும் மோஸ்லே வகையறாவை வியன்னாவுக்கு அனுப்பி வைத்தது. ஜெர்மன் ஒற்றுமையின் இந்த இரண்டு கோமாளி வீரர்களின் வீர சாகசங்கள் மற்றும் அதிசயமான துணிகரச் செயல்களுடன் ஒப்புநோக்கும் போதில் டான்-குவிக்சாட் மற்றும் சான்சோ பான்சாவின் பயணங்கள் ஒரு நெடும்பயணக் காவியத்தின் கருப்பொருளாக உருவெடுக்கும் எனலாம். வியன்னாவுக்குப் போகத் தைரியமின்றி இருந்த அவர்கள் விண்டிஷ்கிராட்சால் மிரட்டப்பட்டனர், மூடச் சக்கரவர்த்தியால்* அதிசயத்துடன் பார்க்கப்பட்டனர், அமைச்சர் ஸ்டாடியனால் துடுக்கான முறையில் ஏமாற்றப்பட்டனர். அவர்களது அனுப்புச் செய்திகளும் அறிக்கைகளும்தான் ஒருவேளை ஜெர்மன் இலக்கியத்தில் நிச்சயம் இடம் பெறப்போகும் பிராங்க்பர்ட் விவகாரங்களின் ஒரே பகுதியாகும் போலும்.

* முதலாம் ஃபெர்டினாண்டு.—ப-ர்.

அவை முன்னேற்பாடாகத் தயார் நிலையில் உள்ள அப்பட்டமான நையாண்டிக் கற்பனைக் கதையாகும், அதோடு பிராங்க்பர்ட் சட்டமன்றத்துக்கும் அதன் அரசாங்கத்துக்கும் உரிய அவமானத்தின் ஒரு நிரந்தரச் சின்னமாகும்.

சட்டமன்றத்தின் இடதுசாரியும்[51] அங்கு தனது செல்வாக்கை ஆதரிக்கும் பொருட்டு இரண்டு கமிஷனர்களை வியன்னாவுக்கு அனுப்பி வைத்தது—பிரோபெல் மற்றும் ராபர்ட் ப்ளூம் வகையறா. அபாயம் கிட்ட நெருங்கிய போது ப்ளூம், இங்குதான் ஜெர்மன் புரட்சியின் மாபெரும் போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்பதைச் சரியானபடி முடிவு செய்து, இப்பிரச்சினையின் மீது தன் தலையைப் பணயம் வைக்கத் தீர்மானித்தார். பிரோபெலோ இதற்கு நேர்மாறாக, பிராங்க்பர்ட்டில் தமது பதவியின் முக்கியமான பணிகளுக்காகத் தம்மைத் தாமே பேணிவைத்துக் கொள்வது தமது கடமை என்று கருதினார். ப்ளூம் பிராங்க்பர்ட் சட்டமன்றத்தில் இருந்த மிகவும் சால்வன்மைமிக்க நபர்களில் ஒருவராகக் கருதப்பட்டார். அவர் மக்களால் மிகவும் விரும்பப்பட்டார் என்பது நிச்சயம். அவரது சால்வன்மை அனுபவமிகுந்த நாடாளுமன்ற அவையின் சோதனையில் தேறியிருக்க முடியாது, அவர் ஜெர்மன் சமய மறுப்புப் பிரசாரகரின் ஆழமற்ற உணர்ச்சி முழக்கத்தை மிகவும் விரும்பினார். அவரது வாதங்களில் தத்துவஞான மதிக்கூர்மை மற்றும் நடைமுறை உண்மை பற்றிய பரிசயம் இரண்டும் தேவைப்பட்டன. அரசியலில் அவர் ''மிதமான ஜனநாயகவாதத்தைச்'' சார்ந்தவராக இருந்தார். இது ஓரளவு தெளிவற்ற வகைப்பட்ட ஒன்றாக இருந்தது, தனது கோட்பாடுகளில் நிலவிய இந்தத் தெளிவின்மை காரணமாகவே இது போற்றி வரவேற்கப்பட்டது. இவை எல்லாவற்றுடன் கூடவே ராபர்ட் ப்ளூம் இயல்பாகவே, ஓரளவுக்கு நயமானவர் என்றாலும் ஒரு முற்றமுழு பாமரக் குடிமகன் ஆவார். தீர்மானகரமான தருணங்களில் அவரது பாமர இயல்புணர்வும் பாமர ஊக்கமும் அவரது தெளிவில்லாத எனவே தீர்மானகரமல்லாத அரசியல் நம்பிக்கையையும்

அறிவையும் விஞ்சி மேம்பட்டு நின்றன. அத்தகைய தருணங்களில் அவர் தமது திறமைகளின் வழக்கமான தரத்தைக் காட்டிலும் தம்மை மிகவும் மேம்படுத்திக் கொண்டார்.

இவ்வாறாக வியன்னாவில் அவர், பிராங்க்பர்ட்டின் போலி நாகரிகமான விவாதங்களின் மத்தியில் அல்ல, இங்கு தான் தமது நாட்டின் கதி முடிவு செய்யப்பட வேண்டும் என்பதை ஒரே பார்வையில் கண்டுகொண்டார். உடனே அவர் மனதில் உறுதி கொண்டார், பின்வாங்குவது என்ற கருத்தை எல்லாம் கைவிட்டார், புரட்சிகரப் படையில் தலைமைப் பொறுப்பை மேற்கொண்டார், அசாதாரணமான அமைதியுடனும் மனவுறுதியுடனும் நடந்து கொண்டார். நகரத்தைக் கைப்பற்ற இயலாதபடி கணிசமான காலம் தடங்கல் செய்து, டான்யூப் நதி மீதான டபோர் பாலத்தைக் கொளுத்தியது மூலம் நகரின் ஒரு புறத்தைத் தாக்குதலில் இருந்து பாதுகாத்தவர் இவரே. நகரைத் தாக்கிக் கைப்பற்றிய பிறகு அவர் எவ்வாறு கைது செய்யப்பட்டார், ராணுவ நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட்டார் மற்றும் சுடப்பட்டார் என்பதை எல்லோரும் அறிவர். அவர் ஒரு வீரரைப் போல் உயிர் துறந்தார். எனினும் பீதியால் தாக்குண்ட பிராங்க்பர்ட் சட்டமன்றம் இந்தக் கொடுமையான அவமானத்தை நல்லிணக்கப் பாங்குடன் எடுத்துக் கொண்டது. ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் நடையின் மென்மையையும் அரசுத்தந்திர நயத்தையும் பார்த்தால் ஆஸ்திரியா மீதான கண்டனக் களங்கம் என்பதைவிடவும் அதிக அளவுக்கு அது கொலை செய்யப்பட்ட தியாகியின் சமாதியை இழிவு செய்வதாகவே இருந்தது. இந்த வெறுக்கத்தக்க சட்டமன்றம், தனது உறுப்பினர் ஒருவர், குறிப்பாயும் இடதுசாரித் தலைவர் கொலை செய்யப்பட்டதைக் கண்டனம் செய்யும் என்று எதிர்பார்க்கவே இடமில்லை.

லண்டன், *1852* மார்ச்

## 13

## பிரஷ்ய அரசியல் நிர்ணய சபை. தேசிய சட்டமன்றம்

*நவம்பர் 1ந் தேதி வியன்னு வீழ்ச்சியடைந்தது. இதே மாதம் 9ந் தேதி பெர்லினில் அரசியல் நிர்ணய சபை கலேக்கப்பட்டதானது இந்த நிகழ்ச்சி உடனடியாக ஜெர்மனி முழுவதிலும் எதிர்ப்புரட்சிக் கட்சியின் வீரியத்தையும் வலிமையையும் எந்த அளவுக்கு உயர்த்தியது என்பதைப் புலப்படுத்தியது.*

*1848 கோடையில் பிரஷ்யாவில் நடந்த சம்பவங்களேப் பற்றிக் கூறுவதற்கு அதிக நேரம் தேவையில்லே. அரசியல் நிர்ணய சபை அல்லது உண்மையில் ''அரசருடன் ஓர் அரசியலமைப்புச் சட்டம் குறித்து உடன்பாடு கொள்ளும் நோக்கத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையும்'', முதலாளி வர்க்க நலன்களின் பிரதிநிதிகளான அதன் பெரும்பான்மையும் மக்கள் தொகையின் அதிக ஊக்கமிகுந்த சக்திகளேக் கண்டு அஞ்சி அரசவையின் சகல சூழ்ச்சிச் செயல்களுக்கும் இடமளித்ததால் நீண்ட காலமுன்பே பொதுஜன மதிப்பு அனேத்தையும் இழந்து விட்டிருந்தன. அவை நிலப்பிரபுத்துவத்தின் வெறுக்கப்படுகிற தனியுரிமைகளே உறுதிப்படுத்தின, அல்லது உண்மையில் மீட்டளித்தன; இவ்வாறு விவசாயி மக்களின் சுதந்திரத்துக்கும் நலனுக்கும் துரோகம் செய்தன. அவற்றுல் ஓர் அரசியலமைப்புச் சட்டத்தை உருவரை செய்ய முடியவில்லே, பொதுவான சட்டத் துறையை எந்த வழியிலும் மேம்படுத்தவும் முடியவில்லே. அவை நயமான தத்துவார்த்தத் தனிவேறுபாடுகள், வெறும் சம்பிரதாயங்கள் மற்றும் அரசியலமைப்புச் சட்ட சம்பிரதாய முறைகள் பற்றிய பிரச்சினேகளில் கிட்டத்தட்ட முற்றமுழுமையாயும் ஈடுபட்டிருந்தார்கள். இந்த சபை, உண்மையில் மக்கள் அக்கறை காட்ட வேண்டிய ஓர் அமைப்பு என்பதை விட அதிகமாக அதன் உறுப்பினர்களுக்கான நாடாளுமன்ற*

savoir vivre* பயிற்றுவிக்கும் பள்ளியாக இருந்தது. தவிரவும் பெரும்பான்மைகள் மிகவும் நயமான முறையில் சமநிலையில் இருந்தன, ஊசலாடும் ''மையவாதிகள்'' மூலம் எப்போதும் முடிவு செய்யப்பட்டன. இவர்கள் வலது புறம் இருந்து இடதுபக்கமும் பின்னது முன்னதாயும் ஊசலாடியதன் வழி முதலில் காம்ப்ஹாவுசன் அமைச்சரவையினையும், பிறகு அவுயர்ஸ்வால்ட் மற்றும் ஹான்செமன் அமைச்சரவையினையும் கவிழ்த்தார்கள். இவ்வாறு வேறு எல்லா இடங்களிலும் போலவே இங்கும் மிதவாதிகள் சந்தர்ப்பத்தைக் கைநழுவ விட்டபொழுது, அரசவை பிரபுக்குலத்தவர், நாட்டுப்புற மக்களிடையில் மிகவும் மேம்பாடடையாத பகுதியினர், அதோடு ராணுவம் மற்றும் அதிகாரவர்க்கம் ஆகியோரைக் கொண்ட தனது சக்தியை மறு சீரமைத்துக் கொண்டது. ஹான்செமனது வீழ்ச்சிக்குப் பிறகு பற்றுறுதியுள்ள பிற்போக்காளர்களான அதிகாரவர்க்கத்தினர் மற்றும் ராணுவ அதிகாரிகளைக் கொண்டதான ஓர் அமைச்சரவை நிறுவப்பட்டது. இது நாடாளுமன்றத்தின் கோரிக்கைகளுக்கு இணங்கியதாகப் பாசாங்கு செய்தது. சபையோ ''மனிதர்களல்ல—நடவடிக்கைகளே'' பிரதானம் எனும் ஒரு வசதியான கோட்பாட்டின் மீது செயல்பட்டு இந்த அமைச்சரவையைப் பாராட்டும் அளவுக்கு உள்ளபடியே ஏமாற்றப்பட்டது. அதே சமயம் இதே அமைச்சரவை ஏறத்தாழ வெளியரங்கமாகவே எதிர்ப்புரட்சி சக்திகளை ஒருமுகப்படுத்தி ஒழுங்கமைத்து வந்த செயலைப் பார்க்கவே இல்லை என்பது நிச்சயம். கடைசியாக வியன்னாவின் வீழ்ச்சி சமிக்கை காட்டியபின் மன்னர்** தமது அமைச்சர்களைப் பதவிகளில் இருந்து விலக்கி அவர்களுக்குப் பதில் இன்றைய பிரதமர் மன்தேய்ஃபெல் தலைமையின் கீழ் ''செயல் வீரர்களைப்'' பதவியில் அமர்த்தினார். பின்னர் கனவுலகில் இருந்த இந்த சபை உடனே அபாயத்தை உணர்ந்து விழிப்படைந்தது. அமைச்சரவை மீது நம்பிக்கை இல்லை

* நல்லொழுங்கு.—ப-ர்.

** நாலாவது பிரெடெரிக்-வில்ஹெல்ம்.—ப-ர்.

என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. இதற்குப் பதிலடியாக இந்த சபையை பெர்லினில் இருந்து பிராண்டன்பர்குக்கு அகற்றும்படி அரசாணை பிறப்பிக்கப்பட்டது. பெர்லினில் ஒரு மோதல் ஏற்படுமானுல் இதற்கு மக்கள் திரளின் ஆதரவைப் பெறும் வாய்ப்பு இருந்தது, ஆனுல் பிராண்டன்பர்கோ அரசாங்கத்தையே முற்றிலும் சார்ந்து நின்ற ஒரு சிறிய மாகாண நகரமாகும். ஆனுல், இந்த சபை தனது சொந்த ஒப்புதல் மூலம் அன்றி ஒத்திவைக்கப்படவோ, பெயர்க்கப்படவோ, அல்லது கலைக்கப்படவோ முடியாது என்று பறைசாற்றியது. இதற்கிடையில் நாற்பதாயிரம் பேர் கொண்ட துருப்புக்களின் தலைமையில் ஜெனரல் விராங்கெல் பெர்லினுக்குள் பிரவேசித்தார். நகராட்சி மற்றும் தேசியக் காவற்படை அதிகாரிகளின் கூட்டத்தில் எவ்வித எதிர்ப்பும் காட்ட வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. இப்போது, இந்த சபையும் அதன் உறுப்பினர்களான மிதவாத முதலாளி வர்க்கத்தினரும் ஒன்றிணைந்த பிற்போக்குக் கட்சியினர் எல்லாத் தளங்களையும் எடுத்துக் கொள்ளவும் தமது கரங்களில் இருந்து கிட்டத்தட்ட எல்லா தற்காப்புச் சாதனங்களையும் பறித்துக் கொள்ளவும் இடமளித்ததற்குப் பிறகு, ''சாத்வீக மற்றும் சட்டரீதி எதிர்ப்பு'' எனும் இந்த மாபெரும் நகைச்சுவை நாடகம் தொடங்கியது. இதை அவர்கள் ஹெம்ப்டனின் உதாரணம் மற்றும் அமெரிக்காவின் சுதந்திரப் போரின்[52] ஆரம்ப நடவடிக்கைகளைப் போன்ற ஒரு புகழார்ந்த போலி நடிப்பாக நடத்த உத்தேசம் கொண்டிருந்தார்கள். பெர்லின் முற்றுகை நிலையில் இருப்பதாகச் சாற்றப்பட்டது, எனினும் பெர்லின் சாந்தமாக இருந்தது. தேசியக் காவற்படை அரசாங்கத்தால் கலைக்கப்பட்டது, அதன் ஆயுதங்கள் மிகவும் குறித்த காலத்தில் ஒப்படைக்கப்பட்டன. இந்த சபை இரு வார காலம் கூட்டம் கூடும் ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்குத் துரத்தப்பட்டு ராணுவத்தால் எல்லா இடங்களிலும் கலைக்கப்பட்டது. நகர மக்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று இந்த சபை உறுப்பினர்கள்

கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். கடைசியாக அரசாங்கம் இந்த சபையைக் கலைத்துவிட்டதாக அறிவித்த பிறகு, அது வரிகள் வசூலிக்கப்படுவது சட்ட விரோதமானது என்று சாற்றும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. பிறகு இதன் உறுப்பினர்கள் நாடுமுழுதும் சிதறிச் சென்று வரிமறுப்பு இயக்கத்தை ஒழுங்கமைக்க முனைந்தார்கள். ஆனல் தமது போர் முறையினைத் தேர்வு செய்யும் விஷயத்தில் மோசமான தவறு செய்துவிட்டதைக் கண்டுகொண்டார்கள். பரபரப்பான சில வாரங்களுக்குப் பிறகு, எதிர்க்கட்சிக்கு விரோதமாக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்த நிலையில், தன்னைத்தானே தற்காத்துக் கொள்ளும் தைரியங்கூட இல்லாத ஒரு செயலற்றுப்போன சபையைத் திருப்திப்படுத்தும் பொருட்டு வரி செலுத்த மறுப்பது எனும் கருத்தை எல்லோரும் கைவிட்டனர்.

1848 நவம்பர் துவக்கத்தில் ஆயுதமேந்தி எதிர்த்துப் போராட முயல்வது என்பது ஏற்கெனவே காலங்கடந்து போய்விட்டதா, அல்லது சேனையின் ஒரு பகுதி கடுமையான எதிர்ப்பு இருக்கக் கண்டு சபைக்கு ஆதரவாகத் திரும்பி அதற்குச் சாதகமாகக் காரியங்களை முடிவு செய்திருக்க இயலுமா என்ற கேள்விக்கு என்றுமே தீர்வு காண முடியாது. ஆனல் யுத்தத்தைப் போலவே புரட்சியிலும் ஒரு பலமான முன்னணியைத் தோற்றுவிப்பது எப்போதும் அவசியம். யார் ஏறித்தாக்குகிருரோ அவர் சாதகமான நிலையில் இருப்பார்; மேலும் யுத்தத்தைப் போலவே புரட்சியிலும் தீர்மானமான தருணத்தில்—அதன் விளைவுகள் எப்படி இருந்த போதிலும்—எல்லாவற்றையும் பணயம் வைத்து ஈடுபடுவது உயர் அவசியமாகும். இந்த மூலவுண்மைகளின் மெய்மையை நிரூபித்துக் காட்டாத தனியொரு வெற்றிகரமான புரட்சி எதுவும் வரலாற்றில் நிகழ்ந்தது கிடையாது. பிரஷ்யப் புரட்சியைப் பொருத்தவரை இந்த நிர்ணயகரமான தருணம் 1848 நவம்பரிலேயே வந்துவிட்டது. புரட்சிகர இயக்கம் முழுவதற்கும் அதிகார பூர்வமாகத் தலைமை தாங்கிய இந்த சபை ஒரு வலுவான எதிர்ப்பு முன்னணியைக் காட்டவில்லை என்பது மட்டுமல்லாமல், எதிரி முன்னேறும்

ஒவ்வொரு தடவையும் இது பின்வாங்கிச் சென்றது; அது தாக்குதல் தொடுத்ததோ அதிலும் சொற்பம், அது தற்காத்துக் கொள்ளக் கூட முயலவில்லை. தீர்மானமான தருணம் வந்த போது, நாற்பதாயிரம் பேர் கொண்ட படையின் தலைமையில் விராங்கெல் பெர்லினின் வாயிலில் தாக்கிய போது, அவரும் அவரது அதிகாரிகளும் முற்றும் எதிர்பார்த்தது போன்று, ஒவ்வொரு தெருவிலும் தடையரண்கள் அணிசெய்வதையோ ஒவ்வொரு ஜன்னலும் துப்பாக்கி சுடுகின்ற இடமாக மாற்றப்படுவதையோ அவர் காணவில்லை. மாருக நகரத்து வாயிற்கதவுகள் திறந்து கிடப்பதையும், வியப்புற்று நின்ற படைவீரர்களிடம் முழுமையாகத் தம்மைத் தாமே ஒப்படைத்துக் கொண்டு அவர்மீது அவர்கள் நிகழ்த்திய வேடிக்கையை மகிழ்ச்சியுடன் அனுபவித்து வரும் அமைதியான பெர்லின்வாசிகளே தெருக்களை அடைத்துக் கொண்டு நிற்பதையுமே அவர் கண்டார். இந்த சபையும் மக்களும் எதிர்த்துப் போராடியிருந்தால் அவர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம் என்பது மெய்யே. பெர்லின் குண்டு வீச்சுக்கு உட்படலாம், மன்னராட்சி ஆதரவுக் கட்சியின் இறுதி வெற்றியைத் தடுக்க இயலாமலே நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் தமது ஆயுதங்களை ஏன் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்பதற்கு இது காரணமல்ல. நன்ருகப் போராட்டம் செய்து பெறும் தோல்வி எளிதாக வென்று பெற்ற வெற்றியைப் போலவே அதே அளவுக்குப் புரட்சிகர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1848 ஜூனில் பாரிசும், அக்டோபரில் வியன்னவும் அடைந்த தோல்விகள், பிப்ரவரி மற்றும் மார்ச்சில் பெற்ற வெற்றிகளைக் காட்டிலும் இந்த இரண்டு நகரங்களையும் சார்ந்த மக்களின் மனங்களைப் புரட்சிகரமாக மாற்றுவதில் நிச்சயம் அதிகமாக உதவின. பெர்லின் மக்களும் அரசியல் நிர்ணய சபையும் ஒருவேளை மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு நகரங்களின் கதியையே அடைந்திருக்கலாம். அப்படி நேர்ந்தால் அவர்கள் புகழுடன் மடிந்திருப்பார்கள், தமக்குப் பின்னல் உயிர் வாழ்ந்திருந்தோர் மனங்களில் வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் விருப்பத்தை

விட்டுச் சென்றிருப்பார்கள். இது புரட்சிகரக் காலகட்டங்களில் ஆற்றலும் ஆவேசமும் மிக்க போராட்டத்துக்கு ஆக உயர்ந்த ஊக்குவிப்பாக விளங்கும். ஒவ்வொரு போராட்டத்திலும் அறைகூவலை ஏற்பவன் தோல்வியுறும் அபாயத்துக்குள்ளாவது இயல்பே. ஆனால் இதன் காரணமாக ஒருவர் தான் முறியடிக்கப்பட்டுவிட்டதாய் தானே ஏன் ஒத்துக் கொள்ள வேண்டும், வாளை உருவாமல் நுகத்தடிக்கு ஏன் அடிபணிய வேண்டும்?

ஒரு புரட்சியில் தீர்மானகரமான நிலையை மேற்கொண்டு விரோதியை ஒரு தாக்குதல் நடத்தும்படி கட்டாயப் படுத்துவதற்குப் பதில் அந்த நிலையைச் சரணடைய விடும் ஒருவர் ஒரு துரோகி எனக் கருதப்படுவதற்கு இயல்பாகவே தகுதியுடையவராவார்.

அரசியல் நிர்ணய சபையைக் கலைத்த பிரஷ்ய மன்னரின் அதே அரசாணை ஒரு புதிய அரசியலமைப்புச் சட்டத்தையும் பிரகடனம் செய்தது. இது அந்த சபையின் ஒரு கமிட்டியால் உருவாக்கப்பட்ட நகல்மீது தோற்றுவிக்கப் பட்டதாகும். ஆனால் இதில் சில அம்சங்கள் மன்னரின் அதிகாரம் மேலும் விரிவாக்கப்பட்டன, மற்ற சில அம்சங்கள் நாடாளுமன்றத்தின் அதிகாரம் தெளிவற்றதாக்கப்பட்டன. இந்த அரசியலமைப்புச் சட்டம் இரண்டு சபைகளை நிறுவியது, இவை இந்தச் சட்டத்தை உறுதிப்படுத்தல் மற்றும் திருத்தியமைத்தல் எனும் நோக்கங்களுக்காக விரைவில் கூடவிருந்தன.

பிரஷ்ய அரசியலமைப்புச் சட்டவாதிகளின் ''சட்ட பூர்வமான, அமைதியான'' போராட்டத்தின் போது, ஜெர்மன் தேசிய சட்டமன்றம் எங்கே இருந்தது என்ற கேள்வியை நாம் கேட்கத் தேவையில்லை. அது வழக்கம் போல பிராங்க்பர்ட்டில் இருந்தது, பிரஷ்ய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக மிகவும் அடக்கமான தீர்மானங்கள் நிறைவேற்றுவதிலும் ''மிருகத்தனமான வன்முறையை எதிர்த்து மக்கள் முழுமையின் சாத்துவீகமான சட்டரீதியான ஒருமுகப்பட்ட எதிர்ப்பின் கம்பீரமான காட்சியை'' வியந்து பாராட்டுவதிலும் ஈடுபட்டிருந்தது. அமைச்சர

வைக்கும் சட்ட மன்றத்துக்கும் இடையே மத்தியஸ்தம் செய்வதற்காக மத்திய அரசாங்கம் கமிஷனர்களை பெர்லி னுக்கு அனுப்பி வைத்தது; ஆனால் அவர்களுக்கு இதேபோன்ற பொறுப்பில் முன்னிருந்தவர்களுக்கு ஓல்மூட்சில் நேர்ந்த கதியே ஏற்பட்டது, அவர்கள் கண்ணியமான முறையில் வெளியேற்றப்பட்டார்கள். தேசிய சட்டமன்றத்தில் இருந்த இடதுசாரிகள், அதாவது தீவிரவாதக் கட்சி எனப்படும் கட்சியினரும் தமது கமிஷனர்களை அனுப்பி வைத்தார்கள். ஆனால், பெர்லின் சட்டமன்றத்தின் படுமோசமான இயலாமை குறித்துப் போதுமான அளவுக்கு நம்பகமாகத் தெரிந்து கொண்டும், இதே அளவிலான தமது இயலா மையை ஒப்புக் கொண்டும் அவர்கள், தமது முயற்சிகள் குறித்து அறிக்கை செய்யவும், பெர்லின் மக்கள் வியத்தகு முறையில் அமைதியுடன் நடந்து கொண்டது பற்றிச் சான்றளிக்கவும் வேண்டி பிராங்க்பர்ட்டுக்குத் திரும்பினர் கள். மேலும் மத்திய அரசாங்கத்தின் கமிஷனர்களில் ஒரு வரான திரு பாசர்மன், அராஜகத் தனமான இயக்கங்களுக்கு முன்னால் எப்போதும் காணக் கூடிய பல கொடூரமான தோற்றமுள்ள நபர்கள் பெர்லின் தெருக்களில் சமீப கால மாகச் சுற்றித் திரிவதைக் காணலாம் (இதன் பின்னால் இவர் கள் ''பாசர்மன் பாணி நபர்கள்'' என்பதாகப் பெயரிடப் பட்டனர்), ஆகவே பிரஷ்ய அமைச்சர்களின் முந்திய கடுமையான நடவடிக்கைகளுக்கு ஆதாரம் இருப்பதாக அறிக்கை செய்தார். அப்போது இந்த மதிப்புக்குரிய இடது சாரி உறுப்பினர்களும் புரட்சிகர நலன்களின் ஊக்க மிகுந்த பிரதிநிதிகளுமான அவர்கள் இது போன்ற எதுவும் இருக்கவில்லை என்று சத்தியப் பிரமாணம் செய்து சான்றளிக்க உள்ளபடியே எழுச்சியுற்று முன்வந்தார்கள்! இவ்வாறாக இரண்டே மாதங்களுக்குள் பிராங்க்பர்ட் சட்ட மன்றத்தின் முழுமையான கையாலாகாத்தனம் கண்கூடாக நிரூபிக்கப்பட்டு விட்டது. இந்த அமைப்பு அதன் பணிக்கு அறவே லாயக்கற்றது என்பதற்கு இதைவிட வெளிப்படை யான நிரூபணம் எதுவும் இருக்க முடியாது. மேலும், அதன் பணி உண்மையில் என்ன என்பது பற்றி அதற்குக் கடுகளவு

கருத்துக்கூட இல்லை எனலாம். வியன்னுவிலும் பெர்லினி லும் ஒருங்கே புரட்சியின் கதி தீர்மானிக்கப்பட்டு விட்டது. பிராங்க்பர்ட் சட்டமன்றம் இருக்கிறது என்பதைக் கிஞ்சிற் றும் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமலே இந்த இரண்டு தலை நகரங்களிலும் மிகவும் முக்கியமான ஜீவாதாரமான பிரச்சினைகள் முடிவு செய்யப்பட்டன எனும் ஒரே உண்மை இந்த அமைப்பு ஏமாளிகள் பலரைக் கொண்ட வெறும் பேச்சு மன்றம் என்பதை நிலைநாட்டப் போதுமானது. சிறு அரசுகளிலும் சிறு நகரங்களிலும் அரசாங்கங்கள் கடைக் காரர்கள் மற்றும் கைவினைஞர்களின் கவனத்தைத் திசை திருப்ப இது வசதியானது என்று கருதிய காலம் பூராவும், அவர்களுக்கு வேடிக்கை காட்டி மகிழ்விக்கும் நாடாளு மன்றப் பொம்மைகளாக அரசாங்கங்கள் தம்மைப் பயன் படுத்துவதற்கு சபை உறுப்பினர்கள் அனுமதித்தார்கள். இது எவ்வளவு காலம் வசதியாக இருந்தது என்பதை நாம் விரைவில் காண்போம். இந்த சட்டமன்றத்தின் ''முக்கியஸ் தர்கள்'' எல்லோர் மத்தியிலும் அவர்கள் என்ன பாத்திரத்தை நடிக்கும்படி செய்யப்படுகிறார்கள் என்பது குறித்த அற்ப சொற்பமான அறிவு கொண்ட ஒருவர் கூட இருக்கவில்லை என்பதும், இன்றைய நாள் வரையிலுங்கூட பிராங்க்பர்ட் கழகத்தின் முன்னுள் உறுப்பினர்கள் தமக்கு முற்றிலும் விசித்திரமான வரலாற்றுப் புலனுணர்வு உறுப்புக்களை இயல்பாகவே கொண்டிருக்கிறார்கள் என்பதும் கவனத்திற் குரிய மெய்விவரமாகும்.

*லண்டன், 1852 மார்ச்*

## 14

## ஒழுங்கை மீட்டமைத்தல். நாடாளுமன்றம் மற்றும் சபை

*1849*ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களை, ஆஸ்திரிய மற்றும் பிரஷ்ய அரசாங்கங்கள் கடந்த அக்டோபர் நவம்பர் மாதங்களில் அடைந்த சாதகங்களைத் தொடர்ந்து

செயல்படுத்தப் பயன்படுத்தின. வியன்னு கைப்பற்றப்பட்டது முதல் ஆஸ்திரிய நாடாளுமன்றம் கிரெம்சியர்* எனும் பெயரிலான ஒரு சிறிய மோராவிய கிராமப்புற ஊரில் பெயரளவில் நிலவிவந்தது. இங்கு ஆஸ்திரிய அரசாங்கத்தை அதன் சரணுகதி நிலையிலிருந்து உயர்த்த பிரதான கருவியாக இருந்த ஸ்லாவேனியப் பிரதிநிதிகள் அவர்களது தொகுதி மக்களுடன் கூடவே ஐரோப்பியப் புரட்சிக்கு எதிரான அவர்களது துரோகத்துக்காக ஒரு தனிப்பட்ட முறையில் தண்டிக்கப்பட்டார்கள். அரசாங்கம் தனது பலத்தை மீட்டுப் பெற்றவுடன் அது நாடாளுமன்றத்தையும் அதன் ஸ்லாவேனிய பெரும்பான்மையையும் அறவே இழிவான முறையில் நடத்தியது. சாம்ராஜ்யப் படைகளின் ஆரம்ப வெற்றிகள் ஹங்கேரியப் போர் விரைவில் முடிவுறும் என்பதை முன்னறிவித்ததோடு, இந்த நாடாளுமன்றம் மார்ச் 4ந் தேதி கலைக்கப்பட்டது, இதன் பிரதிநிதிகள் ராணுவப் படைகளால் கலைத்து விரட்டப்பட்டார்கள். பிறகு கடைசியாகத் தாம் ஏமாற்றப்பட்டதை ஸ்லாவேனியர்கள் அறிந்து கூக்குரலிட்டார்கள்: ''நாம் பிராங்க்பர்ட்டுக்குப் போவோம், இங்கு நடத்த முடியாத எதிர்க்கட்சி வேலையை அங்கு நடத்துவோம்!'' ஆனுல் அதற்குள் காலம் கடந்து விட்டது. மேலும் சும்மா கிடப்பது அல்லது கையாலாகாத பிராங்க்பர்ட் சட்டமன்றத்தில் சேருவது என்பதைத் தவிர அவர்களுக்கு உண்மையில் மாற்றுவழி எதுவும் இல்லை எனும் இந்த உண்மை மட்டுமே, அவர்களது படுமோசமான இயலாமையைக் காட்டப் போதுமானதாக இருந்தது.

இவ்வாருக, ஒரு சுதந்திரமான தேசிய வாழ்வினை மீட்டுப் பெறுவதற்கு ஜெர்மனியில் இருந்த ஸ்லாவேனியர்கள் நடத்திய முயற்சிகள் இப்போதைக்கும் பெரும்பாலும் நிரந்தரமாயும் முடிவடைந்தன. தமது தேசிய இன இயல்பும் அரசியல் உயிரோட்டமும் நீண்ட காலமுன்பே அழிக்கப்பட்ட பல்வேறு தேசங்களின் சிதறலான எச்சமிச்சங்கள் இதன் பின்விளைவாக ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளாக

---

* செக் பெயர்: குரோமெர்ஷிஷ்.—ப-ர்.

தம்மை வென்றடக்கிய மேலும் வலிமை மிக்க தேசத்தை வால்பிடித்துச் செல்லும் கட்டாயத்திற்கு உள்ளாக்கியிருந்தன. இந்த நிலைமைதான் இங்கிலாந்தில் வெல்ஷ் மக்களுக்கும், ஸ்பெயினில் பாஸ்க் இனத்தவருக்கும், பிரான்சில் பாஸ்-பிரிட்டன்களுக்கும், மேலும் அண்மைக் காலத்தில் ஆங்கிலோ-அமெரிக்க இனத்தால் சமீபத்தில் கைப்பற்றப் பட்ட வட அமெரிக்கப் பகுதிகளில் ஸ்பெயின் மற்றும் பிரெஞ்சு இனத்தவர்களின் சந்ததியினருக்கும் ஏற்பட்டிருந்தது. இந்த அழிவுற்று வந்த தேசிய இனங்கள் போஹீமியர்கள், கரின்டியர்கள், டால்மேஷியர்கள் இத்தியாதியர், கி.பி. 800ஆம் ஆண்டில் இருந்த தமது அன்றைய நிலைமையினை மீட்டுப் பெறும் பொருட்டு 1848ஆம் ஆண்டின் சர்வப்பொதுவான குழப்பத்தினைச் சாதகமாக்கிக் கொள்ள முயன்றார்கள். இத்தகையதான பின்னோக்கிச் செல்லல் சாத்தியமல்ல என்பதை சென்ற ஆயிரம் ஆண்டுக்கால வரலாறு அவர்களுக்குப் புலப்படுத்தியிருக்க வேண்டும். எல்பே மற்றும் ஸாலே நதிகளுக்குக் கிழக்கேயான எல்லாப் பிரதேசமும் உறவுடைய ஸ்லாவேனியரால் ஒரு காலத்தில் பற்றுடல் செய்யப்பட்டிருந்தது என்றால், இது வரலாற்றுப் போக்கையும், அதே சமயம் தனது தொன்மையான கீழ்த் திசை அண்டை மக்களினங்களைக் கீழடக்கி, கவர்ந்து தன் வயமாக்குவதற்கான ஜெர்மன் தேசத்தின் ஆள்வலி மற்றும் அறிவாற்றல் பலத்தையும் மட்டுமே நிரூபிக்கின்றது. ஜெர்மானியரிடம் காணப்படும் இந்தக் கவர்ந்திழுக்கும் போக்கு அந்த மாகண்டத்தின் கிழக்குப் பகுதியில் மேலை ஐரோப்பிய நாகரிகத்தைப் பரப்பிய வலிமை மிக்க சாதனமாக எப்போதும் இருந்து வந்துள்ளது, இன்னும் இருந்து வருகிறது. ஹங்கேரியர்களைப் போலவும் ஓரளவுக்குப் போலிஷ் மக்களைப் போலவும் ஒரு சுதந்திரமான தேசிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் ஆற்றலுள்ள பெரிய, கச்சிதமான, உடைபடாத தேசிய இனங்களின் எல்லைகளை ஜெர்மன் மயமாக்கும் நடைமுறை எட்டும் போது மட்டுமே இது இல்லாது போகும். எனவே தமது வலிமை மிகுந்த அண்டை மக்கள் வாயிலாக நடக்கும் இந்தக் கலைப்பு மற்றும்

கவர்ந்து பற்றுவது முழுமையுறுவதற்கு அனுமதிப்பது என்பதே அழிந்து வரும் இந்த தேசங்களின் இயல்பான தவிர்க்க முடியாத கதியாகிவிட்டது. போஹீமிய மற்றும் தெற்கு ஸ்லாவேனிய மக்களினங்களில் ஒரு பகுதியினரைக் கிளர்த்தி விடுவதில் வெற்றி பெற்ற அகண்ட ஸ்லாவேனிய வாதக் கற்பனையாளர்களின் தேசியப் பேராசைக்கு இது அவ்வளவு பாராட்டத்தக்க வாய்ப்பல்ல என்பது நிச்சயம். ஆனல் அவர்கள் ஒரு சில மனிதர்களின் நோய் பிடித்த அமைப்புகளைத் திருப்திப்படுத்தும் பொருட்டு வரலாறு ஆயிரம் ஆண்டுகள் பின்னேக்கிச் செல்ல வேண்டும் என்பதாக எதிர்பார்க்க முடியுமா? இவர்கள் தாம் வாழும் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஜெர்மானியர் இடையிடையே விரவி வாழ்வதையும் சுற்றிவளைத்துக் கொண்டிருப்பதையும் காண்கிருர்கள். கால காலமாக நாகரிக காரியங்கள் அனைத்துக்கும் ஜெர்மன் மொழி தவிர வேறு மொழி இல்லாமலே இருந்து வந்திருக்கிருர்கள்; எண்ணிக்கை மற்றும் பிரதேசக் கட்டு எனும் தேசிய வாழ்நிலைக்குரிய ஆக முதல் நிபந்தனைகள் கூட இல்லாமல் இருந்து வருகிருர்கள் அல்லவா? இவ்வாருக, இந்த எண்ணற்ற சில்லரை தேசங்கள் அனைத்துக்கும் சுதந்திரத்தை மீட்டு வழங்குவதற்கு ஒரு மூடுதிரையாக ஜெர்மன் மற்றும் ஹங்கேரிய ஸ்லாவேனியப் பிரதேசங்களில் எங்கும் தலைகாட்டிய அகண்ட ஸ்லாவேனிய வாத எழுச்சி எல்லா இடங்களிலும் ஐரோப்பியப் புரட்சிகர இயக்கங்களுடன் மோதியது. சுதந்திரத்துக்காகப் போராடுவதாகப் பாவனை செய்த போதிலும், இந்த ஸ்லாவேனியர்கள் (போலிஷ் ஜனநாயகப் பகுதி நீங்கலாக) எப்போதுமே கொடுங்கோலாட்சி மற்றும் பிற்போக்கின் பக்கத்திலேயே காணப்பட்டார்கள். ஜெர்மனியில் இவ்வாறுதான் நடந்தது, ஹங்கேரியிலும் இவ்வாறே, துருக்கியில் அங்கும் இங்கும் இவ்வாறே நிகழ்ந்தது. மக்கள் லட்சியத்திற்குத் துரோகம் செய்து, ஆஸ்திரிய அரசாங்கத்தின் சதிகளுக்கான ஆதரவாளர்களாயும் முட்டுக் கொடுப்போராயும் இருந்த அவர்கள் புரட்சிகர தேசங்களின் பார்வையில் பிரஷ்டர்களாகக்

காணப்பட்டார்கள். மக்கள் மிகவும் அறியாதவர்களாக இருந்த அதே காரணத்தால், அகண்ட ஸ்லாவேனியவாதத் தலைவர்கள் தேசிய இனம் பற்றி எழுப்பிய சில்லரைப் பூசல்களில் மக்கள் திரளினருக்கு எங்கும் எவ்வகையான பங்கும் இல்லாமல் இருந்த போதிலும் அரை ஜெர்மன் நகரமான பிராகில் ஸ்லாவேனிய வெறியர் கும்பல்கள் ''ஜெர்மன் விடுதலையை விடவும் ருஷ்ய சவுக்கு மேல்!'' எனும் கோஷத்தை வாழ்த்தி வரவேற்றுத் திரும்பத் திரும்ப முழக்கின. 1848ல் தோற்றுப் போன அவர்களது முதல் முயற்சிக்குப் பிறகும், ஆஸ்திரிய அரசாங்கம் அவர்களுக்கு அளித்த படிப்பினைக்குப் பின்னும் பிந்திய ஒரு சந்தர்ப்பத்தில் இன்னொரு முயற்சி செய்யப்படும் என்று கருதுவதற்கில்லை. ஆனால் எதிர்ப்புரட்சி சக்திகளுடன் நேச உறவு கொள்வதற்கு அவர்கள் இதே போன்ற சாக்குப் போக்கின் மீது மறுபடியும் முயல்வார்களானால், ஜெர்மனியின் கடமை தெட்டத் தெளிவாகும். ஒரு புரட்சி நிலையிலும், ஒரு வெளிப் போரில் சிக்குண்டும் இருக்கும் எந்த ஒரு நாடும் தனது உள்ளிடத்தே ஒரு வண்டையாவை[53] அனுமதிக்க முடியாது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட அதே சமயம் சக்கரவர்த்தியால்* பிரகடனம் செய்யப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தைப் பொருத்தவரை நாம் அதனிடம் திரும்பிச் செல்லத் தேவையில்லை. காரணம் அது என்றுமே நடைமுறையில் இருக்கவில்லை, இப்போதோ அறவே ஒழிக்கப்பட்டு விட்டது. 1849 மார்ச் 4ந் தேதி முதல் ஆஸ்திரியாவில் எதேச்சாதிகாரம் முற்றிலும் மீட்டமைக்கப்பட்டு விட்டது.

பிரஷ்யாவில் மன்னரால் பிரகடனம் செய்யப்பட்ட புதிய சாசனத்தை ஊர்ஜிதப்படுத்தவும் திருத்தம் செய்வதற்குமாகச் சட்ட சபைகள் கூடின. சுமார் ஆறு வாரங்கள் அவற்றின் அமர்வுகள் நடந்தன. அரசாங்கத்தின் பால் போதிய பணிவுடனும் கீழ்ப்படிந்தும் நடந்து கொண்ட போதிலும், மன்னரும் அவரது மந்திரிகளும் எந்தளவுக்கு

---

* முதலாம் பிரான்ஸ்-இயோசிஃப்.—ப-ர்.

அவை போக வேண்டும் என்று விரும்பினார்களோ அந்தளவுக்குச் செல்ல இன்னும் அவை அறவே தயாராக இல்லை என்பது தெரிய வந்தது. எனவே பொருத்தமான சந்தர்ப்பம் கிட்டியவுடன் அவை கலைக்கப்பட்டன.

இவ்வாறாக, ஆஸ்திரியா பிரஷ்யா இரண்டுமே நாடாளுமன்றத்தின் கண்காணிப்பு எனும் தளைகளைத் தற்போது களைந்தெறிந்தன. இந்த அரசாங்கங்களிடம் இப்போது எல்லா அதிகாரமும் ஒன்றுகுவிந்திருந்தது, அவை எங்கு தேவையோ அங்கு இந்த அதிகாரத்தை அமுல் நடத்த முடியும்: ஹங்கேரி மற்றும் இத்தாலிக்கு எதிராக ஆஸ்திரியாவும், ஜெர்மனிக்கு எதிராக பிரஷ்யாவும். ஏனெனில் சிறிய அரசுகளில் ''ஒழுங்கை'' மீட்டமைப்பதற்கான போர் நடவடிக்கைக்குப் பிரஷ்யாவும் ஆயத்தம் செய்து கொண்டிருந்தது.

ஜெர்மனியின் இரண்டு மாபெரும் போராட்ட மையங்களான வியன்னாவிலும் பெர்லினிலும் எதிர்ப்புரட்சி இப்போது மேலோங்கி நிலவியதால், முக்கியத்துவம் குறைந்த அரசுகளில்தான் போராட்டம் இன்னும் முடிவு செய்யப்படாத நிலையில் இருந்தது, ஆனால் அங்கும் கூட நிலவரம் மேலும் மேலும் புரட்சிகர நலன்களுக்கு எதிரான சார்புடையதாகவே இருந்தது. இந்தச் சிறிய அரசுகள் பிராங்க்பர்ட் தேசிய சட்டமன்றத்தை ஒரு பொதுமையமாகக் கண்டன என்று நாம் ஏற்கெனவே கூறியிருந்தோம். தேசிய சட்டமன்றம் எனப்படும் இதன் பிற்போக்கு உணர்வு நீண்ட காலமாகவே தெளிவாக இருந்து, இதன் காரணமாக பிராங்க்பர்ட் மக்கள் தாமே இதை எதிர்த்து ஆயுதமேந்தி எழுச்சியுற்ற போதிலும் இதன் தோற்றம் எப்படியும் கிட்டத்தட்ட புரட்சிகரத் தன்மை கொண்டதாகவே இருந்தது. ஜனவரியில் இது சகஜக்கேடான ஒரு புரட்சிகர நிலையைக் கைக்கொண்டிருந்தது. அதன் அதிகார வரம்பு என்றுமே வரையறுக்கப்படவில்லை; தனது தீர்மானங்களுக்குச் சட்டத்தின் வலிமை உண்டு எனும் முடிவுக்கு இது கடைசியாக வந்தது, ஆனால் இந்த முடிவைப் பெரிய அரசுகள் என்றுமே அங்கீகரிக்கவில்லை. இந்தச் சந்தர்ப்ப சூழல்களின்

கீழும், அரசியலமைப்புச் சட்ட-முடியாட்சிக் கட்சியினர் உரிமைகளை மீட்டுப் பெற்ற எதேச்சாதிகாரிகளால் தமது நிலைமை மாற்றப்படுவதைக் காணும் போதும் கிட்டத்தட்ட ஜெர்மனி முழுவதிலுமிருந்த மிதவாத-முடியாட்சி ஆதரிப்பு முதலாளி வர்க்கத்தினர் இந்த சட்டமன்றத்தின் பெரும் பான்மையில் தமது கடைசி நம்பிக்கைகளை வைத்திருந்தார் கள் என்பதிலும், அதே போது ஜனநாயகக் கட்சியின் மையக் கூறுன குட்டி முதலாளிகள், துன்பங்கள் பெருகி யதன் காரணமாக உண்மையில் ஜனநாயகத்தின் கடைசி யான கச்சிதமான நாடாளுமன்றப் பேராட்ட அணியாக அமைந்த சிறுபான்மையைச் சுற்றித் திரண்டது என்பதி லும் வியப்பேதுமில்லை. மறுபுறம், பெரிய அரசுகளின் அரசாங்கங்கள் குறிப்பாயும் பிரஷ்ய அமைச்சரவை இத் தகைய தேர்தலினுல் நிறுவப்படுகிற முறைகேடான அமைப் புக்கும் ஜெர்மனியில் மீட்டமைக்கப்பட்ட மன்னராட்சி அமைப்பு முறைக்கும் இடையிலான பொருத்தமின்மையை மேலும் மேலும் காணத் தொடங்கின. இச்சட்டமன்றத்தை உடனே கலைக்கும்படி அவை பலவந்தம் செய்யவில்லை என் ருல் அதற்குக் காரணம் உரிய காலம் வரவில்லை என்பதும், பிரஷ்யா இதைத் தனது சொந்தப் பேராசை நோக்கங் களுக்கு ஆதரவாக முதலில் பயன்படுத்த நினைத்திருந்தது என்பதும் மட்டுமேயாகும்.

இதற்கிடையில் அந்த அப்பாவிச் சட்டமன்றமே மேலும் மேலும் அதிகக் குழப்பத்தில் ஆழ்ந்தது. அதன் பிரதிநிதிக் குழுக்களும் கமிஷனர்களும் வியன்ஞ, பெர்லின் ஆகிய இரண்டு இடங்களிலும் படுகேவலமாக நடத்தப் பட்டார்கள். இவற்றின் உறுப்பினர்களில் ஒருவர்* அவருக்கு நாடாளுமன்றப் பாதுகாப்பு இருந்த போதிலும், வியன்ஞவில் ஒரு சாமான்ய கலகக்காரர் என்ற முறையில் சுடப்பட்டார். அதன் ஆணைகள் எங்கும் சட்டை செய்யப் படவில்லை. பெரிய அரசுகள் இவற்றை எவ்வழியிலாவது கவனித்திருக்குமாஞல், அது கேவலம் தமது அரசாங்கங்களைக்

* ராபர்ட் ப்ளூம்.—ப-ர்.

கட்டுப்படுத்தும் முறையில் சட்டங்களேயோ தீர்மானங் களேயோ நிறைவேற்றும் அதிகாரம் இந்தச் சட்டமன்றத் துக்கு இல்லை என்று விடுக்கும் கண்டனக் குறிப்புகள் மூல மாக மட்டுமே இருக்கும். இந்த சட்டமன்றத்தின் பிரதிநிதி யான மத்திய நிர்வாக அதிகாரம் ஜெர்மனியில் இருந்த கிட்டத்தட்ட எல்லா அமைச்சரவைகளுடனும் அரசுறவுப் பூசல்களில் சிக்குண்டிருந்தது; சட்டமன்றமோ மத்திய அரசாங்கமோ எவ்வளவுதான் முயன்ற போதிலும் அவை ஆஸ்திரியா அல்லது பிரஷ்யா தமது இறுதிக் கருத்துக் கள், திட்டங்கள் மற்றும் கோரிக்கைகளே வெளியிடுமாறு செய்ய முடியவில்லை. சட்டமன்றமானது குறைந்த பட்சம் இதுவரையில் எல்லா அதிகாரமும் தனது கரங்களில் இருந்து நழுவிவிட இடமளித்திருக்கிறது என்பதையும், அது இப்போது ஆஸ்திரியா மற்றும் பிரஷ்யாவின் தயவில் இருக்க வேண்டி நேர்ந்துள்ளது என்பதையும், ஜெர்மனிக்கு ஒரு கூட்டாட்சி அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க அது உத்தேசித்திருக்குமானுல், அதற்காக உடனடியாக ஊக் கத்துடன் செயல்படத் தொடங்க வேண்டும் என்பதையும் கடைசியாகத் தெளிவாகக் காணத் தொடங்கியது. அரசாங்கங்களால் வெட்கக்கேடான விதத்தில் ஏமாற்றப் பட்டிருந்தார்கள் என்பதை ஊசலாடும் பல உறுப்பினர் களும் தெளிவாகக் கண்டார்கள். ஆனுல் அவர்களது கையா லாகாத நிலைமையில் அவர்கள் இப்போது என்ன செய்ய முடியும்? மக்கள் முகாமுக்குள் விரைவாகவும் தீர்மானகர மாகவும் கடந்து செல்வது எனும் ஒரு நடவடிக்கை மட்டுமே அவர்களேக் காப்பாற்றி இருக்கும். ஆனுல் இந்த நடவடிக்கையின் வெற்றியுங்கூட சந்தேகத்துக்கு இட மானதாகவே இருந்தது. இந்த மனவுறுதியற்ற, குறுநோக் குடைய, தற்பெருமை கொண்ட பேர்வழிகளின் ஏலாத கும்பலில், முரண்பாடான வதந்திகள் மற்றும் அரசுத் தந்திர அறிக்கைகளின் நிரந்தரச் சத்தம் அவர்களே முழு மையாகத் திகைக்க வைத்த போது, தாமே நாட்டின் ஆகச் சிறந்த, மிகவும் மகத்தான, மிகுந்த அறிவாளிகளான மனி தர்கள் எனவும், தாம் மட்டுமே ஜெர்மனியைப் பாதுகாக்க

முடியும் எனவும் எக்காலத்தும் திரும்பத் திரும்பக் கூறப்பட்ட வாக்குறுதிகளில் தமது ஏக ஆறுதலையும் ஆதரவையும் நாடியவர்கள் யார்? ஒரே ஓர் ஆண்டுக் கால நாடாளுமன்ற வாழ்க்கையால் முழு மடையர்களாக மாற்றப்பட்டு விட்ட இந்த அப்பாவிகள் மத்தியில், ஊக்கமும் நிலையுறுதியுமான நடவடிக்கைகளுக்கு உரியோர் இல்லை என்பது ஒருபுறமிருக்க, விரைவான தீர்மானகரமான முடிவுக்கு வரக் கூடிய பேர்வழிகள் எங்கே இருக்கிறார்கள்?

கடைசியாக ஆஸ்திரிய அரசாங்கம் தனது முகமூடியைக் கழற்றி எறிந்தது. அதன் மார்ச் 4ந் தேதிய அரசியலமைப்புச் சட்டத்தில் அது ஆஸ்திரியாவைப் பொது நிதிகள், சுங்க வரிகள் அமைப்பு, ராணுவ நிறுவனங்கள் கொண்ட பிரிக்க வொண்ணாத மன்னராட்சியாகப் பிரகடனம் செய்தது. இதன் மூலம் ஜெர்மன் மற்றும் ஜெர்மனல்லாத மாகாணங்களுக்கு இடையிலான எல்லாத் தடைகளையும் வேறுபாடுகளையும் துடைத்தழித்தது. இந்தப் பிரகடனம் பிராங்க்பர்ட் சட்டமன்றத்தால் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுவிட்ட தீர்மானங்களுக்கும் உத்தேசக் கூட்டாட்சி அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துகளுக்கும் எதிராகச் செய்யப்பட்டது. இது ஆஸ்திரியாவால் அதனிடம் வீசப்பட்ட போர் அறைகூவலாகும். இந்த அப்பாவி சட்டமன்றத்துக்கு இதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை. இதை அது மிகுந்த வீறுப்புடன் செய்தது. ஆனால் ஆஸ்திரியா தனது பலம் பற்றிய உணர்வுடனும், இந்த சட்டமன்றம் அறவே பயனற்றது என்ற கருத்தோடும் இது நடைபெற அனுமதிக்க முடியும். தன்னைத்தானே ஜெர்மன் மக்களின் விலைமதிக்க முடியாத பிரதிநிதி என்று பகட்டிக் கொள்ளும் இந்தச் சட்டமன்றம், ஆஸ்திரியா புரிந்த இந்த அவதூறுக்குப் பழிவாங்கும் பொருட்டு பிரஷ்ய அரசாங்கம் முன்பு முற்றிலும் கட்டுண்ட நிலையில் நெடுஞ் சாண்கிடையாக விழுவதே நல்லது என்று கண்டது. நம்ப முடியாதது என்று தோன்றும் வகையில், அது எந்த அமைச்சர்களை அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானவர்கள், மக்கள் விரோதிகள் என்று கண்டித்து, அவர்கள் பதவியிலிருந்து விலக்

கப்பட வேண்டும் என்று வீணுக வற்புறுத்தியதோ அதே அமைச்சர்கள் முன் அது மண்டியிட்டுப் பணிந்தது. இந்த மானக்கேடான நடவடிக்கை மற்றும் இதைத் தொடர்ந்து ஏற்பட்ட அவலமும் நகைச் சுவையுமான நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்களே நமது அடுத்த அத்தியாயத்திற்கான உரை பொருளாகும்.

லண்டன், 1852 ஏப்ரல்

## 15

## பிரஷ்யாவின் வெற்றி

ஜெர்மன் புரட்சியின் வரலாற்றின் கடைசி அத்தியாயத்துக்கு நாம் இப்போது வருகிறோம்: பல்வேறு அரசுகளின் குறிப்பாக பிரஷ்யாவின் அரசாங்கங்களுடன் தேசிய சட்டமன்றத்தின் மோதல், தெற்கு மற்றும் மேற்கு ஜெர்மனியின் புரட்சி எழுச்சி, பிரஷ்யாவால் அது இறுதியாக முறியடிக்கப்பட்டது.

பிராங்க்பர்ட் தேசிய சட்டமன்றம் இயங்கி வந்ததை நாம் ஏற்கெனவே பார்த்தோம். இதை ஆஸ்திரியா எட்டி உதைத்ததையும், பிரஷ்யா அவதூறு செய்ததையும், சிறிய அரசுகள் கீழ்ப்படிய மறுத்ததையும், அதன் சொந்தக் கையாலாகாத மத்திய ''அரசாங்கம்'' ஏமாற்றியதையும்—அதன் பங்குக்கு இது நாட்டில் இருந்த எல்லா மன்னர்களின் ஏமாளியாக இருந்ததை நாம் ஏற்கெனவே கண்டோம். கடைசியாக இந்த பலவீனமான, ஊசலாடுகிற, மந்தமான சட்ட மன்றத்தை அச்சுறுத்தும் வகையில் காரியங்கள் நடக்கத் தொடங்கின. ''ஜெர்மன் ஒற்றுமை எனும் விழுமிய கருத்து கைவர இயலாதபடி அச்சுறுத்தப்பட்டது'' எனும் முடிவுக்கு அது வர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது; இதன் பொருள் பிராங்க்பர்ட் சட்டமன்றமும் அது ஏற்கெனவே செய்து முடித்த அல்லது செய்யப் போவதாக இருக்கும் சகலமும் பெரும்பாலும் பலனில்லாமல் முடிந்து

விடக்கூடும் என்பதாகும். இவ்வாருக அது தனது தனிச் சிறப்பு வாய்ந்த படைப்பான ''சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத்தை'' கூடிய விரைவில் நிரப்பிப்பதற்காக நல்ல மெய்யார்வத்துடன் செயல்படத் தொடங்கியது.

ஆயினும் இதில் ஓர் இடர்ப்பாடு இருந்தது. எத்தகைய நிர்வாக அதிகாரம் இருக்க வேண்டும்? ஒரு நிர்வாகக் கவுன் சிலா? அல்ல; அவ்வாறு இருப்பது ஜெர்மனியை ஒரு குடியரசாக்கி விடும் என்று சட்ட மன்றம் முன்மதியுடன் கருதியது. ஒரு ''ஜனுதிபதியா''? இதுவும் அதே விளைவைக் கொண்டுவரும். இவ்வாருக, பழைய சாம்ராஜ்ய கவுரவத்தைப் புதுப்பிக்க வேண்டும். ஆனுல் மன்னர்களில் ஒருவர் சக்கரவர்த்தியாக இருக்க வேண்டுவது திண்ணம் என்பதால் அது யாராக இருக்க வேண்டும்? நிச்சயமாக ரைஸ்-கிரைஸ்-ஷிலேத்ஸ்-லபின்ஷ்தாய்ன்-ஏபிர்ஸ்டார்ப்* முதல் பவேரியாவின் மன்னர்** வரையிலான dii minorum gentium*** எவரும் இருக்க முடியாது, ஆஸ்திரியாவோ அல்லது பிரஷ்யாவோ அதை ஒத்துக் கொள்ளா. இது ஆஸ்திரியா அல்லது பிரஷ்யாவாக மட்டுமே இருக்க வேண்டும். ஆனுல் இந்த இரண்டில் எது? ஆஸ்திரிய அரசாங்கம் கோர்டியன் முடிச்சை வெட்டி சட்டமன்றத்தை இந்தத் தொல்லையில் இருந்து விடுவித்திருக்கவில்லை என்ருல், மற்றப்படி சாதகமான சந்தர்ப்பச் சூழல்களின் கீழ் இந்த மாண்புறு சட்ட மன்றம் ஒரு முடிவுக்கு வர இயலாதபடியே, இந்த முக்கியமான புதிரைப் பற்றி விவாதித்தபடி இன்றுவரையில் அமர்வு நடத்திக் கொண்டிருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தமது மாகாணங்கள் எல்லாவற்றையும் கீழடக்கிக் கொண்டு ஒரு வலிமை வாய்ந்த மாபெரும் ஐரோப்பிய வல்லரசாக அது மீண்டும் தோற்றமளிக்கும் தருணம் முதலே,

* LXXIIஆம் ஹென்ரிஹ்—ப-ர்.

** இரண்டாம் மக்சிமில்லியன்.—ப-ர்.

*** சொல்லின் நேர் பொருளில்: இளங் கடவுளர், உருவக முறையில்: இரண்டாந்தர முக்கியஸ்தர்.—ப-ர்.

தனக்கு பிராங்க்பர்ட் சட்டமன்றத்தால் அதிகாரம் வழங்கப்பட்ட சாம்ராஜ்ய மன்னர் தனக்கு அளிக்கக் கூடிய அதிகார பலத்தின் உதவி இல்லாமலே, ஜெர்மனியின் மீதமுள்ள பகுதிகளை அரசியல் ஈர்ப்பு சக்தி எனும் விதி மூலமே தனது ஆட்சி எல்லைக்குள் கவர முடியும் என்பதை ஆஸ்திரியா நன்குறக அறிந்திருந்தது. ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் வலிமையற்ற மகுடத்தை உதறித் தள்ளிய பின்னர், ஆஸ்திரியா அதிக பலமடைந்து தனது செயல்பாடுகளில் மேலும் சுதந்திரமாக நடந்து கொண்டிருந்தது. இந்த மகுடம் அதன் சுயேச்சையான கொள்கைக்குத் தளையிட்டதோடு ஜெர்மனிக்கு உள்ளேயோ வெளியேயோ இருந்து அதன் வலிமையை அணுவளவு கூட அதிகரிக்கவில்லை. ஆஸ்திரியா இத்தாலியிலும் ஹங்கேரியிலும் தனது செல்வாக்கினைக் கட்டிக்காக்க முடியவில்லை என்று வைத்துக் கொள்வோமானுல், அது ஜெர்மனியிலும் கலைக்கப்பட்டிருக்கும், அழித்தொழிக்கப்பட்டிருக்கும்; அது தனது வலிமையை முழுமையாக வைத்திருந்த போது தன் கரங்களில் இருந்து நழுவிச் சென்ற மகுடத்தை மீண்டும் கைப்பற்றப்போவதாக ஒருபோதும் நடிக்க முடியாததாக இருக்கும். இவ்வாருக ஆஸ்திரியா உடனடியாக சாம்ராஜ்யப் புத்துயிர்ப்புகள் அனைத்தையும் எதிர்த்துப் பறை சாற்றியது, 1815 உடன்படிக்கைகளால்[54] அறியப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்டதுமான ஜெர்மனியின் ஒரே மத்திய அரசாங்கமான ஜெர்மன் நாடாளுமன்றம் மீட்டமைக்கப்பட வேண்டும் என்று பச்சையாகக் கோரியது. 1849 மார்ச் 4ந் தேதி அது, பிராங்க்பர்ட் சட்ட மன்றம் புனரமைக்கவிருக்கும் அந்த ஜெர்மனியிடமிருந்தும் கூட வேறுபட்டதான, ஒரு பிரிக்கவொண்ணுத மையப்படுத்தப்பட்ட ஒரு சுயேச்சையான மன்னராட்சியாக ஆஸ்திரியாவைப் பிரகடனப்படுத்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் பிறப்பித்தது.

இந்தப் பகிரங்கமான போர் பிரகடனம் காரணமாக பிராங்க்பர்ட் போலி மேதைகளுக்கு, ஆஸ்திரியாவை ஜெர்மனியிடமிருந்து தனிப்பிரித்து, அந்த நாட்டின் மீதமுள்ள பகுதிகளைக் கொண்டு ஒரு வகையான கிழக்கு ரோமானியப்

பேரரசை[55] ஒரு ''குட்டி ஜெர்மனியை'' சிருஷ்டித்து, பிரஷ்ய மன்னர் தோள்களில் ஓர் அலங்கோலமான சாம் ராஜ்ய அணியைச் சுமத்துவது தவிர வேறுவழி எதுவும் இருக்கவில்லை. இது தெற்கு மற்றும் மத்திய ஜெர்மனியைச் சேர்ந்த மிதவாத வறட்டுச் சூத்திரவாதிகளால் சுமார் ஆறு அல்லது எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் பேணி வளர்க்கப் பட்ட பழைய திட்டத்தின் புத்தாக்கமே என்பதை இங்கு நினைவு கூரலாம். நாட்டின் விமோசனத்துக்கான மிகவும் ''சமீபப் புதிய முயற்சியாகத்'' தமது பழைய கற்பனையை மீண்டும் முன்வைக்கப்படுகிற இந்த மதிப்புக் கேடான சந்தர்ப்பச் சூழலை ஆண்டவன் அருள் என்று இவர்கள் கருதினார்கள்.

இதன்படி அவர்கள் உரிமைகள் பிரகடனம், சாம்ராஜ்ய தேர்தல் சட்டம் ஆகியவற்றுடன் சேர்த்து சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டம் பற்றிய விவாதத்தை 1849 பிப்ரவரி, மார்ச் மாதங்களில் முடித்துவைத்தார்கள். ஆயினும் இப்போது கன்சர்வேடிவ் அல்லது பிற்போக்குவாதக் கட்சிக்கும் இந்த சமயம் சட்டமன்றத்தின் மேலும் முன்னேறிய பிரிவுகளுக்கும் என்பதாக மிகப்பல அம்சங்களில் மிகவும் முரண்பாடான சலுகைகளை வழங்கும் கட்டாயத்திற்கு ஆளானார்கள். முன்னாட்களில் வலதுசாரி மற்றும் வலது சாரி மையப் பிரிவுகளை (கன்சர்வேடிவ்கள் மற்றும் பிற்போக்குவாதிகள்) சார்ந்ததாக இருந்த இந்தச் சட்ட மன்றத்தின் தலைமை மெதுவாகவே என்ற போதிலும் படிப்படியாக இந்த அமைப்பின் இடதுசாரி அல்லது ஜனநாயகப் பிரிவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது என்பது உண்மையில் தெரியவந்தது. அவர்களது நாட்டை ஜெர்மனியிடமிருந்து விலக்கி வைத்திருந்த ஒரு சட்டமன்றத்தில், இருப்பினும் அதில் அமர்ந்து வோட்டளிக்குமாறு கோரப்பட்ட நிலையில் ஆஸ்திரியப் பிரதிநிதிகளின் சற்றே இரண்டகமான நிலை அதன் சமன நிலை குலைக்கப்படுவதற்கு ஆதரவாக இருந்தது. இவ்வாறாக, பிப்ரவரி மாத இறுதியை அடுத்து முன் கூட்டியே ஆஸ்திரிய வோட்டுகளின் உதவி மூலம் இடது சாரி மற்றும் இடது சாரி மையப் பிரிவினர்

மிகவும் பொதுவாக ஒரு பெரும்பான்மையில் இருக்கக் கண்டார்கள், அதே போதில் மற்ற நாட்களில் ஆஸ்திரியர்களிடையிலான கன்சர்வேடிவ் பிரிவினர் திடீர் என்றும் வெறும் வேடிக்கைக்காகவும் வலது சாரிகளுடன் சேர்ந்து வோட்டு அளித்து சமநிலையை மீண்டும் மறு பக்கமாகத் தள்ளிவிட்டார்கள். இந்த திடீர் soubresauts* மூலமாக இந்த சட்டமன்றத்தை இழிவுபடுத்த உத்தேசித்திருந்தார்கள். ஆயினும் இது மிகவும் அவசியமற்றதாகவே இருந்தது. காரணம் மக்கள் பெருந்திரள் பிராங்க்பர்ட்டிலிருந்து வரும் எதுவும் படுமோசமான கற்பனை, அறவே பயனற்றவை என்பதை நீண்ட கால முன்பே திடமாக அறிந்திருந்தது. இத்தகைய தாண்டல் எதிர்த் தாண்டலின் கீழ் இதற்கிடையே என்ன மாதிரியான ஓர் அரசியலமைப்புச் சட்டம் வகுக்கப்படும் என்பதை எளிதில் கற்பனை செய்து கொள்ளலாம்.

சட்டமன்றத்தில் இருந்த இடது சாரியினர்,—தம்மைப் புரட்சிகர ஜெர்மனியின் உயர்வகையினர் மற்றும் பெருமையாகக் கருதிக் கொள்பவர்கள்—ஆஸ்திரிய எதேச்சாதிகாரத்தின் தூண்டுதலால் அதன் நலனுக்காகச் செயல்படும் ஒரு சில ஆஸ்திரிய அரசியல்வாதிகளின் நல்லெண்ணம் அல்லது தீய எண்ணம் மூலம் அவர்கள் பெற்ற ஒரு சில அற்பமான வெற்றிகளால் முற்றிலும் போதை மயக்கில் இருந்தார்கள். திட்டவட்டமாக வரையறுக்கப்படாத தமது சொந்தக் கோட்பாடுகளுக்கு ஹோமியோ முறைக் கலவையான வடிவில் ஆகச் சொற்பமான அளவு தோராயமாக பிராங்க்பர்ட் சட்ட மன்றத்தின் அனுமதி வகைப்பட்ட எதுவேனும் பெறப்படும் போது இந்த ஜனநாயகவாதிகள் தாங்கள் நாட்டையும் மக்களையும் பாதுகாத்து விட்டதாகப் பறை சாற்றினார்கள். இந்த அப்பாவிகளான மனோபலமற்ற மனிதர்கள் தமது பொதுவான, மிகவும் மூடு மந்திரமாக இருக்கும் வாழ்க்கையில் வெற்றி என்பது போன்ற எதையும் வழக்கமாக அனுபவித்திராததால், இரண்டு அல்லது மூன்று

* குதிப்புகள், பாய்ச்சல்கள்.—ப-ர்.

வோட்டுகள் பெரும்பான்மையில் நிறைவேறப் பெறும் தமது திருத்தங்கள் ஐரோப்பாவின் முகத் தோற்றத்தையே மாற்றி விடும் என்பதாக உள்ளபடியே கருதினர்கள். அவர்கள் தமது சட்டமன்ற வாழ்க்கையின் ஆரம்பமுதலே, சட்ட மன்றத்தில் இருக்கும் வேறு எந்தப் பிரிவினரை விடவும் அதிகமாக அந்தத் தீராத வியாதியான நாடாளுமன்ற மந்தத்தில் ஊறிக் கிடந்தார்கள். இந்தக் கோளாறுதான், தமது உறுப்பினர்கள் இடையே இவர்களையும் சேர்த்துக் கொள்ளும் கவுரவம் படைத்த அந்தக் குறிப்பிட்ட பிரதிநிதித்துவ அமைப்பின் பெரும்பான்மை வாக்குகளால்தான் இந்த முழு உலகமும் அதன் வரலாறும் எதிர்காலமும் ஆளுமை செய்யப் படுகின்றன, நிர்ணயிக்கப்படுகின்றன எனும் மனப்பூர்வமான திட நம்பிக்கைக்குப் பலியாகும் இந்த துரதிருஷ்டமான பேர்வழிகளிடையே ஊடுருவியுள்ளது. தமது சட்ட மன்றச் சுவர்களுக்கு அப்பால் நடக்கும் சகல சர்வமும்—போர்கள், புரட்சிகள், ரயில்வே கட்டுமானம், புதிய மாகண்டங்கள் முழுவதையும் காலனிகளாக்குதல், கலிபோர்னியாவில் தங்கம் கண்டுபிடிப்பு, மத்திய அமெரிக்கக் கால்வாய்கள், ருஷ்ய சேனைகள் மற்றும் மனிதகுலத்தின் எதிர்கால வாழ்வின் மீது செல்வாக்குச் செலுத்துவதாகச் சொற்பமேனும் உரிமை பாராட்டும் மீதி அனைத்தும்—அந்தத் தருணத்தில் தமது மாண்புக்குரிய சபையின் கவனத்தை ஈர்த்துள்ள எந்தவொரு முக்கியமான பிரச்சினை மீதும் தொங்கி நிற்கும் அளவுப் பொருத்தமற்ற நிகழ்ச்சிகளுடன் ஒப்பு நோக்கும் போது ஒரு பொருட்டல்ல. இவ்வாறாக, இந்தச் சட்டமன்றத்தின் ஜனநாயகக் கட்சிதான் ''சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத்தினுள்ளே'' தமது போலி முறைகள் சிலவற்றைக் கள்ளத்தனமாகப் புகுத்தியதால் முதலில் அதை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியது. ஆயினும் அது முக்கியமான ஒவ்வொரு அம்சத்திலும் பலமுறை பறை சாற்றப்பட்ட தமது சொந்தக் கோட்பாடுகளைப் பச்சையாக எதிர்த்தது. கடைசியாக இந்த நாய்த்தனமான வேலை இதன் பிரதான கர்த்தாக்களால் கைவிடப்பட்டு ஜனநாயகக் கட்சியிடம் மரபுரிமையாக ஒப்

படைக்கப்பட்ட போது, அது இந்தப் பரம்பரைச் சொத்தை ஒப்புக்கொண்டு அந்த நேரம் தமது சொந்த குடியரசுக் கோட்பாடுகளுக்கு ஆதரவைப் பறை சாற்றிய எல்லோரையும் எதிர்த்தும் கூட, இந்த முடியாட்சி அரசியலமைப்புச் சட்டத்தை ஆதரித்து நின்றது.

இதில் முரண்பாடு வெறும் மேலீடான முறையில் மட்டுமே இருந்தது என்பதை ஒத்துக் கொள்ளவே வேண்டும். சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுதியற்ற, சுயமுரண்பாடான, பக்குவப்படாத தன்மை இந்த ஜனநாயகக் கனவான்களின் பக்குவப்படாத, குழம்பிய, முரண்பாடான அரசியல் கருத்துக்களின் உண்மைச் சித்திரமாகவே இருந்தது. அவர்களது சொந்தமான பேச்சுக்களும் எழுத்துக்களும்—அவர்களால் எழுத முடிந்தவரை—இதற்குப் போதுமான நிரூபணமல்ல எனும் பட்சத்தில் அவர்களது செயல்கள் இத்தகைய நிரூபணத்தை வழங்குவது திண்ணம். ஏனெனில் பொது அறிவுடைய மனிதர்கள் மத்தியில் ஒரு மனிதனை அவனது சொற்களின் மூலமன்றி அவனது செயல்களை வைத்தே நிர்ணயிப்பது என்பது, அவன் எதுவாக வேடம் போடுகிறான் என்பதை வைத்தல்ல, மாறாக அவன் என்ன செய்கிறான், உண்மையில் எவ்வாறு இருக்கிறான் என்பதைக் கொண்டே நிர்ணயிப்பது இயல்பான நடவடிக்கையாகும். ஜெர்மன் ஜனநாயகத்தின் இந்த வீரர்களின் செயல்கள் தாமே போதியளவு முனைப்பாக உண்மைகளை எடுத்துரைக்கின்றன—இதை நாம் விரைவில் அறிந்து கொள்வோம். ஆயினும், அதன் ஒட்டுச்சேர்ப்புக்கள் மற்றும் பரிவாரங்கள் அனைத்தும் கொண்ட சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டம் திட்டவட்டமாக நிறைவேற்றப்பட்டது, மார்ச் 28ந் தேதி, சாதகமாக 290 வோட்டுகள் போடப்பட்டு, 248 பேர் நடுநிலை வகிக்க, 200 பேர் இதில் கலந்து கொள்ளாத நிலையில் பிரஷ்யாவின் மன்னர் ஆஸ்திரியா தவிர்த்த ஜெர்மனியின் மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வரலாற்றின் கேலி விளையாட்டு பூர்த்தியாயிற்று. 1848 மார்ச் 18ந் தேதி புரட்சிக்கு மூன்று நாட்களுக்குப் பிறகு[56] நாலாவது பிரெடெரிக்-வில்ஹெல்ம் பெர்லின் நகரத்தின் திகைப்படைந்த

தெருக்களில்—அவர் மற்ற இடங்களில் மேன் மதுபானச் சட்டத்தின் கீழே வரக் கூடிய நிலைமையில்—நடத்திய இந்தச் சாம்ராஜ்ய நாடகம், இந்த வெறுக்கத்தக்க நாடகம், சற்றே ஓராண்டுக்குப் பிறகு ஜெர்மனி முழுவதன் பிரதிநிதித்துவ சபை எனப் போலிவேடமிடும் அமைப்பினுல் அனுமதிக்கப் பட்டது. இதுவே ஜெர்மன் புரட்சியின் விளைவாக இருந்தது!

லண்டன், 1852 ஜூலை

## 16

## தேசிய சட்டமன்றமும் அரசாங்கங்களும்

பிராங்க்பர்ட் தேசிய சட்டமன்றம் பிரஷ்ய மன்னரை (ஆஸ்திரியா தவிர்த்த) ஜெர்மனியின் சக்கரவர்த்தியாகத் தேர்ந்தெடுத்த பிறகு, பிரெடெரிக்-வில்ஹெல்முக்கு அரசு மகுடம் வழங்கும் பொருட்டு பெர்லினுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பிவைத்தது; பிறகு தன் அமர்வை ஒத்திவைத்தது. ஏப்ரல் 3ந் தேதி பிரெடெரிக்-வில்ஹெல்ம் இந்தப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினுர். மக்கள் பிரதிநிதிகளின் வோட்டளிப்பு தமக்கு வழங்கியுள்ள ஜெர்மனியின் இதர மன்னர்கள் எல்லோருக்கும் மேலானதான முன் உரிமையினைத் தாம் ஏற்றுக் கொண்ட போதிலும், தமது மேலதிகாரத்தையும் அந்த உரிமைகளை வழங்கிய சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத்தையும் மீதமுள்ள மன்னர்கள் அங்கீகரித்து விட்டதாகத் தமக்கு உறுதியாகத் தெரியவராத காலம்வரை இந்த சாம்ராஜ்ய மகுடத்தைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர்களிடம் அவர் கூறினுர். இந்த அரசியலமைப்புச் சட்டத்தை அவற்றுல் ஊர்ஜிதம் செய்ய முடியுமா என்பதைப் பார்க்கும் பொறுப்பு ஜெர்மனியின் அரசாங்கங்களுடையதாகும் என்றும் அவர் சொன்னுர். சக்கரவர்த்தியோ இல்லையோ எப்படியாயினும் சரி, வெளி அல்லது உள்நாட்டு விரோதிகளை எதிர்த்துப் போராடத் தாம் எப்போதும் தயாராக இருப்பதாக அவர் முடிவாகக்

கூறினர். தேசிய சட்டமன்றத்துக்கு சற்றே வியப்பதிர்ச்சி தரும் வகையில் அவர் இந்த வாக்குறுதியை எப்படி நிறைவேற்றினர் என்பதை நாம் விரைவில் காண்போம்.

பிராங்க்பர்ட் போலி மேதைகள் தீர்க்கமான அரசுத்தந்திர விசாரணைகளுக்குப் பிறகு, இந்த பதில் மகுடத்தை மறுப்பதற்குச் சமமாகும் எனும் முடிவுக்கு வந்தார்கள். பின்னர் அவர்கள் (ஏப்ரல் 12ல்) தீர்மானித்ததாவது: சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டமே நாட்டின் சட்டம், அது கட்டாயம் கட்டிக் காக்கப்பட வேண்டும். இதற்கான பரிகாரமார்க்கம் தம்முன் அறவே காணப்படாததால், இந்த அரசியலமைப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான வழிகளைப் பற்றி யோசனைகள் முன்வைப்பதற்காக முப்பது பேர் கொண்ட ஒரு கமிட்டியைத் தேர்ந்தெடுத்தார்கள்.

இந்தத் தீர்மானம் தான், இப்போது பிராங்க்பர்ட் சட்டமன்றத்துக்கும் ஜெர்மன் அரசாங்கங்களுக்கும் இடையே வெடித்துள்ள மோதலுக்கு சமிக்கையாக அமைந்தது.

முதலாளி வர்க்கம் குறிப்பாக குட்டி முதலாளி வர்க்கம் புதிய பிராங்க்பர்ட் அரசியலமைப்புச் சட்டத்தைத் திடுமென ஆதரிக்க முன்வந்தது. ''புரட்சியை முடித்துவிடும்'' தருணத்தை எதிர்பார்த்து அவர்களால் இனிமேலும் காத்திருக்க முடியாது. ஆஸ்திரியாவிலும் பிரஷ்யாவிலும் ஆயுதமேந்திய அதிகாரத்தின் தலையீட்டால் தற்போதைக்கு புரட்சி முடிக்கப்பட்டு விட்டது. இந்தச் செயல் சற்றே குறைந்தளவு வலுவந்தமான பாணியில் நிறைவேற்றப்படுவதை சம்பந்தப்பட்ட வர்க்கங்கள் விரும்பியிருக்கும், ஆனல் அவற்றுக்கு இதற்கான வாய்ப்புக் கிட்டவில்லை. காரியம் முடிந்து விட்டது, இதை இயன்றவரை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் மிகவும் வீரத்துடன் மேற்கொண்டு செயல்படுத்திய முடிவாகும் இது. காரியங்கள் ஒப்பளவில் சுமுகமான முறையில் நடைபெற்று வந்த சிறிய அரசுகளில் முதலாளி வர்க்கம் மிகவும் உலைப்பானதாக இருந்த, அதிகாரம் இன்மையால் விளைபயன் இல்லாத அந்த வெளிப்பகட்டான நாடாளுமன்றக் கிளர்ச்சியில் நீண்ட கால முன்பே பின்னடைவுற்றிருந்தது. ஜெர்மனியின் பல்வேறு

அரசுகளை ஒவ்வொன்றாகத் தனிப்பிரித்துக் கவனிப்போமாளுல், இனிமேற்பட சமாதானமான அரசியலமைப்புச் சட்ட ரீதியிலான வளர்ச்சிக்குள் பிரவேசிக்க இயலக் கூடியதான அந்தப் புதிய திட்டவட்டமான வடிவை அவை எய்தி விட்டன எனத் தோன்றும். ஜெர்மன் கூட்டமைவின் புதிய அரசியல் நிறுவனம் பற்றியதான வெளியரங்கமான ஒரே ஒரு பிரச்சினை மட்டுமே மீதமாக இருந்தது. பின்விளைவுகள் பற்றி அச்சம் தருவதாக இன்னமும் தோற்றமளிக்கும் இந்தப் பிரச்சினைக்கு மட்டும் உடனடியாகத் தீர்வு காண வேண்டுவது அவசியம் என்று கருதப்பட்டது. இதனுல், இந்த அரசியலமைப்புச் சட்டத்தைக் கூடுமானவரை விரைவாகத் தயார் செய்யும் படி ஊக்குவிக்கும் பொருட்டு, பிராங்க்பர்ட் சட்டமன்றத்தின் மீது முதலாளி வர்க்கத்தினர் நிர்ப்பந்தம் கொண்டுவந்தார்கள். இதன் விளைவாகவே எவ்விதத் தாமதமும் இன்றி காரியங்களில் ஒரு உறுதியான நிலைமையினை உருவாக்கும் பொருட்டு, இது எதுவாக இருப்பினும் இந்த அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு அதை ஆதரிப்பதென பெரும் மற்றும் குட்டி முதலாளி வர்க்கத்தினரிடையே தீர்மானம் ஏற்பட்டது. இவ்வாருக, வெகு துவக்கம் முதலே சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத்திற்கான கிளர்ச்சி ஒரு பிற்போக்கு உணர்வில் இருந்து எழுந்தது, நெடுங்கால முன்பே புரட்சி குறித்துச் சோர்வடைந்திருந்த அந்த வர்க்கங்களின் மத்தியில் இது தோன்றியது.

ஆனுல் அதில் இன்னெரு அம்சமும் இருந்தது. 1848 வசந்தம் மற்றும் கோடைகாலத்தில், புரட்சியின் ஆரம்ப மாதங்களின் போது—மக்கள் கிளர்ச்சி இன்னும் மேலோங்கி இருந்த தருணத்தில்—ஜெர்மனியின் வருங்கால அரசியலமைப்புச் சட்டத்தின் முதலாவதும் மற்றும் அடிப்படையானதுமான கோட்பாடுகள் வோட்டளித்து ஏற்றுக் கொள்ளப் பட்டன. அப்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்—அன்று முற்றிலும் பிற்போக்கானதாக இருந்த போதிலும்—இப்போது ஆஸ்திரிய மற்றும் பிரஷ்ய அரசாங்கங்களின் கொடுங்கோன்மைச் செயல்களுக்குப் பிறகு மிகவும் மிதவாதத் தன்மை கொண்டனவாக, ஜனநாயகமானவையாக

வுங்கூடத் தோற்றமளித்தன. ஒப்பு நோக்கும் தரம் ஏற்கெனவே மாற்றமடைந்திருந்தது. பிராங்க்பர்ட் சட்டமன்றம் தார்மிகத் தற்கொலை செய்து கொள்ளாமல், ஒரு முறை வாக்களித்து ஏற்கப்பட்ட ஷரத்துக்களை நீக்கம் செய்து, ஆஸ்திரிய மற்றும் பிரஷ்ய அரசாங்கங்கள் வாளேந்தி நின்று வன்முறையில் ஆணையிட்ட அரசியலமைப்புச் சட்டங்களை மாதிரியாகக் கொண்டு சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றி உருவாக்குவது என்பது முடியாது. தவிரவும் நாம் ஏற்கெனவே கண்டது போல, அந்தச் சட்டமன்றத்தில் பெரும்பான்மைக் கட்சி மாறிவிட்டது, மிதவாத, ஜனநாயகக் கட்சிகளின் செல்வாக்கு அதிகரிக்கத் தொடங்கியது. இவ்வாருக, இந்த சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டம் மேலீடாக அதன் தனிமுழுமையான ஜனசம்மதத் தோற்றம் மூலம் தனிச்சிறப்புடன் விளங்கியது என்பது மட்டுமல்ல, அதே சமயம் அது முரண்பாடுகள் நிரம்பியதாக இருந்த போதிலும், அதுவே அனைத்து ஜெர்மனியின் மிகவும் மிதவாதப் போக்குடைய அரசியலமைப்புச் சட்டமாகத் திகழ்ந்தது. அதன் ஷரத்துக்களை அமுலாக்குவதற்குரிய அதிகாரம் இன்றி, அது கேவலம் ஒரு காகிதத் தாளாக இருந்தது என்பதே அதன் ஆகப் பெரிய குறைபாடாகும்.

இந்த சந்தர்ப்பச் சூழல்களின் கீழ், ஜனநாயகக் கட்சி எனப்படும் அதாவது குட்டி முதலாளி வர்க்கத் திரளினர், சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத்தை விடாது பற்றி நிற்பது இயல்பேயாகும். இந்த வர்க்கத்தினர் தமது கோரிக்கைகள் விஷயத்தில் மிதவாத முடியாட்சி-அரசியலமைப்புச் சட்ட ஆதரிப்பு முதலாளி வர்க்கத்தினரை விடவும் எப்போதுமே கூடுதல் முற்போக்குடையவர்களாக இருந்து வந்துள்ளனர்; மேலும் துணிச்சலான எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்; மிக அடிக்கடி ஆயுதமேந்திப் போராடுவதாக அச்சுறுத்தியுள்ளனர்; சுதந்திரத்துக்கான போராட்டத்தில் தமது இரத்தத்தையும் வாழ்க்கையையும் தியாகம் செய்வதாகத் தாராளமாக வாக்குறுதிகள் அளித்துள்ளனர். ஆனுல் அபாயம் நேரும் அந்த நாளில் அவர்கள் எங்குமே காணப்படவில்லை என்பதற்கும், சகலத்தையும் இழக்க வேண்டி இருந்த ஒரு

நிர்ணயமான தோல்விக்கு அடுத்த நாள் மிகவும் நிம்மதி யாக இருப்பதாக உணர்ந்தார்கள், எப்படியோ காரியங்கள் தீர்ந்து முடிந்து விட்டன என்று அறிந்து தேறுதல் கொண் டார்கள் என்பதற்கும் ஏற்கெனவே ஏராளமான சான்றுகள் உள்ளன. எனவே, பெரிய வங்கி அதிபர்கள், தொழில்துறை அதிபர்கள் மற்றும் வாணிகர்களின் பற்றுதல் அதிக அடக்க மான தன்மையதாக இருந்தது,பிராங்க்பர்ட் அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஆதரவான ஒரு சாமான்யப் பிரகடனமாக இருந்தது எனும் அதேபோதில் அவர்களுக்குச் சற்றுக் கீழ்மட்டத்தில் இருந்த வர்க்கத்தினர், நமது வீரதீரமான ஜனநாயகக் குட்டி முதலாளிகள் ஆடம்பரமான முறையில் முன்வந்து, சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டம் வீழ்ச்சியுற விடுவதைக் காட்டிலும், தமது கடைசித் துளி இரத்தத்தைச் சிந்தத் தாம் உறுதியுடன் இருப்பதாக வழக்கம் போலப் பறை சாற்றினுர்கள்.

அரசியலமைப்புச் சட்ட முடியாட்சியின் முதலாளி வர்க்க ஆதரவாளர்கள் மற்றும் ஏறத்தாழ ஜனநாயகவாதிகளான குட்டி முதலாளிகள் ஆகியோரின் இந்த இரண்டு கட்சிகளா லும் ஆதரிக்கப்பட்டு, சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டம் உடனே நிறுவப்பட வேண்டும் என்பதற்கான கிளர்ச்சி வெகு வேகமாக முன்னேறியது, பல அரசுகளின் நாடாளுமன்றங் களில் மிகவும் வன்மையாக வற்புறுத்தப்பட்டது. பிரஷ்யா, ஹனேவர், சாக்சனி, பாடேன், வுர்ட்டெம்பர்க் சட்டமன்றங் கள் இதற்கு ஆதரவு தெரிவித்தன. அரசாங்கங்களுக்கும் பிராங்க்பர்ட் சட்டமன்றத்துக்கும் இடையிலான போராட் டம் ஓர் அச்சுறுத்தும் இயல்பை மேற்கொண்டது.

ஆயினும் அரசாங்கங்கள் துரிதமாகச் செயல்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தை அவை திருத்தி ஊர்ஜிதம் செய்ய வேண்டி இருந்ததால் பிரஷ்ய சட்டமன்றங்கள் அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமான முறையில் கலைக்கப்பட்டன. அரசாங்கத்தால் வேண்டுமென்றே தூண்டி விடப்பட்ட கலவரங்கள் பெர்லினில் வெடித்தன. அடுத்த நாள் ஏப்ரல் 28ந் தேதியன்று பிரஷ்ய அமைச்சரவை ஒரு சுற்றறிக்கைக் குறிப்பை வெளியிட்டது. அதில் சாம்ராஜ்ய

அரசியலமைப்புச் சட்டம் மிகவும் அராஜகத்தன்மை வாய்ந்த புரட்சிகர ஆவணம் என்று வலியுறுத்தியும், ஜெர்மனியின் அரசாங்கங்கள் அதைப் புத்துருவம் கொடுத்துத் தூய்மைப் படுத்த வேண்டும் எனவும் சுட்டப்பட்டிருந்தது. பிராங்க் பர்ட் அறிவாளிகள் எப்போதும் ஜம்பமாகப் பேசிவந்த ஆனால் என்றுமே நிலைநாட்டாத அந்த சர்வவுரிமையுள்ள அரசியலமைப்பை உருவாக்கும் அதிகாரத்தை பிரஷ்யா வெளிப்படையாக நிராகரித்தது. இவ்வாறு, ஏற்கெனவே சட்டமாகப் பிறப்பிக்கப்பட்டு விட்டதான அந்த அரசிய லமைப்புச் சட்டத்தின் குறைகளைக் கண்டறிவதற்காக மன்னர் களின் காங்கிரஸ்[57] — புதுப்பிக்கப் பெற்ற பழைய கூட் டாட்சி நாடாளுமன்றம்—கோரப்பட்டது. அதே சமயம் பிரஷ்யா கிரேட்ஸ்நாக் எனும் இடத்தில் துருப்புக்களைத் திரட்டி நிறுத்தியது; இந்த இடம் பிராங்க்பர்ட்டிலிருந்து மூன்றுநாள் நடைத் தொலைவில் இருந்தது. மற்றும் இதர அரசுகள், பிராங்க்பர்ட் சட்டமன்றத்துக்குத் தமது ஆதரவை அளித்த உடனேயே, தமது சட்டமன்றங்களைக் கலைத்துவிட்டு தனது உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும் என்றும் பிரஷ்யா கோரியது. இந்த உதாரணத்தை ஹனோவரும் சாக்சனியும் விரைவில் பின்பற்றின.

இந்தப் போராட்டத்தின் முடிவு ஆயுதபலத்தின் மூல மாகவே ஏற்படும் என்பது தெளிவாகிவிட்டது. அரசாங்கங் களின் பகைமையும் மக்கள் மத்தியிலான கிளர்ச்சியும் நாளுக்கு நாள் மேலும் முனைப்பாகக் காணப்படலாயின. இராணுவம் எல்லா இடங்களிலும் ஜனநாயகக் குடிமக்களால் திறமை யான நிலைக்குப் படிப்படியாகக் கொண்டுவரப்பட்டது. தெற்கு ஜெர்மனியில் இந்த முயற்சி மாபெரும் வெற்றி கண்டது. எல்லா இடங்களிலும் பெரிய பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அவசியம் ஏற்பட்டால் ஆயுத பலத்தைக் கொண்டும் கூட சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத்தை யும் தேசியச் சட்டமன்றத்தையும் ஆதரிப்பது எனும் தீர் மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதே நோக்கத்துடன் கொலோனில் ரைன் பிரஷ்யாவைச் சேர்ந்த முனிசிப்பல் கவுன்சில்களின் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

பிஃபாலிட்சில், பேர்க், ஃபுல்டா, நூரன்பர்க், ஓடன்வால்ட் ஆகியவற்றில் விவசாயிகள் பத்தாயிரக்கணக்கில் கூடி உற்சாகம் பெற்று முன்வந்தார்கள். அதே சமயம், பிரான்சின் அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டது. வன்மையான கிளர்ச்சியின் மத்தியில் புதிய தேர்தல்களுக்கான தயாரிப்புகள் செய்யப்பட்டன. அதே போதில் ஜெர்மனியின் கிழக்கு எல்லையில் ஹங்கேரியர்கள் ஒரே மாதத்திற்குள் தொடர்ச்சியான ஒளிமிகுந்த பல வெற்றிகளின் வாயிலாக ஆஸ்திரியப் படையெடுப்பை தீஸ்ஸா என்னும் நதியில் இருந்து லெய்டா எனும் இடத்துக்குப் பின்வாங்கச் செய்து வியன்னாவை எந்த நாளும் படையெடுத்துப் பிடித்து விடலாம் என்று எதிர்பார்த்தார்கள். இவ்வாறு, எல்லாத் தரப்புகளிலும் பொதுஜன எதிர்பார்ப்புகள் உச்சியை எட்டி நிற்க, அரசாங்கங்களின் ஆக்கிரமிப்புக் கொள்கை நாளுக்குநாள் மேலும் தெளிவாகத் தன்னைத்தானே வரையறுத்துக் கொண்டிருந்த நிலையில், ஒரு வன்முறையான மோதல் தவிர்க்க முடியாததாக இருந்தது. இந்தப் போராட்டம் சமாதானமான முறையில் நடந்து முடியும் என்று பேடித்தனமான கையாலாகாப் பேர்வழிகள் மட்டுமே கருத முடியும். இந்தப் பேடித்தனமான கையாலாகாத்தனம் பிராங்க்பர்ட் சட்டமன்றத்தில் மிகவும் விரிவாகப் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தது.

லண்டன், 1852 ஜூலை

## 17

## புரட்சிகர எழுச்சி

பிராங்க்பர்ட் தேசிய சட்டமன்றத்துக்கும் ஜெர்மன் அரசுகளின் அரசாங்கங்களுக்கும் இடையிலான தவிர்க்க முடியாத மோதல் 1849 மே மாத ஆரம்பநாட்களில் கடைசியாகப் பகிரங்கப் போராட்டங்களாக வெடித்தது. தமது

அரசாங்கத்தால் திருப்பியழைத்துக் கொள்ளப்பட்ட ஆஸ்தி ரியப் பிரதிநிதிகள், இடதுசாரி அல்லது ஜனநாயகக் கட்சி யின் வெகு சில உறுப்பினர்கள் நீங்கலாக, ஏற்கெனவே சட்ட மன்றத்திலிருந்து விலகித் தாயகம் சென்றுவிட்டார்கள். நடப் புக்களில் ஏற்படவிருக்கும் திருப்பம் குறித்து முன்பே அறிந் திருந்த கன்சர்வேடிவ் உறுப்பினர்களில் பெரும் பகுதியினர், தத்தம் அரசாங்கங்களால் விலகிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதற்கு முன்பாகவே சட்டமன்றத்திலிருந்து விலகிக் கொண்டார்கள். இவ்வாருக, முந்திய அத்தியாயங் களில் இடதுசாரிகளின் செல்வாக்கை வலுப்படுத்துவதாக எடுத்துக் கூறப்பட்ட காரணங்களைச் சாராமலேயே, வலது சாரி உறுப்பினர்கள் தமது பொறுப்புக்களில் இருந்து துறந் தோடியது மட்டுமே கூட, சட்டமன்றத்தில் பழைய சிறு பான்மையை பெரும்பான்மையாக மாற்றப் போதுமானதாக இருந்தது. அந்த நல் வாய்ப்பைப் பெற முடியும் என்பதாக முன்பு என்றுமே கனவுகூடக் கண்டிராத இந்தப் புதிய பெரும் பான்மை எதிர்க் கட்சி வரிசைகளில் தாம்வகித்து வந்த பொறுப்புக்களைக் கருவியாக்கி பழைய பெரும்பான்மை மற்றும் அதன் சாம்ராஜ்யவாத ஆளுமை அதிகாரத்தின் பலவீனம், உறுதியின்மை மற்றும் சோம்பலை எதிர்த்து முழக் கம் செய்ய முடிந்தது. இப்போது திடீரென்று அவர்கள் பழைய பெரும்பான்மையை மாற்றீடு செய்ய வேண்டியிருந் தது. அவர்கள் இப்போது தம்மால் என்ன செய்யக்கூடும் என்பதைக் காட்ட வேண்டி இருந்தது. அவர்களது வாழ்க்கை ஊக்கமும் உறுதியும் செயலும் நிரம்பியதாக இருக்க வேண்டும் என்பது திண்ணம். ஜெர்மனியின் உயர் குழு வினரான அவர்கள் கிழடுதட்டிப்போன சாம்ராஜ்ய மாற்று ஆளுநரையும் அவரது ஊசலாடும் அமைச்சர்களையும் விரை வில் முன்னேக்கி முடுக்க முடியும், அது சாத்தியமில்லை என்ருல், அவர்கள்—இதைப் பற்றி எவ்வித ஐயப்பாடும் இருக்க முடியாது—மக்களின் சர்வவுரிமையின் வன்மை மூலம் அந்தக் கையாலாகாத அரசாங்கத்தைப் பதவியிலி ருந்து அகற்றி, அதனிடத்தில் ஜெர்மனியின் மீட்சியை உறுதி செய்யக் கூடியதான ஓர் சுறுசுறுப்பான, சோர்வு அடைய

முடியாத நிர்வாகத்தை மாற்றீடு செய்ய முடியும். அப் பாவி ஆட்கள் பாவம்! அவர்களது ஆட்சி—எவருமே கீழ்ப் படியாத இதை ஓர் ஆட்சி என்று அழைக்க முடியுமானல்—அவர்களது முன்னோர்களின் ஆட்சியை விடவும் இன்னும் அதிகக் கேலிக்கிடமான விவகாரமாகவே இருந்தது.

எல்லாவித முட்டுக்கட்டைகள் இருந்த போதிலும் சாம் ராஜ்ய அரசியலமைப்புச் சட்டம் உடனே அமுல் நடத்தப் பட வேண்டும் என்று புதிய பெரும்பான்மை சாற்றியது. வரப்போகும் ஜூலை 15ந் தேதி, புதிய பிரதிநிதித்துவ சபைக்கு மக்கள் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதாக இருந்தது. அதோடு இந்த சபை ஆகஸ்டு 22ந் தேதியன்று பிராங்க்பர்ட் டில் கூடுவதாக இருந்தது. இது இந்த சாம்ராஜ்ய அரசிய லமைப்புச் சட்டத்தைஅங்கீகரிக்காத அரசாங்கங்களை—இவற் றுள் முதன்மையாக ஜெர்மன் மக்கள் தொகையில் முக்கால் வாசிக்கும் கூடுதலாகக் கொண்டுள்ள பிரஷ்யா, ஆஸ்திரியா, பவேரியா ஆகியவற்றை—எதிர்த்தும் பகிரங்கமாகப் போர்ப் பிரகடனம் செய்வதாகும். இத்தகைய போர்ப் பிரகடனத்தை அவை விரைவில் ஏற்றுக்கொண்டன. பிராங்க்பர்ட்டுக்குத் தமது பிரதேசங்களிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட பிரதிநிதிகளை பிரஷ்யா மற்றும் பவேரியாவுங்கூடத் திருப்பி யழைத்துக் கொண்டு தேசிய சட்டமன்றத்துக்கு எதிரான தமது ராணுவத் தயாரிப்புகளை விரைவுபடுத்தின. அதே போதில் மறுபுறத்தில் சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத் தையும் தேசிய சட்டமன்றத்தையும் ஆதரித்து ஜனநாயகக் கட்சி (நாடாளுமன்றத்துக்கு வெளியே) நடத்திய ஆர்ப்பாட் டங்கள் மேலும் கொந்தளிப்பான, வன்மையான தன்மை பெற்று விளங்கின. மிகவும் தீவிரமான கட்சியின் நபர்களால் தலைமை தாங்கப்பட்ட தொழிலாளர்கள் திரளினர், ஜெர் மனியை அதன் பழைய முடியாட்சி வில்லங்கங்களில் இருந்து விடுவிக்க வேண்டும் எனும் தமது நோக்கத்துக்கு ஓரளவு நெருங்கியதாக இருக்கும் ஒரு லட்சியத்துக்காக—இது அவர் களது சொந்த லட்சியமாக இல்லாவிடினும்—ஆயுதமேந்திப் போராட ஆயத்தமாக இருந்தார்கள். இவ்வாறு எல்லா இடங் களிலும் இந்த விஷயத்தின் மீது மக்களும் அரசாங்கங்களும்

பகைமை கொண்டு நின்றூர்கள். மோதல் தவிர்க்க முடியாத தாக இருந்தது. வெடிச் சுரங்கம் மருந்திட்டு நிரப்பப்பட் டிருந்தது; அது வெடித்துக் குமுற ஒரு பொறி மட்டுமே தேவையாக இருந்தது. சாக்சனியில் சபைகள் கலேக்கப் பட்டன, பிரஷ்யாவில் Landwehr (ராணுவ சேமப்படை) வரவழைக்கப்பட்டது, சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத்துக்கு அரசாங்கங்களின் வெளியரங்கமான எதிர்ப்பு ஆகியவை இத்தகைய தீப்பொறிகள் ஆகும். அவை சிந்தின, திடுமென நாடே பற்றி எரிந்தது. டிரெஸ்டனில் மே 4ந் தேதி மக்கள் நகரத்தைக் கைப்பற்றி மன்னரை* ஓடவிரட் டினர். அதே போதில் சுற்றுமுள்ள மாவட்டங்கள் கலகக் காரர்களுக்கு உதவிப்படைகளே அனுப்பின. ரைன் பிரஷ்யா விலும் வெஸ்ட்ஃபாலியாவிலும் ராணுவ சேமப்படைகள் படையெடுத்துச் செல்ல மறுத்தன, ஆயுத சாலேகளேக் கைப் பற்றின, சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத்தைப் பாது காக்க ஆயுதமேந்தி நின்றன. பிஃபாலிட்ஸ் சார்ந்த மக்கள் பவேரிய அரசாங்க அதிகாரிகளேயும் பொதுப் பணங்களேயும் பிடித்து வைத்து தற்காப்புக் கமிட்டியை நிறுவினூர்கள். இந்தக் கமிட்டி இம்மாகாணத்தை தேசிய சட்டமன்றத்தின் பாதுகாப்பில் வைத்தது. வுர்ட்டெம்பர்கில் சாம்ராஜ்ய அர சியலமைப்புச் சட்டத்தை ஏற்கும்படி மக்கள் மன்னரைக்** கட்டாயப்படுத்திஞர்கள். பாடேனில் சேனே மக்களுடன் ஒன்று சேர்ந்து பெருங்கோமகனே*** நாட்டிலிருந்து ஓடும்படி நிர்ப் பந்தித்து ஓர் இடைக்கால அரசாங்கத்தை நிறுவியது. ஜெர் மனியின் இதர பகுதிகளில் மக்கள் ஆயுதமேந்தி எழுச்சியுற வும் தேசிய சட்டமன்றத்தின் செயலாட்சியின் கீழ் திரளவும் அதனிடமிருந்து சமிக்கையை எதிர்நோக்கி மட்டுமே காத் திருந்தார்கள்.

தேசிய சட்டமன்றத்தின் நிலேமை, அதன் இகழார்ந்த வாழ்க்கைக்குப் பிறகு எதிர்பார்க்கக் கூடியதை விடவும்

---

* இரண்டாவது பிரெடெரிக்-ஔகுஸ்ட்.—ப-ர்.

** முதலாவது வில்ஹெல்ம்.—ப-ர்.

*** லியப்போல்டு.—ப-ர்.

மிகவும் சாதகமானதாகவே இருந்தது. ஜெர்மனியின் மேலைப் பாதி அதன் சார்பில் ஏற்கெனவே போராட முன்வந்திருந் தது; எல்லா இடங்களிலும் ராணுவம் ஊசலாடிக் கொண் டிருந்தது; சிறிய அரசுகளில் அவை இயக்கத்துக்கு உறுதியா யும் ஆதரவாக இருந்தன. ஹங்கேரியின் வெற்றிகரமான முன்னேற்றத்தால் ஆஸ்திரியா முற்றும் சோர்வுற்ற நிலையில் இருந்தது. ஜெர்மன் அரசாங்கங்களின் அந்த சேமப்படை யான ருஷ்யா ஹங்கேரிய சேனைகளை எதிர்த்து ஆஸ்திரி யாவை ஆதரிக்க சகல சக்திகளையும் ஈடுபடுத்தியது. கீழடக்கு வதற்கு பிரஷ்யா மட்டுமே மீதமாக இருந்து அந்த நாட்டில் நிலவிய புரட்சிகர அனுதாபங்களின் விளைவாக, அந்த முடிவை எட்டுவதற்கும் நிச்சயமாக ஒரு வாய்ப்பு இருந் தது. பின்னர் சகலமும் சட்டமன்றத்தின் நடத்தையைப் பொருத்ததாக இருந்தன.

போர் அல்லது மற்ற எதையும் போலவே புரட்சிகர எழுச்சியும் ஒரு கலையே ஆகும். அதோடு அது ஒரு சில நட வடிக்கை விதிகளுக்கு உட்பட்டதுமாகும். இவை புறக்கணிக் கப்படும் பட்சத்தில், இவற்றைப் புறக்கணிக்கும் கட்சிக்கு நாசம் உண்டாக்கும். கட்சிகளின் தன்மை மற்றும் இத் தகைய விஷயத்தில் ஒருவர் கருதிச் செயல்பட வேண்டிய சந்தர்ப்பச் சூழல்கள் ஆகியவற்றில் இருந்து எழும் தர்க்கரீதி முடிவுகளான இந்த விதிகள் மிகவும் தெளிவானவை, சாமான் யமானவை. 1848ஆம் ஆண்டின் குறுகிய அனுபவமே ஜெர் மானியருக்கு இவற்றை ஓரளவுக்கு நன்குகப் பரிச்சயப்படுத்தி வைத்திருந்தது. முதலாவது விதி, உங்கள் விளையாட்டின் பின்விளைவுகளைச் சந்திக்க முற்றிலும் தயாராக இல்லாத பொழுது புரட்சிகர எழுச்சியுடன் விளையாடாதீர்கள். புரட்சி கர எழுச்சி என்பது மிகவும் திட்டவட்டமாக இல்லாத பரி மாணங்களைக் கொண்ட நுண்கணிதமாகும். இவற்றின் மதிப்பு நாள்தோறும் மாறலாம். உங்களுக்கு எதிராக இருக் கும் சக்திகளிடம் ஸ்தாபனம், கட்டுப்பாடு, தொடர்ச்சி யான அதிகார பலம் ஆகிய எல்லா சாதகங்களும் உள்ளன. அவற்றை எதிர்த்து பலமான சக்திகளைக் கொண்டுவராவிட் டால் நீங்கள் முறியடிக்கப்படுவீர்கள், அழிக்கப்படுவீர்கள்.

இரண்டாவது விதி, புரட்சிகர எழுச்சி வாழ்க்கையில் பிர வேசித்து விட்டீர்களானல் மகத்தான உறுதியுடன் செயல் பட வேண்டும், ஏறித்தாக்க வேண்டும். தற்காப்பு என்பது ஆயுதமேந்திய புரட்சிகர எழுச்சி அனைத்துக்கும் விளையும் மரணமாகும். அதன் எதிரிகளுடன் மோத முனை வதற்கு முன்பே அது தோல்வியுறும். அவர்களது படைகள் சிதறிக் கொண்டிருக்கும் சமயத்தில் உங்கள் விரோதிகளைத் திடீர் என்று தாக்க வேண்டும்; எவ்வளவு சிறியதாக இருப் பினும் சரி தினசரி புதிய வெற்றிகளுக்கு ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும்; வெற்றிகரமான முதல் புரட்சிகர எழுச்சி உங்களுக்கு வழங்கியுள்ள தார்மிக மேம்பாட்டை விடாது பேணி வைத்திருக்க வேண்டும்; இவ்வாறு எப் போதும் பலமான தூண்டுவிசையைப் பின்பற்றுவதும், எப்போதும் அதிகப் பாதுகாப்பான தரப்பை நாடுவதுமான அந்த ஊசலாடும் நபர்களை உங்கள் பக்கம் ஒன்று திரட்ட வேண்டும், உங்கள் விரோதிகள் உங்களுக்கு எதிராகத் தமது பலத்தைத் திரட்ட முடிவதற்கு முன்பே அவர்களைப் பின் வாங்கும்படி கட்டாயப்படுத்த வேண்டும்; சுருங்கச் சொன் ஞல், இது காறும் கண்டறிந்த புரட்சிகரக் கொள்கையின் மகத்தான மேதை தன்தோன் கூற்றுப்படி: de l'audace, de l'audace, encore de l'audace!*

நிச்சயமான நாசம் எனும் அச்சுறுத்தலில் இருந்து தப்பி விடுபட வேண்டுமாயின், பிராங்க்பர்ட்டிலிருக்கும் தேசிய சட்டமன்றம் என்ன செய்ய வேண்டும்? முதலாவதாக, நிலை மையைத் தெளிவாகக் கண்டறிய வேண்டும் அதோடு, ஒன்று, அரசாங்கங்களிடம் நிபந்தனை இன்றிக் கீழடங்கு வது அல்லது ஒதுக்கமோ தயக்கமோ இல்லாமல் ஆயுதமேந் திய புரட்சிகர எழுச்சி லட்சியத்தை மேற்கொள்வது என்பது தவிர வேறு மாற்றுவழி எதுவும் இல்லை என்பதைத் திடமாக நம்ப வேண்டும். இரண்டாவதாக, ஏற்கெனவே பொங்கி எழுந்துள்ள புரட்சிகர எழுச்சிகள் அனைத்தையும் வெளி

* தீரமாக இருங்கள், தீரமாக இருங்கள், மீண்டும் தீரமாக இருங்கள்!—ப-ர்.

யரங்கமாக அங்கீகரிக்க வேண்டும், அதோடு தேசியப் பிரதி நிதித்துவத்தைப் பாதுகாப்பதற்காக அமைச்சர்களையும், தமது கட்டளைகளினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் சர்வ வுரிமை கொண்ட மக்களை எதிர்க்கத்துணியும் மற்றவர்களையும் குற்றவாளிகள் என்று பிரகடனம் செய்ய எல்லா இடங்களி லும் ஆயுதமேந்தி முன்வரும்படி மக்களை அழைக்க வேண் டும். மூன்றாவதாக ஜெர்மன் சாம்ராஜ்ய ஆளுநரை உடனே பதவியில் இருந்து விலக்க வேண்டும்; பலமான, செயலூக்க முள்ள, எதற்கும் தயங்காத நிர்வாகத்தை உருவாக்க வேண்டும்; இதன் நேரடிப் பாதுகாப்புக்காக புரட்சிகர எழுச்சியில் ஈடுபட்ட துருப்புக்களை பிராங்க்பர்ட்டுக்கு வர வழைக்க வேண்டும்; இதன் மூலம் புரட்சிகர எழுச்சி பரவு வதற்கான சட்ட சாக்குப் போக்கையும் அதே சமயம் வழங்க வேண்டும்; அதன் செயலாட்சியிலுள்ள எல்லாப் படைகளை யும் ஒரு கச்சிதமான அமைப்புக்குள் ஒழுங்கமைக்க வேண் டும். சுருங்கக் கூறின் தனது நிலையை வலுப்படுத்திக் கொள்ள வும் எதிராளிகளின் நிலையை பலவீனப்படுத்தவும் கிட்டும் சகல சாதனங்களையும் விரைவாகவும் தயக்கமின்றியும் பயன் படுத்த வேண்டும்.

இவை அனைத்தும் இருக்க, பிராங்க்பர்ட் சட்டமன்றத் தின் நன்மையான ஜனநாயகவாதிகள் இதற்கு நேர் எதிரான காரியத்தையே செய்தார்கள். காரியங்கள் தாம் விரும்பிய போக்கில் செல்வதற்கு இடமளித்ததோடு திருப்திப்படாமல், இந்தப் பெரிய மனிதர்கள் தயாராகிக் கொண்டிருந்த புரட்சி எழுச்சி இயக்கங்களைத் தமது எதிர்ப்பு மூலம் ஒடுக்குவதற் கும் கூட முன்வந்தார்கள். உதாரணமாக, நூரன்பர்க்கில் திரு கார்ல் வோக்ட் இவ்வாறே செயல்பட்டார். பிரஷ்ய அரசாங்கத்தின் இரக்கமற்ற வன்முறையை எதிர்த்து காலம் கடந்தபின் உணர்ச்சிப் பகட்டான ஆட்சேபம் தெரிவித்தல் தவிர்த்த வேறு எந்த உதவியும் இன்றி சாக்சனி, ரைன் பிரஷ்யா, வெஸ்ட்ஃபாலியா புரட்சிகர எழுச்சிகள் அடக்கப் படுவதை அனுமதித்தார்கள். தெற்கு ஜெர்மன் புரட்சிகர எழுச்சிகளுடன் மறைவான ஓர் அரசுத்தந்திர ஒட்டுறவை வைத்திருந்தார்கள். ஆனால் அவர்களது பகிரங்க அங்கீகாரத்

தைச் சுட்டும் ஆதரவை என்றுமே வழங்கவில்லே. சாம்ராஜ்ய ஆளுநர் அரசாங்கங்களின் பக்கம் ஆதரவாக இருந்தார் என்பது அவர்களுக்குத் தெரியும். இருந்த போதிலும், இவற்றை என்றுமே கவனிக்காதவரான அவரை இந்த அரசாங்கங்களின் சூழ்ச்சி நடவடிக்கைகளே எதிர்க்குமாறு அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். சாம்ராஜ்ய அமைச்சர்கள், பழைய கன்சர்வேடிவ்கள், இந்தக் கையாலாகாத சட்டமன்றத்தை ஒவ்வொரு அமர்விலும் கேவலப்படுத்திஞர்கள்; அவர்கள் இதைப் பொறுத்துக் கொண்டார்கள். எனவே சைலீஷிய பிரதிநிதியும் *Neue Rheinische Zeitung*இன் ஆசிரியர்களில் ஒருவருமான வில்ஹெல்ம் வோல்ஃப், இந்த சாம்ராஜ்ய ஆளுநரை*—இவர் சாம்ராஜ்யத்தின் முதலும் முக்கியமுமான துரோகி என்று அவர் நியாயமாகவே குறிப்பிட்டார்—இந்தப் பேர்வழியை வெளியேற்ற வேண்டும் என்று கோரியபோது அவர் அந்த ஜனநாயகப் புரட்சியாளர்களின் ஒருமுகமான நேரிய ஆத்திரம் மூலம் எழுந்த கண்டனக் கூக்குரலுக்கு இலக்காக்கப்பட்டார்! சுருங்கக் கூறின் அவர்கள் தொடர்ந்து பேசிக் கொண்டும் ஆட்சேபம் தெரிவித்துக் கொண்டும் பறை சாற்றிக் கொண்டும், கருத்தளித்துக் கொண்டும் இருந்தார்கள். ஆனல் செயல்படுவதற்கான துணிவோ அறிவோ என்றுமே கொண்டிருக்கவில்லே. அதே போதில் அரசாங்கங்களின் பகைமைத் துருப்புக்கள் மேலும் மேலும் நெருங்கி வந்தபடி இருந்தன, அவர்களது சொந்த நிர்வாகம்—சாம்ராஜ்யத்தின் ஆளுநர்—ஜெர்மன் மன்னர்களுடன் சேர்ந்து அவர்களது வேகமான அழிவுக்காக மும்முரமாகச் சதிகள் செய்தபடி இருந்தார். இவ்வாருக இந்த வெறுக்கத்தக்க சட்டமன்றத்திற்கு அதனிடம் பரிவுகாட்டத்தக்க கடைசி எச்சமிச்சம் கூட இல்லாதொழிந்தது. இதைக் காத்து நிற்க முன்வந்த எழுச்சியாளர்கள் அதன் மீதான அக்கறையைக் கை விட்டார்கள். கடைசியாக அது மிகவும் கேவலமான முடிவை எட்டியபோது, அதன் மதிப்

---

* யோஹன்.—ப-ர்.

பிழந்துவிட்டதான மறைவைப் பற்றி யாருமே எவ்வித கவனமும் செலுத்தாத நிலையில் அது மடிந்தழிந்தது என்பதை நாம் கண்டோம்.

லண்டன், 1852 ஆகஸ்ட்

## 18

## குட்டி முதலாளிகள்

ஒரு பக்கம் ஜெர்மன் அரசாங்கங்கள் மறுபக்கம் பிராங்க்பர்ட் நாடாளுமன்றம் இவற்றுக்கு இடையேயான போராட்டம் இறுதியாக எந்தளவு அடைந்ததென்ருல், மே மாதத்தின் துவக்க நாட்களில் ஜெர்மனியின் மிகப் பெரும் பகுதியில் வெளியரங்கமான புரட்சிகர எழுச்சிகள் வெடித்தெழுந்தன. முதலில் டிரெஸ்டனில், பின்னர் பவேரிய பிஃபாலிட்சில், ரைன் பிரஷ்யாவின் சில பகுதிகளில் மற்றும் கடைசியாக பாடேனில் அவை நிகழ்ந்தன என்பதை நாம் சென்ற அத்தியாயத்தில் சுட்டிக் காட்டினேம்.

எல்லா இடங்களிலும் எழுச்சியாளர்களின் மெய்யாகவே போராடும் சக்திகள், ஆயுதங்கள் ஏந்தி முதலில் துருப்புகளுடன் போரிட்ட நகரங்களின் தொழிலாளர்களைக் கொண்டவையாக இருந்தன. மோதல் ஆரம்பமானதன் பின்னர் நாட்டுப்புற ஏழை மக்களின் ஒரு பகுதி—பண்ணையாளர்களும் சிறுதர விவசாயிகளும்—பொதுவாக அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள். முதலாளி வர்க்கத்திற்கு கீழிலான எல்லா வர்க்கங்களையும் சேர்ந்த இளைஞர்கள் பெருத்த எண்ணிக்கையில் குறைந்தபட்சம் சில காலத்துக்கேனும் இந்தப் புரட்சிகர எழுச்சிச் சேனைகளின் அணிகளில் காணப் பெற்ருர்கள். ஆனல் இந்த ஓரளவு வகை தொகையற்ற கூட்டமானது விவகாரங்களின் தன்மை ஓரளவு கடுமையான திருப்பத்தை எட்டிய உடனேயே வெகு விரைவில் குறைந்து விட்டது.

குறிப்பாயும் தம்மைத் தாமே ''அறிவின் பிரதிநிதிகள்'' என்று அழைத்துக் கொள்ள விரும்புகிற மாணவர்கள், அதற்குரிய தகுதிகள் எதுவும் நிச்சயமாக அறவே இல்லாதிருந்தும், தமக்கு அதிகாரிகள் பதவிகளைக் கொடுத்து வைத்திருக்காவிட்டால் தாம் இருக்க முடியாது என்று தமது பதாகைகளைப் போட்டு விட்டு முதலில் வெளியேறினார்கள்.

தொழிலாளி வர்க்கத்தினரோ ஒன்று தமது அரசியல் ஆட்சியுரிமை மற்றும் சமூகப் புரட்சியை நோக்கிய முன்னேற்றப் பாதையில் எழும் சில முட்டுக் கட்டைகளை அகற்றுவதாகவோ, அல்லது குறைந்த பட்சம் சமுதாயத்தில் இருக்கும் அதிக செல்வாக்குள்ள ஆனால் குறைவான தைரியமுடைய வர்க்கங்களை, அவை இது காறும் பின்பற்றி வந்ததை விடவும் புரட்சிகரமான கூடுதல் நிர்ணயமான வழியில் கட்டுப்படுத்தி வைப்பதற்கோ, ஆவன செய்வதாக எதிர்ப்பார்க்கக் கூடிய வேறு எந்த ஒரு புரட்சிகர எழுச்சியிலும் எவ்வாறு செயல்பட்டிருப்பார்களோ அதே போன்று இந்தப் புரட்சிகர எழுச்சியிலும் சேர்ந்தார்கள். இந்த எழுச்சி, அதன் நேரடி நோக்கங்களைப் பொருத்த வரை, அவர்களுடைய சொந்த சண்டை அல்ல எனும் முழு அறிவுடன்தான் தொழிலாளி வர்க்கத்தினர் போராட்டத்தில் இறங்கினர். ஆனால் அவர்கள் தமது சரியான கொள்கையை மட்டுமே பின்பற்றினர்: தமது தோள்கள்மீது எழுந்து நின்றதான எந்த ஒரு வர்க்கமும் (1848ல் முதலாளி வர்க்கம் செய்தது போல) தனது வர்க்க ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்ள அனுமதிக்க மாட்டார்கள்; குறைந்த பட்சம் அந்த வர்க்கம், தொழிலாளி வர்க்கம் தனது சொந்த நலன்களுக்காகப் போராடுவதற்கு ஒரு நியாயமான களத்தைத் தர வேண்டியிருக்கும். எப்படியும் போராட்டத்தை ஒரு நெருக்கடிக்குக் கொண்டுவந்து, அதன் மூலம் ஒரு தேசம் நியாயமாகவும் தடுத்து நிறுத்த முடியாத வகையிலும், ஒரு புரட்சிகரப் பாதையில் செலுத்தப்படும், அல்லது புரட்சிக்கு முன்பு இருந்த நிலைமைகள் சாத்தியமான அளவு நெருக்கமானதாகவே மீட்டமைக்கப்பட்டு, அதன் மூலம் ஒரு புரட்சி தவிர்க்க முடியாததாக்கப்படும் என்பதே இந்தக் கொள்கை.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் தொழிலாளி வர்க்கம் பொதுவாக தேசத்தின் மெய்யான, நன்கு புரிந்து கொள்ளப் பட்டதான நலனைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. அதாவது நாகரிகமடைந்த ஐரோப்பாவின் பழைய சமுதாயங்களுக்கு வரலாற்று ரீதியில் அவசியமானதாய் இருக்கும் அந்தப் புரட்சிகரப் பாதையை சாத்தியமான அளவுக்கு விரைவுபடுத்தியது. இந்தப் புரட்சி இல்லாமல் அவற்றில் தனது செல்வாதாரங்கள் மேலும் அமைதியாகவும் முறையாகவும் அபிவிருத்தியடைய வேண்டும் என்று இந்த நாடுகள் எதுவும் மீண்டும் ஆர்வத்துடன் எதிர்பார்ப்பதற்கு முன்பே இப்போது ஒரு வரலாற்று அவசியமாகிவிட்டது.

இந்தப் புரட்சிகர எழுச்சியில் சேர்ந்து கொண்ட நாட்டுப் புறத்து மக்களைப் பொருத்தவரை, அவர்கள் தம்மை அழுத்தி வந்த சற்றுப் பேரளவான வரிப்பளு மற்றும் நிலப் பிரபுத்துவச் சுமை காரணமாகவே பிரதானமாயும் புரட்சிகரக் கட்சிகளின் பக்கம் முனைப்பாக ஈடுபட்டு நின்றார்கள். தமது சொந்த முன்முயற்சி எதுவும் இல்லாமல், புரட்சிகர எழுச்சியில் ஈடுபட்டிருந்த இதர வர்க்கங்களின் வாலாக அமைந்து, ஒரு புறம் தொழிலாளி வர்க்கம் மறுபுறம் சிறுதரக் கைவினைஞர் மற்றும் கடைக்காரர் வர்க்கம் இவற்றுக்கும் இடையே ஊசலாடினார்கள். அவர்களது சொந்த தனிப்பட்ட சமூக நிலைமையே கிட்டத்தட்ட ஒவ்வொரு தடவையும் எந்த வழியில் அவர்கள் திரும்பினார்கள் என்பதை நிர்ணயித்தது. விவசாயப் பண்ணையாளர் பொதுவாக நகரத்துத் தொழிலாளர்களை ஆதரித்தார், சிறுதர விவசாயி இயல்பாக குட்டி முதலாளிகளை ஆதரித்தார்.

குட்டி முதலாளிகளின் இந்த வர்க்கத்தை—இதன் மாபெரும் முக்கியத்துவம் மற்றும் செல்வாக்குக் குறித்து நாம் ஏற்கெனவே பலமுறை எடுத்துரைத்துள்ளோம்—1849 மே புரட்சிகர எழுச்சியின் தலையாய வர்க்கம் என்று கருதலாம். இந்த சமயம் ஜெர்மனியில் இருந்த பெரிய நகரங்கள் எதுவும் இந்த இயக்கத்தின் மையமாக இல்லாதிருந்தபடியால், நடுத்தர மற்றும் சிறிய நகரங்களில் எப்போதும் மேலோங்கி இருந்து வரும் குட்டி முதலாளி வர்க்கம் இந்த

இயக்கத்தின் நெறியாண்மையைத் தனது கரங்களில் மேற்கொள்வதற்கான வழிவகைகளைக் கண்டது. மேலும் இந்த சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் ஜெர்மன் நாடாளுமன்றத்தின் உரிமைகளுக்கான இந்தப் போராட்டத்தில் இந்தத் தனி இயல்பான வர்க்கத்தின் நலன்கள் அபாயத்திற்குள்ளாகி இருந்தன என்பதை நாம் ஏற்கெனவே கண்டோம். கலகம் செய்த மாவட்டங்கள் எல்லாவற்றிலும் அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் தமது பெரும்பான்மையில் மக்களின் இந்தப் பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. எனவே, இதில் எந்தளவுக்கு அவை சென்றன என்பதை ஜெர்மன் குட்டி முதலாளி வர்க்கத்தால் என்ன செய்ய இயலும் என்பதற்கான அளவுகோலாக ஓரளவு எடுத்துக் கொள்ளலாம். இதன் கரங்களில் ஒப்படைக்கப்பட்ட எந்தவொரு இயக்கத்தையும் நாசம் செய்வது தவிர வேறு எதையும் இந்த வர்க்கத்தால் செய்ய இயலாது என்பதை நாம் இனிக் காண்போம்.

அதிகமாகப் பெருமையடித்துக் கொள்ளும் குட்டி முதலாளி வர்க்கம், செயலில் மிகவும் திறமையில்லாததாகவும், எதையும் இழப்பதற்கு அறவே விரும்பாததாகவும் இருக்கிறது. அதன் வாணிக நடவடிக்கைகள் மற்றும் கடன்துறைச் செயல்பாடுகளின் அற்பத்தனம், அதன் தன்மையில் உள்ள ஊக்கமின்மையை முத்திரையிட்டுக் காட்ட மிகவும் பொருத்தமானது என்பதோடு, அதன் அரசியல் வாழ்க்கையைச் சுட்டும் வகையில் ஆர்ப்பாட்டமான சொற்கள் மற்றும் மிகையான பேச்சுக்கள் மூலம் புரட்சிகர எழுச்சியை ஊக்குவித்தது. இதற்கு ஏற்பான முறையில் குட்டி முதலாளி வர்க்கம் தான் என்ன செய்யப் போகிறது என்பது பற்றிய பகட்டான சொற்கள், மிகப் பெரும் ஜம்பப் பேச்சுகள் மூலம் புரட்சிகர எழுச்சியினை ஊக்குவித்தது. அதன் சித்தத்துக்கு மிகவும் ஒவ்வாத முறையில் புரட்சிகர எழுச்சி வெடித்த உடனேயே அது அதிகாரத்தை ஆர்வமுடன் கைப்பற்றிக் கொண்டு, இந்த அதிகாரத்தை இந்தப் புரட்சிகர எழுச்சியின் விளைவுகளை நாசப்படுத்தும் நோக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்தியது. எங்கெல்லாம் ஆயுதமேந்திய மோதல்

காரியங்களை மிகவும் கடுமையான நெருக்கடிக்குக் கொண்டு வந்து விட்டதோ அங்கெல்லாம் இந்தக் குட்டி முதலாளிகள் தமக்கு ஏற்பட்ட அபாயகரமான நிலைமை குறித்துத் திகிலடைந்து நின்றார்கள். ஆயுதமேந்திப் போராட வேண்டும் என்னும் ஜம்பமான வேண்டுகோளை மக்கள் மெய்யார்வத்துடன் மேற்கொண்டு விட்டது கண்டு திகிலடைந்தார்கள்; தமது சொந்தக் கரங்களில் திணிக்கப்பட்டதான அதிகாரத்தைக் கண்டே திகிலடைந்தார்கள்; எல்லாவற்றுக்கும் மேலாக தமக்கும் தமது சமூக அந்தஸ்துக்கும் தமது சொத்துக்கும் தாம் நிர்ப்பந்தமாகக் கையாள நேர்ந்த கொள்கையின் பின்விளைவுகள் பற்றித் திகிலடைந்தார்கள். அவர்கள் வழக்கமாகக் கூறுவது போன்று, புரட்சிகர எழுச்சியின் லட்சியத்துக்காக அவர்கள் ''உயிரையும் உடைமையையும்'' பணயம் வைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டதல்லவா? இந்தப் புரட்சிகர எழுச்சியில் அவர்கள் அதிகார பூர்வமான நிலை மேற்கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டு, இதன் காரணமாக, இதில் தோல்வி ஏற்படும் பட்சத்தில், அவர்கள் தமது மூலதனத்தை இழக்கும் அபாயத்திற்கு இலக்காகவில்லையா? வெற்றி கிட்டும் பட்சம், அவர்களது போரிடும் சேனையில் பிரதான அமைப்பாக இருக்கும் வெற்றிவாகை சூடிய பாட்டாளிகளால் அவர்கள் பதவிகளில் இருந்து உடனே விரட்டப்பட்டு, அவர்களது கொள்கை முழுதும் தலைகீழாகப் புரட்டப்படும் என்பதை அவர்கள் உறுதியாக உணரவில்லையா? இவ்வாறாக, எல்லாப் பக்கங்களிலும் சுற்றிவளைத்துள்ள எதிர்ப்பு அபாயங்களின் இடையே வைக்கப்பட்டிருக்கும் இந்த குட்டி முதலாளிகள் எல்லாம் அதனதன் வாய்ப்புப்படி நடக்கட்டும் என்று விட்டு விடுவதைத் தவிர வேறு எந்த வழியிலும் தமது அதிகாரத்தை நெறிப்படுத்தத் தெரியாதவர்களாக இருந்தார்கள். இதன் மூலம் வெற்றிக்கான அற்ப சொற்பமான வாய்ப்பையும் கூட அவர்கள் இழக்கும்படி நேர்ந்தது, இவ்வாறு மொத்தத்தில் புரட்சிகர எழுச்சி நாசத்திற்குள்ளாயிற்று. இவர்களது கொள்கை அல்லது செயல்தந்திரம் இன்மை எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாகவே இருந்தது. ஆகவே 1849 மே மாதம் ஜெர்மனியின் எல்லாப் பகுதிகளிலும்

நிகழ்ந்த புரட்சிகர எழுச்சிகள் ஒரே வகைப் பாணியில் உருவாக்கப்பட்டிருந்தன.

டிரெஸ்டனில் இந்தப் போராட்டம் நகரின் தெருக்களில் நான்கு நாட்கள் தொடர்ந்து நடந்தது. டிரெஸ்டன் குட்டி முதலாளிகள் இந்த ''நகரக் காவலர்'' போராடவில்லை என்பது மட்டுமல்ல, ஆனால் பல இடங்களில் புரட்சிகர எழுச்சியாளர்களுக்கு எதிராகத் துருப்புக்கள் ஏவிவிடப் படுவதையும் ஆதரித்தார்கள். இந்தப் புரட்சியாளர்கள் கிட்டத்தட்ட முற்றிலும் சுற்றுப்புறத்திலுள்ள தொழில்துறை மாவட்டங்களிலிருந்து வந்த தொழிலாளர்களே ஆவர். அவர்கள் ருஷ்ய அகதி மிஹயீல் பக்கூனின் ஆற்றலுடைய, நிதானமான தளபதியாக இருப்பதைக் கண்டார்கள். அவர் பின்னால் கைதியாகச் சிறைப்பிடிக்கப்பட்டார், ஹங்கேரியிலுள்ள முன்காச்* இருட்சிறையில் இப்போது அடைக்கப்பட்டிருக்கிறார். எண்ணற்ற பிரஷ்யத் துருப்புக்களின் தலையீட்டால் இந்தப் புரட்சிகர எழுச்சி நசுக்கப்பட்டது.

ரைன் பிரஷ்யாவில் உள்ளபடியே நடந்த சண்டை அவ்வளவு முக்கியமானதல்ல. பெரிய நகரங்கள் எல்லாமே அரண்களால் மேலாண்மை செய்யப்பட்ட கோட்டைகளாக இருந்தபடியால் புரட்சிகர எழுச்சியாளர் தம் வகைக்கு சிறு கைகலப்புகளில் மட்டுமே ஈடுபட முடியும். போதியளவு துருப்புக்கள் ஒன்றுதிரட்டப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டவுடன் ஆயுதமேந்திய எதிர்ப்பு முடிவுக்கு வந்தது.

இதற்கு நேர்மாறாக, பிஃபாலிட்சில் பாடேனிலும் செழுமையான பயனுள்ள ஒரு மாகாணம் மற்றும் ஒரு முழு அரசுமே புரட்சிகர எழுச்சியாளர் கரங்களில் சிக்கின. பணம், ஆயுதங்கள், படைவீரர்கள், போர்ச் சாதனங்கள் யாவும் பயன்படுத்தத் தயார் நிலையில் இருந்தன. முறையான சேனையில் இருந்த படைவீரர்களே எழுச்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டார்கள்; இது மட்டுமல்ல, பாடேனில் அவர்களே எழுச்சியாளர்களில் முன்னணியில்இருந்தவர்கள். இந்ததெற்கு ஜெர்மன் இயக்கத்தை ஒழுங்கமைக்கப் போதிய அவகாசம்

* உக்ரேனியன் பெயர்: முக்காச்செவோ.—ப-ர்.

பெறுவதற்காக சாக்சனி மற்றும் ரைன் பிரஷ்யாவின் புரட்சிகர எழுச்சிகள் தம்மையே தியாகம் செய்தன. இது போன்ற ஒரு மாகாண மற்றும் பகுதியளவான புரட்சிகர எழுச்சிக்கு இத்தகைய சாதகமான நிலைமை முன்பு என்றுமே ஏற்பட்டிருக்கவில்லை. பாரிசில் ஒரு புரட்சி நடக்கும் என எதிர்பார்க்கப்பட்டது; ஹங்கேரியர்கள் வியன்னாவின் தலைவாயிலை எட்டி விட்டார்கள்; ஜெர்மனியின் மைய அரசுகள் அனைத்திலும் மக்கள் மட்டுமன்றித் துருப்புக்களும் கூட புரட்சிகர எழுச்சிக்குப் பலமான ஆதரவு அளித்தார்கள். அதில் பகிரங்கமாகக் கலந்து கொள்வதற்குரிய வாய்ப்பை மட்டுமே எதிர்பார்த்தார்கள். இருப்பினும் இந்த இயக்கம் குட்டி முதலாளிகளின் கரங்களில் சென்றதும், வெகு துவக்க முதலே நாசமாக்கப்பட்டு விட்டது. குட்டி முதலாளி ஆட்சியாளர்கள், குறிப்பாக பாடேனில்,—அவர்களுக்குத் தலைவராக திரு. பிரென்டானோ இருந்தார்—''சட்டபூர்வ'' முடிமன்னரான மாபெரும் கோமகன் பதவியையும், முதலுரிமைகளையும் தகாமுறையில் பறித்துக் கொள்வது மூலம் அவர்கள் மாபெரும் துரோகம் செய்கிறார்கள் என்பதை என்றுமே மறந்துவிடவில்லை. அவர்கள் தமது உள்ளங்களில் குற்றப்பழி புரிந்த உணர்வுடன் மந்திரி பதவி இருக்கைகளில் அமர்ந்திருந்தார்கள். இத்தகைய கோழைகளிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்? அவர்கள் புரட்சிகர எழுச்சியை அதற்கே உரிய மையப்படுத்தல் அற்ற, எனவே திறமையற்ற தன்னியல்புப் போக்குக்குக் கைவிட்டுவிட்டது மட்டுமின்றி, உள்ளபடியே இந்த இயக்கத்தின் வீறைக் கலைத்து, உறுதி குலைத்து, நாசம் செய்வதற்குத் தமது சக்திக்கேற்ற சகலத்தையும் செய்தார்கள். அரசியல்வாதிகளின் அந்தச் சூழ்ச்சி வாய்ந்த ரகத்தைச் சேர்ந்த, குட்டி முதலாளி வர்க்கத்தினரின் இந்த ''ஜனநாயக'' வீரர்களின் ஆர்வமிக்க ஆதரவு காரணமாக அவர்கள் இதில் வெற்றியடைந்தார்கள். அவர்கள் உண்மையில் ''நாட்டைப் பாதுகாப்பதாக'' எண்ணினார்கள். அதே போதில், பிரென்டானோ போன்ற சூழ்ச்சி நிறைந்த ஒரு சில மனிதர்கள் தம்மை இஷ்டப்படி ஆட்டிப்படைக்க இடங்கொடுத்தார்கள்.

இந்த அலுவலின் ராணுவ அம்சத்தைப் பொருத்தவரை பாடேன் தலைமை ஜெனரலும் முறையான சைனியத்தின் ஒரு லெப்டினண்டுமான ஸிகெலின் கீழ் நடந்தது போல ராணுவ நடவடிக்கைகள் இவ்வளவு பொறுப்பின்றியும் இவ்வளவு மந்தமாயும் எனறுமே நடந்ததில்லை எனலாம். சகலமும் குழப்பப்பட்டுக் கிடந்தது, ஒவ்வொரு நல்லவாய்ப்பும் இழக்கப்பட்டது, பிரம்மாண்டமான ஆனால் நடைமுறை சாத்தியமில்லாத திட்டங்கள் தீட்டப்பட்டு ஒவ்வொரு அரிய தருணமும் வீணுக்கப்பட்டது. கடைசியாக ஆற்றல் மிகுந்த போலந்தவரான மிராஸ்லாவ்ஸ்கி சேனையின் தலைமையை மேற்கொண்ட போது சேனையானது ஒழுங்கு குலைவுற்று, முறியடிக்கப்பட்டு, உருவிழந்து, சரியான வாய்ப்பு வசதிகள் இன்றி இருந்தது; எண்ணிக்கையில் நான்கு மடங்கு பெருத்த ஒரு விரோதியை எதிர்த்தது; அவர் வாக்ஹைஸல் எனும் இடத்தில் வெற்றிகரமாக இல்லை எனினும், ஒரு புகழார்ந்த சண்டையை நடத்துவதைத் தவிர வேறு எதையும் செய்ய இயலவில்லை. மேலும் கெட்டிக்காரத்தனமாகப் பின்வாங்கி, ரஸ்டாட் மதில்களின் கீழ் கவைக்குதவாத ஒரு சண்டையை நடத்திப் பின்னர் ராஜினுமாச் செய்தார். எல்லாப் புரட்சிகர எழுச்சிப் போர்களிலும் ஈடுபடும் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட படைவீரர்களும் புதிய படையாட்களும் கொண்ட கலப்புச் சேனைகள் போலவே, இந்தப் புரட்சிகர சேனையிலும் ஏராளமான வீரசாகசம் காணப்பட்டது. அதோடு படைவீரர்களுக்கு ஒவ்வாத, பெரும்பாலும் எண்ணிப்பார்க்கவியலாத ஏராளமான பீதியும் இருந்தது. ஆனால் இது செம்மையற்ற நிலையில் இருப்பது தவிர வேறு வழியில்லை என்ற போதிலும், இதைப் போல நான்கு மடங்கு பெருத்த படையும் கூட இதை முறியடிப்பதற்குப் போதுமானது எனக் கருத முடியாத நிலை இருந்தது என்ற அளவுக்குக் குறைந்த பட்சம் திருப்தியடையலாம். மேலும் இருபதாயிரம் எழுச்சியாளர்களை எதிர்த்த ஒரு லட்சம் முறையான துருப்புக்கள், இந்தப் போர் நடப்பில், அவை நெப்போலியனது பழம் பெரும் படையை எதிர்த்துப் போரிடும் போது தோற்றுவிக்கும் அளவு ராணுவ முறையில் இதற்கு உரிய மதிப்பளித்தன.

மே மாதம் புரட்சிகர எழுச்சி வெடித்தது. 1849 ஜுலை நடுப்பகுதிக்குள் இது முழுமையாக அடக்கப்பட்டது. முதல் ஜெர்மன் புரட்சி முடிவடைந்தது.

## 19

## புரட்சிகர எழுச்சியின் முடிவு

தெற்கு மற்றும் மேற்கு ஜெர்மனி பகிரங்கமான புரட்சிகர எழுச்சியில் இறங்கியிருந்தது. டிரெஸ்டனில் ராணுவ நடவடிக்கைகள் துவங்கியது தொட்டு ரஸ்டாட் சரணடையும் வரை இந்த முதல் ஜெர்மன் புரட்சியின் இறுதிப் போர்க்கனலை அவிக்க அரசாங்கங்களுக்கு நிச்சயமாகப் பத்து வாரங்களுக்கு மேல் பிடித்தது. அதே போதில் தேசிய சட்ட மன்றம் அதன் வெளியேற்றம் குறித்து எவ்விதக் கவனமும் காட்டப்படாத நிலையில் அரசியல் அரங்கிலிருந்து மறைந்தது.

இந்த அமைப்பின் தன்மதிப்பின் மீது அரசாங்கங்கள் தொடுத்த திமிரான தாக்குதல்களாலும், அது தானே உருவாக்கிய மத்திய ஆட்சி அதிகாரத்தின் கையாலாகாத் தன்மை மற்றும் துரோகத்தனமான மந்தத்தனத்தாலும், அதற்கு ஆதரவாக குட்டி முதலாளி வர்க்கமும், மேலும் அதிகப் புரட்சிகரமான இறுதி நோக்கத்தைக் கோரி தொழிலாளி வர்க்கமும் மேற்கொண்ட எழுச்சிகளாலும் குழம்பிப்போய், நாம் பிராங்க்பர்ட்டிலிருந்த இந்த மாண்புமிகுந்த அமைப்பிலிருந்து வெளியேறினோம். இதன் உறுப்பினர்கள் மத்தியில் புகலின்மையும் விரக்தியும் மேலோங்கியிருந்தன. நிகழ்ச்சிகள் திடுமென இத்தகைய திட்டவட்டமான, அறுதியான வடிவம் மேற்கொண்டதால், தமது மெய்யான அதிகாரம் மற்றும் செல்வாக்கு விஷயத்தில் இந்தத் துறைபோன சட்டசபையாளர்களின் பிரமைகள் வெகு சில நாட்களுக்குள் அறவே தகர்ந்துவிட்டன. அரசாங்கங்கள் கொடுத்த சமிக்கைப்படி கன்சர்வேடிவ்கள் இந்த அமைப்பில் இருந்து ஏற்கெனவே விலகிவிட்டார்கள். ஆட்சி நிறுவன அதிகாரிகளை

எதிர்த்துக் கொண்டல்லாமல் வேறு வழியில் இந்த அமைப்பு இனிமேற்பட இருக்க முடியாது. மிதவாதிகள் இந்த விவகாரத்தை முழுக் குழப்பத்தோடு கைவிட்டு விட்டார்கள். அவர்களும் பிரதிநிதிகள் என்ற முறையில் தமது பொறுப்புக்களைத் துறந்து விட்டார்கள். மதிப்புக்குரிய கனவான்கள் நூற்றுக் கணக்கில் கலைந்து ஓட்டம் பிடித்தார்கள். எண்ணூறு முதல் தொள்ளாயிரம் பேர்கள் உறுப்பினர்களாக இருந்த இந்த சட்டமன்றத்தில், நிலவிய உறுப்பினர் தொகை வேகமாகக் குன்றிப் போய் ஒரு கூட்டம் நடைபெற அவசியமான குறைந்த பட்ச உறுப்பினர் எண்ணிக்கை இப்போது 150ம், இன்னும் சில நாட்களில் 100ம் என்பதாக அறிவிக்கப்பட்டது. இவர்களைக் கூடக் கூட்டத்துக்குத் திரட்டுவது, ஜனநாயகக் கட்சி முழுவதும் இருந்த போதிலும், கடினமாக இருந்தது.

நாடாளுமன்றத்தின் எஞ்சியவர்கள் பின்பற்ற வேண்டிய பாதை தெளிவாகவே இருந்தது. அவர்கள் புரட்சிகர எழுச்சிக்கு ஆதரவாக வெளியரங்கமாகவும் உறுதியாகவும் நிலை மேற்கொள்ள மட்டுமே வேண்டும் அதன் மூலம் அதற்கு சட்டத்தன்மையை எந்தளவு வலிமையூட்ட முடியுமோ அதை வழங்க முடியும். அதே போதில் தமது சொந்தத் தற்காப்புக்காக அவர்கள் உடனே ஒரு சேனையைப் பெற முடியும். எல்லாப் போர் நடவடிக்கைகளையும் உடனே நிறுத்தும்படி அவர்கள் மத்திய ஆட்சியதிகாரத்திடம் கோர வேண்டியிருந்தது. மேலும் ஏற்கெனவே முன்னறிந்து காண இயன்றபடி இந்த ஆட்சியதிகாரம் அவ்வாறு செய்ய முடியவில்லை, அது செய்யாது என்று கண்டவுடன் அதை உடனே ஆட்சிப் பதவியில் இருந்து அகற்றி அதனிடத்தில் இன்னொரு அதிக செயலூக்கமுள்ள அரசாங்கத்தை அவர்கள் நிறுவ வேண்டியிருந்தது. எழுச்சியாளர்களின் துருப்புக்களை பிராங்க்பர்ட்டுக்கு கொண்டுவர முடியாது என்றிருக்கும் பட்சத்தில் (இது ஆரம்ப கட்டத்தில், மாநில அரசாங்கங்கள் ஆயத்தமின்றி இன்னும் தயங்கிக் கொண்டிருந்த போது எளிதாகச் செய்திருக்க முடியும்) சட்டமன்றம் உடனடியாக எழுச்சியின் மாவட்டத்தின் மையத்துக்கே மாற்றப்பட்டிருக்க முடியும். இவை

யாவும், மே மாதம் நடுப்பகுதி அல்லது இறுதிக்குள் உறுதியாகவும் உடனடியாகவும் செய்யப்பட்டிருக்குமானால், இது புரட்சிகர எழுச்சி மற்றும் தேசிய சட்ட மன்றம் இரண்டுக்குமே வாய்ப்புக்களைத் திறந்து விட்டிருக்கக் கூடும்.

ஆனால் ஜெர்மன் கடைக்கார இனத்தின் பிரதிநிதிகளிடமிருந்து அத்தகைய உறுதியான போக்கை எதிர்பார்க்க முடியாது. இந்த ஆர்வமுள்ள அரசறிஞர்கள் தமது பிரமைகளில் இருந்து விடுபடவே இல்லை. நாடாளுமன்றத்தின் வலிமை மற்றும் நிலையான தன்மையில் இருந்த தமது முடிவான நம்பிக்கையை இழந்துவிட்ட அந்த உறுப்பினர்கள் ஏற்கெனவே ஓட்டம் பிடிக்கத் தொடங்கி விட்டார்கள். தொடர்ந்து இருந்த ஜனநாயகவாதிகள், பன்னிரண்டு மாதமாகப் போற்றி வளர்த்து வந்த அதிகாரம் மற்றும் மாட்சி குறித்த தமது கனவுகளைக் கைவிடும்படி அவ்வளவு எளிதில் வற்புறுத்த முடியாது. இதுகாறும் அவர்கள் கடைப்பிடித்து வந்த போக்கிற்கு மெய்ப்பற்றுடன் அவர்கள் வெற்றிக்கான சகல வாய்ப்புகளும், குறைந்த பட்சம் போரின் கவுரவத்தோடு பணிந்து விடுவதற்கான சகல வாய்ப்புகளும் கடந்து செல்லும் வரை முடிவான போராட்டத்தில் இருந்து அஞ்சி விலகி நின்றார்கள். அதன் படுமோசமான கையாலாகாத்தனமும் அதன் மிகையான போலிவேடங்களும் சேர்ந்து பரிதாபத்தையும் ஏளனத்தையும் நிச்சயம் எழுப்பும் ஒரு செயற்கையான சுறுசுறுப்பாக இயங்கும் செயல்பாட்டை உருவாக்கும் பொருட்டு, அவர்கள் அவர்களைச் சிறிதும் சட்டை செய்யாத சாம்ராஜ்ய மாற்று ஆளுநரிடமும், விரோதியுடன் வெளியரங்கமாகச் சேர்ந்து நின்ற அமைச்சர்களிடமும், தீர்மானங்கள், நயவுரைகள் மற்றும் கோரிக்கைகளைத் தொடர்ந்து சாட்டிக் கூறியபடி இருந்தார்கள். கடைசியாக ஷ்டிரிகா* தொகுதி உறுப்பினரும், *Neue Rheinische Zeitung*இன் ஆசிரியர்களில் ஒருவரும், சட்டமன்றம் முழுதிலும் வைத்து இருந்த ஒரே உண்மையான புரட்சியாளருமான **வில்ஹெல்ம் வோல்ஃப்** தாங்கள் சொல்லுவதை

* போலிஷ் பெயர்: ஸ்திஷேகம்.—ப-ர்.

அவர்கள் கருத்தில் கொண்டிருக்கும் பட்சம் அவர்கள் பேசுவதைவிட்டு சாம்ராஜ்ய மாற்று ஆளுநரை நாட்டுக்குப் பிரதான துரோகி என்று பறைசாற்றி உடனே நாடு கடத்துவது நன்று. பின்னர் இந்த அரசாங்கம் அவர்கள் மீது அவமதிப்புக்கு மேல் அவமதிப்பைக்குவித்தபோது என்றுமே காணப் பெருத வகையில் இருந்த இந்த நாடாளுமன்ற கனவான்களின் அமுங்கிக் கிடந்த நேர்மையான ஆத்திரம் முழுவதும் வெடித்துப் பொங்கும். புனித பால் தேவாலயத்தில்[58] சுவர்களுக்கு அகத்தே பேசப்பட்ட முதல் நியாயமான கருத்தே **வோல்ஃபின்** முன்மொழிவு என்பது நிச்சயம், ஏனெனில் இதுவே முறையாகச் செய்யவேண்டிய காரியம். குறிக்கோளை நோக்கி இவ்வாறு நேரடியாக கூறப்படும் இத்தகைய பச்சையான மொழி உறுதியின்மை தவிர வேறு எதிலும் உறுதி காட்டாத, செயல்படுவதற்கு மிகவும் அஞ்சி, இப்பொழுது செய்யப்பட வேண்டியது ஒன்றும் செய்யாமலிருப்பதே என்று முடிவு செய்துவிட்ட ஒருசில உணர்ச்சிப் பகட்டாளர்களை அவமதிக்காமல் இருக்க முடியாது. இந்தச் சொல் ஒவ்வொன்றும் அவர்களது மனங்களின் போதையேறிய ஆனல் உள்நோக்கமுடையதான குழப்பத்தை மின்னல் போல வந்து துடைத்தொழித்த ஒவ்வொரு சொல்லும் சாத்தியமான வரை எந்த ஒரு நிலையான ஓர் இருப்பிடத்தினை மேற்கொள்ளப் பிடிவாதமாக இருந்தார்களோ அந்தச் சிக்கலில் இருந்து விடுவிக்க அவர்கள் ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு ஜாடையும் காரியங்களை உள்ளது உள்ளபடியே காட்டும் தெளிவான கருதுகோள் ஒவ்வொன்றும் இந்த சர்வவுரிமை பெற்ற சட்டமன்றத்தின் மாட்சிக்கு எதிரான குற்றச் செயலாகவே உண்மையில் இருந்தன.

தீர்மானங்கள், வேண்டுகோள்கள், குறுக்குக் கேள்விகள் மற்றும் பிரகடனங்கள் இருந்த போதிலும் பிராங்க்பர்ட்டிலிருந்த இந்த மதிப்புக்குரிய கனவான்களின் நிலைமை ஆதரவிழந்து போன சிறிது காலத்துக்குப் பின்னர், அவர்கள் பின்வாங்கிச் சென்றூர்கள், ஆனல் எழுச்சி மாவட்டங்களுக்குச் செல்லவில்லை; அங்கு போயிருப்பார்களானல் அது ஓர் உறுதியான நடவடிக்கையாக இருந்திருக்கும். அவர்கள் ஷ்டுட்

கார்ட்டுக்குச் சென்றார்கள். அங்கு வுர்ட்டெம்பர்க் அரசாங்கம் ஒருவகையான எதிர் நோக்கும் நடுநிலைமையைத் தொடர்ந்து வைத்திருந்தது. அங்கு, கடைசியாக அவர்கள் சாம்ராஜ்ய மாற்று ஆளுநரின் ஆட்சி அதிகாரம் பறிமுதலாகிவிட்ட தாகப் பறை சாற்றி தமது சொந்த அமைப்பில் இருந்தே ஐவர் கொண்ட பகர ஆட்சிக் குழுவைத் தேர்வு செய்தார்கள். இந்தப் பதில் ஆட்சிக் குழு உடனே ஒரு ராணுவச் சட்டத்தை நிறைவேற்றத் தொடங்கியது; இது உரிய சட்டவன்மையுடன் ஜெர்மனியின் எல்லா அரசாங்கங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. இந்தச் சட்டமன்றத்தின் மெய்யான விரோதிகளான அவர்களிடம் இதன் பாதுகாப்புக்கான படைகளைத் திரட்டும்படி உத்தரவிடப்பட்டது! இப்படி—உண்மையில் காகிதத்தளவில்தான்—தேசிய சட்டமன்றத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு சேனை உருவாக்கப்பட்டது. டிவிஷன்கள், பிரிகேடுகள், ரெஜிமெண்டுகள், பாட்டரிகள் என்பதாக எல்லாம் முறைப்படுத்தப்பட வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அங்கே உண்மையைத் தவிர மற்றவையெல்லாம் இருந்தன; உண்மையில் இத்தகைய சேனை என்றுமே நிறுவப்படவில்லை.

தேசிய சட்டமன்றத்துக்குக் கடைசித் திட்டம் ஒன்று கிடைத்தது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருந்த ஜனநாயக மக்கள் திரள், தம்மை நாடாளுமன்றம் விருப்பப்படி பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சம்மதம் தெரிவித்து, ஒரு நிர்ணயமான செயல்முறையினை மேற்கொள்ளும்படி கோரும் தூதுக் குழுக்களை அனுப்பிவைத்தது. வுர்ட்டெம்பர்க் அரசாங்கத்தின் உள்நோக்கங்களை அறிந்திருந்த மக்கள், அந்த அரசாங்கத்தை புரட்சிகர எழுச்சி நடத்திவரும் தமது அண்டை மக்களுடன் பகிரங்கமாயும் செயலூக்கமுடனும் சேர்ந்து பங்கேற்கும்படி கட்டாயப்படுத்த வேண்டும் என்று மன்றாடினார்கள். ஆனால் இது நடக்கவில்லை. ஷ்டுட்கார்ட்டுக்குச் சென்றது மூலம் இந்த தேசிய சட்டமன்றம் வுர்ட்டெம்பர்க் அரசாங்கத்தின் தாட்சண்யத்துக்கு அடிமைப்பட்டுவிட்டது. உறுப்பினர்களுக்கு இது தெரியும், அதனால் அவர்கள் மக்கள் மத்தியில் எழுந்த கிளர்ச்சியை ஒடுக்கவும் செய்தார்

கள். இவ்வாருக அவர்கள் இன்னுங்கூடத் தக்கவைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்த தமது செல்வாக்கின் கடைசி எச்சமிச்சத்தையும் இழந்தார்கள். அவர்கள் தமக்குரிய வெறுப்புக்கு இலக்காஞர்கள். பிரஷ்யாவாலும் சாம்ராஜ்ய மாற்று ஆளுநராலும் நிர்ப்பந்திக்கப்பட்ட வுர்ட்டெம்பர்க் அரசாங்கம் 1849 ஜூன் 18ந் தேதி நாடாளுமன்றம் கூடியிருந்த அறையினை அடைத்து மூடியது மூலமும், பகர ஆட்சிக் குழு உறுப்பினர்களை நாட்டை விட்டு வெளியேறும்படி உத்தரவு போட்டும் இந்த ஜனநாயக நாடகத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

அடுத்து அவர்கள் பாடேனுக்கு புரட்சிகர எழுச்சியின் முகாமுக்குள் சென்ருர்கள், ஆனால் அங்கு இப்போது அவர்களால் பயன் எதுவுமில்லை. அவர்களை யாருமே கவனிக்கவில்லை. ஆயினும் பகர ஆட்சிக் குழு சர்வவுரிமையுள்ள ஜெர்மன் மக்களின் பேரால் தனது கடுமுயற்சிகள் மூலம் நாட்டைத் தொடர்ந்து காப்பாற்றி வந்தது. யாரெல்லாம் வெளிநாட்டுப் பிரயாண அனுமதிச் சீட்டுகளை ஏற்றுக் கொள்வார்களோ அவர்களுக்கு அவற்றை வழங்குவதன் மூலம் அன்னிய ஆட்சிகளின் அங்கீகாரத்தைப் பெற ஒரு முயற்சி செய்தது. இன்னமும் காலம் இருந்த போது எவற்றின் சுறுசுறுப்பான உதவியை அது ஏற்கெனவே நிராகரித்ததோ அதே வுர்ட்டெம்பர்க் மாவட்டங்களை எழுச்சிக்குத் தூண்டிவிட அது பிரகடனங்கள் பிறப்பித்தது, கமிஷனர்களை அனுப்பி வைத்தது; ஆனால் இதனால் எவ்விதப் பலனும் ஏற்படவில்லை. இந்தப் பகர ஆட்சிக் குழுவுக்கு இந்தக் கமிஷனர்களில் ஒருவரான திரு ரோஸ்லெர் (எல்ஸ்* தொகுதியின் பிரதிநிதி) அனுப்பிவைத்த மூல அறிக்கை இப்போது நம் பார்வையில் உள்ளது. இதன் உள்ளடக்கம் ஓரளவு தன்மைக் குறிப்புடையதாகும். இது ஷ்டுட்கார்ட்டிலிருந்து 1849 ஜூன் 30ந் தேதியன்று வெளியிடப்பட்டதாகும். ரொக்கப் பணத்துக்காக பயனற்ற தேட்டம் நடத்திய இந்த அரைடஜன் கமிஷனர்களின் சாகசங்களைப் பற்றிச் சித்தரித்த பின்னர்

* போலிஷ் பெயர்: ஓலெஸ்நிஸா.—ப-ர்.

அவர்தான் தனது பதவிப் பொறுப்புக்கு இன்னும் திரும்பிச் செல்லாததற்குப் பல சாக்குப் போக்குகளைத் தருகிறார்; பிறகு பிரஷ்யா, ஆஸ்திரியா, பவேரியா மற்றும் வுர்ட்டெம்பர்க் ஆட்சிகள் இடையில் எழக்கூடியதான வேறுபாடுகள் பற்றியும் அவற்றின் சாத்தியமான பின்விளைவுகள் குறித்தும் ஒரு மிகவும் முக்கியமான வாதத்தை முன்வைக்கிறார். இதை முழுமையாக ஆழ்ந்து ஆராய்ந்த பிறகு எப்படியும் இனி மேல் எவ்வித வாய்ப்பும் இல்லை என்னும் முடிவுக்கு அவர் வருகிறார். அடுத்து, வுர்ட்டெம்பர்க் அமைச்சின் உள்நோக்கங்கள் மற்றும் துருப்புக்களின் நடமாட்டங்கள் விவரம் என்ன என்பது குறித்த இரகசியத் தகவல் கொண்டுவரவும் உளவு பார்க்கும் அமைப்பை நிறுவவும் வேண்டி நம்பகமான ஆட்களைக் கொண்ட இடை மாற்றுக் குழுக்களை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இப்போது முன்மொழிகிறார். இந்தக் கடிதம் அதன் முகவரிக்குப் போய்ச் சேரவே இல்லை, காரணம் அது எழுதப்பட்ட போது ''பகர ஆட்சிக்குழு'' ஏற்கெனவே முற்றாக ''அயல் துறை இலாகாவுக்கு'' அதாவது சுவிட்சர்லாந்துக்குக் கடந்து சென்றுவிட்டது. பாவம் திரு. ரோஸ்லெர் ஓர் ஆறுந்தர அரசின் வெல்லற் கரிய அமைச்சரவையின் உள்நோக்கங்கள் பற்றித் தனது மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்த அதே போதில், ஒரு லட்சம் பிரஷ்ய, பவேரிய மற்றும் ஹெஸ்ஸன் படைவீரர்கள் ரஸ்டாட் மதில்களின் கீழ் நடந்த கடைசிச் சண்டையில் ஏற்கெனவே இந்த விவகாரம் முழுவதற்கும் தீர்வு கண்டுவிட்டார்கள்.

இவ்வாறு, ஜெர்மன் நாடாளுமன்றமும் அதனுடன் கூடவே புரட்சியின் முதலும் கடைசியுமான படைப்பும் மறைந்தன. இதன் கூட்டம்தான், ஜெர்மனியில் உள்ளபடியே ஒரு புரட்சி நடந்து இருந்தது என்பதற்கான முதல் சான்றாக விளங்கியது. இந்த நவீன ஜெர்மன் புரட்சி இன்னமும் முடிவுக்குக் கொண்டுவரப்படாத காலம் வரையில் இது நிலவியது. முதலாளி வர்க்கத்தின் செல்வாக்கின் கீழ் துண்டாடப்பட்ட, சிதறலான நாட்டுப்புற மக்கள் தொகையினால், பெரும்பாலும் நிலப்பிரபுத்துவத்தின் உரிமையற்ற வாழ்வி

லிருந்து இப்போதுதான் விழிப்படைந்து வரும் மக்கள் பகுதியால் தேர்வுசெய்யப்பட்ட இந்த நாடாளுமன்றம், 1820—1848 காலப்பகுதியின் மாபெரும் பிரபலஸ்தர்கள் அனைவரையும் அரசியல் அரங்கின் ஓர் அமைப்புக்குள் கொண்டுவர உதவிப் பின்னர் அவர்களை அறவே நாசம் செய்தது. முதலாளி வர்க்க மிதவாதத்தின் பெயர் பெற்ற தலைவர்கள் எல்லோரும் இங்கு ஒன்றுதிரட்டப்பட்டார்கள்; முதலாளி வர்க்கம் அற்புதங்களை எதிர்பார்த்தது; அது தனக்கும் தனது பிரதிநிதிகளுக்கும் வெட்கக் கேட்டையே தேடித்தந்தது. தொழில்துறை மற்றும் வாணிக முதலாளி வர்க்கத்தினர் வேறு எந்த ஒரு நாட்டையும் விட அதிகக் கடுமையாக ஜெர்மனியில் தோற்கடிக்கப்பட்டனர். அவர்கள் முதலில் முறியடிக்கப்பட்டு, தகர்க்கப்பட்டு ஜெர்மனியின் ஒவ்வொரு தனிப்பட்ட அரசிலும் தம் பதவிகளில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். பிறகு மத்திய ஜெர்மன் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டு அவமதிக்கப்பட்டு இகழ்ச்சிக் கூச்சலுக்கு இலக்காக்கப்பட்டார்கள். அரசியல் மிதவாதம், முதலாளி வர்க்க ஆட்சி—அது முடியாட்சி பாணி அல்லது குடியரசு பாணி அரசாங்க வடிவில் இருந்தாலும்—ஜெர்மனியில் என்றுமே சாத்தியமல்ல.

தனது வாழ் நாட்களின் பிந்திய காலப்பகுதியில் ஜெர்மன் நாடாளுமன்றமானது, 1848 மார்ச்சுக்குப் பின்னர் தொடர்ந்து அதிகார பூர்வமான எதிர்ப்பணிக்குத் தலைமை தாங்கிய கட்சியை—சிறுதர கைவினைஞர் மற்றும் கடைக்காரர் வர்க்கம், ஓரளவுக்கு விவசாயிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயகவாதிகளின் கட்சியை—என்றென்றைக்கும் அவமதிக்கத் தொடங்கியது. ஜெர்மனியில் ஒரு நிலையான அரசாங்கத்தை நிறுவுவதற்கான அதன் வழி வகைகளைக் காட்டும்படி அந்த வர்க்கத்துக்கு 1849 மே, ஜூன் மாதங்களில் ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அது எவ்வாறு தோல்வி அடைந்தது என்பதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். இதற்குக் காரணம் பெரிய அளவு பாதகமான சந்தர்ப்ப நிலைமைகள் அல்ல, மாறாக புரட்சி வெடித்த நாள் முதல் நிகழ்ந்ததான எல்லா சோதனையான

தருணங்களிலும் அது தோற்றுவித்த உண்மையான தொடர்ச்சியான கோழைத்தனமும், அதன் வாணிக நடவடிக்கைகளின் குறியடையாளமான அதே குறு நோக்குடைய, மனோதிடமற்ற, ஊசலாட்ட உணர்வை அரசியலிலும் தோற்றுவித்ததுமே இதற்குக் காரணமாகும். இந்தப் போக்கில் சென்றதன் விளைவாக அது எல்லா ஐரோப்பியப் புரட்சி எழுச்சிகளிலும் உண்மையான போராடும் சக்தியாக விளங்கிய தொழிலாளி வர்க்கத்தின் நம்பிக்கையை 1849 மே மாத வாக்கில் இழந்துவிட்டது. இருப்பினும் அதற்கு ஒரு நியாயமான வாய்ப்பு இருந்தது. பிற்போக்குவாதிகளும் மிதவாதிகளும் விலகிவிட்ட பின்னர் ஜெர்மன் நாடாளுமன்றம் அதற்கு முற்றிலும் உரிமையாக இருந்தது. நாட்டுப்புற மக்கள் அதற்கு ஆதரவாக இருந்தார்கள். நிலைமைகள் குறித்த ஒரு தெளிவான நுண்ணறிவின் விளைவாக ஏற்படும் தைரியத்துடன் அது உறுதியாகச் செயல்பட்டிருக்கும் பட்சத்தில் சிறிய அரசுகளின் சேனைகளில் மூன்றில் இரண்டு பாகமும், பிரஷ்ய சேனையில் மூன்றில் ஒரு பகுதியும் பிரஷ்ய Landwehr (சேமப்படை அல்லது காவற்படை)யின் பெரும்பான்மையும் அதனுடன் சேரத் தயாராக இருந்தன. ஆனால் இந்த வர்க்கத்துக்குத் தலைமை தாங்கி நடத்திய அரசியல்வாதிகள் அவர்களைப் பின்பற்றிவந்த குட்டி முதலாளிகள் கூட்டத்தைவிட அதிக அறிவுத் தெளிவுடையவர்களாக இருக்கவில்லை. அவர்கள் மிதவாதிகளைக் காட்டிலும் அதிகமாக சுயவிருப்புடன் குன்றாது வைத்திருந்த பிரமைகளில் மோகமுற்று மிகவும் ஆர்வத்துடன் பற்றுக் கொண்டிருந்தார்கள், மேலும் அதிக எளிதான நம்பும் இயல்புடன் மெய்நடப்புகளைக் கையாள்வதில் உறுதியுடன் செயல்பட இயலாதவர்களாகக் காணப்பட்டார்கள். அவர்களது அரசியல் முக்கியத்துவமும் அறுதியான கீழ்மட்டத்துக்குக் குன்றிவிட்டது. ஆனால் அவர்கள் தமது சாமான்யமான கோட்பாடுகளை அமுலுக்குக் கொண்டுவராத காரணத்தால் அவர்கள் மிகவும் சாதகமான சந்தர்ப்ப நிலைமைகளின் கீழ், ஒரு தற்காலிகமான புத்துயிர்ப்பைப் பெறக் கூடிய நிலைமையில் இருந்தபொழுது பிரான்சில் லூயீ போனப்பார்ட்டின் திடீர் ஆட்சி

மாற்றம் தமது சகாக்களான ‘‘தூய ஜனநாயகவாதிகளிடமிருந்து’’ இந்த நம்பிக்கையைப் பறித்துவிட்டதைப் போல அவர்களிடமிருந்தும் இந்தக் கடைசி நம்பிக்கை பறிக்கப் பட்டது.

தென் மேற்கு ஜெர்மன் புரட்சிகர எழுச்சியின் தோல்வியும், ஜெர்மன் நாடாளுமன்றம் கலேக்கப்பட்டதும் முதல் ஜெர்மன் புரட்சியின் வரலாற்றை முடிவுக்குக் கொண்டு வருகின்றன. இப்போது நாம் எதிர்ப் புரட்சிக் கூட்டணியின் வெற்றி பெற்ற உறுப்பினர்கள் மீது கடைசிப் பார்வையைச் செலுத்த வேண்டியுள்ளது. இதை நாம் அடுத்த கட்டுரையில் விளக்குவோம்.[59]

லண்டன், 1852 செப்டம்பர் 24

எங்கெல்சால் 1851 ஆகஸ்டு—
1852 செப்டம்பரில் எழுதப்பட்டது

*New York Daily Tribune*
செய்தித்தாளில் 1851 அக்டோபர்
25, 28,
நவம்பர் 6, 7, 12, 28 தேதிகளிலும்
1852 பிப்ரவரி 27,
மார்ச் 5, 15, 18, 19, ஏப்ரல் 9, 17,
24, ஜூலே 27,
ஆகஸ்ட் 19, செப்டம்பர் 18,
அக்டோபர் 2, 23
தேதிகளிலும் வெளியிடப்பட்டது

செய்தித்தாள்
வாசகப்படி
அச்சிடப்பட்டது.
மூலம் ஆங்கிலத்தில்
எழுதப்பட்டது

ஒப்பம்: கார்ல் மார்க்ஸ்

பி. எங்கெல்ஸ்

# கொலோனில் சமீபத்தில் நடந்த வழக்கு

லண்டன், புதன்கிழமை, டிசம்பர் 1, 1852

*பிரஷ்யாவில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக நடந்த பிரம்மாண்டமான வழக்குப் பற்றியும்,[60] அதன் விளைவுகள் குறித்தும் ஏற்கெனவே ஐரோப்பியப் பத்திரிகைகளில் இருந்து நீங்கள் பல செய்திகளைப் பெற்றிருப்பீர்கள். ஆனால் இந்தச் செய்திகள் எதுவுமே மெய் நடப்புக்களின் நம்பகமான அறிவிப்புகளாக இல்லாததாலும், இந்த மெய்நடப்புக்கள் ஐரோப்பிய மாகண்டம் எத்தகைய அரசியல் வழிவகைகள் மூலம் அடிமைத்தனத்தில் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றித் தெளிவான விளக்கம் தருவதாலும், இந்த வழக்கைப் பற்றி மீண்டும் விவரிப்பது அவசியம் என்று கருதுகிறேன்.*

*சங்கம் சேரும் உரிமை மற்றும் கூட்டம் கூடும் உரிமை ஆகியவை ஒடுக்கப்பட்டது மூலம், கம்யூனிஸ்டு அல்லது பாட்டாளி வர்க்கக் கட்சியும், இதர கட்சிகளும் மாகண்டத்தில் தமக்கென ஒரு சட்டபூர்வமான ஸ்தாபனத்தை நிறுவிக் கொள்வதற்குரிய வழிவகைகளை இழந்துவிட்டன. இதன் தலைவர்கள் அவர்களது நாடுகளில் இருந்து நாடுகடத்தப்பட்டிருக்கிறார்கள். ஒரு ஸ்தாபனம் இல்லாமல் எந்த ஓர் அரசியல் கட்சியும் இருக்க முடியாது. மிதவாத முதலாளி வர்க்கத்துக்கும் ஜனநாயக குட்டி முதலாளி வர்க்கத்துக்கும் ஒருங்கே, சமூக அந்தஸ்து மூலம், சாதகங்கள் மற்றும் இந்த வர்க்கத்தின் உறுப்பினர்களுக்கு இடையேயான நீண்ட கால*

மாக நிலைநாட்டப்பட்டதான அன்றாட ஒட்டுறவு ஆகியவை இந்த ஸ்தாபனத்துக்கு பதிலாக இருக்க முடியும். பாட்டாளி வர்க்கமோ அத்தகைய சமூக அந்தஸ்து மற்றும் பண வசதிகள் இல்லாததால், தவிர்க்க முடியாத வகையில் இரகசியமான முறையில் சங்கம் அமைப்பதன் மூலம் அவற்றைப் பெற கட்டாயத்திற்கு உள்ளாகியிருக்கிறது. இதன்விளைவாக, பிரான்சிலும் ஜெர்மனியிலும் ஒருங்கே எண்ணற்ற இரகசியச் சங்கங்கள் தோன்றின. 1849க்குப் பின்னால் இவை ஒன்றன் பின் ஒன்றாகப் போலீசால் கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றின் மீது சதிவழக்குகள் தொடரப்பட்டன. அவற்றில் பல உண்மையிலேயே சதிச் செயல்களில் ஈடுபட்டிருந்தன, அப்பொழுதிருந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான அசல் நோக்கத்துடன் நிறுவப்பட்டிருந்தன. குறிப்பிட்ட ஒரு சில சந்தர்ப்ப நிலைமைகளின் கீழ் ஒருவன் சதிச் செயல்களில் ஈடுபடாமல் இருப்பானாகில் அவன் ஒரு கோழை எனவே கருதப்படுவான். அதே போல வேறுவிதமான சந்தர்ப்ப நிலைமைகளின் கீழ் அவ்வாறு செயல்பட்டான் என்றால் ஒரு முட்டாள் என்று கருதப்படுவான். மேலும் பரந்த, மேலும் உன்னதமான நோக்கங்களுடன் நிறுவப்பட்ட வேறு சில சங்கங்களும் இருந்தன. நடப்பில் இருக்கும் அரசாங்கத்தைக் கவிழ்ப்பது என்பது வரவிருக்கும் மாபெரும் போராட்டத்தில் ஓர் இடைக்கால கட்டமே என்பதை அறிந்திருந்தன. இவை ஒன்று சேர்ந்து நின்று, தீர்மானகரமான இறுதிப் போராட்டத்திற்குக் கட்சியை ஆயத்தம் செய்ய உத்தேசித்திருந்தன. இக்கட்சியின் கருமையத்தை அவை ஏற்கெனவே நிறுவியிருந்தன. இந்தப் போராட்டம் என்றாவது ஒரு நாள் ஐரோப்பாவில் ஆதிக்கம் புரியும் ''கொடுங்கோலர்'' ''வல்லாட்சியாளர்'' மற்றும் ''அடாவழி அநியாய ஆட்சியாளர்'' ஆகியோரை மட்டுமன்றி மேலும் மிகவும் மேம்பட்ட ஆட்சியதிகாரமாயும், இவர்களை விடவும் மிகவும் வெல்லற்கரியதானதுமான உழைப்பின் மீதான மூலதனத்தின் ஆதிக்கத்தையும் என்றென்றைக்குமாக நசுக்கியே தீர வேண்டும்.

ஜெர்மனியில் நிறுவப் பெற்றதான முன்னேற்றமான கம்யூனிஸ்டுக் கட்சி இந்த வகைப்பட்டதாகும்.[61] அதன் ''அறிக்கையின்'' (1848ல் வெளியிடப்பட்டது) கோட்பாடுகளின் படியும், **ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும்** எனும் தலைப்பில் New York Daily Tribune* வெளியிட்ட பல கட்டுரைகளில் தரப்பட்ட விளக்கத்தின் படியும் இந்தக் கட்சியானது தனது கருத்துக்களை நடை முறையில் நிறைவேற்றத் தக்க அந்தப் புரட்சியை எந்த நேரமும் தன் இஷ்டப்படி உருவாக்கும் திராணி தனக்கு இருப்பதாக என்றுமே எண்ணியது இல்லை. 1848ல் புரட்சிகர இயக்கங்களை உருவாக்கிய காரணங்களையும், அவை தோல்வியுற நேர்ந்ததன் காரணங்களையும் ஆராய்ந்தது. எல்லா அரசியல் போராட்டங்களுக்கும் அடித்தளமாக இருப்பது வர்க்கங்களின் சமூகப் பகைமையே என்பதை ஒப்புக் கொண்ட அக்கட்சியானது, சமுதாயத்திலுள்ள ஒரு வர்க்கம் ஒரு தேசத்தின் நலன்கள் அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தவும் இவ்வாருக அரசியல் ரீதியில் அதன்மீது ஆட்சி புரியவும் தக்கதான பொறுப்பேற்கக் கூடிய, கட்டாயம் பொறுப்பேற்க வேண்டிய நிலைமைகள் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டது. மத்திய காலங்களின் நிலவுடைமைப் பிரபுக்குலத்துக்குப் பிறகு எவ்வாறு ஆரம்ப முதலாளிகளின் பண பலம் எழுச்சியுற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது என்பதையும், முதலாளிகளின் இந்த **நிதித்துறை** பிரிவினரின் சமுதாயச் செல்வாக்கும் அரசியல் ஆட்சியும், நீராவி விசை புகுத்தப்பட்டதன் பின்னல், எவ்வாறு **தொழில்துறை** முதலாளிகளின் பெருகிவரும் வலிமையால் அகற்றப்பட்டு அவர்கள் பதவிகளில் அமர்த்தப்பட்டனர் என்பதையும், இன்றைய தருணத்தில் எவ்வாறு மேலும் இரண்டு வர்க்கங்கள், குட்டி முதலாளி வர்க்கம் மற்றும் தொழில்துறை தொழிலாளி வர்க்கம் ஆதிக்கத்திற்கான தமது வாய்ப்பை நாடி உரிமை கோருகின்றன என்பதையும் வரலாறு கம்யூனிஸ்டுக் கட்சிக்குப் புலப்படுத்தியது. 1848-49ம் ஆண்டுகளின் நடைமுறைப் புரட்சிகர அனுபவம்

* குறிப்பு எண் 1ஐப் பார்க்கவும்.—ப-ர்.

தத்துவத்தின் பொது முடிவுகளை ஊர்ஜிதம் செய்தது: இது கம்யூனிஸ்டு தொழிலாளி வர்க்கம் தன்னை முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் கூலி அடிமை முறையை அழித்துத் தன்னை அதிகாரத்தில் நிரந்தரமாக நிலை நாட்டிக் கொள்ளக்கூடும் முன்னுல், குட்டி முதலாளிகளின் ஜனநாயகத்துக்கு முதலில் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற முடிவுக்கு இட்டுச் சென்றது. இவ்வாறுக, கம்யூனிஸ்டுகளின் இரகசிய ஸ்தாபனம் ஜெர்மனியில் இப்போதுள்ள அரசாங்கங்களைக் கவிழ்ப்பது எனும் நேரடி நோக்கம் கொண்டிருக்க முடியவில்லை. இந்த அரசாங்கங்களை அன்றி விரைவிலோ பின்னரோ அவற்றைத் தொடர்ந்து ஏற்படவிருக்கும் புரட்சிகர எழுச்சி அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காகவே இந்த ஸ்தாபனம் உருவாக்கப்பட்டது. அதன் உறுப்பினர்கள் தங்கள் காலத்தில் status quo* எதிர்த்து ஒரு புரட்சிகர இயக்கத்துக்கு தனிப்பட்ட முறையில் செயலூக்கமான ஆதரவு அளிக்கலாம், நிச்சயமாக அளிப்பார்கள். ஆனுல் மக்கள் திரளினர் இடையே இரகசியமாக கம்யூனிஸ்டுக் கருத்துக்களைப் பரப்புவதல்லாமல் வேறு வழிகளில் இத்தகைய இயக்கத்துக்குத் தயாரிப்புகள் செய்தல் என்பது இந்தச் சங்கத்தின் நோக்கமாக இருக்க முடியாது. இந்த சங்கத்தின் அடித்தளம் பற்றி அதன் பெரும்பான்மையான உறுப்பினர்கள் மிகவும் நன்ருகப் புரிந்து கொண்டிருந்த காரணத்தால், ஒரு சிலர் பதவிவேட்டைப் பேராசையால் இதனை ஒரு ex tempore** புரட்சியை நடத்துவதற்கான ஒரு சதிகார அமைப்பாக மாற்றுவதற்கு முயன்றபோது, அவர்கள் வெகுவிரைவில் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

இத்தகைய சங்கம் ஒரு சதித் திட்டம், ராஜத் துரோக நோக்கம் கொண்ட ஒரு சூழ்ச்சி என்று பூமியிலுள்ள எந்தச் சட்டத்தின் படியும் சொல்ல முடியாது. இது ஒரு சதித் திட்டம் எனும் பட்சத்தில், இது நிலவும் அரசாங்கத்துக்கு

---

* நிலவும் முறை, நிலைமை.—ப-ர்.
** முன்தயாரிப்பு இல்லாத.—ப-ர்.

எதிராகச் செய்யப்பட்டதல்ல, மாருக இதன் பின்னுல் வரப் போகும் அரசாங்கத்தை எதிர்த்துத் திட்டமிடப்பட்ட தாகும். பிரஷ்ய அரசாங்கத்துக்கு இது நன்ருகத் தெரியும். அதிகாரிகள் தம் வகைக்கு நடத்திய பதினெட்டு மாதகால விசித்திரமான விசாரணை நடவடிக்கைகளின் போது பதினேரு பிரதிவாதிகள் தனிக் கொட்டடிகளில் வைக்கப்பட்டிருந்த தன் காரணம் இதுவே. எட்டு மாதங்கள் காவலில் வைக்கப் பட்ட பின்னர் "அவர்களுக்கு எதிராக குற்றம் புரிந்தார்கள் என்பதற்கான சாட்சியங்கள் இல்லாததால்" இவர்கள் மேலும் சில மாதங்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டார்கள் என்ருல் நிலைமையைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்! கடைசியாக அவர்கள் ஜூரிகள் முன்பு கொண்டுவரப்பட்ட போது, ராஜத் துரோகத் தன்மை கொண்ட ஒரு பகிரங்கச் செயல் கூடப் புரிந்ததாக அவர்களுக்கு எதிராக சாட்சியம் எதுவும் இருக்கவில்லை. இருப்பினும் அவர்களுக்குத் தண்டனை அளிக்கப்பட்டது. இது எப்படி நிகழ்ந்தது என்பதை விரை வில் காண்போம்.

இந்தச் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர்* 1851 மே மாதம் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து கிட்டிய ஆவ ணங்களின் பேரில் தொடர்ந்து வேறு பலர் கைது செய்யப் பட்டார்கள். லண்டனில் போலி உருவிலான ஒரு சதியின் பரவல் குறித்து விசாரணை செய்யும்படி பிரஷ்ய போலிஸ் அதிகாரியான ஷ்டீபர் என்பவர் உடனடியாகப் பணிக்கப்பட் டார். இந்தச் சங்கத்திலிருந்து பிரிந்து வெளியேறிய மேலே குறிப்பிடப்பட்ட நபர்கள் சம்பந்தமாகச் சில ஆவணங் களைப் பெற முடிந்தது. இந்த நபர்கள் சங்கத்திலிருந்து வெளி யேற்றப்பட்ட பின்னர் பாரிசிலும் லண்டனிலும் உண்மை யிலேயே சதி செய்யப்பட்டது. இந்த ஆவணங்கள் இரட் டைக் குற்றச் செயல் புரிந்து பெறப்பட்டன. ரேய்ட்டர் எனும் பெயர் கொண்ட நபருக்கு லஞ்சம் தரப்பட்டு, அவர் இந்தச் சங்கத்தின் செயலாளரது** மேசையை உடைத்து

---

* பீட்டர் நோத்யுங்க்.—ப-ர்.

** ஒஸ்வால்ட் டீட்ஸ்.—ப-ர்.

அதிலிருந்த ஆவணங்களைத் திருடுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. ஆனால் இதோடு முடிந்து விடவில்லை. இந்தத் திருட்டு, பாரிசில் நடைபெற்ற பிராங்கோ-ஜெர்மன் சதி[62] கண்டு பிடிக்கப்பட்டு இதில் சம்பந்தப்பட்டோர் தண்டனை பெற இட்டுச் சென்றது; ஆனால் மாபெரும் கம்யூனிஸ்ட் சங்கம் பற்றி தடயம் எதையும் தரவில்லை. இந்தப் பாரிஸ் சதி லண்டனில் இருந்த ஒரு சில பேராசை கொண்ட முட்டாள்களாலும் chevaliers d'industrie*களாலும், முன்னாள் தண்டனை பெற்ற கள்ளக் கையொப்பக் குற்றவாளியும் பின்னர் பாரிசில் போலீஸ் உளவாளியாகச் செயல்பட்ட வருமான ஒருவர்** ஆகியோர் நெறியாண்மையின் கீழ் நடத்தப்பட்டது என்பதை நாம் இங்கு குறிப்பிடலாம். இவர்களால் ஏமாற்றமடைந்தவர்கள் தமது அரசியல் வாழ்வின் அறவே அற்பமான தன்மையை சமாளிப்பதற்காக வெறிபிடித்த முழக்கங்களையும் இரத்த வெறித்தனமான பிதற்றல்களையும் கையாண்டார்கள்.

அப்போது பிரஷ்ய போலீஸ் புதிய கண்டுபிடிப்புகளைத் தேட வேண்டி இருந்தது. லண்டனிலிருந்த பிரஷ்ய தூதரகத்தில் அது இரகசியப் போலீசின் ஒரு முறையான அலுவலகத்தை நிறுவியது. கிரைஃப் எனும் பெயர் கொண்ட ஒரு போலீஸ் ஒற்றர் தூதரகத்தின் அதிகாரி என்ற பதவியில் இந்த வெறுக்கத்தக்க தொழிலைப் புரிந்து வந்தார். இந்த நடவடிக்கை பிரஷ்ய தூதரகங்கள் அனைத்தையும் சர்வதேசச் சட்டம் எனும் எல்லைவட்டத்திலிருந்து வெளியேற்றப் போதுமானது, இத்தகைய நடவடிக்கையை ஆஸ்திரியர்கள் கூட இன்னும் மேற்கொள்ளத் துணியவில்லை. இவருக்குக் கீழே லண்டன் மாநகரின் ஒரு வாணிகரான ஃப்ளோரி என்பவர் வேலை செய்துவந்தார். அன்னவர் சற்றே செல்வம் படைத்தவர், உயர்வட்டாரங்களோடு ஓரளவு பழக்கமுள்ளவர், உள்ளார்ந்த இழிதகவு நாட்டத்தால் படுகீழ்த்தரமான செயலில் இறங்கக் கூடிய மிகவும் மட்டமான நபர்களில் ஒருவர்.

* சாகசக்காரர்கள், மோசடிக்காரர்கள்.—ப-ர்.

** ஜூலியன் ஷெர்வால்.—ப-ர்.

இன்னொரு ஒற்றர் ஹிர்ஷ் எனும் வர்த்தக குமாஸ்தா ஆவார். அவர் லண்டனுக்கு வந்தவுடனேயே ஏற்கெனவே உளவாளி என்று கண்டுபிடிக்கப்பட்டுவிட்டவர். லண்டனில் இருந்த ஜெர் மன் கம்யூனிஸ்டு அகதிகளின் சங்கத்திற்குள் தம்மைத்தாமே அறிமுகப்படுத்திக் கொண்டார். அவரது மெய்யான தன்மை குறித்த சான்றுகளைப் பெறும் பொருட்டு அவர்கள் அவரைச் சிறிது காலம் சேர்த்துக் கொண்டார்கள். போலீசுடனுன அவரது தொடர்புகள் சம்பந்தமான சான்றுகள் விரைவில் கிட்டின. அந்த சமயம் முதல் ஹிர்ஷ் தாமே அங்கு வரா தொழிந்தார். சம்பளம் தந்து தகவல் பெறுவதற்காக அமர்த்தப்பட்ட வாய்ப்புகள் அனைத்தையும் இவ்வாறு அவர் விட்டு விட்ட போதிலும் அவர் வாளா இருக்கவில்லை. சம் பந்தப்பட்ட கம்யூனிஸ்டுகளின் ஒருவரைக் கூடச் சந்திக்காத தமது கென்சிங்டன் மறைவிடத்தில் இருந்தபடி, அவர் பிரஷ்ய போலீசால் கண்டுபிடிக்க முடியாத அந்தச் சதியில் ஈடுபட்ட போலியான மத்தியக் கமிட்டியின் போலியான அமர்வுகள் குறித்த போலியான செய்தி அறிக்கைகளை ஒவ் வொரு வாரமும் புனைவு செய்து கொண்டிருந்தார். இந்தச் செய்தி அறிக்கைகளின் உள்ளடக்கம் மிகவும் அபத்தமான தன்மை கொண்டது. ஒரு பெயர் கூட உண்மையாக இருக்க வில்லை, ஒரு பெயர் கூட எழுத்துப் பிழை இன்றி இருக்க வில்லை, தனி ஒரு நபர் கூட அவர் எப்படிப் பேசுவது சாத்திய மாய் இருக்குமோ அந்த முறையில் பேசுமாறு செய்யப்பட வில்லை. அவரது எஜமானுன ஃப்ளோரி இந்தக் கள்ள ஆவணத் தயாரிப்பு வேலைகளில் அவருக்கு உதவினுர். அந்த அதிகாரி யான கிரைஃப் தனது இழிவான நடவடிக்கைகளைப் பற்றிய விசாரணைகளிலிருந்து தப்பி விட முடியும் என்பது இன் னும் நிரூபணமாகவில்லை. பிரஷ்ய அரசாங்கம் நம்ப முடி யாத அளவுக்கு இந்த அற்பத்தனமான புனை சுருட்டுகளை சத்திய வேதமாக எடுத்துக்கொண்டது. ஜூரிகள் முன் கொண்டுவரவிருக்கும் சாட்சியங்கள் விஷயத்தில் இது எப் படிப்பட்ட குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை நீங்கள் கற்பனை செய்து கொள்ளலாம். வழக்கு விசாரணைக்கு

வந்தபோது ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட இந்தப் போலீஸ் அதிகாரியான திரு. ஷ்டீபர் சாட்சிக் கூண்டில் ஏறி இந்த அபத்தங்கள் பற்றி எல்லாம் சத்தியப் பிரமாணம் செய் தார். மேலும் இந்த மோசமான சதிவேலைகளில் பிரதான மூலச்சக்தியாக இருக்கும் அந்த நபர்களுடன் மிகவும் நெருக் கமான உறவு பூண்டுள்ள தனது ஓர் இரகசிய ஒற்றர் இருப்ப தாகக் கவலையற்ற போக்கில் சாதித்தார். இந்த இரகசிய ஒற்றர் உண்மையிலேயே இரகசியமானவர்தான். சதியில் ஈடுபட்ட நபர்களின் இரகசிய எண்ணங்கள், சொற்கள்' செயல்களைப் பற்றி செய்திகளைத் திரட்டி வருவதாக வாரந் தோறும் நடித்தபடியால் அந்த நபர்களில் யாரையாவது உண்மையிலேயே சந்தித்துவிடுவோம் என்ற அச்சத்தால் அவர் கென்சிங்டனில் எட்டு மாதங்கள் தலைமறைவாக இருந்தார்.

ஆயினும் ஹிர்ஷ் ஃப்ளோரி வகையரு இன்னொரு புனைவை எதிர்பார்த்து நின்றார்கள். தாம் திரட்டிய செய்திகளை எல் லாம் கொண்டு அவர்கள் தலைமை இரகசியக் கமிட்டியின் அமர்வுகள் குறித்த ''அசல் குறிப்பேட்டைத்'' தயார் செய் தார்கள். இந்தக் கமிட்டி இருப்பதாக பிரஷ்ய போலீஸ் சாதித்தது. இந்தக் குறிப்பேடு இதே நபர்களிடமிருந்து ஏற்கெனவே பெற்ற செய்திகளுடன் வியத்தகு முறையில் உடன்படக் கண்ட திரு. ஷ்டீபர் இதை உடனே ஜூரிகள் முன் சமர்ப்பித்தார். மிகவும் கவனமான பரிசீலனைக்குப் பிறகு, தமது பரிபூரணமான நம்பிக்கையின் பிரகாரம் இந்தக் குறிப்பேடு மெய்யானது என்று சத்தியப் பிரமாணம் செய்து சாற்றினர். அப்போது தான் ஹிர்ஷ் திரட்டி அறிவித்த பெரும்பாலான அபத்தங்கள் பகிரங்கப்படுத்தப் பெற்றன. அந்த இரகசியக் கமிட்டியின் போலி உறுப்பினர்கள் தம்மைப் பற்றித் தாம் என்றுமே அறிந்திராத தகவல்கள் கூறப்படு வதைக் கண்டு அடைந்த வியப்பினை நீங்கள் கற்பனை செய்து கொள்ளலாம். வில்ஹெல்ம் என்று பெயரிடப்பட்ட சிலர் இங்கு லுயீ அல்லது கார்ல் என்று பெயரிடப்பட்டனர்; அந்த சமயம் இங்கிலாந்தின் இன்னொரு கோடியில் இருந்த வேறு சிலர் லண்டனில் உரைகள் ஆற்றியதாக அறிவிக்கப்பட்

டார்கள். இன்னும் சிலர் தாம் என்றுமே பெற்றிராத கடிதங்களை வாசித்ததாக அறிவிக்கப்பட்டார்கள். அவர்கள் வாரத்திற்கு ஒரு முறை வழக்கமாக புதன்கிழமைகளில் சந்தித்துக் கொள்வதுண்டு. ஆனால் அவர்கள் வியாழக்கிழமை தோறும் முறையாகக் கூட்டம் நடத்தியதாக அறிவிக்கப் பட்டது. எழுதவே தெரிந்திராத ஒரு தொழிலாளி குறிப்புகளைத் திரட்டுபவராகவும் அதில் கையொப்பமிட்டவராகவும் சித்தரிக்கப்பட்டிருந்தார். அவர்கள் அனைவரும் பேசியதாகக் கருதப்பட்ட நடையினைப் பார்த்தால் ஒரு வேளை பிரஷ்ய போலீஸ் நிலையத்தின் பாணி இருக்கலாம், ஆனால், நாட்டில் மதிப்புடன் அறியப்பட்ட பெரும்பான்மையோரான இலக்கிய ரசிகர்கள் கூடிப்பேசும் இலக்கிய வட்டத்தின் நடைப்பாணி நிச்சயமாக இதுவல்ல. இவை முழுவதற்கும் மகுடம் வைத்தாற் போல இந்தக் குறிப்பேட்டுக்காக அந்தக் கற்பனையான மத்தியக் கமிட்டியின் போலிச் செயலாளருக்கு இந்தப் புரட்டர்களால் கொடுக்கப்பட்டதாகப் புனைவு செய்யப்பட்ட ஒரு பணத் தொகைக்கு ஒரு கள்ள ரசீது தயார் செய்யப்பட்டது. ஆனால் இந்தப் போலிச் செயலாளரின் இருப்பு துரதிருஷ்டம் பிடித்த ஹிர்ஷ் மீது ஏதோ ஒரு வன்மமான கம்யூனிஸ்டு செய்த குறும்புத்தனமான ஏமாற்றையே சார்ந்திருந்தது.

இந்த நயமற்ற புரட்டு மிகவும் வெட்கக்கேடான விவகாரமாகிவிட்டது, அதன் உத்தேச விளைவுகளுக்கு நேர் எதிரான விளைவுகளை ஏற்படுத்தியது. குற்றம் சாட்டப்பட்டோரின் லண்டன் நண்பர்கள் ஜூரிகள் முன்பு மெய்விவரங்களைக் கொண்டு வருவதற்குரிய எல்லா வழிவகைகளையும் இழந்துவிட்ட போதிலும், எதிர்வாதி வழக்குரைஞர்களுக்கு அவர்கள் எழுதிய கடிதங்கள் தபாலில் மறைக்கப்பட்டு விட்ட போதிலும், இந்தச் சட்டத்துறை கனவான்கள் வசம் அவர்கள் ஒப்படைத்த ஆவணங்கள் மற்றும் உறுதி மொழிப் பத்திரங்கள் சாட்சியங்கள் என ஒப்புக் கொள்ளப்படவில்லை என்ற போதிலும், பொதுஜன ஆத்திரம் பெருமளவில் இருந்த காரணத்தால் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியவர்

களும்—இந்தக் குறிப்பேட்டின் நம்பகத்தன்மைக்கு உத்தர வாதம் என்ற முறையில் சத்தியப் பிரமாணம் செய்த திரு. ஷ்டீபருங்கூட—இது ஒரு கள்ள ஆவணம் என்பதை ஒப்புக் கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டது.

ஆயினும் இந்தக் கள்ள ஆவணம், போலீசால் புரியப் படும் இவ்வகைப்பட்டதான குற்றச் செயல்களில் உட்பட்ட ஒரே சம்பவம் அல்ல. இது போன்ற மேலும் இரண்டு அல்லது மூன்று சம்பவங்கள் இந்த வழக்கு விசாரணையின் போது நடந்தன. ரேய்ட்டரால் களவாடப்பட்ட ஆவணங்களில், அவற்றின் அர்த்தத்தை உருக்குலைக்கும் நோக்கமுடன், போலீஸ் இடைச்செருகல்களைப் புகுத்தியது. ஒரு சில வெறித் தனமான முட்டாள்தனங்களைக் கொண்ட ஒரு கட்டுரை டாக்டர் மார்க்சின் கையெழுத்தைப் போலியாகக் கை யாண்ட ஒரு கையெழுத்து பாணியில் எழுதப்பட்டிருந்தது. சில காலம் இது அவராலேயே எழுதப்பட்டதாகப் பாவனை செய்யப்பட்டது. கடைசியாக குற்ற வழக்குத் தொடர்ந் தோர் இந்தக் கள்ளத்தனமான செயலை ஏற்றுக் கொள்ளும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் இத்தகையது என்று நிரு பணம் செய்யப்பட்ட ஒவ்வொரு போலீஸ் இழிபழிக்கும் பதிலாக ஐந்து அல்லது ஆறு புதிய பழிச் சாட்டுகள் கொண்டு வரப்பட்டன. இவற்றை இந்தத் தருணத்தில் அம்பலப் படுத்த முடியவில்லை. காரணம் எதிர்வாதம் செய்வோர் திடீரென இதை எதிரிட நேர்ந்தது; இதற்கான சான்றுகள் லண்டனில் இருந்து பெற வேண்டி இருந்தது; லண்டனில் இருந்த கம்யூனிஸ்டு அகதிகளுடன் எதிர்வாதி வழக்குரைஞர் கள் கொண்டிருந்த கடிதப் போக்குவரத்து யாவும் இந்தச் சதிக்குச் சான்றுகள் என்று பகிரங்க நீதி மன்றத்தில் கருதப் பட்டது.

கிரைஃப் மற்றும் ஃப்ளோரி இங்கு அவர்கள் என்ன வாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருக்கிறார்களோ அவ் வாறே இருப்பதாக திரு. ஷ்டீபர் தனது சாட்சியத்தில் அறிவித்தார். ஹிர்ஷைப் பொருத்த வரை அவர் ஃப்ளோரி யின் உத்தரவின் பேரிலும் அவரது உதவியுடனும் இந்த

''குறிப்பேட்டை'' கள்ளத்தனமாகத் தயாரித்தார் எனவும், குற்றம் புரிந்ததாக வழக்குத் தொடரப்படுவதிலிருந்து தப்பி விடும் பொருட்டு நாட்டை விட்டு ஓடினர் எனவும் லண்டன் நீதிபதி முன்பு ஒப்புக் கொண்டார்.

இந்த வழக்கு விசாரணையின் போது அம்பலத்துக்கு வந்த இத்தகைய பழிக்கிடமான பகிரங்கத் தகவல்களை அரசாங்கத்தால் தாங்க முடியவில்லை. ரைன் மாகாணம் இதுவரை கண்டிராத அத்தகைய ஜூரிகள் இந்த வழக்குக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். வடிகட்டிய பிற்போக்காளர்களான ஆறு பிரபுக்கள், நான்கு நிதியதிபர்கள், இரண்டு அரசாங்க அதிகாரிகள் இதில் இருந்தனர். இவர்கள் ஆறுவார காலம் தம்முன் குவிக்கப்படும் குழம்பியதான ஏராளமான சான்றுகளை அணுகி ஆராயக் கூடிய ஆட்கள் அல்ல. எதிர்வாதிகள் புனிதமான சகலத்தையும்—சொத்து, குடும்பம், சமயம், முறைமை, அரசாங்கம் மற்றும் சட்டம் ஆகியவற்றை தலைகுப்புறக் கவிழ்க்கும் பொருட்டு உருவாக்கிய பயங்கரமான கம்யூனிஸ்டு சதியின் தலைவர்கள் என்பதாக அவர்களது செவிகளில் ஓயாது புகுத்தப்பட்டதைக் கேட்ட மனிதர்கள்! இருப்பினும், அதே சமயத்தில் அரசாங்கம், இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படும் பட்சத்தில் அது ஜூரிகளை ஒடுக்குவதற்கான முன்னறிவிப்பாகும் எனவும், முதலாளி வர்க்கத்தைச் சார்ந்த மிதவாத எதிர்க்கட்சியினர் மிகவும் அதிதீவிரப் புரட்சியாளர்களுடன் ஒன்று சேரத் தயாராக இருப்பதற்குச் சான்றாக, ஒரு நேரடி அரசியல் நிதர்சனமாக இருக்கும் என்று தனிச் சலுகைகளைக் கொண்ட வர்க்கங்களுக்கு அதே சமயத்தில் அரசாங்கம் தெரிவிக்காமல் இருந்திருக்குமானல்—தீர்ப்பு விடுதலையாக இருந்திருக்கும். புதிய பிரஷ்ய சட்டத் தொகுப்பினைப் பிந்திய காலப்பகுதிக்கும் பிரயோகம் செய்தது மூலமாக அரசாங்கம் ஏழு கைதிகளுக்குச் சிறைத் தண்டனை வழங்க முடிந்தது, அதேபோதில் நால்வர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டனர். தண்டனை விதிக்கப்பட்டவர்கள் மூன்று முதல் ஆறு வருடம் வரை சிறை வாசம் அனுபவிப்

பர் என்று தீர்ப்புக் கூறப்பட்டது. இந்தச் செய்தி உங்களை எட்டிய சமயம் நீங்கள் ஐயத்திற்கிடமின்றி ஏற்கெனவே இதைப் பற்றி அறிந்திருந்தீர்கள்.

*எங்கெல்சால் 1852 நவம்பர் 29ல்*
*எழுதப்பட்டது*

*New York Daily Tribune*
*செய்தித்தாள், இதழ் 3645ல்*
*1852 டிசம்பர் 22ல்*
*வெளியிடப்பட்டது*

*செய்தித்தாள்*
*வாசகப்படி*
*அச்சிடப்பட்டது.*
*மூலம் ஆங்கிலத்தில்*
*எழுதப்பட்டது*

*ஒப்பம்:* கார்ல் மார்க்ஸ்

கா. மார்க்ஸ்

# இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி[63]

நில அமைப்பினைக் கருதிப்பார்க்கின் இந்துஸ்தானம் ஆசியாவின் பரிமாணத்திற்குட்பட்ட ஓர் இத்தாலி எனலாம். இத்தாலிக்கு ஆல்ப்ஸ் மலைத்தொடர் இருப்பதைப் போல இந்தியாவில் இமயமலைத் தொடர்கள்; முன்னதில் லம்பார்டி சமவெளிகள் இருப்பது போல பின்னதில் வங்காளச் சம வெளிகள்; அங்கு அப்பினைன்ஸ் போன்று இங்கு தக்கணம்; அதன் சிசிலித் தீவுக்கு இணையாக இதன் இலங்கைத் தீவு. நிலத்தில் விளையும் பலவகைப் பொருட்களின் செழுமை யிலும் அரசியல் முறையில் துண்டு துண்டாகப் பிரிந்து கிடந்த அவற்றின் கோலத்திலும் இரு நாடுகளும் ஒரே மாதிரி இருக்கக் காணலாம். படையெடுத்து வென்றோரின் வாள் வலியால் இத்தாலி அடிக்கடி நெருக்கப்பட்டு பல்வேறு தேசியத் தொகுதிகளாக உருவாக்கப்பட்டு வந்திருப்பது போலவே, இந்துஸ்தானமும் முகம்மதியர் அல்லது மொகலாயர் அல்லது பிரிட்டிஷாரின் நெருக்குதலின் கீழ் இல்லாத காலங்களில், சிதறுண்டு, எத்தனை நகரங்கள் அல்லது எத்தனை கிராமங்கள் உள்ளனவோ அத்தனை சுயேச்சையான, ஒன்றோ டொன்று மோதுகிற அரசுகளாகக் கலைவுற்றது. எனினும் சமூக நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் இந்துஸ்தானத் தைக் கீழ்த்திசையின் இத்தாலி என்று கருத முடியாது, மாறாக கீழ்த்திசையின் அயர்லாந்து என்றே கூற வேண்டும். இத்தாலி மற்றும் அயர்லாந்தின் அம்சங்களும், இன்பக்

களியாட்ட உலகமும் துன்ப துயரங்களின் உலகமும் கொண்டதான இந்த விந்தையான இணைப்பினை இந்துஸ்தான சமயத்தின் பண்டைய மரபுகள் முன்னறிந்து புலப்படுத்தியுள்ளன. அந்த சமயம் அமிதமான புலனின்பத்தில் மூழ்கித் திளைப்பதை வலியுறுத்தும் சமயமாயும், தன்னைத்தானே வதைத்துக் கொள்ள வேண்டும் என்பதை வற்புறுத்தும் துறவு சமயமாகவும் ஒருங்கே விளங்குகிறது. லிங்கத்தை வழிபடும் சமயமும் இதுவே, ஜகன்னாதனின் சமயம் என்பதும் இதுவே; இது சன்னியாசியின் சமயமும் தேவதாசிகளின் சமயமும் ஆகும்.

இந்துஸ்தானத்தின் ஒரு பொற் காலத்தை நம்புகிறவர்களின் கருத்துடன் நான் உடன்படவில்லை. எனினும் எனது கருத்தை ஊர்ஜிதம் செய்வதற்காக சர் சார்ல்ஸ் வூட் செய்தது போல நான் குலிக்கானை சான்று காட்டப் போவதில்லை. ஆனால் உதாரணத்துக்கு ஔரங்கசீப் காலத்தை எடுத்துக் கொள்ளுங்கள்; அல்லது மொகலாயர் வடக்கேயும் போர்த்துகீசியர் தெற்கேயும் தோற்றமளித்த சகாப்தத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அல்லது முகம்மதியர் படையெடுப்பு நிகழ்ந்த காலத்தை அல்லது தென்னிந்தியாவில் ஏழு மன்னர்கள் ஆட்சி நடந்த காலத்தை எடுத்துக் கொள்ளுங்கள்; அல்லது உங்களுக்கு விருப்பம் இருக்குமானால் இன்னும் பின்னால் சென்று பண்டைக் காலத்தை நோக்குங்கள்; கிறித்தவ சமயப்படி உலகம் படைக்கப்பட்ட கால நிர்ணயிப்புக்கும் வெகு கால முன்பே இந்தியாவின் துயர சகாப்தம் தொடங்கி விட்டது என்று கூறும் பிராமணரின் புராண காலக்கணிப்பு முறையைத்தான் எடுத்துக் கொள்ளுங்கள்.

ஆயினும், பிரிட்டிஷாரால் இந்துஸ்தானத்தின் மீது வலுவந்தமாகச் சுமத்தப்பட்ட துன்ப துயரம் அது முன்னால் அனுபவிக்க நேர்ந்த வேதனையிலிருந்து சாராம்சத்தில் மாறுபட்டதும் அதைவிடப் பன்மடங்கு கடினமானதுமாகும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது. சால்செட் ஆலயத்தில் நம்மைத் திடுக்கிட வைக்கும் குரூர தேவதைகளைவிட மிகவும் பயங்கரமாக இணைந்த வடிவில் பிரிட்டிஷ் கிழக்கு இந்தியக் கம்பெனியால்[64] ஐரோப்பியக்

கொடுங்கோன்மை ஆசியக் கொடுங்கோன்மை மீது நாட்டப்பட்டிருப்பதை நான் இங்கு குறிப்பிடவில்லை. இது பிரிட்டிஷ் காலனியாதிக்க ஆட்சியின் தனி இயல்பல்ல, மாறாக டச்சு ஆட்சிமுறையின் மாதிரியேயாகும். அந்த அளவுக்கு, பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் நடவடிக்கையைக் குணவர்ணனை செய்ய வேண்டுமானால் பழைய டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியைப் பற்றி ஜாவாவின் ஆங்கிலேய கவர்னரான சர் ஸ்டாம்போர்ட் ராபிள்ஸ் கூறியதை சொல்லுக்குச் சொல் அப்படியே திரும்பக் கூறினால் போதுமானது:

''டச்சுக் கம்பெனி லாபம் திரட்டும் உணர்வாலேயே முற்றிலும் தூண்டப்பட்டு இயங்கியது. மேற்கு இந்தியத் தீவுகளின் தோட்ட முதலாளிகள் தம் தோட்டங்களில் வேலை செய்த மானுடச் சொத்தை (அடிமைகளை) பணம் கொடுத்து வாங்கி இருந்ததால் அவர்கள்பால் சற்றே மதிப்பு அல்லது பரிவு கொண்டிருந்தார்கள். டச்சுக் கம்பெனி தனது குடிகளை அப்படி வாங்காத காரணத்தால் அந்தச் சிறிதளவு மதிப்பு அல்லது பரிவைக் கூடக் காட்டவில்லை. அது அம்மக்களிடமிருந்து உச்சபட்சமான பங்கை, அவர்களது உழைப்பின் கடைசி எச்சத்தைக் கூடப் பிழிந்தெடுப்பதற்காக நாட்டில் நிலவிய கொடுங்கோன்மைச் சாதனங்கள் அனைத்தையும் பயன்படுத்தியது. இவ்வாறாக அரசியல்வாதிகளின் செய்து அனுபவப்பட்ட சாதுர்யத்துடனும், வியாபாரிகளின் சுய நலம் ஏகபோகமாக்கப்பட்டதோடும் அமுல் நடத்தப்பட்ட தான்தோன்றித்தனமான நாகரிகமற்ற அரசாங்கத்தின் தீமைகள் உக்கிரமடைந்தன.''

விந்தையான முறையில் சிக்கலானதும் துரிதமானதும், நாசகரமானதுமாகத் தோன்றுகின்ற உள்நாட்டுப் போர்கள், படையெடுப்புக்கள், புரட்சிகள், வென்றடக்கும் ஆக்கிரமிப்புக்கள், பஞ்சங்கள் ஆகியவை எல்லாம் தொடர் வரிசையாக நிகழ்ந்தாலும் இவை இந்துஸ்தானத்தின் சமுதாயத்தின் மேற்பரப்பையே பாதித்தன. இங்கிலாந்தோ இந்திய சமுதாயத்தின் முழுக் கட்டுமானத்தையும் தகர்த்துவிட்டது; அதே போதில் இதன் புத்தமைப்புக்கான அறிகுறி எதுவும் இதுவரையில் காட்டவில்லை. இவ்வாறு புதிய உலகத்தைப்

பெறுது பழைய உலகத்தை இழந்து நிற்கும் நிலையானது இந்தியரது இன்றைய துயரத்துக்கு ஒரு பிரத்தியேகமான வாட்டத்தைக் கொடுக்கிறது. மேலும் பிரிட்டனால் ஆளப் படும் இந்துஸ்தானத்தை அதன் தொன்மையான மரபுகள் அனைத்திலிருந்தும், அதன் கடந்த கால வரலாறு முழுவதிலு மிருந்தும் பிரித்து வைத்திருக்கிறது.

பொதுவாக ஆசியாவில், அனாதி காலந் தொட்டு மூன்று அரசாங்கத் துறைகள் இருந்து வந்திருக்கின்றன: நிதித் துறை அதாவது உள்நாட்டைக் கொள்ளையடிப்பது; ராணுவத் துறை அல்லது வெளிநாடுகளைக் கொள்ளையடிப் பது; இறுதியாக பொது மராமத்துத் துறை. தட்ப வெப்ப நிலை மற்றும் நிலப்பரப்பின் தன்மையாலும், குறிப்பாக சகாராவிலிருந்து அராபியா, பாரசீகம், இந்தியா, தாத்தா ரியா வழியாக ஆசியாவின் மிக உயர்ந்த மேட்டு நிலம் வரையில் அகன்ற பாலை நிலப் பிரதேசங்கள் படர்ந்திருப்ப தாலும் கீழ் நாட்டு விவசாயத்துக்குக் கால்வாய்கள் மற்றும் நீர்த்தேக்கங்களை அடிப்படையாக்கிய செயற்கையான பாசன வசதி அமைந்துள்ளது. எகிப்திலும் இந்தியாவிலும் செய்யப்படுவது போலவே மெசபொட்டாமியா, பாரசீகம் முதலிய பகுதிகளிலும் நிலத்தை வளப்படுத்துவதற்கு வெள்ளப் பெருக்கைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்: உயர் மட்டத்திலுள்ள ஆற்று நீரைச் சாதகமாகப் பயன்படுத்தி பாசனக் கால்வாய்களில் தண்ணீர் செலுத்துகிறார்கள். தண் ணீரைச் சிக்கனமாகவும் கூட்டாகவும் பயன்படுத்துவது எனும் இந்த இன்றியமையாத தேவை, மேனாடுகளில் பிளாண்ட்ரியாவிலும் இத்தாலியிலும் போல் தனியார் முயற்சி களை சுயவிருப்பமான கூட்டு முயற்சிக்கு முடுக்கியது. ஆனால் கீழ் நாடுகளில் நாகரிகம் மிகவும் தாழ்மட்டத்தில் இருந்த தாலும் நிலப்பரப்பு மிகவும் பேரளவில் இருந்ததாலும் இவை சுயவிருப்பமான கூட்டு முயற்சியை வாழ்வில் மேற் கொள்வதற்கு இடமளிக்கவில்லை. எனவே, அரசாங்கத்தின் மத்தியப்படுத்தும் அதிகாரத்தின் தலையீடு அவசியமாயிற்று. இதனால், பாசன வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருளா

தாரப் பணி ஆசிய அரசாங்கங்கள் அனைத்துக்கும் ஏற்பட்டது. செயற்கைப் பாசனம் மூலம் நிலம் வளம் பெறுவது மத்திய அரசாங்கத்தைச் சார்ந்து இருப்பதாலும், பாசன வசதியும் வடிகால் வசதியும் புறக்கணிப்பு காரணமாக நேரடி சிதைவுற்று பாதிக்கப்படுவதாலும் ஒரு காலத்தில் சிறப்பாகச் சாகுபடி நடத்தி வந்த பகுதிகள் முழுமையும்—பல்மீரா, பேட்ரா, யேமன் நாட்டின் சிதிலமடைந்த பகுதிகள், எகிப்து, பாரசீகம் மற்றும் இந்துஸ்தானத்தின் பெரிய வட்டாரங்கள் முதலியவை—இப்போது வறண்ட நிலங்களாக, பாலை நிலங்களாக இருக்கக் காண்கிறோம். ஒரு நாசகரப் போர், ஒரு நாட்டைப் பல நூற்றாண்டுகளுக்கு குடிகளின்றிப் பாழாக்கி அதன் நாகரிகம் முழுவதையும் பறித்துக் கொண்டு விட்டதென்றால் அதற்கான காரணமும் இதுவே.

கிழக்கு இந்தியாவில் இருந்த பிரிட்டிஷார் அதிகாரத்தில் இருந்த தமது முன்னோடிகளிடமிருந்து நிதித் துறையினையும் ராணுவத் துறையினையும் ஏற்றுக் கொண்டார்கள், ஆனால் பொது மராமத்துத் துறை முழுவதையும் புறக்கணித்தார்கள். இதனால் laissez - faire, laissez - aller* பாணியிலான கட்டற்ற போட்டி எனும் பிரிட்டிஷ் கோட்பாட்டின் மீது நடத்தவியலாத இந்திய விவசாயம் படுமோசம் அடைந்தது. ஆனால் ஆசியப் பேரரசுகளில் விவசாயம் ஓர் அரசாங்கத்தின் கீழ் மோசமடைவதும், வேறு ஓர் அரசாங்கத்தின் கீழ் புத்தாக்கம் பெறுவதும் நமக்கு முற்றும் பழக்கமான அனுபவம். ஐரோப்பாவில் அறுவடை நல்ல அல்லது கெட்ட பருவநிலையைப் பொறுத்திருப்பது

---

* ''செயல்படும் சுதந்திரம் வழங்குக'' (இது முதலாளித்துவப் பொருளியலாளர், கட்டற்ற வாணிகம் புரிவோர் குறிக்கோள் வாசகமாகும். இவர்கள் சுதந்திரமான வாணிகத்தையும், பொருளாதார உறவுகள் துறையில் அரசாங்கத் தலையீடு கூடாது என்பதையும் வற்புறுத்தினார்கள்).—ப-ர்.

போல, ஆசியாவில் அது நல்ல அல்லது கெட்ட அரசாங்கத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. இவ்வாறுக விவசாயம் ஒடுக்கப்பட்டதும் புறக்கணிக்கப்பட்டதும் மோசமான செயலே என்ற போதிலும், அந்தத் தீங்கு ஆசிய வரலாற்றுக்கே புதுமையானதும் முற்றும் வேறுவகையில் முக்கியமானதுமான ஒரு புறநிகழ்ச்சியுடன் இணைந்திராத பட்சம் இதனை பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளன் இந்திய சமுதாயத்தின் மீது தொடுத்த இறுதித் தாக்குதல் என்று கருத முடியாது. இந்தியாவின் கடந்த காலத்தில் அரசியல் அம்சம் மாற்றமடைந்ததாகத் தோன்றிய போதிலும், ஆகப்பழங் காலமுதல் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முதலாவது பத்தாண்டுக் காலம் வரையில் அதன் சமூக நிலைமைகள் மாற்றமுருது அப்படியே நீடித்தன. முறையான, லட்சக் கணக்கான நூற்பாளர்களையும் நெசவாளர்களையும் உருவாக்கிய கைத்தறியும் கைராட்டினமும் அந்த சமுதாயத்தின் கட்டமைவின் அச்சாணியாக விளங்கின. தொல்பழமைக் காலந் தொட்டு ஐரோப்பா இந்திய உழைப்பாளிகள் செய்த அதி விசேஷமான துணிகளைப் பெற்றுவந்தது. அவற்றுக்குப் பதிலாக ஐரோப்பா தனது உயர் உலோகங்களை அனுப்பி இந்திய சமுதாயத்தின் இன்றியமையாத உறுப்பினரான பொற்கொல்லருக்குத் தேவைப்படும் சாதனத்தை வழங்கியது இந்தியர்களுக்குப் பொன்னுல் செய்த அணிகளில் ஆசை அதிகம். மிகவும் ஏழைகளாயும் கட்டத் துணி இன்றியும் இருப்பவர்கள்கூட பொன்னுல் செய்த காதணிகளையும் கழுத்து நகையையும் போட்டுக் கொள்வது சகஜம். கைகளில் மோதிரமும் கால்களில் மெட்டியும் அணிவதுகூட வழக்கம். பெண்களும் குழந்தைகளும் தங்கம் அல்லது வெள்ளியில் செய்த கனமான கைவளையல்களும் காற்சிலம்புகளும் வழக்கமாக அணிந்திருந்தனர், வீடுகளில் தங்கம் மற்றும் வெள்ளியாலான தெய்வ விக்ரகங்கள் காணப்பட்டன. பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளன்தான் இந்தியக் கைத்தறியை உடைத்தெறிந்தான், கைராட்டினத்தை அழித்தான். ஐரோப்பிய மார்க்கெட்டில் இருந்து இந்தியப் பருத்தித் துணிகளை இங்கிலாந்து விற்பனை செய்யாது விலக்கத்

தொடங்கியது. பிறகு இந்துஸ்தானத்தில் முறுக்கு நூலைப் புகுத்தியது, முடிவில் பருத்தித் துணியின் அசல் தாயகத்திலேயே தனது பருத்தித் துணிகளை இறக்குமதி செய்து குவித்தது. 1818க்கும் 1836க்கும் இடையே கிரேட் பிரிட்டனில் இருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முறுக்கு நூல் 5,200 மடங்கு அதிகரித்தது. 1824ல் இந்தியாவுக்கு ஏற்றுமதியான பிரிட்டிஷ் பட்டுத் துணி 10,00,000 கஜங்கள் கூட இல்லை, அதே போதில் 1837ல் அது 6,40,00,000 கஜங்களையும் விஞ்சி விட்டது. அதே சமயம் டக்கா நகரத்தின் மக்கள் தொகை 1,50,000 இருந்து 20,000 ஆகக் குறைந்தது. தமது ஜவுளித் தரங்களால் புகழோங்கி நின்ற இந்திய நகரங்களின் இந்தச் சீரழிவு மட்டும் கொடுமையான விளைவாக இருக்கவில்லை. பிரிட்டிஷ் நீராவிச் சக்தியும் விஞ்ஞானமும் இந்துஸ்தானத்தின் நிலப்பரப்பு முழுவதிலும் விவசாயத்துக்கும் பட்டறைத் தொழிலுக்கும் இடையிலிருந்த இணைப்பை அடியோடு கல்லி எறிந்து விட்டன.

ஆக, ஒரு புறத்தில் இதர எல்லாக் கீழ்த்திசை மக்களையும் போலவே இந்தியர் தமது விவசாயத்துக்கும் வாணிகத்துக்கும் இன்றியமையாத் தேவையான மாபெரும் பொது மராமத்துப் பணிகளை மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்திருந்தது, மறு புறத்தில் நாடு முழுவதிலும் பரவலாக இருந்த இந்தியர்கள் விவசாயத்துக்கும் பட்டறைத் தொழிலுக்கும் இடையே உள்நாட்டில் நிலவிய ஒற்றுமை காரணமாக சிறிய மையங்களில் சேர்ந்து வாழ்ந்திருந்தது எனும் இரண்டு நிகழ்வுகள் ஏற்பட்டன. இந்த இரண்டு நிகழ்வுகள் மிகப் பழைய காலந் தொட்டே பிரத்தியேக இயல்புகளைக் கொண்டதான ஒரு சமுதாய அமைப்பு முறையை உருவாக்கியிருந்தன. இதுவே கிராமச் சமுதாய அமைப்பு எனப்படுவது. இது இந்தச் சிறிய இணைப்புகள் ஒவ்வொன்றுக்கும் சுயேச்சையான ஸ்தாபனத்தையும் தனிச் சிறப்பான வாழ்வையும் அளித்தது. இந்திய விவகாரங்களைப் பற்றி பிரிட்டிஷ் காமன்ஸ் சபை வெளியிட்ட ஒரு பழைய அதிகார பூர்வமான அறிக்கையிலுள்ள பின்வரும் விளக்கவுரையில் இருந்து

இந்த அமைப்பு முறையின் அலாதியான தன்மையை முடிவு செய்ய முடியும்:

''நிலவியல் சார்ந்த முறையில் கருதிப் பார்க்கின், ஒரு கிராமம் என்பது சில நூறு அல்லது ஆயிரம் ஏக்கர்கள் விளை நிலமும் தரிசு நிலமும் கொண்ட நாட்டுப் பிரதேசமாகும். அரசியல் முறையில் நோக்கினுல் அது ஒரு மாநகராட்சி அல்லது நகராட்சியை ஒத்திருக்கிறது. அதன் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் வழக்கமான அமைவு பின்வரும் விளக்கத்தின் பாற்பட்டதாகும்: படேல் அல்லது கிராம நாட்டாண்மைக்காரர், இவர் பொதுவாக கிராம அலுவல்களை மேற்பார்வை செய்கிருர், கிராமவாசிகளிடையே எழும் தகராறுகளைத் தீர்த்து வைக்கிருர், போலீஸ் பணிகளை கவனிக்கிருர், தனது கிராமத்தின் உள்ளே வரிவசூலிக்கும் கடமையைச் செய்கிருர், அவருக்குச் சொந்தச் செல்வாக்கு இருப்பதாலும் மக்களின் நிலைமையையும் கவலைகளையும் பற்றி அவருக்கு நுட்பமான பரிச்சயம் இருப்பதாலும் இந்த வரிவசூல் பொறுப்புக்கு ஆகச் சிறந்த தகுதி படைத்தவராகத் திகழ்கிருர்; கர்ணம் என்பவர் சாகுபடி பற்றிய கணக்குகளை வைத்திருப்பவர், அதன் சம்பந்தப்பட்ட விவரம் எல்லாவற்றையும் பதிவு செய்து வைத்திருப்பவர். தலையாரி என்பவரின் கடமை குற்றங்கள் சட்டவிரோதச் செயல்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல், ஒரு கிராமத்தில் இருந்து இன்னொரு கிராமத்துக்குப் பிரயாணம் செல்லும் ஆட்களுக்குத் துணையாகச் சென்று அவர்களைப் பாதுகாப்பது என்பனவாகும். தோட்டி என்பவரின் வேலைகள் நேரடியாயும் கிராமத்துடன் அமைந்துவிட்டனவாகும், அவரது இதர கடமைகளில் பயிர்களைப் பாதுகாத்தலும் விளைச்சலை அளப்பதற்கு உதவி செய்வதும் அடங்கும். எல்லைக் காவலர் கிராம எல்லைகளைப் பாதுகாக்கிருர், அவை குறித்துத் தகராறு எழுந்தால் சாட்சியம் அளிப்பார். குளங்களையும் பாசன வாய்க்கால்களையும் மேற்பார்வை செய்பவர் விவசாயத்துக்காகத் தண்ணீரை விநியோகம் செய்வார். பிராமணர் கிராமத்தில் கோயில் பூசை நடத்துவார். பள்ளியாசிரியர் கிராமத்தில் குழந்தைகளுக்குப் படிக்கவும் மணலில் எழுதவும் கற்பிக்கக் காணலாம். மேலும் பஞ்சாங்கப் பிராமணர் அல்லது சோதிடர் முதலியோரும் உண்டு. இந்த அதிகாரிகளும் ஊழியர்களும்தான் பொதுவாக கிராம நிர்வாகத்தின் உறுப்பினர்களாக அமைந்துள்ளனர். ஆனுல் நாட்டின் சில பிரதேசங்களில் இவர்கள் குறைந்த அளவிலேயே உள்ளனர். மேலே குறிப்பிடப்பட்ட சில கட

மைகளையும் பணிகளையும் ஒரே நபர் சேர்த்து நிர்வகிப்பார். வேறு சில பிரதேசங்களில் மேலே விவரிக்கப்பட்டதை விடவும் அதிகமான நபர்கள் நிர்வாக உறுப்பினர்களாக உள்ளனர். இந்த எளிய ஊராட்சி முறையின் கீழ் அந்த நாட்டு மக்கள் தொன்மையான பழங்காலம் முதல் வாழ்ந்து வருகிறார்கள். கிராமங்களின் எல்லை வரம்புகள் மாற்றப்பட்டதே இல்லை எனலாம், போர், பஞ்சம் அல்லது நோய் சில சமயம் இந்த கிராமங்களுக்கே தீங்கிழைத்துப் பாழாக்கிவிட்டபோதிலும் அதே பெயர், அதே நலன்கள், அதே குடும்பங்கள் கூட கால காலமாகத் தொடர்ந்து நிலவின. அரசுகள் தகர்வதையோ பிளவுறுவதையோ பற்றி அக்குடிமக்கள் கவலைப்பட்டதே இல்லை; கிராமம் முழுமையாக இருக்கும் போது அது எந்த அரசுக்கு மாற்றப்படுகிறது, எந்த மன்னரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. கிராமத்தின் பொருளாதார அமைப்பு மாறுதலின்றி அப்படியே இருக்கிறது. படேல் இன்னும் கிராமத் தலைவராகவும் சிறு குற்றங்களை விசாரித்து நீதி வழங்குவோராகவும் வரிவசூல் அதிகாரியாகவும் விளங்குகிறார்.''

சமுதாய அமைப்பின் இந்த சிறிய மாறுநிலை மாதிரி வடிவங்கள் பெருமளவுக்கு கலைக்கப்பட்டு விட்டன, மறைந்து வருகின்றன. இதற்குக் காரணம் பிரிட்டிஷ் வரிவசூலிப்பவர் மற்றும் பிரிட்டிஷ் படைவீரர் மிருகத்தனமாகத் தலையிட்டதோடல்லாமல், ஆங்கிலேயர் நீராவிச் சக்தி மற்றும் ஆங்கில வர்த்தக சுதந்திரத்தின் செயல்வினையே முக்கியமான காரணமாகும். அந்தக் குடும்ப சமுதாயங்கள் குடிசைத் தொழில் துறையை அடிப்படையாகக் கொண்டிருந்தன; அதாவது கையால் நூல்நூற்றல், கை நெசவு, உழுதுபயிரிடும் விவசாயம் ஆகியவற்றின் அலாதியான இணைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இந்த இணைப்பு அவற்றுக்குத் தற்சார்பு நிலையைப் பெறும் ஆற்றலை அளித்தது. ஆங்கிலேயர் தலையீடு நூற்பாளர் லன்காஷயரிலும் நெசவாளர் வங்காளத்திலும் என்பதான பிரிவினையை ஏற்படுத்தியதோடு இந்திய நூற்பாளர், நெசவாளர் இரு சாராரையுமே துடைத்தழித்தது, அவற்றின் பொருளாதார அடித்தளத்தைத் தகர்த்தது

மூலம் இந்தச் சிறுதர அரை-காட்டுமிராண்டி, அரை-நாகரிக சமுதாயங்களைக் குலைத்தது. இவ்வாறு ஆசியாவில் முன் என்றுமே கண்டும் கேட்டுமிராத மகத்தான ஒரு சமூகப் புரட்சியை, உண்மையை உரைப்பதெனில், ஒரே சமூகப் புரட்சியை உருவாக்கியது.

இந்த தந்தை வழி பாணியிலானதும் அப்பாவியானதும் ஆன எண்ணற்ற பல சமுதாய நிறுவனங்கள் ஒழுங்கு குலைக் கப்பட்டு தனி அலகுகளாகக் கலைக்கப்பட்டதும், துன்பக் கடலில் தள்ளப்பட்டதும், அவற்றின் தனிப்பட்ட உறுப் பினர்கள் அதே சமயம் தமது தொன்மையான வடிவிலான நாகரிகத்தையும் தமது பரம்பரையான பிழைப்புச் சாதனங் களையும் இழக்க நேர்ந்ததையும் காணும் போது அது மனித உணர்வுக்கே நிச்சயம் வெறுப்பூட்டுவதாக இருக்கும் என்ற போதிலும், இத்தகைய அமைதியான கிராம சமுதாயங் கள் அப்பாவித்தனமாக இருப்பதாகத் தோற்றமளித்த போதிலும், அவை எப்போதுமே கீழ்த்திசை கொடுங்கோன் மையின் உறுதியான அடித்தளங்களாக இருந்து வந் துள்ளன என்பதையும், அவை மானுட சிந்தனையை ஆகச் சிறிய கூட்டுக்குள் அடைத்து, அதை மூட நம்பிக்கையை எதிர்க்காத வெறுங்கருவியாக்கி மரபான விதிகளின் கீழ் அடிமைப்படுத்தி, அதன் சகலவகையான மாட்சிகளையும் வரலாற்று வழி ஆற்றல்களையும் இழக்கும்படி செய்தன என் பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. சின்னஞ்சிறு அற்ப மான நிலத்தில் ஒரு முனைப்பட்டு நின்று, சாம்ராஜ்யங்களின் வீழ்ச்சியையும், வர்ணிக்க முடியாத கொடுமைகள் விளைக்கப் படுவதையும் பெரிய நகரங்களின் மக்கள் தொகை படு கொலை செய்யப்படுவதையும் சலனமின்றி அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த அந்தக் காட்டுமிராண்டிகளின் தன்னுணவத்தை நாம் மறந்து விடக் கூடாது. இவற்றை, இயற்கைச் சம்பவங்களின் மீது காட்டும் அக்கறைக்கு மேல் எவ்விதமான பரிவும் இன்றி அவர்கள் பார்த்துக் கொண் டிருந்தார்கள். தாங்கள் ஏதேனும் ஓர் ஆக்கிரமிப்பாளன் பார்வையில் பட்டுவிட்டால் போதும் அதற்கு இரை யாவது தவிர வேறு வழியில்லை. இந்த கௌரவமற்ற, தேக்

கம் நிறைந்த, மரத்துப்போன வாழ்க்கை, இந்த செயலற்ற இருத்தல் மறுபுறத்தில் மாறுபட்ட தனிப்பண்புகளை எழுப்பியது. வெறித்தனமான, குறியோ நெறியோ இல்லாத நாசகர சக்திகள் தோன்றி இந்துஸ்தானத்தில் கொலைச் செயலை ஒரு சமயச் சடங்காக மாற்றின என்பதை நாம் மறந்து விடக் கூடாது. இந்தச் சிறிய சமுதாயங்கள் சாதி வேறுபாடுகளாலும் அடிமை முறையாலும் குறைபட்டிருந்தன என்பதையும், அவை மனிதனை புற நிகழ்வுகளின் சர்வ உரிமையாளனாக உயர்த்துவதற்குப் பதில், புற நிகழ்வுகளுக்கு அவனை ஆட்படுத்தின என்பதையும், சுயமாக வளர்ந்து வந்த சமுதாய நிலையை என்றுமே மாருத இயற்கை விதியாக உருமாற்றம் செய்தன, இவ்வாருக இயற்கையை மனிதன் கும்பிட்டு வணங்கும் கொடுமையை விளைவித்தன என்பதையும், இயற்கையின் மன்னனான மனிதனை குரங்கான ஹனுமான் முன்னும் பசுவான சாபாலன் முன்னும் தெண்டனிட்டுத் துதிபாடி வணங்கும்படி செய்து அதன் இழிதன்மையினை வெளிப்படுத்திக் கொண்டது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

இந்துஸ்தானத்தில் ஒரு சமூகப் புரட்சியை உண்டு பண்ணியதில் இங்கிலாந்து ஆக நீசத்தனமான அக்கறைகளால் தூண்டப்பட்டிருந்தது என்பதும், அவற்றை மிகவும் அசட்டுத்தனமான முறையில் அமுல் செய்தது என்பதும் மெய்யே. ஆனல் பிரச்சினை அதுவல்ல. ஆசியாவின் சமூக வாழ்வில் ஓர் அடிப்படையான புரட்சி ஏற்படாமல் மனிதகுலம் தனது வாழ்க்கை லட்சியத்தை நிறைவேற்ற முடியுமா என்பதே இங்குள்ள கேள்வி. இது முடியாது என்ருல், இங்கிலாந்து புரிந்த குற்றச் செயல்கள் எதுவாயினும், அது அந்தப் புரட்சியைச் சாதிப்பதில் தன்னையறியாமலே வரலாற்றின் கருவியாக செயல்பட்டிருக்கிறது என்பது திண்ணம். எனவே, ஒரு தொன்மையான உலகம் தகர்ந்து சிதறும் காட்சி நமது சொந்த உணர்வுகளுக்கு எவ்வளவுதான் கசப்பானதாக இருந்த போதிலும், வரலாற்றைப் பொருத்தவரை நாம் கேதேயுடன் சேர்ந்து பின்வருமாறு ஆர்த்துரைக்கும் உரிமை கொண்டுள்ளோம்:

"Sollte diese Qual uns quälen
Da sie unsre Lust vermehrt,
Hat nicht Myriaden Seelen
Timur's Herrschaft aufgezehrt?"*

*மார்க்சால் 1853 ஜூன் 10ல்*
*எழுதப்பட்டது*

*New York Daily Tribune*
*செய்தித்தாள், இதழ் 3804ல்,*
*1853 ஜூன் 25ல்*
*வெளியிடப்பட்டது*

*செய்தித்தாள் வாசகப்படி*
*அச்சிடப்பட்டது.*
*மூலம் ஆங்கிலத்தில்*
*எழுதப்பட்டது*

ஒப்பம்: கார்ல் மார்க்ஸ்

---

* *"இது நமக்கு அதிக இன்பத்தைக் கொணர்வதால் இந்தச் சித்திரவதை இன்னும் நம்மைத் துன்புறுத்த வேண்டுமா? திமூரின் ஆட்சியின் வாயிலாக கணக்கற்ற ஆன்மாக்கள் கபளிகரமாகவில்லையா?"* (Goethe, *Westöstlicher Diwan. An Suleika* என்பதில் இருந்து).—ப-ர்.

கா. மார்க்ஸ்

# இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விளைவுகள்

**லண்டன், வெள்ளிக்கிழமை, ஜூலை 22, 1853**

*இந்தியா சம்பந்தமான எனது குறிப்புக்களை இந்தக் கட்டுரையோடு பூர்த்தி செய்துவிடலாம் என்று உத்தேசிக் கிறேன்.*

*இந்தியாவில் ஆங்கில மேலாதிக்கம் நிலை நாட்டப் பட்டது எப்படி? மாபெரும் மொகலாய சக்கரவர்த்தியின் தனி உயர் அதிகாரம் மொகலாய ராஜப் பிரதிநிதிகளால் உடைத்தெறியப்பட்டது. இந்த ராஜப் பிரதிநிதிகளின் அதி காரம் மராட்டியர்களால் தகர்க்கப்பட்டது. மராட்டியர் களின் அதிகாரத்தை ஆப்கானியர்கள் முறித்தார்கள். இவ்வாறு அனைவரும் அனைவரையும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த பொழுது, பிரிட்டானியர் வேகமாக உள்ளே நுழைத்து அவர்கள் அனைவரையும் கீழடக்க முடிந்தது. நாடு முகம்மதியர் மற்றும் இந்துக்கள் என்று பிளவுபட்டிருந்த தோடு ஒரு குலமரபுக்கும் மற்ற குலமரபுக்கும் இடையேயும் ஒரு சாதிக்கும் மற்ற சாதிக்கும் இடையேயும் பிளவுபட்டுக் கிடந்தது. இந்த சமுதாயத்தின் கட்டுமானம், அதன் உறுப் பினர்கள் எல்லோரின் இடையேயும் ஒரு பரஸ்பர எதிர்ப்பு மற்றும் அங்ககரீதியான தனிவிலக்கத்தின் விளைவாக ஏற் பட்ட ஒருவகையான சமநிலையை அடிப்படையாகக் கொண் டிருந்தது. இத்தகைய நாடும் இத்தகைய சமுதாயமும் படை யெடுப்புக்கு இரையாகியே தீரும் என்பது முன்பே முடிவான கதி அல்லவா? இந்தியாவின் கடந்த கால வரலாறு பற்றி*

நமக்கு ஒன்றுமே தெரியாது என்ருலுங்கூட, இந்தியாவின் செலவில் பராமரிக்கப்பட்டு வரும் ஓர் இந்திய சைனியத்தின் உதவியுடன் இங்கிலாந்து இந்தத் தருணத்திலுங்கூட இந்தியாவை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை அல்லவா? அப்படியானுல் படையெடுப்புக்கு இலக்காகும் கதியில் இருந்து இந்தியா விடுபட முடியாது எனவும், அதன் கடந்த கால வரலாறு முழுவதும் அது ஆளாக்கப்பட்டிருந்த வரிசையான பல ஆக்கிரமிப்புக்களின் வரலாறு தவிர வேறு எதுவுமல்ல எனவும் கொள்வதா? இந்திய சமுதாயத்துக்கு வரலாறே இல்லே, குறைந்த பட்சம் அறியப்பட்ட வரலாறு கிடையாது எனலாம். அதன் வரலாறு என்று நாம் குறிப்பிடுவது, எதிர்த்துப் போராடாமலும் மாறுதல் இன்றியும் நிலவிய அந்த சமுதாயத்தின் அடங்கி ஒடுங்கிய அடிப்படையின் மீது வரிசையாகத் தங்கள் சாம்ராஜ்யங்களே நிறுவிய ஆக்கிரமிப்பாளர்களின் வரலாறுதான். ஆகவே, ஆங்கிலேயருக்கு இந்தியாவை படையெடுத்துக் கைப்பற்றும் உரிமை உண்டா என்பதல்ல பிரச்சினே, மாருக, இந்தியா பிரிட்டானியரால் கைப்பற்றப்படுவதை விடவும் அது துருக்கியரால், பாரசீகநாட்டவரால், ருஷ்யர்களால் கைப்பற்றப்படுவதை நாம் மிகவும் விரும்ப வேண்டுமா என்பதுதான் பிரச்சினே.

இந்தியாவில் இங்கிலாந்து இரண்டு வகையான லட்சியப் பணிகளேச் செய்து முடிக்க வேண்டியுள்ளது: ஒன்று அழிக்கும் பணி, மற்றது புத்துயிரூட்டும் பணி—ஒரு புறம் பழைய ஆசிய பாணி சமுதாய அமைப்பை நிர்மூலமாக்குவது, மறு புறம் ஆசியாவில் மேலேப் பாணி சமுதாய அமைப்பின் பொருளாயத அடிப்படைகளே நிறுவுவது.

இந்தியாவை வரிசையாகப் படையெடுத்து அழிவுறுத்திய அராபியர், துருக்கியர், தாத்தாரியர், மொகலாயர் அனேவரும் விரைவில் இந்தியர் மயமாயினர். வரலாற்றின் ஒரு சாசுவத விதியின் மூலம், அநாகரிகமான நாட்டின்மீது வெற்றியடைந்தவர்கள் தாம் கீழடக்கிய மக்களின் மேம்பட்ட நாகரிகத்தால் வெற்றி கொள்ளப்பட்டார்கள். இந்தியாவை வென்று கொண்டவர்களில் முதலாவதாக, இந்தி

யர்களைவிட மேம்பட்டவர்களாய், இந்திய நாகரிகத்தால் எளிதில் அணுக முடியாதவர்களாய் இருந்தவர்கள் பிரிட்டிஷார்தான். சுதேசி சமுதாயங்களைப் பிளவுறுத்தியும், சுதேசிக் கைத் தொழில்களை வேரோடு பிடுங்கி எறிந்தும், இந்திய சமுதாயத்தில் மகத்தானதாயும் உன்னதமாயும் இருந்த சகலத்தையும் தரைமட்டமாக்கியும் அவர்கள் இந்திய நாகரிகத்தை அழித்தார்கள். இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நடத்தியது பற்றி விவரிக்கும் வரலாற்று ஏடுகள் இந்த நாசச் செயல்கள் தவிர்த்த வேறு எதையும் குறிப்பிடவில்லை. புத்துயிரூட்டும் பணி சர்வநாசக் குவியலின் ஊடே நடைபெறுதல் அரிதுதான். இருந்த போதிலும் அப்பணி தொடங்கி விட்டது.

மாபெரும் மொகலாயர் ஆட்சியின் கீழ் முன் என்றும் இருந்ததை விடவும் அதிகமாக உறுதிப்படுத்தப்பட்டும் விரிவடைந்தும் விளங்கிய இந்தியாவின் அரசியல் ஐக்கியம் அதற்குப் புத்துயிரூட்டுவதற்குரிய முதல் நிபந்தனையாகும். பிரிட்டனின் வாள் பலத்தால் திணிக்கப் பெற்றதான இந்த ஐக்கியம் இப்போது மின்சாரத் தந்தி இணைப்புகள் மூலம் வலுப்படுத்தப்பட்டு நிரந்தரமாக்கப்படும். பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளால் ஒழுங்கமைக்கப்பட்டு பயிற்சியளிக்கப் பெற்ற சுதேசி ராணுவம் இந்தியா சுயவிமோசனம் பெறவும், இந்தியா முதல் அன்னிய ஆக்கிரமிப்பாளனுக்கு இரையாகும் நிலை இல்லாதொழியவும் sine qua non* இருந்தது. ஆசிய பாணி சமுதாயத்தில் முதல் தடவையாக சுதந்திரமான பத்திரிகைகள் இடம் பெற்றன. இவற்றை இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் பொதுவான கால்வழி வந்த நபர்கள் முக்கியமாயும் நிர்வாகம் செய்து வந்தார்கள். இப்பத்திரிகைகள் இந்தச் சமுதாயத்தின் புனர்நிர்மாணத்துக்கு ஒரு புதிய வலிமை மிக்க கருவியாகத் திகழ்ந்தன. ஜமீன்தாரி முறையும் ரயத்வாரி முறையும் தமக்குத் தாமே வெறுக்கத்தக்க முறைகளே—அவை ஆசிய பாணி

---

* Conditio sine qua non—இன்றியமையாத காரணக் கூறுகள்.—ப-ர்.

சமுதாய அமைப்புக்கு மிகவும் அவசியத் தேவையாக இருக்கும். நிலத்தில் தனியார் சொத்துடைமையின் இரு வெவ்வேறு வடிவங்களைக் குறிப்பவை. ஆங்கில மேற்பார்வையின் கீழ் கல்கத்தாவில் வேண்டா வெறுப்புடனும் வெகு செட்டாகவும் கல்வி பயிற்றுவிக்கப்பட்ட இந்திய சுதேசிகளின் ஒரு புதிய வகையினம் மலர்ந்து வருகிறது. இந்த வகையினம் நாட்டை ஆளுவதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆற்றல் கொண்டதாயும், ஐரோப்பிய விஞ்ஞான அறிவு ஊட்டப்பட்டதாயும் விளங்குகிறது. நீராவி சக்தி இந்தியாவை ஐரோப்பாவுடன் முறையாகவும் விரைவாகவும் தொடர்பு கொள்ளும்படி செய்துள்ளது; அதன் முக்கிய துறைமுகங்களை தென், கிழக்கு மாகடல் முழுதிலுமுள்ள துறைமுகங்களுடன் இணைத்திருக்கிறது. இவ்வாறாக இதன் தேக்க நிலைக்கு முக்கிய விதியாக இருந்த அதன் தனித்து வாழும் நிலையினை அகற்றி இந்தியாவைப் புனரமைத்துள்ளது. இரயில் வண்டிப் பாதைகளும் நீராவிக் கப்பல்களும் இணைக்கப்படுவதன் வாயிலாக இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான தூரம் காலத்தால் அளவிடப்படும் போது எட்டு நாட்களுக்குக் குறுக்கப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை. இவ்வாறாக ஒரு காலத்தில் பழம் புகழோடு விளங்கிய ஒரு நாடு மேலை உலகுடன் உள்ளபடியே சேர்த்திணைத்துக் கொள்ளப்படும் நாள் வெகுதொலைவில் இல்லை.

இந்தியாவின் முன்னேற்றத்தில், இது காறும், கிரேட் பிரிட்டனின் ஆளும் வர்க்கங்கள் தற்செயலான, நிரந்தரமற்ற, அபூர்வமான அக்கறையே கொண்டிருந்தன. பிரபுக் குலத்தவர் இந்தியாவைக் கைப்பற்ற விரும்பினார்கள், பண ஆதிக்கவாதிகள் அதைக் கொள்ளையடிக்க விரும்பினார்கள், ஆலை முதலாளிகளோ அதை விலை மலிவான பண்டங்களால் அடக்கியாள விரும்பினார்கள். ஆனால் இப்போது நிலைமை முற்றும் மாறிவிட்டது. இந்தியாவை ஒரு புனருற்பத்தி செய்யும் நாடாக உருமாற்றம் செய்வது தமக்கு ஜீவாதார முக்கியத்துவமுடையது என்பதை ஆலை முதலாளிகள் கண்டு கொண்டு விட்டார்கள். அந்த நோக்கமுடன் அந்த நாட்டுக்கு விசேஷமாயும் நீர்ப்பாசன வசதிகளையும் உள்நாட்டுப் போக்கு

வரத்து வசதிகளையும் அளிக்க வேண்டும் என்பதை உணர்ந் தார்கள். அவர்கள் இப்போது இந்தியா முழுவதும் வலைப் பின்னல் போல ரயில் பாதைகளை போட விரும்புகிறார்கள். இதை அவர்கள் கட்டாயம் செய்வார்கள். அதன் விளைவுகள் மதிப்பிடவே முடியாத அளவு இருக்கும்.

உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு பொருள்களை ஓரிடத் தில் இருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்லவும், பரிவர்த்தனை செய்வதற்குமான சாதனங்கள் அறவே இல் லாத காரணத்தால், இந்தியாவின் உற்பத்தி சக்திகள் ஸ்தம் பித்துக் கிடப்பது நாடறிந்த அவலமாகும். பரிவர்த்தனைச் சாதனங்கள் இன்மையால், ஏராளமான இயற்கைச் செல்வத் தின் மத்தியில் சமுதாயம் தேவைக்குத் திண்டாடும் வறிய நிலையில் இருக்கும் காட்சியை வேறு எந்த நாட்டையும்விட இந்தியாவில் தான் அதிகமாகக் காணலாம். 1848ல் அதன் அமர்வுகளை நடத்திய பிரிட்டிஷ் காமன்ஸ் சபையின் ஒரு கமிட்டியின் முன் இது நிரூபணமாயிற்று, அதாவது,

''காண்டேஷ் எனும் இடத்தில் ஒரு குவார்டர் (28 ராத்தல்) தானியம் 6 ஷில்லிங் முதல் 8 ஷில்லிங் விலைக்கு விற்கப்பட்ட போது, பூனாவில் அது 64 ஷில்லிங்கிலிருந்து 70 ஷில்லிங் வரை விற்கப்பட்டது; களிமண் ரோடுகள் செல் வதற்கரிதாய் மோசமாக இருந்த காரணத்தால் காண்டேஷி லிருந்து தானியங்களைக் கொண்டுவருவது சாத்தியமல்ல என்ற நிலையில், பூனா மக்கள் பஞ்சத்தால் தெருக்களில் மடிந்து கொண்டிருந்தார்கள்'' என்று நிரூபிக்கப்பட்டது.

இரயில் பாதைகளைப் போடுவது மூலமாக விவசாய வேலைகளுக்கு நடைமுறையில் எளிதாக உதவி செய்ய முடி யும்; ரயில் பாதைகள் அமைப்பதற்காக நிலத்தில் மண்ணைத் தோண்டுவதன் வாயிலாகக் குளங்களை அமைத்தும், பல் வேறு கால்வாய்களில் தண்ணீரைக் கொண்டு சென்றும் விவசாயத்துக்கு உதவ முடியும். இவ்வாறாகக் கிழக்கத்திய நாடுகளில் விவசாயத்துக்கு sine qua non* நீர்ப்பாசன வசதிகளைப் பெருமளவுக்கு விஸ்தரிக்க முடியும், இதன்வழி,

* இன்றியமையாததான.—ப-ர்.

தண்ணீர் பற்றுக்குறையால் அடிக்கடி ஏற்படும் உள்நாட்டுப் பஞ்சங்களைத் தவிர்க்க முடியும். மலைத் தொடர்கள் அருகாமையிலுள்ள மாவட்டங்கள்கூட நீர்ப் பாசன வசதி பெற்றதால் நீர்ப் பாசன வசதி இல்லாமலிருந்த காலத்தில் கொடுத்ததைக் காட்டிலும் மும்மடங்குக்கும் அதிகமான வரிசெலுத்துகின்றன என்பதையும், அவை பத்து அல்லது பன்னிரண்டு மடங்கு அதிகமான வேலை வாய்ப்புகளை வழங்கும் நிலையில் உள்ளன என்பதையும், பன்னிரண்டு அல்லது பதினைந்து மடங்கு அதிகமாக லாபத்தை அளிக்கின்றன என்பதையும் நாம் நினைவிற் கொள்வோமானால் இதன் அடிப்படையில் ரயில் பாதைகளின் பொதுவான முக்கியத்துவம் தெளிவாகத் தெரியவரும்.

இராணுவ நிறுவனங்களின் அளவையும் செலவையும் குறைப்பதற்கான சாதனங்களையும் ரயில்பாதைகள் வழங்கும். செயின்ட் வில்லியம் கோட்டையின் நகர மேஜரான கர்னல் வோரன் காமன்ஸ் சபையின் பொறுக்குக் கமிட்டி முன் கூறியதாவது:

''நாட்டின் தொலைவான பகுதிகளில் இருந்து தகவல்களைப் பெறுவதற்கு இப்போது பல நாட்கள், ஏன் பல வாரங்கள் கூடத் தேவைப்படுகின்றன; இத்தகவல்களைப் பலமணி நேரங்களில் பெறுவதற்கும், துருப்புக்களையும் உத்தரவுகளையும் சாமான்களையும் மேலும் குறுகிய காலத்துக்குள் அனுப்பி வைப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ள காரிய சாத்தியமான நிலைமையை அளவுக்கு மேல் மிகைப்படுத்தப்பட்ட சலுகையாக எண்ணிப் பார்க்க இடமில்லை. துருப்புக்களை இப்போது இருப்பதை விடவும் மிகவும் தொலைவிலான மேலும் ஆரோக்கியமான இடங்களில் வைத்திருக்க முடியும். இதன் மூலம் நோயினால் ஏற்படும் உயிர் நஷ்டத்தைக் குறைக்க முடியும். சாமான்களை பல்வேறு டிப்போக்களிலும் ஒரே அளவுக்கு வைத்திருக்கத் தேவை இல்லை, இதன் மூலம் சாமான்கள் பதனழிவதையும், தட்பவெப்பம் காரணமாக அழிவுறுவதையும் தவிர்க்க முடியும். படைகளின் செயல் திறனுக்கு நேரடி சமவீதத்துக்கு துருப்புக்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.''

கிராமப்புற சமுதாயக் கூட்டுகளின் ஊராட்சி அமைப்பும் பொருளாதார அடிப்படையும் உடைத்தெறியப்பட்டுள்ளன

என்பது நமக்குத் தெரியும். ஆனால் சமுதாயம் மாறுநிலைப் படியுருக்களாயும் தொடர்பற்ற அணுக்களாயும் கலைக்கப் பட்டிருக்கின்ற அதன் படுமோசமான அம்சம் அவற்றின் உயிராற்றலைக் கடந்து நிலைத்திருக்கிறது. இந்தியாவில் கிராமங்களின் தொடர்பற்ற தனிமை நிலை சாலைகள் இன்மைக்குக் காரணமாயிற்று, சாலைகள் இன்மை கிராமங்களின் தனிமை நிலையை நிரந்தரமாக்கியது. இந்த முறையின் படி ஒரு சமுதாயக் கூட்டு தன்வசமிருந்த மிகவும் குறைந்த பட்ச வசதிகளுடனும், இதர கிராமங்களுடன் அனேகமாக ஒட்டுறவு எதுவும் இல்லாமலும் சமூக முன்னேற்றத்துக்கான ஆசைகளோ முயற்சிகளோ இல்லாமலும் வாழ்ந்து வந்தது. கிராமங்களின் இந்தத் தன் நிறைவு மந்த நிலையை பிரிட்டிஷார் உடைத்தெறிந்து விட்டதால் பரிவர்த்தனை மற்றும் பரஸ்பர ஒட்டுறவுக்கான புதிய தேவையை ரயில்வேக்கள் வழங்கும். இத்துடன்,

''இரயில் பாதை அமைப்பின் விளைவுகளில் ஒன்று என்னவென்றால், இதனால் பயனடைந்ததான ஒவ்வொரு கிராமமும், இதர நாடுகளின் பொறியமைவுகள் மற்றும் துணைக் கருவிகள் குறித்த அறிவையும், அவற்றைப் பெறுவதற்கான வழிவகைகளையும் கொண்டுவந்து தர வகை செய்யும் என்பதோடு, இந்தியாவின் பரம்பரையானதும் மானியம் பெற்று வருவதுமான கிராமத்துக் கைவினைஞர்களின் திறமைகள் அனைத்தையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும் தங்கள் குறைகளை நிறைவு செய்யவும் வாய்ப்பளிக்கும்'' (சாப்மன் எழுதியுள்ள ''இந்தியாவின் பருத்தியும் வாணிகமும்'' எனும் நூல்).

தங்களது செய் தொழிலுக்குத் தேவையான பருத்தி, இதர மூலப் பொருள்கள் ஆகியவற்றைக் குறைந்த செலவில் வலிந்து பறித்துக் கொள்ள வேண்டும் எனும் ஒரே நோக்கத்துடன்தான் ஆங்கிலேய ஆலை முதலாளிகள் இந்தியாவில் ரயில்பாதைகளைப் போட உத்தேசித்திருந்தார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் இரும்பும் நிலக்கரியும் கொண்டுள்ள ஒரு நாட்டில் யந்திர சாதனங்களைப் புகுத்தி அவற்றை இயங்கவைத்துவிட்டதன் பின்னால் அது தானே அவற்றைச்

சமைத்துருவாக்கி வருவதைத் தடுத்து நிறுத்த முடியாது. இரயில்வே இயக்கத்தின் நேரடியான மற்றும் நடப்புத் தேவைகளை நிறைவு செய்ய அவசியமான அந்தத் தொழில் துறை நடைமுறைகளை எல்லாம் கொண்டுவராமல், ஒரு பரந்து விரிந்த நாட்டில் ரயில்வேக்களின் ஒரு வலைப்பின்னல் அமைப்பினைப் பராமரிக்க முடியாது. இவற்றில் இருந்து ரயில்வேக்களுடன் நேரடியான தொடர்பு இல்லாத தொழில் துறைப் பிரிவுகளுக்கு இயந்திர சாதனங்களின் பயன்பாடு அதிகரிக்க வேண்டும். எனவே இந்தியாவில் ரயில்வே அமைப்பு உண்மையிலேயே நவீன தொழில்துறையின் முன்னோடியாக விளங்கும். இது நிச்சயமாயும் நிகழும், ஏனெனில் இந்தியர்கள் முற்றிலும் புதுவகையான உழைப்புக்குத் தங்களைத் தகவமைத்துக் கொள்வதற்கும் இயந்திரங்களைப் பற்றி தேவையான அறிவைப் பெறுவதற்குமான பிரத்தியேகமான திறமையை உடையவர்கள் என்பதற்கு பிரிட்டிஷ் அதிகாரிகளே அங்கீகாரம் கொடுத்திருக்கிறார்கள். கல்கத்தா நாணயச் சாலையில் பல ஆண்டுகளாக நீராவி இயந்திரங்களில் வேலை செய்துவந்துள்ள சுதேசி எஞ்சினியர்கள் மற்றும் ஹரித்துவார் நிலக்கரி வட்டாரங்களில் பற்பல நீராவியந்திரங்களுடன் இணைந்து வேலை செய்துவரும் சுதேசிகள் ஆகியோரின் திறமைகளும் வித்தகமும் இதர உதாரணங்களும் இந்த மெய்நடப்புக்கான போதிய நிரூபணமாகும். கிழக்கிந்தியக் கம்பெனியின் தப்பெண்ணங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் திரு. காம்பெல் தாமே பின்வருமாறு ஒத்துக் கொள்ளும்படி நிர்ப்பந்தத்துக்குள்ளாகியிருக்கிறார்:

''இந்திய மக்களின் மிகப்பெரும் திரளினர் மிகப்பெரும் தொழிலியல் ஆற்றலைப் பெற்றிருக்கிறார்கள்; மூலதனத்தைத் திரட்டுவதற்கு நல்லமுறையில் தகுதி பெற்றிருக்கிறார்கள், கணிதவியல் துல்லியமுள்ள அறிவிலே தெளிவும், புள்ளி விவரங்கள் மற்றும் நுட்பவிஞ்ஞானங்களில் திறனும் பெற்றுச் சிறப்புடன் விளங்குகிறார்கள். ''அவர்களுடைய அறிவு அற்புதமானது'' என்று அவர் கூறுகிறார்.[65]

இந்தியாவின் முன்னேற்றத்துக்கும் இந்தியாவின் வல்லமைக்கும் முட்டுக் கட்டைகளாக இருக்கும் இந்திய சாதி

களுக்கு அடித்தளமாக விளங்கும் பரம்பரைக்குலத் தொழில் பிரிவினைகளை ரயில்வே அமைப்பின் விளைவாகத் தோன்றும் நவீனத் தொழில்துறை கலைத்துவிடும்.

ஆங்கிலேய முதலாளி வர்க்கத்தினர் நிர்ப்பந்தத்தால் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவும் இந்தியாவின் மக்கள் திரளினருக்கு விடுதலையையும் கொண்டுவராது, அவர்களது சமூக நிலைமையைக் கணிசமாகச் சீர்ப்படுத்தவும் உதவாது. இந்த சாதனைகள் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை மட்டுமன்றி அவற்றை மக்கள் தமக்கெனச் சுவீகரித்துக் கொள்வதையும் சார்ந்திருக்கின்றன. ஆனால் முதலாளி வர்க்கத்தினர் இவை இரண்டுக்குமான பொருளாயத ஆதாரங்களை நிறுவும் பணியைப் புரியாமல் விட்டுவிட மாட்டார்கள். இதற்கு மேல் முதலாளி வர்க்கத்தினர் எப்போதேனும் அதிகமாகச் செய்திருக்கிறார்களா? தனிநபர்களையும் மக்களையும் ரத்தத்திலும் சகதியிலும் துயரத்திலும் இழிவிலும் இழுத்தடிக்காமல் எப்போதேனும் முன்னேற்றத்தைச் சாதித்திருக்கிறார்களா?

பிரிட்டனில் இன்று அதிகாரத்தில் இருக்கும் ஆளும் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டு அந்த இடத்தில் தொழில்துறைப் பாட்டாளி வர்க்கம் பதவியில் அமர்த்தப்படும் வரையிலும், அல்லது ஆங்கிலேய ஆதிக்கத்தை இந்தியர்கள் முற்றிலும் ஒழிக்கும் அளவுக்கு வளர்ந்து வலிமை பெறும் வரையிலும், பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத்தினரால் தம்மிடையே அங்குமிங்குமாகத் தூவப்பட்டுக் கிடக்கும் சமுதாயத்தின் புதிய சக்திகளின் பலன்களை இந்தியர்கள் அனுபவிக்க முடியாது. எப்படி இருந்தாலும் சரி, அந்த மகத்தானதும் அக்கறைக்குரியதுமான நாடு ஏறத்தாழத் தொலைவான ஒரு கால கட்டத்தில் மறுமலர்ச்சியடையும் என்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம். அந்த நாட்டின் கண்ணியமிக்க சுதேசிகள், மிகவும் தாழ்மட்டத்தில் இருக்கும் வர்க்கங்களும் கூட இளவரசர் சல்திக்கோவின் சொற்றொடரைப் பயன்படுத்திக் கூறும் பட்சத்தில் "sont plus fins et plus adroits que les italiens"* இருக்கிறார்கள். அவர்களது பணிந்துபோகும் தன்மையுங்கூட

* இத்தாலியர்களைக் காட்டிலும் அதிகச் செம்மையும் அதிகத் திறமையும் வாய்ந்தவர்கள்.[66]—ப-ர்.

ஒரு வகையான அமைதியான பெருந்தன்மையால் ஈடு செய்யப்படுகிறது; அவர்கள், தம்மிடம் இயல்பான தளர்ச்சி இருந்த போதிலும் தமது வீரதீரத்தால் பிரிட்டிஷ் அதிகாரிகளை வியப்புற வைத்திருக்கிறார்கள். அவர்களது நாடு நமது மொழிகள், நமது சமயங்களின் தலையூற்றாக இருந்து வந்துள்ளது; அந்த நாட்டைச் சேர்ந்த ஜாட் இனத்தவர் தொன்மையான ஜெர்மானியர், பிராம்மணர் பண்டைக்கால கிரேக்கர்களின் ரகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.

முடிவாகச் சில குறிப்புரைகளை எடுத்துக் கூறாமல் இந்தியா எனும் இந்தத் தலைப்பை என்னால் பூர்த்தி செய்ய முடியாது.

தன் தாயகத்தில் கவுரவமான வடிவங்களை மேற்கொண்டும், அதே சமயத்தில் காலனிகளில் நிர்வாணத் தாண்டவமாடியும் வரும் முதலாளித்துவ நாகரிகத்தின் அப்பட்டமான போலித்தனமும் உள்ளார்ந்த காட்டுமிராண்டித்தனமும் வேடம் கலைக்கப்பட்டு நம் கண்முன்பு காட்சியளிக்கின்றன. முதலாளி வர்க்கத்தினர் சொத்துடைமையைத் தாங்கி ஆதரிப்பவர்கள்தான், ஆனால் வங்காளத்திலும் சென்னையிலும் பம்பாயிலும் நடைபெற்றிருப்பதைப் போன்ற விவசாயப் புரட்சிகளை புரட்சிகரக் கட்சி எதுவாயினும் எந்தக் காலத்திலேனும் தோற்றுவித்துள்ளதா? அந்த மாபெரும் கொள்ளைக்காரனான லார்ட் கிளைவ் கூறியிருக்கும் சொற்களையே பயன்படுத்திச் சொல்வதென்றால், இந்தியாவில் சாதாரண லஞ்சம் அவர்களது கொள்ளைக்காரத்தனமான பேராசைக்கு ஈடு செய்ய முடியாததால், கொடூரமான முறையில் பலவந்தமான சூறையாடலில் அவர்கள் இறங்கவில்லையா? தேசியக் கடனின் புனிதத்தன்மை நிரந்தரமானது என்று ஐரோப்பாவில் அவர்கள் பிதற்றிக் கொண்டிருந்த அதே போதில், தமது சொந்த சேமிப்புக்களை கிழக்கு இந்தியக் கம்பெனியின் நிதிகளில் முதலீடு செய்திருந்த சுதேசி ராஜாக்களுக்குக் கொடுக்க வேண்டிய லாபஈவுகளை இந்தியாவில் அவர்கள் பறிமுதல் செய்யவில்லையா? ''நமது புனித மதத்தைப்'' பாதுகாக்கிறோம் என்ற சாக்குப்போக்கில் பிரெஞ்சுப் புரட்

சியை எதிர்த்துப் போராடிய அவர்கள் அதே பொழுதில், இந்தியாவில் கிறித்தவம் பரப்பப்படுவதைத் தடை செய்ய வில்லையா? ஒரிஸ்ஸாவிலும் வங்காளத்திலும் உள்ள ஆலயங் களுக்குத் திரண்டு செல்லும் யாத்திரீகர்களிடம் பணம் பிடுங்குவதற்காக ஜகன்னாதர் கோயிலில் புரியப்பட்டு வந்த தற்பலியையும் விபசாரத்தையும் தமது வாணிபமாக்கிக் கொள்ளவில்லையா? இவர்கள் தான் ''சொத்து, முறைமை, குடும்பம், சமயம் ஆகியவற்றின் பாதுகாவலர்கள்!''

ஐரோப்பா அளவுக்குப் பரந்து விரிந்ததும் 15 கோடி ஏக்கர் நிலத்தைக் கொண்டதாயும் உள்ள ஒரு நாடான இந்தியா சம்பந்தப்பட்டவரை நேர்ந்துள்ள ஆங்கிலத் தொழில்துறையின் நாசகர விளைவுகள் ஸ்தூலமானவையாயும் திகைப்பூட்டுவனவாயும் இருப்பதைக் காணலாம். ஆனால் அவை இப்போது உருவகம் பெற்றுள்ள பொருள் உற்பத்தி அமைப்பு முறை முழுவதுடனும் இணைந்த விளைவுகள் மட்டுமே என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்த உற்பத்தி முறை மூலதனத்தின் தலைமையான ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மூலதனம் ஒரு சுயேச்சையான சக்தி யாகத் திகழ வேண்டுமானால் மூலதனத்தை மையப்படுத்து வது அத்தியாவசியமாகும். உலக மார்க்கெட்டுகளின் மீது அந்த மையப்படுத்தல் முறை செலுத்திவரும் அந்த நாச கரமான செல்வாக்கே, நாகரிகமடைந்த ஒவ்வொரு நகரி லும் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த கட்டமைப்பு விதிகளை மிக வும் பிரம்மாண்டமான பரிமாணங்களில் வெளிக் காட்டு கின்றது. வரலாற்றின் முதலாளித்துவ கால கட்டம் புதிய உல கத்திற்குரிய பொருளாயத அடித்தளத்தைப் படைத்துரு வாக்க வேண்டும்: ஒரு புறத்தில் மனிதகுலத்தின் பரஸ்பர சார்பு நிலை மீது தோற்றுவிக்கப்பட்ட சர்வவியாபகமான ஒட்டுறவையும் அந்த ஒட்டுறவுக்கான வழிவகைகளையும் உரு வாக்க வேண்டும்; மறு புறத்தில் மனிதனின் உற்பத்திஆற்றல் களையும், பொருள்வகை உற்பத்தி இயற்கை சக்திகள் விஞ் ஞான பூர்வமான மேலாண்மையாக உருமாற்றப்படுவதையும் வளர்த்துச் செல்ல வேண்டும். மண்ணியல் புரட்சிகள் பூமி

யின் மேல் பரப்பைப் படைத்துருவாக்கியிருப்பது போன்று அதே வழிகளில் முதலாளித்துவத் தொழில்துறையும் வாணிகமும் புதிய உலகத்துக்கான இந்தப் பொருளாயத நிலைமைகளைப் படைக்கின்றன. மகத்தான சமூகப் புரட்சியானது முதலாளித்துவ சகாப்தத்தின் சாதனைகளையும் உலக மார்க்கெட்டையும் நவீன உற்பத்தி சக்திகளையும் வசப்படுத்தும் முழுத் தேர்ச்சி பெற்று, மிகவும் முன்னேறிய மக்களின் பொதுவான கண்காணிப்பிற்குக் கீழடக்கினால் மட்டுமே மனித குலத்தின் முன்னேற்றம், கொலையுண்டோரது மண்டையோடுகளில் இருந்து மட்டுமே அமுதம் பருகும் பயங்கரமான காட்டுமிராண்டி விக்ரகத்தை ஒத்திருக்கும் நிலைக்கு முடிவு கட்டும்.

*மார்க்சால் 1853, ஜூலை 22ல்*
*எழுதப்பட்டது*

*New York Daily Tribune*
*செய்தித்தாள், இதழ் 3840ல்*
*1853, ஆகஸ்ட் 8ல்*
*வெளியிடப்பட்டது*

*செய்தித்தாள் வாசகப்படி*
*அச்சிடப்பட்டது.*
*மூலம் ஆங்கிலத்தில்*
*எழுதப்பட்டது*

*ஒப்பம்:* கார்ல் மார்க்ஸ்

## பதிப்பாளர் குறிப்புகள்

1 எங்கெல்ஸ் எழுதிய ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் என்ற நூலில் அவர் 1848-49ம் வருடங்களில் நடைபெற்ற ஜெர்மன் புரட்சியின் விளைவுகளைப் பற்றி பரிசீலனை செய்கிறார்; வரலாற்றுப் பொருள்முதல்வாத நிலைகளிலிருந்து அதன் முதற் குறிக்கோள்களையும் அதன் வளர்ச்சியின் அடிப்படையான கட்டங்களையும் வர்க்கங்களும் கட்சிகளும் எடுத்த நிலைகளையும் ஆழமான ஆராய்ச்சிக்கு உட்படுத்துகிறார். பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான போராட்டத்தின் செயல் தந்திரக் கோட்பாடுகளை அவர் விரித்துரைக்கிறார்; ஆயுதந் தாங்கிய புரட்சியைப் பற்றிய மார்க்சிய போதனைக்கு அடிப்படைகளை உருவாக்கித் தருகிறார்.

*New York Daily Tribune* என்ற நாளிதழில் 1851-52ம் வருடங்களில் வெளியிடப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதே இந்த நூல். அந்த சமயத்தில் மார்க்ஸ் பொருளாதார ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தார். எனவே அவருடைய வேண்டுகோளின்படி எங்கெல்ஸ் இந்தக் கட்டுரைகளை எழுதினார். எனினும் *Tribune* நாளிதழில் அதிகார பூர்வமான நிருபராகிய மார்க்சின் பெயரிலேயே இந்தக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. 1913ம் வருடத்தில் மார்க்ஸ் எங்கெல்ஸ் ஆகியோருடைய கடிதங்கள் வெளியிடப்பட்ட பிறகுதான் இந்தக் கட்டுரைகளை எங்கெல்ஸ் எழுதினார் என்பது தெரிய வந்தது.—7.

2 In partibus infidelium ("புறச் சமயிகள் நாட்டில்") கிறிஸ்தவர்கள் இல்லாத நாடுகளில் பெயரளவுக்கு மட்டுமேயுள்ள டயோசீசுகளுக்கு நியமிக்கப்படும் கத்தோலிக்க பிஷப்புகளுக்குத் தரப்படும் கூடுதலான பட்டம். ஒரு நாட்டிலுள்ள உண்மையான நிலைமையைப் புறக்

கணித்து வெளிநாடுகளில் ஏற்படுத்தப்படுகின்ற அகதி அரசாங்கங்களைக் குறிப்பதற்கு இந்தச் சொற்றொடரை மார்க்சும் எங்கெல்சும் அடிக்கடி உபயோகித்தனர்.—7.

3 *Tribune — New York Daily Tribune* என்ற பெயரின் சுருக்கம்; 1841 இலிருந்து 1924 வரை வெளியிடப்பட்ட முற்போக்கான முதலாளி வர்க்க நாளிதழ்; 1851 ஆகஸ்ட் முதல் 1862 மார்ச் வரை மார்க்சும் எங்கெல்சும் இந்த நாளிதழுக்குக் கட்டுரைகள் எழுதினார்கள்.—10.

4 **கான்டினென்டல் ஏற்பாடு** அல்லது கான்டினென்டல் முற்றுகை—ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நாடுகள் இங்கிலாந்தோடு வர்த்தகம் செய்வதைத் தடை செய்து 1806ம் வருடத்தில் முதலாம் நெப்போலியன் அறிவித்த திட்டம்; ருஷ்யாவில் நெப்போலியன் தோல்வியடைந்த பிறகு 1812ம் வருடத்தில் இத்திட்டம் ரத்துச் செய்யப்பட்டது.—12.

5 **1818ம் வருடக் காப்புவரி விதித்தல்** — பிரஷ்யாவின் பிரதேசத்தில் உள்நாட்டில் விதிக்கப்படும் வரிகள் ரத்துச் செய்யப்பட்டன.—14.

6 **Zollverein (சுங்க இணையம்)**—1834ம் வருடத்தில் பிரஷ்யாவின் தலைமையில் நிறுவப்பட்டது; அநேகமாக எல்லா ஜெர்மன் அரசுகளையும் இணைத்தது; பொதுவான சுங்கவரி விதிப்பு எல்லையை ஏற்படுத்தி எதிர்காலத்தில் ஜெர்மனியின் அரசியல் ஒற்றுமைக்கு உதவியது.—14.

7 1844ம் வருடம் ஜூன் 4-6 தேதிகளில் நடைபெற்ற **சைலீஷிய** நெசவாளர்களின் எழுச்சி ஜெர்மனியில் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையே முதன்முதலாக நடைபெற்ற மாபெரும் வர்க்கப் போராட்டமாகும். இதையும் 1844 ஜூன் மாதத்தின் பிற்பாதியில் ஏற்பட்ட செக் தொழிலாளர்களின் எழுச்சியையும் அரசாங்கத் துருப்புகள் மும்முரமாக ஒடுக்கின.—19.

8 **ஜெர்மன் கூட்டமைப்பு** வியன்னு காங்கிரஸ் (குறிப்பு எண் 11ஐப் பார்க்கவும்) 1815 ஜூன் 8ந் தேதி நிலப்பிரபுத்துவ-சர்வாதிகார ஜெர்மன் அரசுகளை ஒன்று சேர்த்து உருவாக்கிய அமைப்பு. இது ஜெர்மனியின் அரசியல், பொருளாதாரப் பிரிவினையை நிரந்தரமாக்கியது. இதில் ஆஸ்திரியா முக்கிய பங்கு வகித்தது.—22.

9 **புந்தெஸ்தாஹ்** — ஜெர்மன் கூட்டமைப்பின் முக்கியமான அங்கமாகும். அதன் கூட்டங்கள் பிராங்க்பர்ட்டில் நடைபெற்றன. ஜெர்மன் அரசாங்கங்கள் இதை ஒரு பிற்போக்குவாத அரசியல் கருவியாகப் பயன்படுத்தின.—22.

10 Steuerverein என்பது **சுங்க வரி இணையம்** என்று சொல்லப்பட்ட ஒரு அமைப்பு. 1834ம் வருடம் மே மாதத்தில் அமைக்கப்பட்டது. இங்கிலாந்துடன் வர்த்தகம் செய்வதில் அக்கறை கொண்ட ஹனோவர், பிரான்ஷ்வீக், ஓல்டென்பர்க் மற்றும் ஷோம்பெர்க்-லிப்பே ஆகிய அரசுகள் இதில் சேர்ந்திருந்தன. 1854ம் வருடத்துக்குள்ளாகவே இந்தப் பிரிவினை அமைப்பு கலைந்து போனபடியால் அதன் உறுப்பினர்கள் சுங்க இணையத்தில் (குறிப்பு எண் 6ஐப் பார்க்கவும்) சேர்ந்தனர்.—22.

11 முதலாம் நெப்போலியனுக்கு எதிராக ஐரோப்பிய வல்லரசுகளின் கூட்டணிகள் நடத்திய போர்களுக்குப் பிறகு 1814-15ம் வருடங்களில் நடைபெற்ற வியன்னு காங்கிரசில் ஐரோப்பியப் பிற்போக்குவாதத்துக்குத் தலைமை வகித்த ஆஸ்திரியாவும் இங்கிலாந்தும் ஜாரிஸ்ட் ருஷ்யாவும் முறைமைவாத (Legitimist) முடியாட்சிகளை மறுபடியும் ஏற்படுத்துகின்ற நோக்கத்தோடு தேசங்களின் ஒற்றுமையையும் மக்களின் சுதந்திரத்தையும் உதாசீனப்படுத்தி விட்டு ஐரோப்பாவை மறுபிரிவினை செய்தனர்.—23.

12 1830ம் வருடம் ஜூலை மாதத்தில் பிரான்சில் ஒரு பூர்ஷ்வாப் புரட்சி நடைபெற்றது; அதைத் தொடர்ந்து பெல்ஜியம், போலந்து, ஜெர்மனி மற்றும் இத்தாலியில் புரட்சிகர எழுச்சிகள் ஏற்பட்டன.—25.

13 **இளம் ஜெர்மனி**—19ஆம் நூற்றுண்டின் 1830க்களில் ஜெர்மனியில் ஏற்பட்ட ஒரு இலக்கிய கோஷ்டியினர்; அவர்களுடைய இலக்கியப் படைப்புகளும் பத்திரிகை எழுத்துக்களும் குட்டி முதலாளி வர்க்கத்தில் ஏற்பட்டிருந்த எதிர்ப்பு உணர்ச்சிகளைப் பிரதிபலித்தன; இவர்கள் பத்திரிகைச் சுதந்திரத்தையும் வழிபாட்டுச் சுதந்திரத்தையும் கோரினர்.—26.

14 **புனிதக் கூட்டணி**—1815ம் வருடத்தில், ஜாரிஸ்ட் ருஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நாடுகள் ஐரோப்பாவின் அரசர்களைச் சேர்த்து ஏற்படுத்திய பிற்போக்குக் கூட்

டணி. ஒவ்வொரு நாட்டிலும் தோன்றுகின்ற புரட்சிகர இயக்கத்தை நசுக்கி அங்கேயிருக்கும் நிலப்பிரபுத்துவ முடியாட்சியைப் பாதுகாப்பது இக்கூட்டணியினரின் நோக்கம்.—*28.*

15 *Berliner politisches Wochenblatt* (''பெர்லின் அரசியல் வார ஏடு'')—*1831-41*ம் வருடங்களில் வெளியிடப் பட்ட தீவிரமான பிற்போக்குவாதப் பத்திரிகை. வரலாற்று மரபினரின் ஆதரவாளர்களுடைய ஒத்துழைப் போடு இது நடத்தப்பட்டது.—*29.*

16 **வரலாற்று மரபு**—வரலாறு மற்றும் சட்டவியல் விஞ்ஞானத்தில் பிற்போக்குவாதப் போக்கு. பதினெட்டாம் நூற்றுண்டின் கடைசியில் ஜெர்மனியில் தோன்றியது.—*29.*

17 **முறைமைவாதிகள்** — ஏராளமான நிலங்களைப் பரம்பரையாகக் கொண்டிருந்த பிரபுக் குலத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியதும் *1830*ம் வருடத்தில் தூக்கியெறியப்பட்டதுமான ''முறைமைவாத'' புர்போன் மரபின் ஆதரவாளர்கள். *1830-48*ம் வருடங்களில் நிதிப் பிரபுக்களுக்கும் பெருமுதலாளிகளுக்கும் ஆதரவாக ஆட்சியிலிருந்த ஆர்லியான் மரபினருக்கு எதிராகப் போராடுகிற பொழுது முறைமைவாதிகளில் ஒரு பகுதியினர் சமூகக் கிளர்ச்சித் தந்திரங்களைக் கடைப்பிடித்து முதலாளித்துவச் சுரண்டலுக்கு எதிராக உழைக்கும் மக்களை ஆதரிப்பவர்களைப் போலத் தங்களைக் காட்டிக் கொண்டார்கள்.—*29.*

18 **சிலுவைப் போர் வீரர்கள்** —*11*— *13*ம் நூற்றுண்டுகளில் மேற்கு ஐரோப்பாவிலிருந்த பெரும் நிலப்பிரபுக்கள், வீரப் பெருந்தகையினர், இத்தாலியின் வர்த்தக நகரங்கள் ஜெருசலேம் மற்றும் இதர கிறிஸ்தவப் ''புனித இடங்களை'' முஸ்லிம் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்ற மத கோஷத்தைச் சொல்லி நடத்திய இராணுவ-காலனியாதிக்கப் சிலுவைப் போர் இயக்கத்தில் பங்கு கொண்டவர்கள். இவர்கள் படையெடுத்துச் சென்ற நாடுகளில் முஸ்லிம்களை மட்டுமல்லாமல் அங்கேயிருந்த கிறிஸ்தவர்கள் மீதும் அதிகமான வன்முறையைப் பயன்படுத்தினர்; அவர்களுடைய உடைமைகளைக் கொள்ளையடித்தனர். சிலுவைப் போர் வீரர்களின் நோக்கம் முஸ்லிம் அரசுகளான சிரியா, பாலஸ்தீனம், எகிப்து, டூனிஸ் ஆகிய

*வற்றையும் பைஸான்டியப் பேரரசையும் கைப்பற்றுவதும் கொள்ளையடிப்பதுமாகும். ஆனால் கிழக்கு மத்திய கடல் பிரதேசத்தில் அவர்களடைந்த வெற்றிகள் நீடிக்கவில்லை. முஸ்லிம்கள் மறுபடியும் அந்தப் பிரதேசங்களைப் பிடித்துக் கொண்டார்கள்.—31.*

[19] *Rheinische Zeitung für Politik, Handel und Gewerbe ("அரசியல், வர்த்தகம், தொழில் சம்பந்தமான ரைன் பத்திரிகை")—கொலோன் நகரில் 1842 ஜனவரி முதல் தேதி முதல் 1843 மார்ச் 31ந் தேதி வரை வெளியிடப்பட்ட ஜெர்மன் நாளிதழ்; 1842 ஏப்ரல் மாதத்திலிருந்து மார்க்ஸ் இதில் கட்டுரைகள் எழுதத் தொடங்கினார். அதே வருடம் அக்டோபர் மாதத்தில் மார்க்ஸ் இந்த நாளிதழுக்கு ஆசிரியரானார்.—32.*

[20] **ஐக்கியக் கமிட்டிகள்** — *பிரஷ்யாவின் எஸ்டேட்டுகள் அமைப்பு. ஆலோசனை அந்தஸ்தைக் கொண்ட இந்த அமைப்புக்கு மாநில சபைகள் தம் உறுப்பினர்களிலிருந்து பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பின.—33.*

[21] Seehandlung *(அந்நிய வர்த்தகம்) — 1772ம் வருடத்தில் பிரஷ்யாவில் ஏற்படுத்தப்பட்ட வர்த்தக-வங்கிக் கம்பெனி; அரசாங்கம் இந்தக் கம்பெனிக்குப் பல முக்கியமான உரிமைகளை வழங்கியது; இந்தக் கம்பெனி அரசாங்கத்துக்குப் பெருந்தொகைகளை கடனாகக் கொடுத்தது.—34.*

[22] **ஐக்கிய லாண்ட்டாக்** *(சபை) — 1847ம் வருடம் ஏப்ரலில் பெர்லினில் கூட்டப்பட்ட அனைத்து மாநில எஸ்டேட்டு சபைகளின் ஐக்கியக் கூட்டம். மன்னர் வெளிநாட்டிலிருந்து வாங்க உத்தேசித்த கடனுக்கு உறுதியளிப்பதற்காக அது கூட்டப்பட்டது. ஆனால் சபையிலிருந்த முதலாளி வர்க்கப் பெரும்பான்மையினருடைய மிகவும் மிதமான அரசியல் கோரிக்கைகளைக் கூட மன்னர் ஏற்றுக் கொள்ளாதபடியால் இந்த ஐக்கிய சபை கடனுக்கு உறுதியளிக்க மறுத்தது; அதனால் அந்த வருடம் ஜூன் மாதத்திலேயே மன்னர் இந்தச் சபையைக் கலைத்தார்.—36.*

[23] *ஜெர்மன் அல்லது "உண்மையான" சோஷலிசத்தின் பிரதிநிதிகள் எழுதிய நூல்கள் இங்கே குறிப்பிடப்படுகின்றன; ஜெர்மனியில் 1840க்களில் குட்டி முதலாளி வர்க்க அறிவு*

ஜீவிகளிடம் பரவலாக இருந்த பிற்போக்குவாதப் போக்கு.
—38.

24 கோத்தா கட்சி—1849ம் வருடம் ஜூன் மாதத்தில் புரட்சிக்கு எதிரான பெரும் முதலாளி வர்க்கத்தினரின் பிரதிநிதிகளான வலதுசாரி மிதவாதிகள் தோற்றுவித்த கட்சி; ஹோஹென்ஸோலெர்ன் பிரஷ்யாவின் தலைமையில் ஜெர்மனி முழுவதையும் (ஆஸ்திரியா நீங்கலாக) ஒன்றுபடுத்துவது இவர்களுடைய நோக்கம்.—42.

25 ஜெர்மன் கத்தோலிக்கவாதம் — 1844ம் வருடத்தில் ஏற்பட்ட மத இயக்கம்; இதில் குட்டி, நடுத்தர முதலாளி வர்க்கத்தின் பெரும் பகுதியினர் ஈடுபட்டனர். கத்தோலிக்கத் திருச்சபையில் அதிகமாக இருந்த போலித்தனம் மற்றும் போலி ஆன்மீகத்தை எதிர்த்தது. ''ஜெர்மன் கத்தோலிக்கர்கள்'' போப்பாண்டவரின் அதிகாரத்தையும் பல கத்தோலிக்கக் கோட்பாடுகளையும் சடங்குகளையும் மறுத்து கத்தோலிக்க மதத்தை ஜெர்மன் முதலாளி வர்க்கத்தினரின் தேவைகளுக்கேற்ப மாற்றியமைக்க முயற்சித்தனர்.

சுதந்திரச் சமயக் கூட்டங்கள் — 1846ஆம் வருடத்தில் அதிகாரபூர்வமான புரொடஸ்டண்ட் திருச்சபையிலிருந்து பிரிந்து போன சமயக் கூட்டங்கள். ஜெர்மன் முதலாளி வர்க்கம் 1840க்களில் ஜெர்மனியின் பிற்போக்கான முறைக்கு எதிராகத் தன்னுடைய அதிருப்தியை சமய எதிர்ப்பு என்ற வடிவத்தில் வெளிப்படுத்தியது. 1859ம் வருடத்தில் அவைகள் ''ஜெர்மன் கத்தோலிக்கர்களோடு'' இணைந்தன.—44.

26 யுனிட்டேரியன்கள் (அல்லது டிரினிட்டேரிய எதிர்ப்பாளர்கள்)—பதினாறும் நூற்றாண்டில் ஜெர்மனியில் ஏற்பட்ட ஒரு மதப் போக்கின் பிரதிநிதிகள். நிலப்பிரபுத்துவ அமைப்புக்கும் நிலப்பிரபுத்துவத் திருச்சபைக்கும் எதிராகத் தீவிரவாத முதலாளி வர்க்கத்தினர் மற்றும் வெகுஜனங்களின் போராட்டத்தை இந்த மதப் போக்கு வெளியிட்டது. பதினேழாம் நூற்றாண்டில் யுனிட்டேரியனிசம் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குப் பரவியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் யுனிட்டேரியனிசம் மதத்தின் வெளித்தோற்றம் மற்றும் சடங்கு முதலான அம்சங்களுக்கு எதிராக தார்மிக மற்றும் அறவியல் அம்சங்களை வலியுறுத்தியது.—44.

27 1806ம் வருடம் ஆகஸ்ட் மாதம் வரை ஜெர்மன் தேசத்தின் புனித ரோமானியப் பேரரசு என்று சொல்லப்பட்ட அமைப்பின் ஒரு பகுதியாக ஜெர்மனி இருந்தது. பத்தாம் நூற்றுண்டில் நிறுவப்பட்ட இந்தப் பேரரசு சக்கரவர்த்தியின் தலைமை அதிகாரத்தை அங்கீகரித்த நிலப்பிரபுத்துவப் பிரதேசங்களையும் சுதந்திரமான நகரங்களையும் கொண்டதாக இருந்தது.—45.

28 ''பிரிக்கப்படமுடியாத ஒற்றை ஜெர்மன் குடியரசு'' என்ற கோஷத்தை புரட்சி ஏற்படக்கூடும் என்ற காலத்திலேயே மார்க்சும் எங்கெல்சும் **ஜெர்மனியின் கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கைகள்** என்ற நூலில் முன்வைத்தனர்.—46.

29 இது **முதலாவது அபினி யுத்தத்தைக்** (1839-42) குறிப்பிடுவது. சீனுவுக்கு எதிராக பிரிட்டன் நடத்திய இந்த யுத்தம் சீன ஒரு அரைக் காலனியாக மாற்றமடைவதை ஆரம்பித்து வைத்தது.—48.

30 1846 வருடம் பிப்ரவரி—மார்ச் மாதங்களில் கிராக்கோவில் தேசிய-விடுதலை எழுச்சி ஏற்பட்ட அதே சமயத்தில் கலீஷியாவில் மாபெரும் விவசாயிகள் எழுச்சி வெடித்தது. ஆஸ்திரியாவின் அரசாங்கம் போலிஷ் பிரபுக்களின் கிளர்ச்சியை நசுக்குவதற்கு இதை ஒரு சாக்காகப் பயன்படுத்தியது. கிராக்கோவில் ஏற்பட்ட எழுச்சியை ஒடுக்கிய பிறகு ஆஸ்திரிய அரசாங்கம் கலீஷியாவில் ஏற்பட்ட விவசாயிகள் எழுச்சியையும் நசுக்கியது.—49.

31 இது 1848-49ம் வருடங்களில் ஆஸ்திரியாவின் ஆட்சிக்கு எதிராக இத்தாலிய மக்கள் நடத்திய தேசிய விடுதலைப் போராட்டத்தைக் குறிப்பிடுகிறது. இத்தாலியைப் புரட்சிகரமான முறையில் ஒன்றுபடுத்துவதைக் கண்டு அஞ்சிய இத்தாலிய ஆளும் வர்க்கத்தினர் செய்த துரோகத்தினுல் இந்தப் போராட்டம் தோல்வியடைந்தது.—64.

32 டேனிஷ் ஆட்சிக்கு எதிராக ஜெர்மனியோடு இணைய வேண்டுமென்று ஷ்லெஸ்விக்-ஹோல்ஷ்டைன் கலகக்காரர்கள் நடத்திய யுத்தத்தில் வெகுஜனங்களின் நிர்ப்பந்தத்தினுல் பிரஷ்யா டென்மார்க்குக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்டது. 1848ம் வருடம் ஆகஸ்ட் 26ம் தேதியன்று மால்மே என்ற இடத்தில் டென்மார்க்குக்கும் பிரஷ்யாவுக்கும் போர்நிறுத்த உடன்படிக்கை கையெழுத்தாயிற்று.

டென்மார்க்குக்கு எதிராகப் போலியான யுத்தத்தை நடத்திய பிரஷ்யா ஏழு மாத காலத்துக்கு யுத்தத்தை நிறுத்துவதாக உடன்படிக்கை செய்து கொண்டது. செப்டெம்பர் மாதத்தில் பிராங்க்பர்ட்டில் நடைபெற்ற தேசிய சட்டமன்றம் இந்த உடன்படிக்கையை அங்கீகரித்தது. 1849 மார்ச்சில் யுத்தம் மீண்டும் தொடங்கியது. ஆனால் 1850 ஜூலையில் பிரஷ்யா டென்மார்க்கோடு சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டது; கலகக்காரர்களை ஒடுக்குவதற்கு டென்மார்க்குக்கு உதவியது.—*81.*

33 *1772*ம் வருடத்தில் முதல் பிரிவினைக்கு முன்பிருந்த போலந்தின் எல்லைகள் இங்கே குறிப்பிடப்படுகின்றன. அந்தப் பிரிவினையின் போது போலந்தின் பிரதேசத்தின் கணிசமான பகுதியை ருஷ்யா, பிரஷ்யா, ஆஸ்திரியா-ஹங்கேரி ஆகிய நாடுகள் தமக்கிடையே பிரித்துக் கொண்டன.—*84.*

34 **ஹுஸ்ஸைட் யுத்தங்கள்** — ஜெர்மன் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தினருக்கும் கத்தோலிக்க திருச்சபையினருக்கும் எதிராக செக் மக்கள் *1419* முதல் *1437* வரை நடத்திய தேசிய விடுதலை யுத்தங்கள். செக் மதச் சீர்திருத்த இயக்கத்தின் தலைவரான ஜான் ஹுஸ் (*1369—1415*) பெயர் இந்த யுத்தங்களுக்குக் கொடுக்கப்பட்டது.—*87.*

35 மத்திய ஐரோப்பாவிலும் தெற்கு ஐரோப்பாவிலுமிருந்த ஸ்லாவேனிய இனத்தினரில் சிலருடைய வரலாற்று விதியையும் வளம்பெறக்கூடிய தன்மையையும் பற்றி இங்கே எங்கெல்ஸ் எழுதியிருப்பவை தவறானவையாகத் தோன்றுகின்றன. முதலாளித்துவத்தின் அடிப்படையான போக்கு மத்தியப்படுத்துதல், சிறிய இனங்களைப் பெரிய தேசங்கள் பலாத்காரமாக இணைத்துக் கொள்ளுதல் என்பதை எங்கெல்ஸ் சரியாகவே கவனிக்கிறார்; ஆனால் *1850*க்களின் ஸ்தூலமான நிலைமையில் தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்து சுதந்திரத்துக்காக இந்த மக்கள் நடத்திய போராட்டத்தின், தனி அரசு கோரி அவர்கள் நடத்திய போராட்டத்தின் மகத்தான வாய்ப்புக்களை அவர் கவனிக்கத் தவறுகிறார். *1848-49*ம் வருடங்களில் ஹாப்ஸ்புர்க் முடியாட்சியும் ருஷ்ய ஜாராட்சியும் தங்களுடைய பிரச்சார தந்திரங்களினாலும் வேறு வழிகள் மூலமாகவும் மேற்கு ஸ்லாவேனிய, தெற்கு ஸ்லாவேனிய இனங்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களை ஜெர்மன், ஹங்கேரியப்

புரட்சிகளுக்கு எதிராகத் திருப்புவதில் வெற்றியடைந்தது எங்கெல்சின் மதிப்பீட்டுக்கு அடிப்படையாக இருக்கலாம். வலதுசாரி முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ சக்திகளின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த இந்த இயக்கங்கள் எதிர்ப்புரட்சியின் கருவிகளாகவே பயன்பட்டன.

பிற்காலத்தில் தொழிலாளி வர்க்கம் வளர்ச்சியடைந்து அரசியல் உணர்வும் ஸ்தாபன பலமும் பெருகிய பொழுது தேசிய விடுதலைப் போராட்டம் உள்பட எல்லா விதமான புரட்சிகரமான ஜனநாயகப் போராட்டங்களும் மென்மேலும் முற்போக்கான தன்மையைப் பெற்றன; பேரரசுகள் சீர்குலைந்தன; பெரிய தேசங்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த சிறிய மக்களினங்கள் சுதந்திரமான தேசிய வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றின.—88.

36 ஹாப்ஸ்புர்க் பேரரசினால் ஒடுக்கப்பட்டிருந்த ஸ்லாவேனிய மக்களின் தேசிய இயக்கத்தில் இரண்டு போக்குகள் இருப்பதை 1848ம் வருடம் ஜூன் 2ந் தேதியில் பிராக் நகரில் நடைபெற்ற ஸ்லாவேனியக் காங்கிரஸ் எடுத்துக் காட்டியது. அந்த காங்கிரஸ் தேசியப் பிரச்சினை குறித்து ஒரே கருத்தை உருவாக்க முடியவில்லை. தீவிரவாத அணியைச் சேர்ந்தவர்களும் 1848 ஜூன் மாதத்தில் நடைபெற்ற பிராக் எழுச்சியில் தீவிரமான பங்கெடுத்தவர்களுமான சில காங்கிரஸ் பிரதிகள் கடுமையான அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டனர். ஜூன் 16ந் தேதியன்று பிராக் நகரத்தில் தங்கியிருந்த மிதவாத அணியின் பிரதிநிதிகள் காங்கிரஸ் காலவரையறையின்றித் தள்ளி வைக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார்கள்.—90.

37 ஆங்கில நாடாளுமன்றம் மக்கள் சாஸனத்தை நிறைவேற்ற வேண்டும் என்று மனுக் கொடுப்பதற்காக சாஸனவாதிகள் 1848 ஏப்ரல் 10ந் தேதியன்று லண்டனில் வெகுஜன ஆர்ப்பாட்டம் நடத்துவதென்று போட்ட திட்டம் அதன் தலைவர்களின் தீர்மானமின்மை மற்றும் தயக்கத்தின் விளைவாகத் தோல்வியில் முடிந்தது. தொழிலாளர்களை ஒடுக்குவதற்கும் சாஸனவாதிகள் மீது அடக்குமுறையைப் பிரயோகிப்பதற்கும் பிற்போக்காளர்கள் இதைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.—95.

38 1848 ஏப்ரல் 16ந் தேதியன்று பாரிஸ் நகரத்தில் தற்காலிக அரசாங்கத்திடம் மனுக் கொடுப்பதற்காகத் தொழிலாளர்கள் அமைதியான முறையில் ஊர்வலமாகச்

சென்றனர். ''தொழிலாளர்களுக்கு நீதி வேண்டும்'' ''மனிதனை மனிதன் சுரண்டுவது ஒழிய வேண்டும்'' என்று அவர்கள் கோரினர். அந்த ஊர்வலம் தயாராகத் திரட்டி வைக்கப்பட்டிருந்த முதலாளி வர்க்கத்தின் தேசியக் காவலர் படையினால் தடுத்து நிறுத்தப்பட்டது.—95.

39 1848 மே 15ந் தேதியன்று பாரிசில் நடைபெற்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தின்போது அரசியல் நிர்ணய சபைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த மன்றத்துக்குள் பாரிஸ் நகரத் தொழிலாளர்களும் கைவினைஞர்களும் திடீரென்று நுழைந்தார்கள். அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டுவிட்டது என்று அறிவித்ததோடு புரட்சிகரமான அரசாங்கத்தையும் அமைத்தார்கள். ஆனால் வெகு சீக்கிரத்தில் தேசியக் காவலர் படையும் இராணுவமும் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தன. தொழிலாளர் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.—95.

40 1848 மே 15ந் தேதியன்று நேப்பிள்ஸ் மன்னரான இரண்டாம் பெர்டினண்டு மக்களின் புரட்சிகர எழுச்சியை அடக்கினார்; தேசியக் காவலர் படையைக் கலைத்தார்; நாடாளுமன்றத்தைக் கலைத்தார்; 1848 பிப்ரவரியில் வெகுஜனங்களின் நிர்ப்பந்தத்தினால் கொண்டு வரப்பட்ட புதிய சீர்திருத்தங்களை ரத்து செய்தார்.—96.

41 1848 ஜூன் 23—26 தேதிகளில் நடைபெற்ற பாரிஸ் தொழிலாளர்களின் வீரம் நிறைந்த புரட்சிகர எழுச்சி பிரெஞ்சு முதலாளி வர்க்கத்தினால் மிகவும் குரூரமாக ஒடுக்கப்பட்டது இங்கே குறிப்பிடப்படுகிறது. வரலாற்றில் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்குமிடையே நடைபெற்று வருகின்ற மாபெரும் உள்நாட்டுப் போரின் தொடக்கமாக இந்த எழுச்சி இருந்தது.—96.

42 ஆஸ்திரிய அரசாங்கம் 1848 ஏப்ரல் முதல் தேதியன்று வெளியிட்ட தற்காலிக பத்திரிகைச் சட்டத்தின்படி, பெருந்தொகையைக் காப்புப் பணமாகக் கட்டிய பிறகுதான் பத்திரிகை வெளியிட அனுமதி கிடைக்கும் என்னும் ஷரத்து இடம் பெற்றிருந்தது.—102.

43 1848 ஏப்ரல் 25ந் தேதிய அரசியலமைப்புச் சட்டம் நாடாளுமன்றத் (ரீஸ்தாஹ்) தேர்தல்களில் வாக்களிப்பதற்குத் தகுதிகளை நிர்ணயித்தது. குறிப்பிட்ட மதிப்புடைய சொத்தைக் கொண்டவர்கள், குறிப்பிட்டிருந்த காலப்

*பகுதியில் நிரந்தரமாகக் குடியிருந்தவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டது. கீழ் சபை, செனட் என்ற இரண்டு சபைகள் ஏற்படுத்தப்பட்டன; மாகாணங்களில் எஸ்டேட் பிரதிநிதித்துவச் சபைகள் நீடிக்கப்பட்டன; இரண்டு சபைகளாலும் நிறைவேற்றப்படுகின்ற சட்டங்களை நிராகரிப்பதற்கு சக்கரவர்த்திக்கு உரிமை கொடுக்கப்பட்டது.—102.*

44 **1848 மே 8ந் தேதிய வாக்குரிமைச் சட்டம்** *தொழிலாளர்கள், தற்காலிகத் தொழிலாளர்கள் பணியாட்கள் ஆகியோருடைய வாக்குரிமையைப் பறித்தது. சில செனட்டர்கள் சக்கரவர்த்தியினுல் நியமிக்கப்பட்டனர்; மற்றவர்கள் அதிகமான வரிகள் கட்டுபவர்களிடமிருந்து இரண்டு கட்டத் தேர்தலின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கீழ் சபைத் தேர்தல்களும் இரண்டு கட்டங்களில் நடத்தப்பட்டன.—102.*

45 **மாணவர் படையணி** (The Academic Legion) *வியன்னு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தீவிரவாதக் கருத்துக்களடங்கிய மாணவர்களைக் கொண்ட சிவில்-இராணுவ அமைப்பு.—103.*

46 *Wiener Zeitung ("வியன்னு பத்திரிகை")—Oesterreichische Kaiserische Wiener Zeitung ("ஆஸ்திரிய இராஜாங்க வியன்னு பத்திரிகை") என்ற அரசாங்கப் பத்திரிகையின் சுருக்கமான பெயர். அது 1780ம் வருடத்திலிருந்து இந்தப் பெயரில் வெளிவர ஆரம்பித்தது.—106.*

47 **வர்த்தக சுதந்திரத்தினர்**—*வர்த்தக சுதந்திரத்தையும் பொருளாதாரத்தில் அரசு தலையிடக் கூடாதென்ற கொள்கையையும் ஆதரிப்பவர்கள். 1840க்களிலும் 1850க்களிலும் வர்த்தக சுதந்திரத்தினர் ஒரு தனியான அரசியல் கோஷ்டியாக இருந்தனர். பிறகு இவர்கள் மிதவாதக் கட்சியில் சேர்ந்தனர்.—118.*

48 *1849 ஆகஸ்ட் 13ந் தேதியன்று* **விலகோஷ் என்ற இடத்தில்** *கோர்கேயின் தலைமையிலிருந்த ஹங்கேரியப் படை, ஹங்கேரியப் புரட்சிகர எழுச்சியை ஒடுக்குவதற்கு அனுப்பப்பட்ட ஜாரிஸ்ட் படைகளிடம் சரணடைந்தது.—118.*

49 *Neue Rheinische Zeitung. Organ der Demokratie ("புதிய ரைன் பத்திரிகை. ஜனநாயகவாதிகளின் பத்திரிகை")—1848 ஜூன் 1ந் தேதி முதல் 1849 மே 19ந்*

தேதி வரை கொலோன் நகரத்தில் வெளியிடப்பட்ட நாளிதழ்; மார்க்ஸ் அதன் பிரதம ஆசிரியராகவும் எங்கெல்ஸ் ஆசிரியர் குழுவின் உறுப்பினராகவும் இருந்தனர். —119.

50 **லங்காஸ்டிரியப் பள்ளிகள்**—ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆரம்பப் பள்ளிகள். இவற்றில் மாணவர்கள் ஒருவருக்கொருவர் கற்பிக்கின்ற ''பரஸ்பர முறை'' பின்பற்றப்பட்டது. ஜோஸப் லங்காஸ்டர் (1778—1831) என்ற ஆங்கிலக் கல்வியாளர் பெயர் பள்ளிகளுக்குக் கொடுக்கப்பட்டது. —122.

51 **பிராங்க்பர்ட் சட்டமன்றத்தின் இடதுசாரியினர்** — ஜெர்மனியில் மார்ச் மாதப் புரட்சிக்குப் பிறகு கூட்டப்பட்ட தேசிய சட்டமன்றத்தின் குட்டி முதலாளி வர்க்க இடதுசாரி அணி இங்கே குறிப்பிடப்படுகிறது. 1848 மே 18ந் தேதியன்று பிராங்க்பர்ட்டில் தேசிய சட்டமன்றம் கூடியது. ஜெர்மனியின் அரசியல் பிரிவினைக்கு முடிவு கட்டுவதும் அரசியலமைப்புச் சட்டம் தயாரிப்பதும் அதன் முக்கியமான கடமைகளாகும். எனினும் அந்த சட்ட மன்றத்திலிருந்த மிதவாதப் பெரும்பான்மையினரின் கோழைத்தனம் மற்றும் ஊசலாட்டத்தினாலும் அதன் இடதுசாரி அணியின் தீர்மானமின்மை மற்றும் முரண்பாடான நிலைகளினாலும் அது தலைமை அதிகாரத்தைக் கைப்பற்றத் தவறியது. 1848-49ம் வருட ஜெர்மன் புரட்சியின் முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி உறுதியான நிலையெடுக்கத் தவறியது. 1849 மே 30ந் தேதியன்று இச்சட்டமன்றம் தன்னுடைய கூட்டங்களை ஷ்டுட்கார்ட் நகரத்துக்கு மாற்றிக் கொண்டது. 1849 ஜுன் 18ந் தேதியன்று துருப்புகள் அதைக் கலைத்தன. —123.

52 1636ம் வருடத்தில் ஜான் ஹெம்ப்டன் காமன்ஸ் சபையினால் அங்கீகரிக்கப்படாத ''கப்பல் பண வரியைக்'' கட்ட மறுத்தார். அவர் மீது அரசாங்கம் நடத்திய வழக்கு ஆங்கில சமூகத்தில் சர்வாதிகாரத்துக்கு எதிரான உணர்ச்சிகளைக் கிளறிவிட்டது. பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட முதலாளி வர்க்கப் புரட்சியில் அவர் ஒரு முக்கியமான பிரமுகரானார்.

1766ம் வருடத்தில் அமெரிக்கர்கள் ஆங்கில அரசாங்கம் விதித்த ஸ்டாம்பு வரியைக் கட்ட மறுத்ததும் 1770க்

களின் தொடக்கத்தில் இங்கிலாந்து நாட்டுப் பொருள்களை பகிஷ்கரித்து அவர்கள் நடத்திய இயக்கமும் அமெரிக்காவின் சுதந்திரப் போரின் (1775-83) பீடிகையாக இருந்தன.—127.

53 1793ம் வருடத்தில் **வண்டையாவில்** (பிரான்சின் மேற்குப் பகுதியில் ஒரு மாநிலம்) ஏற்பட்ட எதிர்ப்புரட்சிக் கலகம் இங்கே குறிப்பிடப்படுகிறது. பிரான்சின் அரச பரம்பரையின் ஆதரவாளர்கள் இந்த மாநிலத்தைச் சேர்ந்த பிற்போக்கான விவசாயிகளை பிரெஞ்சுப் புரட்சிக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுத்தினுர்கள்.—136.

54 **வியன்ரு உடன்படிக்கைகள்**—நெப்போலியனுக்கு எதிராக நடைபெற்ற யுத்தங்களில் பங்கெடுத்துக் கொண்ட நாடுகள் வியன்ரு காங்கிரஸ் (1814—1815) நடவடிக்கையின் விளைவாக 1815ம் வருடம் மே-ஜூன் மாதங்களில் செய்து கொண்ட உடன்படிக்கைகள். இந்த உடன்படிக்கைகள் தேசங்களின் ஒற்றுமையையும் மக்களின் சுதந்திரத்தையும் உதாசீனப்படுத்திவிட்டு முறைமைவாத முடியாட்சிகளை மறுபடியும் ஏற்படுத்துகின்ற நோக்கத்தோடு ஐரோப்பாவை மறுபிரிவினை செய்தன.—143.

55 **கிழக்கு ரோமானியப் பேரரசு** — அடிமைகளை உடைமையாகக் கொண்டிருந்த ரோமானியப் பேரரசிலிருந்து பிரிந்து சென்று கான்ஸ்டான்டிநேப்பிளைத் தலைநகரமாக அமைத்துக் கொண்ட அரசு; இதற்குப் பிற்காலத்தில் பைஸான்டியம் (Byzantium) என்ற பெயர் கொடுக்கப்பட்டது. 1453ம் வருடத்தில் துருக்கியர்களின் வெற்றி வரை இந்த அரசு நீடித்தது.—144.

56 பிரஷ்யாவின் முதலாளி வர்க்க அமைச்சர்களின் முன்முயற்சியின் பேரில் 1848 மார்ச் 21ந் தேதியன்று பெர்லினில் ஒரு ஆடம்பரமான இராஜ ஊர்வலம் நடைபெற்றது; மக்கள் ஜெர்மனியின் ஒற்றுமைக்கு ஆதரவாக முழங்கினுர்கள். நான்காம் பிரெடெரிக்-வில்ஹெல்ம் கறுப்பு-சிகப்பு-தங்க நிறக் கைப்பட்டையோடு (ஒன்றுபட்ட ஜெர்மனியின் சின்னம்) தெருக்களில் ஊர்வலம் வந்தார்; போலியான தேச பக்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.—147.

57 சாம்ராஜ்ய அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்காகக் கூட்டப்பட்ட மாநாடு இங்கே குறிப்பிடப்படுகிறது.

அதன் விளைவாக 1849 மே 26ந் தேதியன்று பிரஷ்யா, சாக்சனி, ஹனேவர் அரசர்களுக்கிடையே ஒரு உடன்படிக்கை (''மூன்று அரசர்களின் ஒற்றுமை'') ஏற்பட்டது. இந்த ''ஒற்றுமை'' ஜெர்மனியில் தலைமையான அதிகாரத்தைப் பெறுவதற்கு பிரஷ்ய முடியாட்சி செய்த முயற்சியாகும். ஏனென்றால் பிரஷ்யாவின் அரசர் இந்தப் பேரரசுக்கு மாற்று ஆளுநராக இருப்பார் என முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் ஆஸ்திரியாவும் ருஷ்யாவும் நிர்ப்பந்தம் செய்ததன் விளைவாக 1850 நவம்பர் மாதத்திலேயே பிரஷ்யா இந்த ''ஒற்றுமையைக்'' கைவிட நேரிட்டது.—153.

58 பிராங்க்பர்ட்டிலிருந்த புனித பால் தேவாலயத்தில் அகில ஜெர்மன் தேசிய சட்டமன்றம் 1848 மே 18 முதல் 1849 மே 30 வரை தன்னுடைய கூட்டங்களை நடத்தியது.—173.

59 இக்கட்டுரைத் தொடரின் கடைசிக் கட்டுரை *New York Daily Tribune* வெளியிடப்படவில்லை. மார்க்சின் மகள் எலியனுர் மார்க்ஸ்-ஏவெலிங் பிரசுரத்துக்குத் தயாரித்த 1896ம் வருட ஆங்கிலப் பதிப்பிலும் அதற்குப் பிறகு வெளியிடப்பட்ட பதிப்புகளிலும் எங்கெல்ஸ் எழுதிய ''கொலோனில் சமீபத்தில் நடந்த வழக்கு'' என்ற கட்டுரை கடைசிக் கட்டுரையாகப் பதிப்பிக்கப்பட்டது. ஆனால் இந்தக் கட்டுரை அந்தக் கட்டுரைத் தொடரைச் சேர்ந்ததல்ல.—179.

60 **கொலோன் கம்யூனிஸ்ட் வழக்கு** (1852 அக்டோபர் 4முதல் நவம்பர் 12 வரை நடைபெற்றது) — கம்யூனிஸ்டுகள் சங்கத்தைச் சேர்ந்த பதினெரு உறுப்பினர்கள் மீது தேசத்துரோகக் குற்றம் சாட்டி பிரஷ்ய அரசாங்கம் வழக்குத் தொடர்ந்தது. பொய்யான சாட்சியங்களையும் ஜோடிக்கப்பட்ட ஆவணங்களையும் அடிப்படையாகக் கொண்டு குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஏழு நபர்களுக்கு மூன்று முதல் ஆறு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பிரஷ்யாவின் போலீஸ் அரசு சர்வதேசத் தொழிலாளி வர்க்கத்துக்கு எதிராகச் செய்த ஆத்திரமூட்டும் நடவடிக்கையை மார்க்சும் எங்கெல்சும் அம்பலப்படுத்தினர்கள்.—180.

61 **கம்யூனிஸ்டுகள் சங்கம்**—பாட்டாளி வர்க்கத்தின் முதல் சர்வதேச கம்யூனிஸ்ட் ஸ்தாபனம்; மார்க்சும் எங்கெல்

சும் இதைத் தொடங்கினர். 1847ம் வருடம் முதல் 1852 வரை இது இயங்கியது.—182.

62 1850ம் வருடம் செப்டெம்பரில் வில்லிஹ்-ஷாப்பர் கோஷ்டியினர் கம்யூனிஸ்ட் சங்கத்திலிருந்து பிரிந்தனர். 1851 செப்டெம்பரில் பிரான்சில் இந்த கோஷ்டியைச் சேர்ந்தவர்களில் சிலர் கைது செய்யப்பட்டனர். இந்த கோஷ்டியினர் பின்பற்றிய குட்டி முதலாளி வர்க்க சதியாலோசனை முறை ஜெர்மன்-பிரெஞ்சு சதி என்ற பொய்வழக்கை ஜோடிப்பதற்கு பிரெஞ்சு மற்றும் பிரஷ்யப் போலீசுத் தரப்பினருக்கு உதவியது. பாரிசில் ஒரு கோஷ்டிக்குத் தலைமை தாங்கிய ஷெர்வால் என்ற போலீஸ் உளவாளியின் உதவியும் அவர்களுக்குக் கிடைத்தது. 1852 பிப்ரவரியில் கைது செய்யப்பட்டவர்கள் திடீர்ப் புரட்சிக்கு ஆயத்தங்கள் செய்ததாக தண்டிக்கப்பட்டனர். இந்த ஜெர்மன்-பிரெஞ்சு சதியில் மார்க்சும் எங்கெல்சும் தலைமை தாங்கிய கம்யூனிஸ்ட் சங்கமும் சம்பந்தப்பட்டிருந்ததாகக் குற்றம் சாட்டுவதற்குப் பிரஷ்யப் போலீஸ் செய்த முயற்சி நிறைவேறவில்லை.—185.

63 **இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விளைவுகள்** என்ற இரண்டு கட்டுரைகளும் தேசிய-காலனியாதிக்கப் பிரச்சினை பற்றி மார்க்ஸ் எழுதிய மிகச் சிறந்த கட்டுரைகளில் இடம் பெறுகின்றன. அபரிமிதமான இயற்கை வளங்களும், மிகப் பழமையான நாகரிகத்தையும் கொண்ட இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒரு உதாரணமாகக் கொண்டு பொருளாதார ரீதியில் பின்தங்கிய கீழ்த்திசை நாடுகளின் மீது முதலாளித்துவ அரசுகள் ஏற்படுத்திய காலனியாதிக்க முறையின் தனியான அம்சங்களை மார்க்ஸ் எடுத்துக் காட்டுகிறார். இந்தியாவைக் கைப்பற்றுவதிலும் அடிமைப் படுத்துவதிலும் பிரிட்டன் அடைந்த வெற்றியில் முக்கியமான கட்டங்களை ஆராய்ந்து இங்கிலாந்தின் பெரும் நிலப்பிரபுக்களும் பெரும் பணக்காரர்களும் கொண்ட ஒரு சிறுகும்பல் ஏராளமாக செல்வத்தைத் திரட்டி தன்னை வலுப்படுத்திக் கொண்டதற்கு இந்தியாவில் பிரிட்டிஷார் அடித்த கொள்ளை ஒரு தலையூற்று என்பதை மார்க்ஸ் எடுத்துக் காட்டுகிறார். இங்கிலாந்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்படுவதன் மூலமாக அல்லது காலனியாதிக்கத்துக்கு எதிராக இந்திய மக்களின் விடுதலைப் போராட்டத்தின் மூலமாக இந்தியா சுதந்திரம் பெறும்

என்ற புரட்சிகரமான முடிவுக்கு மார்க்ஸ் வருகிறார்.—192.

64 கிழக்கு இந்தியக் கம்பெனி—இந்தியா, சீனா மற்றும் சில ஆசிய நாடுகளில் பிரிட்டிஷ் காலனியாதிக்கக் கொள்கையின் கருவியாக இருந்த ஆங்கில வர்த்தகக் கம்பெனி 1600ம் வருடத்தில் நிறுவப்பட்டது. 1853ம் வருடத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி இந்தியாவை நிர்வகிப்பதற்கு கம்பெனிக்கு வழங்கப்பட்ட ஏகபோக உரிமை குறைக்கப்பட்டது. 1858ல் இந்தக் கம்பெனி கலைக்கப்பட்டது.—193.

65 G. Campbell, *Modern India: a Sketch of the System of Civil Government*. London, 1852, pp. 59—60. ஜி. காம்பெல். ''நவீன இந்தியா: சிவில் அரசாங்க முறையின் உருவரை'', லண்டன், 1852, பக்கங்கள் 59—60.—211.

66 A. D. Saltykov, *Lettres sur l'Inde*. Paris, 1848, p. 61 (''இந்தியாவைப் பற்றிய கடிதங்கள்.'' பாரிஸ், 1848, ப. 61) என்ற நூலிலிருந்து மார்க்ஸ் மேற்கோள் காட்டுகிறார்.—212.

## பெயர்க் குறிப்பகராதி

அலெக்சாந்தர் I *(1777—1825)*—*ருஷ்யச் சக்கரவர்த்தி (1801—1825).—23.*

அவுயர்ஸ்வால்ட் [Auerswald], ருடோல்ஃப் *(1795—1866)—பிரஷ்ய இராஜதந்திரி; வெளி விவகார அமைச்சராகவும், தலைமை அமைச்சராகவும் (ஜூன்—செப்டெம்பர் 1848) பணிபுரிந்தார்.—126.*

எய்ஹார்ன் [Eichhorn], யோஹன் ஆல்பிரெக்ட் பிரெடெரிக் *(1779—1856) பிரஷ்ய இராஜதந்திரி; பிரஷ்யாவில் மத வழிபாடு, கல்வி மற்றும் மருத்துவத்துறை அமைச்சர் (1840-48).—44.*

ஐசன்மன் [Eisenmann], கோட்ப்ரிட் *(1795—1867)—ஜெர்மன் கட்டுரையாளர்; பிராங்க்பர்ட் தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்; ஆரம்பத்தில் மத்திய அணியிலும் பிறகு இடதுசாரி அணியிலும் இருந்தார்.—24.*

ஔரங்கசீப் [Aurangzeb] *(1618—1707)—இந்தியாவை ஆட்சி செய்த முகலாய சக்கரவர்த்தி (1658—1707).—193.*

ஃபூரியே [Fourier], ஷார்ல் *(1772—1837)—பிரான்சின் மாபெரும் கற்பனாவாத சோஷலிஸ்ட்.—38.*

ஃபெர்டினண்டு I [Ferdinand I] *(1793—1875)—ஆஸ்திரியச் சக்கரவர்த்தி (1835—1848).—103, 106, 122.*

ஃபெர்டினண்டு II [Ferdinand II] *(1810—1859)—நெப்பிள்ஸ் அரசர் (1830—1859) 1848ல் மெஸ்ஸினா மீது*

குண்டு போட்டதற்காக ''பொம்பா அரசர்'' என்று கேலிப் பெயர் சூட்டப்பட்டவர்.—95.

ஃப்ளோரி [Fleury], சார்ல்ஸ் *(உண்மையான பெயர் கார்ல் பிரெடெரிக் அகஸ்ட் கிராவுஸே) (பிறப்பு 1824)—லண்டன் வர்த்தகர், பிரஷ்யாவின் ஒற்றர்; போலீஸ் உளவாளி.—185—187, 189.*

கவெனியாக் [Cavaignac], லுயீ எழேன் *(1802—1857)—பிரெஞ்சுத் தளபதி, அரசியல்வாதி; நிதானப் போக்குடைய பூர்ஷ்வாக் குடியரசுவாதி; 1848 மே மாத முதல் யுத்த அமைச்சர்; ஜூன் மாதப் பாரிஸ் தொழிலாளர்களின் புரட்சிகர எழுச்சியைக் குரூரமாக நசுக்கியவர்; 1848 ஜூன் முதல் டிசம்பர் வரை அரசாங்க நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பை வகித்தார்.—97.*

காம்பெல் [Campbell], ஜார்ஜ் *(1824—1892)—இந்தியாவில் ஆங்கில காலனியாதிக்க அமைப்பில் அதிகாரியாக இருந்தவர்; இந்தியாவைப் பற்றி பல நூல்கள் எழுதியவர்; நாடாளுமன்ற உறுப்பினர்; மிதவாதி.—211.*

காம்ப்ஹாவுசன் [Camphausen], லுதோல்ஃப் *(1803—1890)—ஜெர்மன் பாங்கர்; ரைன் மிதவாத முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளில் ஒருவர்; பிரஷ்யாவின் அமைச்சர்-தலைவர் (1848 மார்ச் முதல் ஜூன் முடிய).—67, 73, 86, 87, 126.*

கிரைஃப் [Greif]*—பிரஷ்ய போலீஸ் அதிகாரி; 1850க்களின் ஆரம்பத்தில் லண்டனில் இருந்த பிரஷ்யப் போலீஸ் உளவாளிகளின் தலைவர்.—185, 186, 189.*

கிளைவ் [Clive], ராபர்ட் *(1725—1774)—வங்காளத்தின் கவர்னர் (1757—1760 மற்றும் 1765—1767); இந்தியாவைக் கொள்ளையடித்த பிரிட்டிஷ் காலனியாதிக்க ஆட்சிமுறையைத் தொடங்கி வைத்தவர்.—213.*

கூலிக்கான் [Khuli-Khan] — *நாதிர்-ஷா என்ற பெயர்க் குறிப்பைப் பார்க்கவும்.—193.*

**கெர்வினஸ்** [Gervinus], **இயோர்க் கோட்ப்ரிட்** *(1805—1871)—ஜெர்மன் வரலாற்றாசிரியர்; மிதவாதி; 1848ல் பிராங்க்பர்ட்டில் நடைபெற்ற தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்.—42.*

**கேதே** [Goethe], **யோஹன் வோல்ப்கான்க்** *(1749—1832)—ஜெர்மனியின் மாபெரும் எழுத்தாளர்; சிந்தனையாளர்.—202.*

**கோர்கேய்** [Görgey], **அர்த்தூர்** *(1818—1916) 1848—1849ல் நடைபெற்ற ஹங்கேரியப் புரட்சியின் இராணுவத் தலைவர்; ஹங்கேரிய இராணுவத்தின் பிரதம தளபதி (1849 ஏப்ரல்—ஜூன்).—118.*

**சல்திக்கோவ், அலெக்சேய் திமீத்ரியெவிச்** *இளவரசர் (1806—1859)—ருஷ்ய எழுத்தாளர், கலைஞர், பிரயாணி.—212.*

**சாப்மன்** [Chapman], **ஜான்** *(1801—1854)—ஆங்கிலக் கட்டுரையாளர்; முதலாளி வர்க்கத் தீவிரவாதி; இந்தியாவில் சீர்திருத்தங்கள் அவசியம் என்று வற்புறுத்தியவர்.—210.*

**சான்-சிமோன்** [Saint-Simon], **அன்ரீ** *(1760—1825)—மாபெரும் பிரெஞ்சு கற்பனாவாத சோஷலிஸ்ட்.—26, 38.*

**டி மெஸ்டிர்** [De Maistre], **ஜோசப்** *(1753—1821)—பிரெஞ்சு எழுத்தாளர்; பிரபுத்துவ மற்றும் திருச்சபைப் பிற்போக்குவாதச் சித்தாந்தி; 18ம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியைத் தீவிரமாக எதிர்த்தவர்.—29.*

**டீட்ஸ்** [Dietz], **ஓஸ்வால்ட்** *(சுமார் 1824—1864)—ஜெர்மன் கட்டிடக் கலை நிபுணர்; 1848—1849ம் வருடப் புரட்சியில் பங்கு கொண்டவர்; பிறகு நாடு துறந்து லண்டனுக்குச் சென்றார்; கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்தியக் கமிட்டியின் உறுப்பினராக இருந்தார். அதில் பிளவு ஏற்பட்ட பிறகு வில்லிஷ்-ஷாப்பெரின் குறுங்குழுவாத-வீரசாகச கோஷ்டியில் சேர்ந்தார்; பிறகு அமெரிக்க உள்நாட்டுப் போரில் வடக்கு மாநிலங்களின் தரப்பில் ஈடுபட்டார்.—184.*

**டோபிள்ஹாஃப்** [Doblhoff], **அன்டோன்** *(1800—1872) — ஆஸ்திரிய இராஜதந்திரி; நிதானப் போக்குடைய மித*

*வாதி; 1848ல் வர்த்தக அமைச்சராகவும் (மே) உள் நாட்டிலாகா அமைச்சராகவும் (ஜூலை—அக்டோபர்) பொறுப்பு வகித்தவர்.—105.*

**தமர்லான் (திமூர்)** [Tamerlane] *(1336—1405)—மத்திய ஆசியாவைச் சேர்ந்த தளபதி; பல நாடுகளை வெற்றி கொண்டவர்.—203.*

**தன்தோன்** ]Danton], **ஜோர்ஜ் மூாக்** *(1759—1794)—18ம் நூற்றூண்டின் இறுதியில் ஏற்பட்ட பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியில் முக்கியமான பிரமுகர்; ஜாக்கோபின்களின் வலது அணியின் தலைவர்.—159.*

**தால்மன்** [Dahlmann], **பிரெடெரிக் கிறிஸ்டோப்** *(1785—1860)—ஜெர்மன் வரலாற்றாசிரியர், அரசியல்வாதி; மித வாதக் கருத்துக்கள் கொண்டவர்; 1848-49ல் பிராங்க்பர்ட்டில் இருந்த தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்; வலது-மத்திய அணியைச் சேர்ந்தவர்.—41.*

**நாதிர்-ஷா (கூலிக்கான்)** [Nadir-Shah] *(1688—1747)—இரான் அரசர் (1736—1747); 1738—1739ல் இந்தியாவின் மீது படையெடுத்துக் கொள்ளையடித்தவர்.—193.*

**நெப்போலியன் I போனப்பார்ட்** [Napoleon I Bonaparte] *(1769—1821)—பிரெஞ்சுச் சக்கரவர்த்தி (1804—1814 மற்றும் 1815).—12, 33, 45, 169.*

**நெப்போலியன் III (லுயீ நெப்போலியன் போனப்பார்ட்)** [Napoleon III (Louis Napoleon Bonaparte)] *(1808—1873)—முதலாம் நெப்போலியனுடைய மருமகன்; பிரான்சின் இரண்டாம் குடியரசின் ஜனாதிபதி(1848—1851) பிரெஞ்சு சக்கரவர்த்தி (1852—1870).—179.*

**நோத்யுங்** [Nothjung], **பீட்டர்** *(1821—1866)—ஜெர்மன் தையல் தொழிலாளி; கொலோன் தொழிலாளர் சங்கத்திலும் கம்யூனிஸ்டுகள் சங்கத்திலும் உறுப்பினராக இருந்தார்; கொலோன் கம்யூனிஸ்ட் சதி வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர்களில் ஒருவர் (1852).—184.*

**பக்கூனின்** [Bakunin], **மிஹயீல் அலெக்சாந்தரவிச்** *(1814—1876)—ருஷ்ய ஜனநாயகவாதி, கட்டுரையாளர்; அராஜக வாதத்தின் தத்துவாசிரியர்; 1848—1849ம் வருடங்களில் ஜெர்மனியில் நடைபெற்ற புரட்சியில் பங்கு*

*கொண்டவர்; முதலாம் அகிலத்தின் உறுப்பினராக இருந்த பொழுது மார்க்சியத்தைத் தீவிரமாக எதிர்த்தவர்; 1872ம் வருடத்தில் காகா நகரத்தில் நடைபெற்ற காங்கிரசில் பிளவு நடவடிக்கைகளுக்காக அகிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.—167.*

**பலாஸ்கி** [Palacký], **பிரான்டிஷுக்** *(1798—1876)—செக் வரலாற்றாசிரியர், அரசியல் பிரமுகர், மிதவாதி; ஹாப்ஸ்புர்க் முடியாட்சியைப் பாதுகாக்க விரும்பும் கொள்கையைக் கடைப்பிடித்தவர்.—87.*

**பாசர்மன்** [Bassermann], **பிரெடெரிக் டனியேல்** *(1811—1855)—ஜெர்மன் அரசியல்வாதி; பிராங்க்பர்ட்டில் இருந்த தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்; வலது-மத்திய அணியில் இருந்தார்.—131.*

**பிரான்ஸ் I** [Franz I] *(1768—1835)—ஆஸ்திரியாவின் சக்கரவர்த்தி (1804—1835).—55, 59.*

**பிரான்ஸ்-இயோசிஃப் I** [Franz-JosephI] *(1830—1916)—ஆஸ்திரியாவின் சக்கரவர்த்தி (1848—1916).—136.*

**பிரெடெரிக்-ஔகுஸ்ட் II** [Friedrich-August II] *(1797—1854)—சாக்சனியின் அரசர் (1836—1854).—157.*

**பிரெடெரிக்-வில்ஹெல்ம் III** [Friedrich-Wilhelm III] *(1770—1840)—பிரஷ்யாவின் அரசர் (1797—1840).—29, 32, 33.*

**பிரெடெரிக்-வில்ஹெல்ம் IV** [Friedrich-Wilhelm IV] *(1795—1861)—பிரஷ்யாவின் அரசர் (1840—1861).—28—31, 66, 68, 126, 147, 148.*

**பிரென்டானோ** [Brentano], **லோரன்ஸ்** *(1813—1891)—பாடேனைச் சேர்ந்த குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி; 1848ல் பிராங்க்பர்ட்டில் இருந்த தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர், அதன் இடதுசாரி அணியைச் சேர்ந்தவர்; 1849ல் பாடேனில் அமைக்கப்பட்ட தற்காலிக அரசாங்கத்தின் தலைவர்; புரட்சிகர எழுச்சி தோல்வியடைந்த பிறகு நாடு துறந்து சென்றவர்.—168.*

**பிரோபெல்** [Fröbel], **ஜூலியஸ்** *(1805—1893)—ஜெர்மன் கட்டுரையாளர்; முற்போக்கான நூல்களை வெளியிட்ட*

*வர்; ஆரம்பத்தில் குட்டி முதலாளி வர்க்கத் தீவிரவாதி, பிறகு மிதவாதி; 1848—1849ல் நடைபெற்ற ஜெர்மன் புரட்சியில் பங்கு கொண்டார்; பிராங்க்பர்ட் தேசிய சட்ட மன்றத்தின் உறுப்பினர்; இடதுசாரி அணியைச் சேர்ந்த வர்.—123.*

**பிளாங்** [Blanc], **லூயீ** *(1811—1882)—பிரெஞ்சுக் குட்டி முதலாளி வர்க்க சோஷலிஸ்ட், வரலாற்றுசிரியர்; 1848ல் தற்காலிக அரசாங்கத்தில் உறுப்பினராகவும் லக்சம்பர்க் கமிஷனுக்குத் தலைவராகவும் இருந்தார்; 1848 ஆகஸ்ட் முதல் லண்டனிலிருந்த குட்டி முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த பிரெஞ்சு அகதிகளுக்குத் தலைவராக இருந்தார்.—9.*

**பெர்சல்** [Perczel], **மோரிட்ஸ்** *(1811—1899)—ஹங்கேரிய தளபதி, 1848—1849ம் வருடத்தில் நடைபெற்ற ஹங்கேரியப் புரட்சியில் பங்கு கொண்டவர்; புரட்சி தோல்வியடைந்த பிறகு நாடு துறந்து துருக்கிக்கும் பிறகு இங்கிலாந்துக்கும் சென்றார்.—107, 112, 116.*

**பேம்** [Bem], **ஜோஸப்** *(1795—1850)—1830—1831ல் நடைபெற்ற புரட்சிகர எழுச்சியில் பங்கு கொண்ட போலிஷ் தளகர்த்தர்; 1848ல் வியன்னாவில் நடைபெற்ற புரட்சிப் போராட்டத்தில் கலந்து கொண்டார்; ஹங்கேரியப் புரட்சி இராணுவத்தின் தலைவர்களில் ஒருவர்.—113.*

**பொனால்ட்** [Bonald], **லூயீ கப்ரியேல் அம்ப்ருவாஸ்** *(1754—1840)—பிரெஞ்சு அரசியல்வாதி, கட்டுரையாளர்; முடியாட்சியை ஆதரித்தவர்.—29.*

**ப்ளூம்** [Blum], **ராபர்ட்** *(1807—1848)—ஜெர்மன் குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி; பிராங்க்பர்ட்டில் நடைபெற்ற தேசிய சட்டமன்றத்தில் இடதுசாரி அணிக்குத் தலைவராக இருந்தவர்; 1848 அக்டோபரில் வியன்னாவின் பாதுகாப்பில் பங்கு கொண்டார்; எதிர்ப்புரட்சித் துருப்புகள் வியன்னாவைக் கைப்பற்றிய பொழுது சுட்டுக் கொல்லப்பட்டார்.—123, 138.*

**மக்சிமில்லியான் II** [Maximilian II] *(1811—1864)—பவேரியாவின் அரசர் (1848—1864).—142.*

**மராஸ்ட்** [Marrast], **அர்மாண்ட்** *(1801—1852)—பிரெஞ்சு கட்டுரையாளர், மிதவாத முதலாளி வர்க்கக் குடியரசு*

*வாதிகளின் தலைவர்களில் ஒருவர்; National என்ற நாளிதழின் ஆசிரியர்; 1848ல் தற்காலிக அரசாங்கத்தின் உறுப்பினராகவும் பாரிஸ் நகர மேயராகவும் இருந்தார்; அரசியல் நிர்ணய சபையின் தலைவர் (1848—1849).—9.*

**மன்தேய்ஃபெல்** [Manteuffel], **ஓட்டோ தியதோர்,** *பிரபு (1805—1882)—பிரஷ்ய இராஜதந்திரி, உள்நாட்டிலாகா அமைச்சர் (1848—1850), அமைச்சர்-தலைவர் (1850—1858).—126.*

**மார்க்ஸ்** [Marx], **கார்ல்** *(1818—1883).—189.*

**மிராஸ்லாவ்ஸ்கி** [Mieroslawski], **லூட்விக்** *(1814—1878)—போலிஷ் அரசியல்வாதி, இராணுவத் தலைவர்; 1830—1831ல் நடைபெற்ற போலிஷ் புரட்சிகர எழுச்சியில் பங்கு கொண்டவர்; 1848ல் போஸ்னன் புரட்சிகர எழுச்சிக்குத் தலைமை தாங்கினார்; பின்னர் சிசிலியின் கலகக்காரர்களுக்குத் தலைமை தாங்கினார்; 1849ல் ஏற்பட்ட பாடேன்-பிஃபாலிட்ஸ் புரட்சிகர எழுச்சியின் போது புரட்சிப் படைக்குத் தலைமை தாங்கினார்; 1863ம் வருட போலிஷ் புரட்சிகர எழுச்சியின் போது சர்வாதிகாரி என்று அறிவிக்கப்பட்டார். புரட்சிகர எழுச்சி தோல்வியடைந்ததும் நாட்டைத் துறந்து பிரான்சுக்குப் போனார்.—169.*

**மெசன்ஹாசர்** [Messenhauser], **சீஸர் வென்ட்ஸெல்** *(1813—1848)—ஆஸ்திரிய அதிகாரி; 1848 அக்டோபர் புரட்சிகர எழுச்சியின் போது தேசியப் படையின் தளபதி; வியன்னாவின் ஆணையாளர்; எதிர்ப்புரட்சித் துருப்புகள் நகரத்தைக் கைப்பற்றிய பிறகு சுட்டுக் கொல்லப்பட்டார்.—113.*

**மெட்டர்னிக்** [Metternich], **கிளேமன்ஸ்** *(1773—1859) இளவரசர்—ஆஸ்திரிய இராஜதந்திரி, பிற்போக்குவாதி; வெளிநாட்டு அமைச்சர் (1809—1821), சான்சலர் (1821—1848), புனிதக் கூட்டணியை ஏற்படுத்தியவர்களில் ஒருவர்.— 27, 49—52, 54—59, 64, 66, 92, 102.*

**மோஸ்லே** [Mosle], **யோஹன் லூட்விக்** *(1794—1877)—ஜெர்மன் அதிகாரி; 1848ல் அரசாங்க கமிஷனராக வியன்னாவுக்கு அனுப்பப்பட்டார்.—122.*

யெலாச்சிச் [Jellachich], ஜோசப், பிரபு *(1801—1859)—ஆஸ்திரிய தளபதி, குரோஷியா, டால்மேஷியா மற்றும் ஸ்லாவேனியாவின் ஆளுநர் (1848—1859). 1848—1849ல் ஹங்கேரியிலும் ஆஸ்திரியாவிலும் ஏற்பட்ட புரட்சியை ஒடுக்குவதில் தீவிரமான பங்கு கொண்டவர்.—104, 106, 107, 108, 112, 114, 115, 116.*

யோசிஃப் II [Joseph II] *(1741—1790)—''புனித ரோமானியப் பேரரசு'' என்று அழைக்கப்பட்ட அரசின் சக்கரவர்த்தி (1765—1790).—54, 56.*

யோஹன் [Johann] *(1782—1859)—ஆஸ்திரியாவின் ஆர்ச் டியூக், ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் மாற்று ஆளுநர். (1848 ஜூன்—1849 டிசம்பர்)—77, 161, 172—174.*

ரதேத்ஸ்கி [Radetzky], ஜோஸப், கவுன்ட் *(1766—1858)—ஆஸ்திரிய பீல்டுமார்ஷல்; 1831 முதல் வட இத்தாலியில் ஆஸ்திரியத் துருப்புகளின் தளபதி; 1848—1849ல் இத்தாலியின் புரட்சிகர மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தைக் குரூரமாக நசுக்கியவர்.—94, 104, 105, 110.*

ராட்டெக் [Rotteck], கார்ல் *(1775—1840)—ஜெர்மன் வரலாற்றாசிரியர்; மிதவாதக் கருத்துக் கொண்ட அரசியல்வாதி.—24, 41.*

ராபிள்ஸ் [Raffles], தோமஸ் ஸ்டாம்போர்டு *(1781—1826)—பிரிட்டிஷ் காலனியாதிக்க ஆட்சியில் அதிகாரி; ஜாவாவில் கவர்னராக (1811—1816) இருந்தவர்; ''ஜாவாவின் வரலாறு'' என்ற நூலின் ஆசிரியர்.—194.*

ரேய்ட்டர் [Reuter], மாக்ஸ்—*1850க்களின் ஆரம்பத்தில் லண்டனில் இருந்த பிரஷ்ய போலீஸ் உளவாளி.—184, 189.*

ரோத்ஷீல்டு [Rothschild], அன்ஸெல்ம் *(1773—1855)—பிராங்க்பர்ட்டில் உள்ள ரோத்ஷீல்டு வங்கி நிறுவனத்தின் தலைவர்.—35.*

ரோமெர் [Roemer], பிரெடெரிக் *(1794—1864)—வுர்ட்டெம்பர்க்கைச் சேர்ந்த இராஜதந்திரி; 1848—1849ல் நீதி இலாகா அமைச்சராகவும் பிரதமராகவும் இருந்தவர்; பிராங்க்பர்ட்டில் இருந்த தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்.—24.*

ரோஸ்லெர் [Roesler], கூஸ்தவ் அடோல்ஃப் *(1818—1855)—ஜெர்மன் பத்திரிகையாளர்; பிராங்க்பர்ட் தேசிய சட்ட*

*மன்றத்தின் உறுப்பினர்; 1850 முதல் நாடு துறந்து அமெரிக்காவில் வசித்தார்.—175.*

லத்தூர் [Latour], தியதோர், *பிரபு (1780—1848)—ஆஸ்திரிய இராஜதந்திரி, முடியாட்சியை ஆதரித்தவர்; 1848ல் யுத்த அமைச்சர்; 1848 அக்டோபரில் வியன்னாவில் ஏற்பட்ட எழுச்சியின் போது கொல்லப்பட்டார்.—107.*

லியப்போல்டு [Leopold] *(1790—1852)—பாடேன் ஆர்ச்டியூக் (1830—1852).—157.*

லுயீ ஃபிலீப் [Louis-Philipp]*(1773—1850)—ஆர்லியான் டியூக், பிரான்சின் அரசர் (1830—1848).—59.*

லுயீ போனப்பார்ட் [Louis-Bonaparte] — *நெப்போலியன்* III *என்ற பெயர்க் குறிப்பைப் பார்க்கவும்.*

லுயீ **XVI** [Louis XVI] *(1754—1793)—பிரான்சின் அரசர் (1774—1792), 18ம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட பிரெஞ்சு முதலாளி வர்க்கப் புரட்சியின் போது கொல்லப் பட்டவர்.—29.*

லெட்ரு-ரொலேன் [Ledru-Rollin], அலெக்சாந்தர் ஔகுஸ்ட் *(1807—1874)—பிரெஞ்சு கட்டுரையாளர்; குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதிகளின் தலைவர்களில் ஒருவர்; Réforme என்ற நாளிதழின் ஆசிரியர்; அரசியல் நிர்ணய சபையிலும் சட்ட மன்றத்திலும் உறுப்பினராகவும் மலைக் கட்சியின் தலைவராகவும் இருந்தவர்; பின்னர் நாடுதுறந்து வெளியேறியவர்.—9, 87.*

விண்டிஷ்கிராட்ஸ் [Windischgrätz], அல்பிரெட், *இளவரசர் (1787—1862)—ஆஸ்திரிய இராணுவத்தின் பீல்டுமார்ஷல்; பிராகிலும் வியன்னாவிலும் ஏற்பட்ட புரட்சிகர எழுச்சிகளையும் ஹங்கேரியப் புரட்சியையும் நசுக்குவதில் தலைமை வகித்தவர்.—91, 104, 108, 111, 112, 122.*

விராங்கெல் [Wrangel], பிரெடெரிக் ஹென்ரிஹ எர்னஸ்ட் *(1784—1877)—பிரஷ்யாவைச் சேர்ந்த தளகர்த்தர்.—127, 129.*

வில்ஹெல்ம் I [Wilhelm I] *(1781—1864)—வுர்ட்டெம்பர்க்கின் அரசர் (1816—1864).—157.*

வூட் [Wood], சார்லஸ் *(1800—1885)—பிரிட்டிஷ் இராஜதந்திரி; விக் கட்சியைச் சேர்ந்தவர்; இந்திய நிர்வாகக் கவுன்சிலுக்குத் தலைவராகவும் (1852—1855) இந்திய இலாகா அமைச்சராகவும் (1859—1866) இருந்தார்.—193.*

வெல்கர் [Welcker], கார்ல் தியதோர் *(1790—1869)—ஜெர்மன் வழக்குரைஞர்; 1848—1849ல் பிராங்க்பர்ட்டில் இருந்த தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்; வலது மத்திய அணியைச் சேர்ந்தவர்.—24, 41, 122.*

வோக்ட் [Vogt], கார்ல் *(1817—1895)—ஜெர்மன் இயற்கைநூல் விஞ்ஞானி; கொச்சையான பொருள்முதல்வாதத்தைப் பின்பற்றியவர்; குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி; 1848—1849ல் பிராங்க்பர்ட் தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்; இடதுசாரி அணியைச் சேர்ந்தவர்.—160.*

வோரன் [Warren], சார்லஸ் *(1798—1866)—பிரிட்டிஷ் அதிகாரி, 1858 முதல் ஜெனரல்; 1816—1819 மற்றும் 1830—1838ம் வருடங்களில் இந்தியாவில் சேவை செய்தவர்; கிரிமியப் போரிலும் பங்கு கொண்டார்.—209.*

வோல்ஃப் [Wolff], வில்ஹெல்ம் *(1809—1864)—ஜெர்மன் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காரர்; 1848 மார்ச் முதல் கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் மத்திய கமிட்டி உறுப்பினர்; 1848—1849ல் Neue Rheinische Zeitung பத்திரிகையின் ஆசிரியர்; பிராங்க்பர்ட்டில் இருந்த தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்; நாடு துறந்து இங்கிலாந்து சென்றவர்; மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் உற்ற தோழர்.—161, 172, 173.*

ஜார்டன் [Jordan], ஸில்வெஸ்டெர் *(1792—1861)—ஜெர்மன் சட்ட நிபுணர் மற்றும் அரசியல் பிரமுகர்; 1848—1849ல் பிராங்க்பர்ட்டில் இருந்த தேசிய சட்டமன்றத்தின் உறுப்பினர்.—24.*

ஷங்கார்னியே [Changarnier], நிக்கோலாஸ் அன் தியோடுல் *(1793—1877)—பிரெஞ்சுத் தளபதி, அரசியல்வாதி, முடியாட்சியை ஆதரித்தவர்; 1848 ஜூன் மாதத்துக்குப் பிறகு பாரிஸ் கோட்டை மற்றும் தேசியக் காவலர்*

*படையின் தளகர்த்தராக இருந்தார்; 1849 ஜூன் 13ந் தேதியன்று பாரிசில் நடைபெற்ற பேரணியைக் கலைப்பதில் பங்கெடுத்தவர்.—87.*

**ஷார்லிமன்** [Charles the Great] *(சுமார் 742—814)—பிராங்குகளின் அரசர் (768—800); பிறகு சக்கரவர்த்தி (800—814).—82.*

**ஷெர்வால்** [Cherval], **ஜூலியேன்** *(உண்மையான பெயர்: ஜோஸப் கிரெமெர்)—கம்யூனிஸ்டுகள் சங்கத்தினுள் ஊடுருவிய பிரஷ்ய போலீஸ் உளவாளி; 1852 பிப்ரவரியில் நடைபெற்ற ஜெர்மன்-பிரெஞ்சு சதி வழக்கு என்ற பொய் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர்; போலீசுக்காரர்களின் உதவியோடு சிறையிலிருந்து தப்பியவர்.—184.*

**ஷ்டீபர்** [Stieber], **வில்ஹெல்ம்** *(1818—1882)—பிரஷ்யப் போலீஸ் அதிகாரி; அரசியல் போலீசுத் துறையின் இயக்குநர் (1850—1860); கொலோன் கம்யூனிஸ்ட் சதி வழக்கை ஜோடித்தவர்; அதன் முக்கிய சாட்சி (1852).—184, 187, 189.*

**ஷ்டுவே** [Stüve], **யோஹன் கார்ல் பெர்ட்ரம்** *(1798—1872)—ஜெர்மன் அரசியல்வாதி, மிதவாதக் கருத்துக்களைப் பின்பற்றியவர்; ஹனோவரின் உள்நாட்டிலாகா அமைச்சர் (1848—1850).—24.*

**ஷ்வர்சென்பர்க்** [Schwarzenberg], **பெலிக்ஸ்**, *இளவரசர் (1800—1852)—ஆஸ்திரியாவின் இராஜதந்திரி; பிற்போக்குவாதி; 1848 அக்டோபரில் வியன்னு புரட்சி நசுக்கப்பட்ட பிறகு வெளி விவகார அமைச்சராகவும் பிரதம மந்திரியாகவும் இருந்தார்.—64.*

**ஷ்வார்சர்** [Schwarzer], **எர்னஸ்ட்** *(1808—1860)—ஆஸ்திரிய அதிகாரி, கட்டுரையாளர்; 1848 ஜூலை—செப்டெம்பரில் பொதுப்பணித்துறை அமைச்சர்.—106.*

**ஸிகெல்** [Sigel], **பிரான்ஸ்** *(1824—1902)—பாடேன் அதிகாரி; குட்டி முதலாளி வர்க்க ஜனநாயகவாதி; 1849ல் பாடேன்-பிஃபாலிட்ஸ் புரட்சிகர எழுச்சியின்போது*

*பாடேன் புரட்சி இராணுவத்தின் பிரதம தளபதியாகவும் பிறகு துணைப்-பிரதம தளபதியாகவும் இருந்தவர்; 1852ல் நாடு துறந்து அமெரிக்காவுக்குச் சென்றூர்; அமெரிக்க உள்நாட்டுப் போரில் வடக்கு மாநிலங்களை ஆதரித்துத் தீவிரமான பங்கு கொண்டார்.—169.*

**ஸ்டாடியன்** [Stadion], **பிரான்ஸ் கவுன்ட்** *(1806—1853)—ஆஸ்திரிய இராஜதந்திரி; கலீஷியாவிலும் பொஹீமியாவிலும் ஏற்பட்ட தேசிய விடுதலை இயக்கத்துக்கு எதிரான போராட்டத்தை நடத்தியவர்களில் ஒருவர்; உள்நாட்டிலாகா அமைச்சர் (1848—1849).—122.*

**ஹான்செமன்** [Hansemann], **டேவிட்** *(1790—1864)—பெரும் முதலாளி; ரைன் மிதவாத முதலாளி வர்க்கத்தின் தலைவர்களில் ஒருவர்; 1848 மார்ச்—செப்டெம்பரில் பிரஷ்யாவின் நிதி அமைச்சராக இருந்தவர்.—67, 73, 86, 126.*

**ஹிர்ஷ்** [Hirsch], **வில்ஹெல்ம்**—*ஹாம்பர்க் நகரத்தைச் சேர்ந்த கடைச் சிப்பந்தி; 1850க்களின் ஆரம்பத்தில் லண்டனில் பிரஷ்யப் போலீஸ் உளவாளியாக இருந்தவர்.—185, 186—189.*

**ஹெகல்** [Hegel], **கியோர்க் வில்ஹெல்ம் பிரெடெரிக்** *(1770—1831)—புகழ்மிக்க மூலச்சிறப்புடைய ஜெர்மன் தத்துவஞானி; புறநிலைக் கருத்துமுதல்வாதத்தைப் பின்பற்றியவர். —26.*

**ஹெம்ப்டன்** [Hampden], **ஜான்** *(1594—1643)—17ம் நூற்றூண்டில் இங்கிலாந்தில் ஏற்பட்ட முதலாளி வர்க்கப் புரட்சியில் முக்கியமான பிரமுகர்; முதலாளி வர்க்கம் மற்றும் முதலாளிகளாக மாறிய பிரபுக்குலத்தினரின் நலன்களையும் எடுத்துக் கூறியவர்.—27.*

**ஹெய்நாவு** [Haynau], **ஜூலியஸ் ஜக்கப்** *(1786—1853)—ஆஸ்திரியாவின் தளகர்த்தர்; 1848—1849ல் இத்தாலியிலும் ஹங்கேரியிலும் ஏற்பட்ட புரட்சி இயக்கங்களைக் குரூரமான முறையில் நசுக்கியவர்.—87.*

**ஹெய்னே** [Heine], **ஹென்ரிஹ்** *(1797—1856)—ஜெர்மனியின் மாபெரும் புரட்சிக் கவிஞர்.—80, 94.*

**ஹென்ரிஹ் LXXII ரைஸ்-லபின்ஷ்தாய்ன்-ஏபிர்ஸ்டர்ப்** [Henry LXXII, Reuss-Lobenstein-Ebersdorf] *(1797—1853)—ரைஸ் என்ற சிறிய ஜெர்மன் அரசின் இளைய மரபின் செல்வாக்குள்ள இளவரசர் (1822—1848).—142.*

## இலக்கிய மற்றும் புராணப் பெயரகராதி

**கோர்டியஸ்** [Gordius]—*பிரிகியாவின் அரசர்; அவர் ஏர்க்காலை ரதத்தோடு சேர்த்து சிக்கலான முடிச்சுப் போட்டுக் கட்டியதாகவும் அந்த முடிச்சை அவிழ்ப்பவர்கள் ஆசியாவை ஆட்சி செய்வார்கள் என்று அசரீரி கூறியதாகவும் தொல்கதை கூறுகிறது. (கோர்டியன் முடிச்சு என்ற பெயர் இதனுல் ஏற்பட்டது). மகா அலெக்சாந்தர் (மாசிடோன்) இந்த முடிச்சை அவிழ்க்கவில்லை; அதற்கு பதிலாகத் தமது வாளை உருவி அதை வெட்டினுர்.—142.*

**சான்சோ பான்சா** [Sancho Panza]—*செர்வான்டெஸ் எழுதிய ''டான்-குவிக்சாட்'' என்ற நாவலில் கதாநாயகனுக்குத் துணைவனுக வருகின்ற கதாபாத்திரம்.—122.*

**டான்-குவிக்சாட்** [Don-Quixote]—*செர்வான்டெஸ் எழுதிய நாவலின் கதாநாயகன்.—31, 122.*

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.